நன்றி - நூலகத்திட்டம்

SL

ஷோபாசக்தி



# கொரில்லா

843.23
ஷோபா

FICTION

நன்றி - நூலகத்திட்டம்

அய்ரோப்பிய வீதிகளில் இன்று
அகதிகளாய் அலைந்து திரியும்
இரண்டு லட்சத்திற்கும்மேற்பட்ட
ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரின்
வாழ்க்கையும் ஓர் இலக்கியந்தான்.
பேரின வாதக் கொடூரங்கள்,
இயக்க வாழ்க்கை அனுபவங்கள்,
இயக்கங்களில் ஏற்பட்ட அதிருப்திகளால்
உடலும் உள்ளமும் சிதைந்து நிகழ்ந்த
வெளியேற்றங்கள்,புகலிடம் ஒன்றில்
ஒண்டுவதற்காக தேச எல்லைகளினூடாக
மேற்கொண்ட கொடும்பயணங்கள்,
புகலிடச்சூழலின் அகதிவாழ்வில்
பிளவுண்ட மனநிலைகள்...
இவற்றினூடாகத்தான் இன்றைய ஈழத்து
இலக்கியப் புனைவுகள் பிறப்பெடுக்கின்றன.
ப்ரான்சின் அகதிச் சூழலில்
ஊத்தையர்களோடு ஊத்தையனாக
விளிம்புநிலை வாழ்வொன்றை
வரித்துக்கொண்ட ஷோபாசக்தியின்
ஊடாக இந்த அனுபவங்கள்
வெளிப்படும்போது அவை புதிய
பரிமாணங்களைப் பெறுகின்றன.
தீவுப்பகுதியின் வழக்குமொழியில்
எழுதப்பட்டுள்ள இப்பிரதி
தமிழுக்குப் புதிது.

Cover Designed by Puvanan, France.

நன்றி - நூலகத்திட்டம்

# கொரில்லா

ஷோபாசக்தி

அடையாளம்

நன்றி - நூலகத்திட்டம்

சலுகை விலை
இலங்கையில்

Gorilla ○ Fiction ○ Author : Shobasakthi, shobasakthi@hotmail.com ○ © Shobasakthi ○ First Editio Nov. 2001 ○ Pages 180 ○ Type set at *Art Prints* Chennai-4 ○ Published by **ADAIYALAM,** 1208, Second Floor, Karupur Salai, Puthanatham 621 310. ✆ 04332 73444 email: adaiyalam@yahoo.com ○ Printed at Chennai Micro Prints ○ Wrapper designed by Puvanan, France

Sole Distributors in Europe:
SUGAN KANAGASABAI
3 EME DT
1. RUE HONORE DE BALZAC
95140 GARGES LES GONESSE
FRANCE

ISBN 81 7720 007 0

## அடையாளம்

ஐய்ரோப்பிய வீதிகளில் இன்று அகதிகளாய் அலைந்து திரியும் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் ஒரு இலக்கியந்தான். பேரினவாதக் கொடூரங்கள், இயக்க வாழ்க்கை அனுபவங்கள், இயக்கங்களில் அதிருப்தியுற்று, அல்லது பிற இயக்கங்களால் கலைக்கப்பட்டு உடலும், உள்ளமும் சிதைந்து நிகழ்ந்த வெளியேற்றங்கள், புகலிடம் ஒன்றில் ஒண்டுவதற்காக தேச எல்லைகளினூடாக மேற்கொண்ட கொடும் பயணங்கள், புகலிடச் சூழலின் அகதி வாழ்வில் விளைவுண்ட மனநிலைகள்...இவற்றினூடாகத்தான் நவீன தமிழின் வீறுமிகுஇலக்கியச் சாதனைகள் வெளிப்படப்போகின்றன என யாரோ சொன்னதற்கு ஒரு நிரூபணமாய் இதோ ஷோபாசக்தியின் 'கொரில்லா'.

புகலிடச் சூழலிலும் தொடர்கிற சாதீய நிழலில் அசூயை கொண்டு, 'இருள்வெளி', 'சனதருமபோதினி' ஆகிய தலித் இலக்கியத் தொகுப்புகளை வெளியிட்ட தோழர்களின் இச்சிறப்புமிகு புனைவைத் தமிழகத்தில் வெளியிடுவதில் அடையாளம் மகிழ்ச்சியடைகிறது. தீவுப் பகுதி வழக்குகளினூடான இப்பிரதி தமிழுக்குப் புதிது.

ப்ரான்சின் அகதிச் சூழலில் ஊத்தையர்களோடு ஊத்தையானாக விளிம்புநிலைச் சிந்தனைகள், மாற்று அரசியல், தலித் இலக்கியம், கலாச்சாரக் கலைப்பு என்பதாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஷோபாசக்தி சிறுகதைகள் மூலம் ஏற்கனவே அறிமுகமானவர். இது இவரின் முதல் புதினம்.

பிழையின்றி இந்நூல் வெளிவருவதில் பெரும்பங்கு வகித்த நண்பர் வளர்மதி, அட்டை வடிவமைத்த தோழர் புவனன் கணினியில் அச்சுக் கோர்த்த நண்பர் அஸீம் ஆகியோர்க்கு எங்களது நன்றி.

நவம்பர் 2, 2001, மு. சாதிக்
புத்தாநத்தம் 621310

# கொரில்லா

நன்றி - நூலகத்திட்டம்

''நான் உலகத்தால் ஏமாற்றப்பட்டு வருகிறேன்
நான் கடவுள்களால் ஏமாற்றப்பட்டு வருகிறேன்
நான் வரலாற்றால் ஏமாற்றப்பட்டு வருகிறேன்''

பவாஸ்துர்கி

நன்றி - நூலகத்திட்டம்

பேராசான் கார்ல் மார்க்சுக்கு
காதலியாய்க் கிடந்து, மரித்து
வரலாற்றின் இருள் அடுக்குகளில் சிதிலமாய்க்
கிறப்பட்ட அந்த ஊழியக்காரி
ஹெலன் டெமூத்தின் நினைவுகளுக்கு...

நன்றி - நூலகத்திட்டம்

தொடரும் ...

நன்றி - நூலகத்திட்டம்

**Jakappu Anthony Thasan**
CHEZ. R. JEYAKKODI
64, RUE MYRHA
75018 PARIS.

**LE DIRACTOR,**
O.F.P.R.A.,
IMMEUBLE LE FOREZ,
45, RUE MAXIMILIEN ROBESPIERRE,
94126 FONTENAYSOUS - BOIS CEDEX.

3. அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பம் (மேன்முறையீடு).

4. ஐயா நான் யாகப்பு அந்தோனிதாசன். இலங்கைத் தமிழ். ரோமன் கத்தோலிக்கன். பிறந்த திகதி : 26.12.1967. நான் சிறிலங்காவின் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தீவுப் பகுதியிலுள்ள மண்டைதீவு எனும் தீவைச் சேர்ந்தவன். எனது தீவு யாழ்ப்பாண நகரத்திலிருந்து ஏறத்தாழ மூன்று கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ளது.

5. எனது தாய் நாட்டில் எனக்கும் குடும்பத்தினருக்கும் இலங்கை - இந்திய இராணுவத்தினராலும் தமிழ் போராளிக் குழுக்களாலும் ஏற்பட்ட கொடுமைகளால் எனது உடல் மன நிலைகள் சிதைவடைந்த நிலையிலும் இரண்டு வருட சிறை வாசத்தின் பின்பும் எனது உயிரைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு சிறிலங்காவில் இருந்து தப்பி வந்து தங்கள் நாட்டில் அரசியல் தஞ்சத்தைக் கோரினேன். ஆனால் எனது தஞ்சக் கோரிக்கையை நீங்கள் மூன்று தடவைகள் நிராகரித்து விட்டீர்கள். என்னை பிரான்ஸை விட்டு உடனே வெளியேறுமாறு பொலிசார் கட்டளைக்

கடிதம் அனுப்பியுள்ளார்கள். நான் வெளியேறி எங்கே செல்வது? எனது தாய் நாட்டில் எனக்கு நடந்த கொடுமைகளையும் ஏற்பட்ட உயிர் அபாயத்தையும் நான் விபரமாக தங்களுக்குத் தெரிவித்திருந்துங்கூட நீங்கள்,'25 ஜுலை 1952 ஜெனிவாச் சட்டத்தின் இரண்டாவது பிரிவின்' கீழ் மூன்று தடவைகளும் எனக்கு அரசியல் தஞ்சத்தை நிராகரித் துள்ளீர்கள். மிகவும் துரதிர்ஸ்டமான அந்த இரண்டாவது சட்டப்படி நீங்கள் கூறுவது என்ன? எனக்குத் தனிப்பட்ட ரீதியில் இலங்கையில் ஆபத்து இல்லை. எல்லா இலங்கைத் தமிழர்களுக்கும் உள்ள பொதுவான ஆபத்தையே நானும் எதிர்கொள்வதால் எனக்கு அரசியல் தஞ்சம் வழங்க சட்டம் மறுக்கிறது என்கிறீர்கள். நான் எனக்குத் தனிப்பட்ட முறையில் ஏற்பட்ட ஆபத்துக்களைச் சுட்டிக் காட்டிய பின்புங் கூட அவற்றிற்கு ஆதாரங்கள் எதையும் நான் தங்களுக்குக் காட்டாத படியால் அந்த ஆபத்துக்கள், ஆபத்துக்களே இல்லையென்ற முடிவுக்கு நீங்கள் வந்திருப்பது வருத்தத்துக்குரியது. ஐயா எங்கள் நாட்டில் எல்லாம் இராணுவம் ஒரு தமிழரை வெட்டிவிட்டு 'நாங்கள்தான் வெட்டினோம்' என்று ஒரு சான்றிதழை வெட்டப்பட்டவருக்கு வழங்குவதில்லை. ஏதாவது ஒரு உறுதியான அரசியல் காரணத்தாலேயே எங்களை நோக்கி சுடப்படும் துப்பாக்கிக் குண்டு எந்தச் சுடுகுழலின் வழியாய் வந்தது என்பதை எம்மால் பல சமயங்களில் அறிந்து கொள்ள முடிவதில்லை. மேன் முறையீடு செய்யும் போது புதிய ஆபத்துக்கள் குறித்து எழுதுவது விண்ணப்பத்துக்கு வலுச் சேர்க்கும் என வழக்கறிஞர் அறிவுறுத்தினார். எனக்குப் புதிய ஆபத்துக்கள் ஏதும் இன்னும் ஏற்படாததையிட்டு நான் இப்போது மிகவும் வருந்துகிறேன்.

6. இணைப்பு

நான் 31.12.92 அன்று கொழும்பிலிருந்து புறப்பட்டு விமானம் மூலமாக உக்ரேன் நாட்டுக்கு வந்தேன். பின் அங்கிருந்து 06.01.93 அன்று புறப்பட்டு விமானம் மூலமாகத் துருக்கி வந்தேன். பின்பு 10.01.93 அன்று துருக்கியிலிருந்து புறப்பட்டு கப்பல் மார்க்கமாக 16.01.93 அன்று இத்தாலி வந்தேன். இத்தாலி நாட்டில் எனக்கு அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட காரணத்தினால் 20.01.93 அன்று இத்தாலியிலிருந்து புறப்பட்டு கார் மூலமாக பிரான்ஸ் வந்து சேர்ந்தேன்.



7. ஆனால் பிரான்ஸ் எல்லையில் நான் பிரஞ்சு எல்லைப் பாதுகாப்பு பொலிசாரால் கைது செய்யப்பட்டு கைகளில் விலங்கிடப்பட்டேன். நான் பொலிசாரிடம் அரசியல் தஞ்சம் கோரினேன். உடனடியாகப் பொலிசார் என்னை ஒரு பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று சிறைவைத்தார்கள். என்னைத் திரும்பவும் சிறிலங்காவுக்கு நாடுகடத்தப் போவதாகக் கூறி என் பெயர் வயது முதலிய விபரங்களைக் கேட்டார்கள் (எனது பாஸ்போர்ட்டை துருக்கியில் பயண முகவர் பறித்து வைத்துக் கொண்டார்). பொலிசார் என்னை சிறிலங்காவுக்கு நாடு கடத்தப்போகிறார்கள் என அச்சமுற்ற நான் எனது உண்மைப் பெயரை மறைத்து ராதாசேதுபதி என்ற பொய்ப் பெயரைக் கொடுத்தேன். அவ்வாறே கையொப்பமும் இட்டேன்.

8. எனது சொந்தப் பெயரில் நான் சிறிலங்கா திரும்பினால் கொழும்பு விமான நிலையத்தில் வைத்தே பொலிசாரால் நான் கைது செய்யப்படுவேன் என்பது எனக்கு நன்கு தெரியும்.

9. அடுத்த நாள் (21.01.93) காலை பத்து மணிக்கு ஒரு பெண்மணி வந்து என்னை விசாரணை செய்து வாக்குமூலம் எடுத்தார். அந்த வெள்ளைக்காரப் பெண்மணி தமிழில் சரளமாக என்னுடன் உரையாடியதால் நான் எனது பிரச்சனைகளை அவருக்கு விபரமாக எடுத்துச் சொன்னேன். அன்று பிற்பகல் எனக்கு ஒரு பத்திரத்தை வழங்கி (எட்டு நாட்களுக்கான வதிவிட அனுமதிச் சீட்டு) பிரான்ஸ் நாட்டுக்குள் என்னை அனுமதித்தார்கள். அந்தப் பத்திரத்தின் நகலை இத்துடன் இணைத்திருக்கிறேன்.

10. நான் எனது ஆரம்பக் கல்வியை மண்டைதீவு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலும் உயர் கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் கற்றேன்.

11. 1983 யூலையில் நாட்டில் ஏற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து எனது மூத்த சகோதரன் தேவதாசன் LTTE இயக்கத்தில் இணைந்தார். 04.11.1983 அன்று பயிற்சிக்கென இந்தியா சென்றார். அதன் பின்னர் அவரைப் பற்றிய தகவல் ஏதும் இன்றுவரை எனக்குக் கிடைக்கவில்லை.

12. எனது சகோதரன் இந்தியா சென்ற சில தினங்களிலேயே இராணுவத்தினர் எனது வீட்டுக்கு வந்து எனது சகோதரனைத்

தேடினார்கள். அடிக்கடி வீட்டுக்கு வந்து சோதனையிட்டார்கள். 1984 மார்ச் மாதம் எனது தந்தையாரை குருநகர் இராணுவ முகாமுக்கு பிடித்துச் சென்று ஒன்பது நாட்கள் தடுத்துவைத்து சித்திரவதை செய்தார்கள். அடித்து அவரது காலை முறித்து பின் விடுதலை செய்தார்கள்.

13. எங்கள் குடும்பத்துக்கு இராணுவம் அடிக்கடி தொல்லை கொடுத்ததினாலும் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டதாலும் உடலும் உள்ளமும் பாதிக்கப்பட்டு நோய்வாய்ப்பட்ட தந்தையால் தொழிலில் ஈடுபட முடியாமல் போக கா.பொ.த உயர்தரம் (வர்த்தகம்) முதலாமாண்டு படித்துக்கொண்டிருந்த நான் படிப்பை நிறுத்திவிட்டு தந்தையாரின் தொழிலான மணல் அள்ளும் தொழிலை ஏற்றுக் கொண்டேன்.

14. ஓய்வு நேரங்களில் வியாபார ஸ்தலங்களுக்கு விளம்பரப் பலகைகள் எழுதும் தொழிலையும் செய்து வந்தேன். LTTE இயக்கத்தினர் தங்களது இயக்கத்துக்காக சுவரொட்டிகளை வரைந்து தருமாறு என்னைக் கேட்டார்கள். அடிக்கடி அவர்களுக்கு விளம்பரங்களும் சுவரொட்டிகளும் வரைந்து கொடுத்தேன்.

15. தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக மூன்று மேடை நாடகங்களையும் ஒரு வீதி நாடகத்தையும் எழுதி இயக்கினேன். 'வேள்வி' (1985), 'தாகம் தீரும் வரை' (1985), 'கண்ணன் வருவானா' (1987) ஆகிய நாடகங்கள் பல தடவைகள் மேடையேறின. 'வியாகுலப் பாடல்' (1986) எனும் வீதிநாடகம் முன்னூறுக்கும் மேற்பட்ட தடவைகள் யாழ் மாவட்டமெங்கும் நடாத்தப்பட்டது.

16. 1987.10.10இல் இந்திய அமைதிப் படையினரும் புலிகளும் மோதத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து 18.01.1988இல் காட்டிக் கொடுக்கும் முகமூடி மனிதர்கள் சகிதம் காலை ஏழு மணிக்கு என்னைத் தேடி இந்திய இராணுவம் எனது வீட்டுக்கு வந்தது.

17. அப்பொழுது நான் வீட்டில் இருக்கவில்லை. தொழிலுக்கு சென்றுவிட்டேன். என்னை வேலணை இராணுவ முகாமில் வந்து சரணடையுமாறு கூறிய இராணுவம், நான் சரணடையாவிட்டால் மறுநாள் எனது குடும்பத்தினரைப் பிடித்துச் செல்வோம் என என் தந்தையாரிடம் கூறிச் சென்றது.



18. மறுநாள் 19.01.1988 அன்று வேலணை சமாதான நீதவான் திரு. கோபாலபிள்ளை மூலம் வேலணை-வங்களாவடி IPKF முகாமில் சரணடைந்தேன். அந்த முகாமில் 'மட்ராஸ் எயிட் ரெஜிமென்ட்' எனும் பேர்கொண்ட இராணுவப் படைப்பிரிவு நிலைகொண்டிருந்தது. அந்தப் படைப்பிரிவின் தளபதி மேஜர் கிருஷ்ணசாமி என்னை விசாரணை செய்தார்.

19. IPKF ஆல் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு அங்கிருந்த ரகு, காசி எனும் இரு புலிப்போராளிகள் என்னைக் குறித்து சாட்சியம் அளித்தனர். நான் இயக்கத்துக்கு விளம்பரம் வரைவதாகவும் நாடகம் எழுதுவதாகவும் அவர்கள் அமைதிப்படையினருக்குக் கூறினார்கள். வேறு வழியின்றி நான் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தேன்.

20. என்னை முகாமிலேயே தடுத்து வைத்த அமைதிப் படையினர் 20.01.1988 அன்று எனக்குச் சாக்கினாலே முகமூடி அணிவித்து தங்களின் வாகனத்தில் ஏற்றி என்னை எனது கிராமமான மண்டைதீவுக்கு அழைத்து வந்தார்கள். அப்போது நேரம் அதிகாலை நான்கு மணி இருக்கலாம்.

21. அமைதிப் படையினர் மண்டைதீவு முழுவதும் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்து அனைத்து வாலிபர்களையும் பிலிப்பு நேரியார் கோவில் மைதானத்திலே பிடித்து வந்து நிறுத்தினார்கள். என் முன்னே அவர்களை வரிசையாக வரச்செய்து அவர்களுக்குள் LTTE யினர் இருந்தால் அடையாளம் காட்டுமாறு கட்டளை யிட்டார்கள். அந்த வரிசையில் LTTE எவரும் இல்லையென்று கூறினேன். அன்று கிராமத்தில் எவரையும் கைது பண்ணவில்லை. என்னை மீண்டும் முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

22. பின்பு "ஏன் ஒரு புலியையும் பிடித்துத்தரவில்லை?" என்று கேட்டு தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு அடித்தனர். நான் முகாமிலிருந்த பன்னிரெண்டு நாட்களுமே என்னைச் சித்திரவதை செய்தனர். எனது பெற்றோரின் பெரு முயற்சியாலும் எனது ஊர் பிரஜைகள் குழுத் தலைவரான திரு. A. அம்பலவாணர் J.P அவர்களின் சிபாரிசின் அடிப்படையிலும் 31.01.1988 அன்று விடுதலை செய்யப்பட்டேன். ஆனால் தினமும் அமைதிப் படையினரின் உத்தரவின் பேரில் வேலணை IPKF முகாமுக்குச்

சென்று கையெழுத்திட்டு வந்தேன். IPKF இலங்கையில் இருந்த நாள் முழுவதும் இவ்வாறு கையொப்பமிட்டு வந்தேன்.

23. IPKF 1990 இல் வெளியேறியதைத் தொடர்ந்து காட்டுக்குள் இருந்து நாட்டுக்குள் வந்த LTTE யினர் எனது வீட்டுக்கு வந்து 1990.05.05 அன்று என்னைக் கைது செய்தார்கள். முகமூடி போட்டுக் காட்டிக்கொடுத்த 'தமிழினத் துரோகி' என்றும் இந்திய இராணுவத் துக்குத் தகவல் கொடுத்தேன் என்றும் பொய்க் குற்றம் சாட்டினார்கள்.

24. குஞ்சன் வயலிலுள்ள அவர்களது முகாமில் ஒரு வார காலமாக தடுத்துவைத்து 13.05.1990இல் என்னை விடுதலை செய்தார்கள். ஆனால் அவர்கள் தொடர்ந்தும் என் நடவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை நான் அறிவேன்.

25. சிறிலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 1990 யூன் மாதத்தில் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது. யாழ் கோட்டையை மீட்கும் நோக்கத்துடன் 22.08.1990இல் ஊர்காவற்துறையில் இருந்து இலங்கை இராணுவப் படைப்பிரிவுகள் நாரந்தனை-சரவணை - வேலணை - மண்கும்பான் - அல்லைப்பிட்டி வழியாக மண்டை தீவுக்கு வந்தது. அவர்களோடு தமிழ்க் குழுக்களின் இளைஞர்களும் சேர்ந்து வந்தார்கள். கடல் வழியாக வந்த இலங்கை கடற்படையினரும் எமது தீவை வளைத்துக் கொண்டார்கள்.

26. எங்கள் வீட்டின் பின்புறம் விமானக் குண்டு வீச்சுக்களி லிருந்து தப்பிப்பதற்காக ஓர் பதுங்கு குழி அமைத்திருந்தோம். அதற்குள் எனது இரு தம்பிகள், தங்கை, அம்மா ஆகியோர் என்னோடு உள்ளே ஒளிந்திருந்தனர்.

27. சரமாரியாக சுட்டுக்கொண்டும், ஷெல் அடித்துக் கொண்டும் வந்த இராணுவத்தினர் எனது வீட்டை தீயிட்டுக் கொளுத்தினர். பின்னர் பதுங்கு குழி அருகில் வந்து உள்ளே எட்டிப்பார்த்தனர். நாங்கள் எல்லோரும் கைகளை உயர்த்தியவாறே மேலே வந்தோம்.

28. இராணுவத்தினர் சுமார் பத்துப் பேர் இருப்பார்கள். அவர்களோடு நான்கு காட்டிக்கொடுக்கும் தமிழ் இளைஞர்களும்



இருந்தனர். அந்த இளைஞர்களிடையே எனது கிராமத்தைச் சேர்ந்த சந்தியா சசிதரன் என்ற இளைஞரும் இருந்தார்.

29. அவர் என்னைச் சுட்டிக்காட்டி நான் LTTE ஆதரவாளன் என்றும் எனது அண்ணன் பெரிய LTTE உறுப்பினர் என்றும் எனது குடும்பமே LTTE ஆதரவுக் குடும்பம் என்றும் இராணுவத்தினருக்கு கூறினார். இதைக் கேட்டதுமே இராணுவத்தினர் ஆவேசக் கூச்சலிட்டவாறே என்மீதும் என் இரு தம்பிமார் மீதும் பாய்ந்து வாள்களாலும் கத்திகளினாலும் தாக்கினார்கள்.

30. எனக்கு தலையில் விழுந்த வாள் வெட்டுக் காரணமாக நான் மயங்கி விழுந்து விட்டேன்.

31. நான் கண் விழித்த போது யாழ் பொது மருத்துவமனையில் இருந்தேன். என் கால்களை அசைக்க முடியாமலிருந்தது. இராணுவத்தினர் எனது கால் எலும்புகளை அடித்து நொறுக்கி விட்டிருந்தார்கள். என் தலையில் தையல் போடப்பட்டிருந்தது. என்னை கத்தோலிக்க மதகுருவான வில்வரசிங்கம் அவர்கள் படகு மூலம் எடுத்து வந்து ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும் என் இரு தம்பிகளான அருள்தாசனையும், நிமலதாசனையும் இராணுவம் வெட்டிக் கொலை செய்து விட்டதாகவும் அவர்களின் உடல்கள் கூட கிடைக்கவில்லையென்றும் பின்பு என் பெற்றோர் மூலம் அறிந்து கொண்டேன்.

32. என்னையும் சகோதரர்களையும் வெட்டும் போது எனது பெற்றோரையும் சகோதரியையும் ஓடுமாறு இராணுவம் கட்டளை யிட்டதாகவும் அவர்கள் அவ்வாறே ஓடி மண்டைதீவு புனித தோமையார் கோவிலில் இருந்து இரண்டு நாட்களுக்குப் பின் மண்டைதீவிலிருந்து தப்பி ஓடி படகின் மூலம் பாசையூர் சென்று புனித அந்தோனியார் கோவில் அகதி முகாம் சென்றடைந்ததாகவும் கூறினார்கள்.

33. ஆஸ்பத்திரியில் சனநெருக்கடியான நிலமையாய் இருந்தபடியால் மருத்துவரின் வேண்டுதலால் 18.09.1990இல் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி பாசையூர் அகதிமுகாம் சென்று எனது குடும்பத்தினருடன் தங்கியிருந்தேன். என்னை பெற்றோர் அகதிமுகாமில் வைத்து பராமரித்தார்கள். அகதிமுகாம் வாழ்க்கை யும் நிம்மதியாய் அமையவில்லை. அடிக்கடி விமானங்கள்

அகதிமுகாம் மீது குண்டுகளை வீசின. தவிர இராணுவமும் பல வழிகளிலும் முன்னேறிக் கொண்டிருந்தது. எப்போது பாசை யூருக்குள் இராணுவம் நுழையும் என்று சொல்ல முடியாத நிலை. எனது பெற்றோருக்கு நான்கு ஆண்பிள்ளைகள். எஞ்சியிருப்பது நான் ஒருவனே. எனவே, என்னையாவது காப்பாற்றும் நோக்கத்தோடு என்னைக் கொழும்பு சென்று வாழுமாறு தந்தையார் கூறினார். பத்தாயிரம் ரூபாய்கள் பணமும் தந்தார்.

34. நான் 14.01.1991இல் பாசையூர் அகதிமுகாமை விட்டுப் புறப்பட்டு தனியார் பஸ் மூலம் கேரதீவு சென்று அங்கிருந்து படகு மூலம் பூநகரி - சங்குப்பிட்டி சென்று சைக்கிள் மூலம் 16.01.1991இல் வவுனியாவில் உள்ள எனது உறவினர் தேவநாயகம் அவர்களின் வீடு சென்றடைந்தேன். ஒரு நாள் அங்கு தங்கி மரக்கறி ஏற்றி இறக்கும் அவருக்குச் சொந்தமான லொறியில் (TN TRANSPORT) 17.01.1991 காலை புறப்பட்டு மாலை எட்டு மணிக்கு கொழும்பு சென்றடைந்தேன்.

35. கொழும்பில் Avendal Lodge, 24/6, மகிந்த மாவத்த, மருதானை எனும் முகவரியில் தங்கினேன். 20.01.1991இல் காலை 6.30 மணிக்கு மருதானைப் பொலிசாரும், மருதானை பொலிஸ் நிலைய (கொழும்பு-10) பொறுப்பதிகாரி பேர்னார்ட் டீ சில்வாவும் எனது தங்குமிடத்துக்கு வந்து என்னையும் அங்கிருந்த ஏனைய தமிழ் வாலிபர்களையும் கைது செய்து மருதானை பொலிஸ் நிலையத்துக்கு கூட்டிச் சென்றனர். அங்கு கூடுகளில் எங்களை அடைத்து உடைகளைக் கழற்றி அனைவரையும் நிர்வாணமாக்கி விசாரணைகள் செய்தனர். ஏற்கனவே சுமார் முப்பது இளைஞர்கள் அங்கு பிடிபட்டு இருந்தனர். என் உடலில் உள்ள காயங்கள் குறித்து கடுமையாக விசாரித்தனர். நான் உண்மையைக் கூறினேன். பொலிசாரோ 'இல்லை நீ LTTE, இராணுவத்தோடு நடந்த மோதலில் ஏற்பட்ட காயங்களே இவை' எனக் கூறி என்னைக் கடுமையாகத் தாக்கினார்கள்.

36. 28.01.1991 பிற்பகல் பன்னிரண்டு மணியளவில் என்னையும் இன்னும் ஏழு இளைஞர்களையும் இராணுவ ட்ரக்கில் ஏற்றி கல்கிசையில் இருந்த தற்காலிக இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்று அங்கு ஒப்படைத்தார்கள்.



அங்கும் எனது உடலில் உள்ள காயங்கள் குறித்து விசாரணை செய்தார்கள். முகமூடி அணிந்த உருவம் ஒன்று என்னை LTTE என்று அடையாளம் காட்டியது. அதைக் கேட்டவுடனேயே இராணுவத்தினர் என்னை பலமாகத் தாக்கினார்கள். அப்போது தான் இலேசாக மாறிக் கொண்டிருந்த காயங்களின் மேல் துவக்குப் பின்புறத்தால் தாக்கினார்கள். கைவிலங்கிடப்பட்ட நிலையில் மேசை மீது எனது கைகள் வைக்கப்பட்டு விரல்கள் மீது தடியால் தாக்கியதால் எனது வலது கையின் நாலாவது விரல் முறிந்தது. நடுவிரலும் சிதைக்கப்பட்டது. பின் எனது கால் விரல்களை சிறு குறடு ஒன்றினால் பிடித்து மடக்கி சித்திரவதை செய்தார்கள். பொலித்தீன் பையை நெருப்பில் உருக்கி எனது ஆணுடம்பின் மீது ஊற்றினார்கள். எனது இடது கையில் மெல்லிய கத்தியால் மூன்று தடவைகள் கீறி மிளகாய்த் தூள் போட்டார்கள். நான் மயங்கி விட்டேன்.

2. பின்பு 30.01.91இல் என்னை மீண்டும் மருதானை பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தினர் ஒப்படைத்தார்கள். நான் அடிக்கடி மயங்கி விழுந்தவாறேயிருந்தேன். 'குண்டு வைக்கவா கொழும்பு வந்தாய்?' எனக் கேட்டு பொலிசார் என்னை சித்திரவதை செய்தார்கள். ஒரு வாரத்தின் பின்பு என்னை மாற சிறையில் அடைத்தார்கள். மருதானை பொலிஸ் நிலையத்திலிருந்து என்னை சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்ற சப்-இன்ஸ்பெக்டரின் பெயர் பெரேரா ஆகும். எனக்கு சிறையில் தரப்பட்ட இலக்கம் D.O. 627.

3. மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை என்னை மாளிகாகந்த நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்வார்கள். நீதிபதி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் எனக்கு மேலும் மூன்று மாதங்கள் விளக்க மறியலை விதிப்பார்.

4. இரண்டு வருடங்களாய் நான் சிறையில் வருந்திய நிலையில் 25.12.1992 அன்று அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி அவர்களுடைய சிபாரிசின் அடிப்படையில் மாற சிறையிலிருந்து சில இளைஞர்கள்

விடுவிக்கப்பட்டனர். நானும் விடுதலையானேன். (பின்பு இந்த சிபாரிசை ஏற்பாடு செய்ததற்காக அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமியின் செயலாளர் கோவிந்தராஜன் என்பவர் என்னிடம் பத்தாரயிரம் ரூபாய்களை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டார்).

5. விடுதலையாகி வந்து 26/1, டாம் வீதி, கொழும்பு-13 எனும் முகவரியில் தங்கினேன். 27.12.1992இல் மீண்டும் நித்திரையில் வைத்து புறக்கோட்டைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு புறக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டேன்.

6. பொலிஸ் அதிகாரிகாரிகளிடம் இரண்டு நாட்களுக்கு முன்பு தான் சிறையிலிருந்து விடுதலையாகி வந்தேன் என்று கூறினேன். அவர்கள் அதை அக்கறை பண்ணவில்லை. 28.12.1992 காலையில் பொலிஸ் நிலையத்துக்கு அடையாளம் காட்ட சில தமிழ்க் குழுக்களை சேர்ந்த வாலிபர்கள் வந்தனர். அவர்களில் எனது அயற்கிராமமான அல்லைப்பிட்டியைச் சேர்ந்த முரளிதரன் என்பவரும் இருந்தார். அவர் என்னை LTTE ஆதரவாளன் என்று பொலிசாருக்குக் காட்டிக் கொடுத்தார்.

7. பொலிஸ் நிலையத்திலிருந்த ஒவ்வொரு நாளும் தாங் கொண்ணாத சித்திரவதைகளை அனுபவித்தேன்.

8. பின்னர் 15.01.1993இல் எனது உறவினர் திரு. மருசலீன் அவர்கள் பொலிசாருக்கு லஞ்சமாய் இருபத்தையாயிரம் ரூபாய் களைக் கொடுத்து என்னை விடுவித்தார். ஆனால் ஒவ்வொரு நாளும் பொலிஸ் நிலையம் வந்து கையெழுத்து இடுமாறு உத்தரவிடப் பட்டேன்.

9. ஒவ்வொரு நாளும் நான் கையெழுத்திடப் போகும் போதெல்லாம் அங்கிருக்கும் பொலிசார் என்னைப் பிடித்து அடிப்பார்கள். சட்டையைக் கழற்றி வருவோர் போவோருக் கெல்லாம் எனது காயங்களைக் காட்டி 'கொட்டியா' எனக் கூறி பரிகசிப்பார்கள். காலை ஒன்பது மணிக்கு பொலிஸ் நிலையம் போகும் என்னை இரவு தான் திரும்பிச் செல்ல அனுமதிப்பார்கள். பகல் பொழுது முழுவதும் சித்திரவதைகளோடு பொலிஸ் நிலையத்திலேயே கழிந்தது.

10. தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாகியும் இரண்டு வருடங் களைச் சிறையில் கழித்தும் உடலாலும் உள்ளத்தாலும் பலவீனப் பட்டிருந்த எனக்கு இந்த தொடர் சித்திரவதைகளை தாங்க முடியாமல் இருந்தது. இனியும் சித்திரவதைப்பட்டுச் சாக முடியாது என்ற முடிவோடும் எனது உறவினர் திரு. மருசலீன் அவர்களின் உதவியோடும் ஒரு பயண முகவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் களைக் கொடுத்து அவரின் ஏற்பாட்டின்படி போலிக் கடவுச் சீட்டு ஒன்றுடன் இலங்கையை விட்டுத் தப்பினேன்.



11. ஐயா, நான் ஏன் எனது தாய்நாட்டை விட்டு வெளியேறி னேன் என்பதற்கான காரணங்களை மேலே தந்துள்ளேன். கருணையுள்ளத்துடன் எனது விண்ணப்பத்தைப் பரிசீலித்து எனது தாய் நாட்டில் யுத்தம் முடிந்து அமைதி ஏற்படும் வரை தங்கள் நாட்டில் எனக்கு அரசியல் தஞ்சம் வழங்கி என் உயிரைப் பாதுகாக்குமாறு மிகுந்த தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

12. எனது இந்த விண்ணப்பம் பரகசியப்படுத்தப்படுமாயின் எனக்கு மிகுந்த ஆபத்து ஏற்படும் என்பதால் இவ் விண்ணப்பத்தின் இரகசியத்தைக் காக்குமாறும் தேவையேற்படின் ஒரு நேரடி விசாரணைக்கு என்னை அழைக்குமாறும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

13. நன்றி.

14. இவ்வண்ணம்
தங்கள் உண்மையுள்ள,
யா. அந்தோனிதாசன்.

மேலதிக இணைப்புக்கள்:

- இவ்விண்ணப்பத்தின் பிரஞ்சு மொழி பெயர்ப்பு,
- எனது தேசிய அடையாள அட்டை,
- நான்கு புகைப்படங்கள்,
- எல்லைப்புற பொலிசாரால் வழங்கப்பட்ட ஆவணத்தின் நகல்.

பட்டணத்திலிருந்து அவசர அவசரமாய் வெளியேறிய வாகனங்கள் கறுப்புக் கொடிகளுடன் பண்ணைத் தாம்போதியால் மிதந்து குஞ்சன் வயலை உரசிச் சென்றன.

2. இந்திராகாந்தி * சுட்டுத் தள்ளப்பட்டாராம்.

3. இச் செய்தி குஞ்சன் வயலுக்குள் உண்மையாகவே பெரிய அசுமாத்தம் எதையும் ஏற்படுத்திவிடவில்லை. அதிகபட்சமாய் யாருடையது என அறியப்படாத ஒரு மாடு தரவைக்குள் செத்துக் கிடந்தால் ஏற்படக்கூடிய சலனமே குஞ் சன் வயலில் காணக் கிடந்தது.

4. ஆனால் குஞ்சன் வயலில் இருந்து யாழ்ப்பாண நகரத்து சந்தைகளுக்கும், பாய்க் கடைகளுக்கும், சுண்ணாம்புக் கடைகளுக்கும் வேலைக்குச் சென்றவர்கள் அன்று ஒன்று பாதியோடு வேலையிலிருந்து திரும்பி வந்து யாழ் நகரம் முழுவதும் கடையடைப்பும் கண்ணீர் அஞ்சலிக் கூட்டங்களும் என்று சொன்னார்கள்.

5. இப்போது வடக்குப் பெருவீதியால் குஞ்சன் வயலை நோக்கி ஒரு வாகனம் தனது தலையில் ஒலி பெருக்கிகளை சுமந்தவாறே முன்னேறிற்று. 'டொய்யங்...டொய்ங்' சோக இசைக்கு நடுவாக துண்டுப் பிரசுரங்களை வாகனம் தூவி விட சின்னப் பொடியள் அடிபட்டுப் பொறுக்க ஒலி பெருக்கி பேசத் தொடங்கியது.

6. அன்பார்ந்த தமிழீழ மக்களே
இறை ஒன்று
இனம் இரண்டு
தமிழ் மூன்று
திசை நான்கு
புலன் ஐந்து
சுவை ஆறு
சுரம் ஏழு
திக்கு எட்டு

ரசம் ஒன்பது என வகுத்து வாழ்வது தமிழினம். உலகிலேயே இதுவரை அறிந்து கொள்ளப்பட்ட மொழிகள் ஆறாயிரத்து இருநூற்று நாற்பது. இவற்றில் நாகரீகம் அடைந்த மொழிகள் எண்பத்து மூன்று. இவற்றிலே அதிநாகரீகம் அடைந்த மொழிகள் ஏழு. அதில் ஒன்று தமது தமிழ் மொழி. இந்தத் தேன் மொழிக்கு தனக்கென ஒரு நாடில்லை. தனியாய் அதற்கொரு அரசில்லை. அடிமையெனும் மிடிமையினின்று மீண்டெழ எழுந்த ஈழத் தமிழனின் கரம் அணைத்த வங்கம் வென்ற அன்னை இந்திரா காந்திக்கு, நேருவின் மகளுக்கு ஈழ மக்களின் வீர வணக்கங்கள்.

7. ஒலிபெருக்கியில் பேசிக் கொண்டு வந்த ரொக்கிராஜின் குரல் கமாரிட்டது. அநேகமாக 'வீர வணக்கம்' என்ற சொல் ரொக்கிராஜால் தான் தமிழீழத்தில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

8. ஒலிபெருக்கி வாகனம் குஞ்சன் வயலின் மையப்பகுதியை அடைந்தது. தெரு, ஒழுங்கையெல்லாம் கிடையாது. வெறும் தரவைக்குள்ளால் வாகனம் பறந்தது. தூரத்தே கும்பலாய் நாலைந்து பேர் நின்றார்கள். அவர்களை நெருங்கி 'வீரவணக்க'த் துண்டுப் பிரசுரங்களைப் போடுவதே வாகனாதிகளின் நோக்கம்.

9. திடீரென வாகனச் சாரதிக்கு அருகாக முன்புற இருக்கையில் இருந்து உற்சாகமாகத் துண்டுப் பிரசுரங்களைப் போட்டுக் கொண்டு வந்தவன் கத்தினான், ''அங்க கொரில்லாவின்ர செற் நிக்குது''. பின் இருக்கையில் அமர்ந்திருந்து கையில் ஒலி வாங்கியுடன் பேசிக் கொண்டிருந்த ரொக்கிராஜ் சடாரெனத் தலையைக் குனிந்து கொண்டான்.

10. வாகனம் துண்டுப் பிரசுரங்களைத் தூவிக் கொண்டே அந்தக் கும்பலைக் கடந்தது. ரொக்கிராஜ் சற்றுத் தலையைத் தூக்கித் திரும்பிப் பார்த்தான். கொரில்லா சாரத்தை தொடைகளுக்கு மேலாக

---

*இந்திராகாந்தி (அலஹாபாத் 1917 - புதுடில்லி 1984) : இந்தியப் பேராயக் கட்சியில் 1938ல் உறுப்பினராக இணைந்து கொண்ட இவர் பின் இந்தியப் பிரதமரானார். 1975 ஆனி முதல் 1977 தை வரை நாடெங்கும் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்திப் பாஸிஸ ஆட்சி செய்தவர். காலிஸ்தான் விடுதலைப் போராளிகளை வகை தொகையின்றி கொன்றழித்த இவர் 1984இல் பொற்கோவில் மீது தனது இராணுவத்தை ஏவி விட்டதன் பின்பாக இவரது சீக்கிய மெய்ப் பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சிரைத்துப் பிடித்துக் கொண்டு, போகும் வாகனத்தையே முறைத்துப் பார்த்தவாறு நின்றிருந்தான்.

11. வாகனம் திரும்பி வரும் போதும் அந்தக் கும்பல் அங்கேயே நிலத்தில் சக்கப்பணிய அமர்ந்திருந்தது. ஆனால் அந்தக் கும்பலில் கொரில்லா இருக்கவில்லை. ரொக்கிராஜ் அவர்களருகே வாகனத்தை நிறுத்தச் சொன்னான். அந்தக் கும்பலில் இருந்தவர்களைப் பார்த்து கம்மிய குரலில் அன்று மாலை 'பராசக்தி வித்தியாசாலை முன்றலில் நடக்கவிருக்கும் கண்ணீர் அஞ்சலிக் கூட்டத்திற்கு வருமாறு' கேட்டுக்கொண்டான். அப்போது அவர்கள் ரொக்கிராஜுக்கு இதைச் சொன்னார்கள்:

12. ''பத்தாயிரம் சனத்துக்கு கொட்டையை வெட்டி நலம் அடிச்சவள் செத்துப்போனாள்... அதுக்கு இந்தப் பொடி என்ர சோத்தைத் திண்டு போட்டெல்லோ லஸ்பீக்கரில வசனம் பேசுது'' என்று சொல்லி ஏசிக்கொண்டே கொரில்லா அங்கிருந்து போனானாம்.

13. 'இப்பிடி செத்த சீவனைப் பழிக்கிறவனை லைட்போஸில் கட்டி வெடிவைச்சாலும் பாவமில்லை' என்று ரொக்கிராஜ் நினைத்துக் கொண்டான்.

கொரில்லா: பெ: ஆபிரிக்கக் காடுகளில் வாழும். இது மனிதக் குரங்குகளில் பெரியது. முகம், மார்பு தவிர உடல் முழுவதும் சொரசொரப்பான கருத்த மயிர்கள் கொண்டது. பெரிய மூக்குத் துவாரங்கள். சிறிய கண்கள். பெண்ணை விட ஆண் இருமடங்குகள் பெரியதாக இருக்கும். ஆணுக்கு மண்டை மீது எலும்புக் கொண்டையும் கண்கள் மீது மேடாக எலும்பும் இருக்கும். கொரில்லாவால் நிமிர்ந்து நிற்க முடியாது. உடற் கனத்தைக் கைகளில் தாங்கிக் கொண்டே நடக்கும். சில சமயங்களில் மார்பில் அடித்துக் கொண்டு உரத்துக் கத்தும். தோற்றம் பயங்கரமாக இருந்த போதிலும் இவை கூச்சமான சுபாவம் உள்ளவை. தானாகத் தாக்குவதில்லை. தொல்லை கொடுத்தால் திருப்பித் தாக்கும். ஒவ்வோர் இரவிலும் புதிய இடத்தில் தூங்கும். இவைகளுக்குத் தங்குமிடமென்று எதுவும் கிடையாது. கரு வளரும் காலம் 250 முதல் 290 நாட்கள். ஒரு குட்டிதான் போடும். ஆயுள் சுமார் முப்பது ஆண்டுகள். வால் கிடையாது. வளர்ந்த கொரில்லா அய்ந்தடி உயரம், 250 கிலோ எடை இருக்கும்.



2. கொரில்லா (அ) கெரில்லா: பெ: (பெரும்பாலும் பன்மை விகுதியுடன்) கொரில்லா போர் செய்பவர், கரந்தடிப் போர் முறையே (Hit and run) கொரில்லாப் போர் என வழங்கப்படுகிறது. தாக்கி விட்டுத் தப்புதலே இப்போர் உத்தி (எ+டு: 1980களில் 'சோசலிஸ சித்தாந்தமும் கொரில்லா யுத்தமும்' எனும் நூல் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரச்சாரப் பிரிவு வெளியீட்டு வாரியத்தால் வெளியிடப் பட்டது) யுத்தத்தைக் குறிக்கும் பிரஞ்சு வார்த்தையான Guerre இருந்து வந்தது தான் Guerilla (War)

3. கொரில்லா: பெ: அக்காலத்திலே புஞ்சி பொரளையில் விலாசமான சண்டியராக சுதுமாத்தையா என்பவர் இருந்தாராம். ஓர் முறை இவர் மேலான ஒரு வழக்கில், நீதவான் சுனில் டி சில்வா, சுதுமாத்தையாவுக்குப் பத்து ரூபாய்கள் அபராதம் விதித்தானாம். பேசாமல் பறையாமல் பத்து ரூபா குற்றக்காசைக் கட்டிவிட்டு வந்து சுது மாத்தையா நீதி மன்றத்திற்கு முன்பாக வீதியில் நின்று கொண்டிருந்தாரம். வழக்குகளை எல்லாம் முடித்துக் கொண்டு நீதவான் சுனில் டிசில்வா காரில் வந்தானாம். நடுவீதியில் இடுப்புக்குக் கை கொடுத்தபடி நின்றிருந்த சுதுமாத்தையா நீதவானின் காரை மறித்தார். காரின் சன்னலுக்குள்ளால் நீண்ட நீதவானின் கழுத்தில் கிறிஸ் கத்தியை வைத்த சுதுமாத்தையா 'உம்ப உசாவியகே ராஜா, மம பாறகே ராஜா' (நீ கோர்ட்டுக்கு ராஜா, நான் ரோட்டுக்கு ராஜா) எடு பத்து ரூபாய் எனக்கேட்டு நீதவானின் சட்டைப் பைக்குள் கையை விட்டு பத்து ரூபாய் எடுத்துக் கொண்டாராம். நீதிமன்ற வாசலில் நின்ற ஒரு பொலிசுக்காரனுக்கும் சுதுமாத்தையாவை நெருங்கத் துணிவில்லையாம்.

4. இப்பேர்க்கொத்த சண்டியர் சுதுமாத்தையாவையே பிடித்து அடித்து நொருக்கி நொண்டியாக்கி மொட்டையடித்து ஓடவிட்டுச் சுட்டுத் தள்ளியவன் இன்ஸ்பெக்டர் ஏசுராசன்.* இந்த

*ஞானப்பிரகாசம் கொன்ஸிலாஸ் ஏசுராசன் (1933 - 1984), ஆனைக் கோட்டையிலுள்ள அவரது வீட்டில் வைத்து ஆயுதந்தாங்கிய இரு இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இன்ஸ்பெக்டர் ஏசுராசனுக்கே பலகாலமாய் விளையாட்டுக் காட்டிக் கொண்டி ருந்தவன் தான் காட்டாற்ற ஏசுராசன்.

5. குஞ்சன் வயலில் ஊருப்பட்ட ஏசுராசன்கள் இருந்தபடியால் அவர்கள் வில்லங்கம் ஏசுராசன், நான்தான் ஏசுராசன், காட்டாற்ற ஏசுராசன் என அழைக்கப்பட்டனர். இதில் வில்லங்கம் ஏசுராசன் மண்பிட்டிகளில் கூலிக்கு மணல் ஏற்றி வந்தான். நான்தான் ஏசுராசன் 'பிள்ளையார் விலாஸ்' லொறி ஓடினான்.

6. ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு இன்ஸ்பெக்டர் ஏசுராசன் ஓ.ஐ.சி யாய் பொறுப்பேற்றிருந்த இந்த மூன்று வருடங்களாய் காட்டாற்ற ஏசுராசன் இன்ஸ்பெக்டர் ஏசுராசனுக்கு உச்சிக் கொண்டிருந்தான். அந்த, இந்த, எந்தக் காலடி 'பார்த்துச் சொல்லும் விண்ணனாலும் கண்டுபிடிக்க முடியாதவாறு தனது காலடிகளை மணலில் விதம் விதமாய் பதித்துச் செல்வதிலும் பாவிச் செல்வதிலும் காட்டாற்ற ஏசுராசன் சிங்கன்ாய் இருந்தான்.

7. குருநகர், பாசையூர், சாந்தைச் சனங்கள் அராலிப் பரவைக் கடலுக்குள் களங்கண்ணி வலை பாய்ந்து விட்டு அதிகாலையில் வலைதட்ட வருவதற்கு முன்னதாகவே ஏசுராசன் நசுக்கிடாமல் வலைகளை ஒட்டத் தட்டிக் கொண்டு போயிருப்பான்.

8. ஒரு முறை திருடனைப் பிடிப்பதற்காக இருளில் பதுங்கிக் கிடந்த பாசையூரார் சள்ளையைப் பொத்தி ஏசுராசனுக்கு மண்டாவை ஏற்றி விட்டார்கள். ஒரு கையில் இரத்தமும் குடலும் மறு கையில் இறால் பறியுமாக ஏசுராசன் ஓடித் தப்பினான் என்று வியப்போடு இப்போதும் பேசிக் கொள்கிறார்கள். ஏசுராசனுக்கு ஏவங்கேட்கக் குஞ்சன் வயலே திரண்டு போய் பாசையூராருடன் தொடர்ந்து இரண்டு மாதங்கள் காணுமிடமெல்லாம் கலம்பகம் செய்தார்கள்.

9. குஞ்சன் வயலில் பிரச்சனைப்பட்டால் யாழ்ப்பாண ரவுண், யாழ்ப்பாண ரவுணில் பிரச்சனைப்பட்டால் பண்டிவிரிச்சான், பண்டிவிரிச்சானில் பிரச்சனைப்பட்டால் கொழும்பு, கொழும்பில் பிரச்சனைப்பட்டால் குஞ்சன் வயல் என்று காட்டாற்ற ஏசுராசன் எப்பொழுதும் ரவுண்டில் இருந்தான்.

10. இன்ஸ்பெக்டர் ஏசுராசனும் குஞ்சன்வயலில் போடாத சட்டமில்லை, தீட்டாத ,திட்டமில்லை. காட்டாற்ற ஏசுராசன் ஒவ்வொரு முறையும் இன்ஸ்பெக்டர் ஏசுராசனின் திட்டத்தை



முறியடித்துத் தப்பிக் கொண்டிருந்தான். கடைசியாக காட்டாற்ற ஏசுராசன் சீல் சாராய கிளமென்டா வீட்டிலிருந்து சாராயம் குடித்துக் கொண்டிருக்கையில் சாராயம் பிடிக்க வந்த இன்ஸ்பெக்டர் ஏசுராசனிடம் இடக்கு முடக்காக எத்துப்பட்டான். ரெடிப் பொசிசனுக்கு வந்த இன்ஸ்பெக்டர், ''டேய் நீ தானே காட்டான்ர ஏசுராசன்'' என்று கேட்டுக் கொண்டே பெற்றன் பொல்லையும் சுத்திக் கொண்டு காட்டாற்ற ஏசுராசனைப் பிடிக்க வந்தான். கீழே மணலில் உட்கார்ந்திருந்த காட்டாற்ற ஏசுராசன்? 'டேய் நீதானே ஓ.ஐ.சி. ஏசுராசன்?' எனக் கேட்டு உறுமி, உறுமிய கையோடு சுழன்று எழும்பி காலைக் கிளப்பி இன்ஸ்பெக்டர் ஏசுராசனின் மூஞ்சியில் விட்டான் அடி. ஒரு அடியில் இன்ஸ்பெக்டர் ஏசுராசன் அறிவு கெட்டு விழுந்தான்.

11. காட்டாற்ற ஏசுராசனின் பாய்ச்சலும் அவனின் கருகரு வென்ற காலும் இன்ஸ்பெக்டர் ஏசுராசனின் நெஞ்சை நிச்சயமாய் அலைக்கழித்திருக்கும். 'சரியான ஒரு கொரில்லாக் குரங்கு' என்று அவன் காட்டாற்ற ஏசுராசனைத் திட்டிக் கொண்டு திரிந்தான்.

12. எங்கேயோ சிங்கள நாட்டுப்பக்கத்தில் குதிக்காலில் வாள்வெட்டு வாங்கிக் கொண்டு ஏசுராசன் பச்சைப் புண்ணான காலோடு குஞ்சன் வயலுக்கு வந்து இரகசியமாகக் கொட்டிலுக்குள் பதுங்கிக் கிடந்தான். காலில் சீழ் வடிந்து கொண்டிருந்தது. ஆஸ்பத்திரிக்குப் போகப் பயந்து கிடந்தான். காட்டாற்ற ஏசுராசன் கடைசியாகப் பொலிசில் மாட்டும்.போது, பொலிசார் இவனை ஆஸ்பத்திரிப் படுக்கையில் வைத்துத் தான் பிடித்தார்கள். வைத்தியம் செய்த டொக்ரர் தான் பொலிசுக்கு அறிவித்து இவனைப் பிடித்துக் கொடுத்தான். இந்த முறை மாதா கோவில் சுவாமி ஏசுராசன் நடக்க முடியாமல் கொட்டிலுக்குள் பதுங்கிக் கிடக்கிறான் என்று பொலிசுக்கு 'ரிப்ஸ்' கொடுத்தான்.

13. அதிகாலையில் நித்திரைப் பாயில் வைத்து காட்டாற்ற ஏசுராசன் இன்ஸ்பெக்டர் ஏசுராசனால் கைது செய்யப்பட்டு மாஞ்சு பூட்டப்பட்டான். இரண்டு பொலிசுக்காரர்கள் அவனின் கால்களைப் பிடித்து நிலத்தில் கொறகொறவென்று இழுத்துப் போனார்கள். சார்ஜன் சிங்களத்தால் திட்டிக் கொண்டே ஏசுராசனின் தலையில் சப்பாத்துக் காலால் உதைந்து கொண்டிருந்தான். காட்டாற்ற

ஏசுராசன் சார்ஜனின் காலில் தலையைத் தேய்த்து 'அன்னே மகே மாத்தையா காண்ட எப்பா' என்று ஒப்பாரி வைத்தான்.

14. ஜீப்பின் முன் ஆசனத்தில் இன்ஸ்பெக்டர் ஏசுராசன் ஏறி உட்கார்ந்திருந்தான். ஜீப்புக்குள் காட்டாற்ற ஏசுராசனைப் பொலிசார் தூக்கி எறிந்தார்கள். ஏசுராசனின் பெண்சாதி செனோவாவும் இரண்டு பொடியன்களும் நடப்பதையெல்லாம் பார்த்தவாறு ஒரு ஓரத்தில் நின்றிருந்தார்கள். செனோவாவின் கையில் ஒரு குழந்தை கிடந்தது. ஜீப் புறப்படும் போது செனோவா என்ன நினைத்தாளோ திடீரென ஓடிப்போய் ஜீப்பின் முன்னால் நின்று 'அவர் இப்ப ஒண்டுக்கும் போறதில்ல' என்று கண்களைக் கசக்கினாள், இவள் சும்மா மாய்மாலம் தான் போடுகிறாள் என்று எல்லோரும் விளங்கிக் கொள்ளுமளவுக்கு சிணுங்கினாள்.

15. ஜீப்பிலிருந்து பாய்ந்து இன்ஸ்பெக்டர் ஏசுராசன் செனோவாவின் தலைமயிரைக் கைகளிற் பற்றிப் பிடித்து அவள் தலையை ஜீப்போடு மோதினான். 'பாஸா காட்டுறாய் கள்ளவேசை' என்று சொல்லிச் சப்பாத்துக் காலால் அவளின் அடிவயிற்றில் உதைத்தான். செனோவா ஒரு கையில் குழந்தையைப் பிடித்தவாறும் மறுகையால் அடிவயிற்றைப் பொத்தியவாறும் வீதியோரத்தில் பேசாமல் உட்கார்ந்தாள்.

16. ஊர்காவற்றுறையின் நெரிசலான பஜாரின் நடுவில் ஜெற்றியிலிருந்து சில மீற்றர்கள் தூரத்தில் பொலிஸ் நிலையம் அமைந்திருந்தது. பொலிஸ் நிலைய வீதி முன்பாக உச்சி வெய்யிலில் காட்டாற்ற ஏசுராசன் வெறும் ஜட்டியோடு முழங்காலில் இன்ஸ்பெக்டர் ஏசுராசனால் நிறுத்தப்பட்டான். அவனின் கழுத்தில் நாலைந்து செருப்புக்கள் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. அவன் கைகளை விரித்திருந்தான். அவன் மார்பில் ஓர் அட்டை கட்டப்பட்டிருந்தது. அந்த அட்டையில் 'கொரில்லா' என்று எழுதப்பட்டிருந்தது. காட்டாற்ற ஏசுராசனின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பொலிசுக்காரர்கள் நின்று பெற்றன் பொல்லுகளால் அவனின் முதுகுத் தோலில் இரத்தம் வர விளாசிக் கொண்டிருந்தார்கள். வேடிக்கை பார்த்த சனங்களைப் பார்த்து, 'ஐயாமாரே அம்மாமாரே இனி நான் சண்டித்தனம் காட்டமாட்டன்' என்று கத்துமாறு,



17. பொலிசுக்காரர்கள் ஏசுராசனுக்குச் சொல்ல அவன் அவ்வாறே முனகிக் கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் ஏசுராசன் பஜாருக்குள் இராச நடை நடந்தவாறே, 'ஏய் எல்லோரும் போய் கொரில்லாவைப் பாருங்கோ' என்று சனங்களைப் பொலிஸ் நிலையம் நோக்கி விரட்டிக் கொண்டிருந்தான்.

18. இச் சம்பவத்திற்குப் பிறகு காட்டாற்ற ஏசுராசனைக் கொரில்லா என்றே சனங்கள் அழைத்தார்கள். அதையிட்டு அவன் கோபப்பட்டதாகத் தெரியவில்லை. கொரில்லாக் கும்பா, கொரில்லாக் குஞ்சியப்பு என்று உறவு முறை கூடக் கொண்டாடினார்கள். வேதப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த ஏசுராசனின் மூத்த மகன் ரொக்கிராஜையும் வாத்தியார் சிலரும் பள்ளிக்கூடப் பொடியள் சிலரும் கொரில்லா என்றே பட்டம் தெளித்து அழைத்தனர். ஆனால் ரொக்கிராஜ் கோபப்பட்டான்.

டாவிட்டுடைய மிகப்பெரிய சாதனையாக எதனைச் சொல்லலாம் என்றால் பிரான்ஸில் ஒரு காலத்தில் அவன் எமது கட்சிக்காகத் தட்டத் தனியனாகப் போராடியதைத் தான்.

2. இதை அவன் இப்படிச் சொல்வான் ''தோழர் என்னுடைய பதினைந்து வருட ட்ரொஸ்கிய அரசியலில் மில்லியன் கணக்கான தோல்விகளைச் சந்தித்ததோடு அற்ப வெற்றியைத் தன்னும் பெறாத நிலையில் நான் சொல்கிறேன், உலகப் புரட்சியைச் செய்து முடிக்கப் போகிறவர்கள் நாங்கள் தான்.''

3. இதைச் சொல்லும் போது அவனின் திமுறும் நீலக் கண்களும் உச்சமாய் சிவந்து போகும் அவனுடைய முகமும் அவனைச் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவனாய் பிரதிமை செய்வன.

4. தேசிய விடுதலை இயக்கங்களை விட்டு வெளியேறியவர்களுக்கு இந்தத் தேடல் கட்டம் ..... தேடல் கட்டம் என்றவொரு கட்டம் முன்பெல்லாம் அடிக்கடி வந்து வந்து போய்க் கொண்டிருந்தது. அப்படியான ஒரு கட்டத்தை ஒரு முறை நான் டாவிட்டைச் சந்தித்த போது ஒரு தடவை கடந்தேன்.

5. ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதத்தின் இரு நாட்களில் பிரான்ஸில் உலகின் பல பாகங்களிலும் இருக்கக் கூடிய டிரொஸ்கியவாதிகள் கூடுவோம். பல்வேறு குழுக்கள், கருத்துக்கள் எல்லாம் அன்றைய இரு தினங்களும் உரசிப் பறக்கும்.

6. இப்படியான ஒரு நாளில் எமது கட்சி சார்பாக நாங்கள் மண்டபத்தினுள் ஒரு 'ஸ்டால்' அமைத்திருந்தோம். நாங்கள் நாலு தமிழ்ப் பொடியளும் ஆசைக்கொரு வெள்ளைக்காரனாய் டாவிட்டும் 'ஸ்டாலில்' நின்றிருந்தோம். சில நாட்களுக்கு முன்பு தான் ஒரு இணைய வலையைக் கட்சிக்காக டாவிட் ஆரம்பித்திருந்தான். டாவிட்டைப் பார்த்தால் ஒழுங்கற்று வெட்டிய தலைமுடியும் ஊத்தை மற்றும் கிழிசல் உடைகளோடு ஒரு அலங்கோலமாய் இருப்பான். ஆனால் கட்சி வேலைகளில் படுதீவிரமும் கச்சிதமும்.

அவன் திறந்த வலையில் யாரோ ஒரு ரஷ்யாக்காரன் விழுந்து எமது கட்சிக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தான். வந்தது வெறுமனே வாழ்த்துச் செய்தி மட்டும் அல்ல என்றும் ஸ்டாலினிஸத்தின் காட்டிக் கொடுப்புகளால் கைவிடப்பட்ட தொழிலாளவர்க்கம் இப்போது 'ட்ரொஸ்கிஸத்தை' நோக்கித் திரும்பிக் கொண்டிருப்பதையே இச் செய்தி அறிவிக்கிறது' என்று வாயில் நுரை தள்ள டாவிட் எங்களுக்கு விளங்கப்படுத்திச் சொன்னான். நாங்களும் 'ஆ' வென்று கேட்டுக் கொண்டு நின்றிருந்தோம்.

7. இப்போது ஒரு ஐந்தாறு வெள்ளையர்கள் எமது 'ஸ்டாலை' நெருங்கி வந்தனர். வருவது யாரெனத் தெரியுமா? என மெதுவாக டாவிட் எங்களிடம் கேட்டு விட்டு நாங்கள் பதில் சொல்லாததால் டாவிட் சொன்னான், 'இவன் தான் புரட்சியைக் காட்டிக் கொடுப்பவன், கிளிவ் சுலோட்டர்.'

8. சுலோட்டர் எங்கள் 'ஸ்டாலுக்குக்' கொஞ்சம் தூரத்திலேயே நின்று விட்டார். அவரோடு வந்த இரண்டு தோழர்கள் எங்கள் 'ஸ்டாலு'க்குள் வந்து நாங்கள் அடுக்கிவைத்திருந்த புத்தகங்களையும் பிரசுரங்களையும் தட்டிப் பார்த்தார்கள். என் மேசையில் தமிழ், சிங்கள மொழி நூல்களும் பிரசுரங்களும் மட்டுமே இருந்தன. டாவிட்டின் மேசையிலே ஆங்கில, பிரஞ்சு, ஸ்பானிய, டொச்சு பிரசுரங்களும் நூல்களும் கிடந்தன.

9. டாவிட்டோடு அந்த இருவரும் பேசி, பின் கொழுவுப்



படலானார்கள். டாவிட்டா விடுபவன்? அவர்களைக் கேர்ணல் கடாபியின் கைக் கூலிகள் என்று மூஞ்சிக்கு மூஞ்சி திட்டினான். சில காலங்களுக்கு முன்பு தான் கிளிவ் சுலோட்டர் லிபியா சென்று கடாபியைச் சந்தித்து விட்டு வந்திருந்தார் என்று கேள்விப் பட்டிருந்தோம்.

10. நடக்கும் வாதங்களை கிளிவ் சுலோட்டர் இறுகிய முகத்துடன் பார்த்துக் கொண்டே நின்றார். தமிழ்த் தோழரொருவர் என்னைச் சுரண்டி 'பார்த்தீரோ கிழட்டுத் தாட்டான்ர பார்வையை' என்று விமர்சித்தார். டாவிட் நேராக சுலோட்டரிடம் போய் எமது பத்திரிகையை நீட்டினான். சுலோட்டர் ஒரு முறையல் முறைத்து விட்டுப் போனார்.

11. அன்றைய மாலையில் நாங்கள் கணக்கு வழக்குகளை முடித்து தமிழ்ப் பிரிவு பொறுப்பாளரிடம் ஒப்படைத்தோம். டாவிட் இந்தக் காசுக் கணக்கு வழக்குப் பொறுப்புகளில் ஈடுபட தீர்மானகரமாய் மறுத்து விடுவான்.

12. இரவு டாவிட்டின் குப்பையும் கூழமும் புத்தகங்களும் பியர்ப் போத்தல்களும் நிறைந்த அறையில் நாங்கள் குடித்தோம். கொஞ்சம் போதையேறி விட்டால் டாவிட் அழகாகப் பாடி ஆடுவான். ஆனால் அவன் எப்போதும் ஒரேயொரு பாடலையே பாடினான். அப்பாடல் பொரிஸ் வியானின் பாடல் என்று அவன் சொன்னதாக ஞாபகம். அவன் இன்றும் அப்பாடலையே பாடினான்.

13. ஒரு அணுகுண்டின் ஜாவா நடனம் குறித்த பாடலைத் தயவு செய்து கேளுங்கள்.

14. எங்கள் மாமா பள்ளிக் கூடமே போனதில்லை. ஆயினும் அவர் ஒரு நேர்த்தியற்ற ஆனால் மகத்தான தொழில்நுட்பக் கலைஞர்.

15. அவர் ரசித்து ரசித்து ஒரு அணுகுண்டினைத் தயாரித்தார்.

16. பகல் நேரம் முழுவதும் தன்னைத் தனது தொழில் பட்டறையினுள் வைத்துப் பூட்டிக் கொண்டு தனது அனுபவங்களை அணுகுண்டாக மாற்றினார்.

17. இரவுகளில் அவர் தனது தயாரிப்புக் குறித்து எங்களிடமும் பேசினார். எமது மாமாவின் பேச்சைக் கேட்க நாங்கள் 'கெலி' கொண்டு திரிந்தோம். கண்கள் விரியக் கேட்போம்.

18. என் பிள்ளைகளே என்னை நீங்கள் நம்புங்கள்.

19. ஒரு அணுகுண்டினைத் தயாரிப்பதில் பெரிய சிரமங்கள் ஏதும் கிடையாது. அணுகுண்டின் விடயத்தில் பிரதான கேள்வியே அதன் 'கெற்பு' குறித்தது தான். ஆனால் ஒரு அரைமணி நேரத்தில் அதற்குத் தீர்வு கண்டு பிடித்து விடலாம்.

20. என் பிள்ளைகளே எனக்கு அணுகுண்டைச் செய்வது ஒன்றும் பெரிய சிரமமான வேலைகிடையாது. ஆனால் என் கவலையெல்லாம் அதன் வீச்சு குறித்துத் தான்.

21. இப்போதைக்கு எனது அணுகுண்டின் வீச்சு மூன்றரை மீற்றர்கள் மட்டுமே. இதை நிவர்த்தி பண்ணியே ஆகவேண்டும் என்றார் மாமா. நடு நிசியிலும் மீண்டும் தனது பட்டறைக்கு ஓடிச் சென்று வேலை செய்தார்.

22. தீராக் காதலுடன் நீண்ட நாட்கள் அவர் வேலை செய்தார். அதிக பட்ச வீச்செல்லையுடனான திருத்தமான ஒரு அணு குண்டினை வடிவமைக்க முயன்றார்.

23. இரவுகளில் எங்களுடன் அவர் உணவருந்தும் போது 'வேர்மிசெல்' சூப்பை ஒரே மடக்கில் விழுங்கினார். அவரின் முகம் பிள்ளைகள் எமக்கு அச்சம் ஊட்டியது. அந்த அச்சம் தரும் முகம் அவர் பிரச்சனைக்கு இன்னும் தீர்வு காணவில்லையென்ற சேதியை எமக்குச் சொன்னது.

24. ஓர் இரவில் நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது எமது மாமா பெருமூச்சுடன் இவ்வாறாகச் சொன்னார்.

25. என்னால் உறுதியாகச் சொல்லமுடியும், எனக்கு வயதாகிவிட்டபடியால் எனது மூளை மழுங்கிப் போய்விட்டது. இப்போது என்னிடம் மூளையில்லை. அது அழுகிப் போனது.

26. மாதங்கள் போயின, வருடங்கள் போயின. மூன்றரை மீற்றர்களுக்கு அப்பாலும் எனது அணுகுண்டின் வீச்செல்லையை அதிகரிக்க முயன்றேன், ஆனால் என்னால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

27. ஆனாலும் பரவாயில்லை என் பிள்ளைகளே! ஒரு அணுகுண்டு எவ்வளவு தூரத்துக்குக் கதிர்களை வீசுகிறது என்பது முக்கியமல்ல. எது எங்கே தனது கதிர்களை வீசுகிறது என்பதே முக்கியமானது.

28. மாமாவின் ஆராய்ச்சி குறித்துக் கேள்விப்பட்ட அரசுத்



தலைவர்கள் எனது மாமாவின் அணுகுண்டைப் பார்வையிட வந்தார்கள்.

29. மாமா அன்பு மின்னலிட அவர்களை வரவேற்றார்.

30. தனது தொழிற்பட்டறை மிகவும் சிறியதாக இருப்பதற்கு மாமா அரசுத் தலைவர்களிடம் மன்னிப்புக் கேட்டார்.

31. தனது பட்டறை குப்பையும் கூழமுமாய் ஒழுங்கீனமாய் இருப்பதற்காக இன்னொரு தடவை அரசுத் தலைவர்களிடம் மன்னிப்புக் கேட்டார்.

32. அரசுத் தலைவர்கள் அனைவரும் பட்டறையினுள் சென்றவுடன் பட்டறையின் கதவை மூடிக் கொண்டு 'உங்களுக்கு அமைதி கிட்டுவதாக' என்றார் மாமா.

33. அணுகுண்டு வெடித்ததன் பின்பாகத் தலைவர்கள் யாருமே இருக்கவில்லை.

34. இச் சம்பவத்திற்குப் பிறகும் மாமா பயப்படவில்லை.

35. ஆனால் அவர் ஒரு மனநோயாளி மாதிரி நடிக்க ஆரம்பித்தார்.

36. டாவிட்டுக்கு இந்தப்பாடலைப் பாடுவதில் சலிப்போ அதைக் கேட்பதில் எனக்கு அலுப்போ ஒரு போதும் ஏற்பட்ட தில்லை. நான் கட்சியிலிருந்து விலகியபோது டாவிட் என் மூஞ்சிக்கு நேரே விரலை நீட்டி நீ ஒரு ஓடுகாலி என்று திட்டினான்.

37. எமது கட்சியின் தமிழ்ப்பிரிவுச் செயலாளர் எனது நிலைப்பாடு அதி தீவிர இடது நிலையிலிருந்து கீழிறங்கல் வாதமும் தேசியவாத அடிபணிவும் சீர்திருத்தவாதமும் என்றார்.

சில மாதங்களின் பின்பு டாவிட்டும் கலைப்பு வாதியோ திருத்தல் வாதியோ ஆகிவிட்டான் என்று சில தோழர்கள் மூலம் கேள்விப்பட்டேன்.

38. சென்ற வருடம் ஒரு கனரக வாகனத்துக்குள் அடைத்து வைத்து அறுபது சீனர்களை★ ஒல்லாந்திலிருந்து இங்கிலாந்துக்குக்

---

★ 60 சீன அகதிகளை கனரக வாகனத்துக்குள் நெருக்கமாக அடைத்துவைத்து பயணமுகவர்கள் ஒல்லாந்திலிருந்து அந்த வாகனத்தை அனுப்பி வைத்தார்கள். அந்த வாகனம் பிரித்தானியாவை சென்றடைந்த போது வாகனத்தில் அடைபட்டிருந்த அனைவரும் மூடிய வாகனத்துள் சுவாசிக்க வழியின்றி இறந்து கிடந்தனர்.

கடத்தியவர்களில் முக்கியமானவன் டாவிட் என்ற செய்தி அவனின் புகைப்படத்துடன் இன்று 'லிபரேசன்' பத்திரிகையில் வெளியானது.

யாழ்ப்பாண நகரத்திலிருந்து இந்த ஊர் இத்தனையாவது கட்டை தொலைவு, அந்த ஊர் அத்தனையாவது கட்டை தொலைவு என்று கணக்கு வைத்திருந்தார்கள். இப்போது இந்த அளவை 'கிலோ மீற்றருக்கு மாறிவிட்டது. ஆனாலும் சனங்கள் இப்போதும்' 'கட்டை'க் கணக்கு பேசுவதுண்டு.

2. யாழ் டச்சுக் கோட்டைப் பிரதான வாயிலை 'சென்ரர்' ஆக வைத்தே இந்தக் 'கட்டை' தூரம் அளவிடப்பட்டது. அப்படியாக அளந்ததில் யாழ் கோட்டை பண்ணைத் தாம்போதி வழியாக ஊர்காவற்றுறை நோக்கி நீளும் பிரதான வீதியில் இரண்டரைக் கட்டை தூரத்தில் அல்லைப்பிட்டிக் கிராமம் வருகிறது.

3. இந்தப் பிரதான வீதியை 'வடக்கு ரோட்' என்று சொல்வார்கள். இதன் ஒரு புறம் அராலிப் பரவைக் கடல். அல்லைப் பிட்டிக்கு நேராக இந்தப் பரவைக் கடலுக்குள் இறங்கினால் சில மணி நேரங்களில் நாவாந்துறையிலோ, பொம்மை வெளியிலோ மிதக்கலாம். கடல் பொதுவாகவே தப்புத் தண்ணி. சில இடங்களில் மட்டுமே ஆழம் அதிகமாய் இருக்கும் இப்பகுதிகளை 'ஆறு' என்பார்கள்.

4. பிரதான வீதியின் மறுபுறம்; அதாவது தெற்கு முன்னாகத் தரவை. நெல்லும் விளையாது, புல்லும் விளையாது. ஒரு காலத்தில் விளைந்ததாகச் சொல்கிறார்கள். இப்போது இது வெறும் உவர் தரவை. இந்தத் தரவையின் ஒரு பகுதியில் சில கொட்டில்களும்- எண்ணி இருபது இருபத்தைந்து கொட்டில்கள் சொல்லலாம்-கொஞ்ச மனிதர்களும் சீவித்தார்கள். இந்த மனு நடமாட்டப் பகுதி குஞ்சன் வயல் என்று சொல்லப்படுகிறது.

5. குஞ்சன்வயலைத் தாண்டினால் உவர்தரவை முடிந்து தோலறி, வழுக்கல் என்று நெற்பயிர் செய்யப்படும் காணிகள் ஆரம்பிக்கும். அதையும் தாண்டிப் போக ஊர்மனை தெற்குப் பெருங்கடலின் மடியில் கிடக்கிறது.



6. பண்ணைத் தாம்போதி போடப்பட்டதைத் தொடர்ந்தே உவர்தரவையில் குஞ்சன்வயல் குடியிருப்பு உருவானதாம். குஞ்சன் என்பவர் தான் முதலில் இங்கே கொட்டில் போட்டு சீவிக்கத் தொடங்கினாராம். குஞ்சன் 'வந்தான் வரத்தான்' தான். அவர் வந்த கதையை நான் இவ்வாறு கேள்விப்பட்டிருக்கிறேன்.

7. அந்தக் காலத்தில் குமாரசுவாமி ... குமாரசுவாமி ... என்றொருவன் ஜீ. ஜீ பொன்னம்பலத்தின் கட்சியில் சாவகச்சேரிப் பக்கமாக எம்.பி. ஆக இருந்தானாம். அப்போதெல்லாம் யாழ்ப்பாணப் பகுதிகளில் வண்டிச் சவாரிப் போட்டி படு பிரபலம். அப்படியான ஒரு போட்டிக்கு தலைமை தாங்கவும் வெற்றி யாளர்களுக்கு பரிசுகளை வழங்கிச் சங்கை செய்யவும் குமாரசுவாமி எம்.பி. யை அழைத்திருந்தார்களாம்.

8. அந்தப் போட்டியில் யாழ்ப்பாணத்தின் வெகு விலாசமான சவாரி ஓட்டக்காரர்களான - இந்த விலாசங்களின் பெயர்கள் இப்போது கூட வயசாளிகளால் ஏதாவது சவாரி மாடுகளைக் கண்ட மாத்திரத்தில் பேசிப் பறையப்படுவதுண்டு - சோழாவத்தைத் தருமர், கொடிகாமம் செல்லையர், வதிரி 'சம்பியன்' துரை எல்லோரும் கலந்து கொண்டார்களாம். ஆனாலும் ஒரு புதியவர் எல்லாரையும் 'என்ர சுட்டியன்ர வாலையாவது பிடியுங்க பார்ப்பம்' என்ற சாங்கத்தில் வலு திறமான ஓட்டம் ஓடி வெற்றி பெற்றாராம்.

9. இப்போது குமாரசுவாமி எம்.பி. வெற்றி பெற்றவருக்கு மாலை அணிவிக்க வேண்டுமாம். குமாரசுவாமிக்கும் மாட்டுச் சவாரியில் நல்ல 'புறியம்.' பக்கத்தில் நின்றவர்களிடம் 'உதிலை நிக்கிற உந்தப் பொடியன் ஆர் ஆள்' என்று கேட்கப் பக்கத்தில் நின்றவர்களில் ஒருவன் 'இவன் மந்துவில் குஞ்சன்...* சீவல்காரப் பொடியன்' என்று சொன்னானாம்.

* வைரவன் குஞ்சன் (1930 - 1984) சமூகவிரோதிப் பட்டத்தோடு மின்கம்பத்தில் கொல்லப்பட்டார். இவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு: மேய்ச்சலில் நின்றிருந்த ஊர் விதானையின் சவாரி மாட்டுச் சோடிக்கு அரிசிக் கஞ்சியில் அரளி விதையைக் கலந்து பருக்கி மாடுகளைச் சாகடித்தது.

10. குமாரசுவாமிக்கு இதைக்கேட்டதும் நாடி விழுந்து விட்டதாம். எக்காரணம் கொண்டும் ஒரு சீவல்காரனுக்கு மாலை போடக்கூடாதென்று முற்றெடுத்த குமாரசுவாமி எம்.பி. மாலையோடு யோசித்துக்கொண்டே போக 'கப்' எடுத்த குஞ்சனும் தயாராய் நிற்க குமாரசுவாமி படாரென்று மாலையைக் குஞ்சனின் மாட்டுக்குப் போட்டானாம். 'மாடு தானே ஓடி வென்றது, அதனால் மாட்டிற்குத் தான் மாலை' என்று குமரசுவாமி விளக்கம் ஒன்றும் சொன்னானாம்.

11. இந்தச் சம்பவத்திற்குப் பின்பு மந்துவில் குஞ்சனை சவாரிப் போட்டியில் வெல்லத் தோது வரும் வரை சாவகச்சேரி, கொடிகாமம் சுற்றுவட்டாரங்களிலே மாட்டுச் சவாரிப் போட்டியே நடத்துவதில்லை என்றும் முற்றெடுத்தார்களாம்.

12. பின்பு குஞ்சனின் மாடுகளை விலைக்குக் கேட்டு குமாரசுவாமி எம்.பியின் கோளயாக்கள் மந்துவிலுக்குச் சென்ற னராம். குஞ்சன் தான் பட்சமாயும் ராங்கியாகவும் வளர்ந்து வந்த மாடுகளை விற்பதற்கு ஒரேயடியாக மறுத்துவிட்டாராம். கோள யாக்கள் வெறுங்கையோடு திரும்பினர்.

13. அக்காலங்களில் குமரசுவாமியின் செல்வாக்கைப் பற்றியும் குஞ்சனின் ராங்கியைப் பற்றியும் அந்தப்பக்கம் முழுவதும் பரபரப்பாகச் சனங்கள் கதைத்துக் கொண்டார்கள். 'சாதிமான்களும் செம்புக்காரர்களு'மாய் ஊரே ஒத்து குஞ்சன் பகுதியினருக்கு சீவுவதற்கு மரங்களை கொடுப்பதற்கு மறுத்துவிட்டனராம். குஞ்சனின் இனசனங்களுக்கு உரித்தான அற்ப சொற்ப சீவல் பனை மரங்களிலும் இரவோடு இரவாக ஏறி வட்டுக்குள் துளைபோட்டு லாம்பெண்ணை ஊற்றி பனைகளைக் கருக்கினார்களாம். உச்சமாக ஒரு சாமத்தில் குஞ்சனின் மாடுகளின் தலைகள் தறிக்கப்பட்டு அவை கட்டிக்கிடந்த கொட்டிலும் பற்றவைக்கப்பட்டது.

14. தமது கொட்டிலினுள் அயர்ந்து கிடந்த குஞ்சனும் அவரின் பெண்சாதி செல்லியும் மாடுகளின் கதறலைக் கேட்டு விழித்து பதறியடித்து ஓடியபோது அவர்களின் குடிசையிலும் நெருப்பை பற்றவைத்துவிட்டு ஓடுவதைக் கண்டார்களாம். இறவாணத்தில் கொழுவியிருந்த இயனக்கூட்டுக்குள் இருந்த பாளைக்கத்தியை உருவி



எடுத்துக்கொண்டு குஞ்சன் ஓடுபவர்களை கலைத்துக்கொண்டு போனாராம்.

15. அவர் திரும்பி வரும் போது செல்லி காலும், கையும், முகமும் கருகிக்கிடந்தார். மாடுகளைக் காப்பாற்றிவிட வேண்டு மென்ற வெறியுடன் எரியும் மாட்டுக் கொட்டகைக்குள் போய் கருகி விழுந்த செல்லியை அயலட்டச் சனங்கள் தூக்கி வாழை இலையில் வளர்த்தி வைத்திருந்தார்கள். அவர்கள் வண்டியைப் பூட்டி செல்லியை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போனார்களாம்.

16. அடுத்த நாள் சாவகச்சேரி பொலிஸ்காரர்களுக்கு குமாரசுவாமி எம்.பி. வீட்டில் 'கூழ்பார்ட்டி' வைக்கப்பட்டது. குமாரசுவாமியின் உத்திரவின் பேரில் ஆஸ்பத்திரிக் கட்டிலில் இருந்து செல்லி இறக்கப்பட்டு ஆஸ்பத்திரி விறாந்தையில் போடப்பட்டார். செல்லியின் உடலிலிருந்து எரிவுடன் ஊன் வடிந்து கொண்டே யிருந்தது. செல்லிக்கு இடையிடையே மூளை மாறாட்டமும் வந்தது. ஆஸ்பத்திரி விறாந்தையில் இருந்து தவழ்ந்து போய் இரு கைகளாலும் மண்ணை அள்ளி வானத்தைப் பார்த்து எறிந்து புரியாத ஒரு மொழியில் பல்லை நறுமி திட்டிக் கொண்டேயிருப்பாராம். நாளுக்கு நாள் மூளைமாறாட்டம் அவருக்கு அதிகமாகிக்கொண்டிருந்தது.

17. இனி இங்கிலிஸ் வைத்தியம் சரிவராது என முடிவெடுத்த போது குஞ்சன் அல்லைப்பிட்டி 'துரும்ப தாமிப் பரியாரி' பற்றி கேள்விப்பட்டு ஆஸ்பத்திரியிலிருந்து செல்லிக்குத் துண்டையும் வெட்டிக்கொண்டு அல்லைப்பிட்டிக்கு அழைத்து வந்தாராம்.

18. தாமிப் பரியாரி ஊர்மனைக்குப் புறத்தே கிடந்த வண்ணான் குளத்தருகே சீவித்து வந்தார். அந்த நாட்களில் யாழ்ப்பாணம் பகுதிகளில் மூளைமாறாட்டம், பேய் பிடித்தது, நாட்பட்ட நோவுகள், செய்வினை, சூனியம், பில்லி எல்லாவற்றுக்கும் பரிகாரம் காணக்கூடிய வித்தைகளை துரும்பர் சாதியைச் சேர்ந்தவர்களே பரம்பரையாகச் செய்து வந்தார்கள். தாமிப் பரியாரியின் சாதியையும் மீறி ஊரவர்களுக்கு தாமிப் பரியாரியின் ஊத்தைக் குடியனில் ஒரு பயம் இருந்துகொண்டிருந்தது.

19. செல்லியைப் பரிசோதித்த தாமிப் பரியாரி அதுவொரு கடும் வருத்தம் என்பதைக் கண்டுகொண்டாராம். ஆனாலும் தான்

ஒரு மண்டல மருந்தில் சுகப்படுத்திக் காட்டுவதாகவும் சிகிச்சைக் காலம் வரையில் அங்கேயே தங்கிவிடுமாறும் தாமிப் பரியாரி அவர்களுக்கு உத்தரவிட்டார்.

20. ஆனால் வண்ணான் குளத்தடியிலோ அல்லது ஊர்மனைக் குள்ளோ வெளியூர் பஞ்சமரைத் தங்கவைக்கக் கூடாது என்று ஊர் விதானை சொல்லிவிட்டானாம். தாமிப் பரியாரியும் விதானையிடம் ஆனமட்டும் கேட்டு சாடையாக வெருட்டியும் பார்த்தார். ''பரியாரி நீ எனக்கு செய்வினை வைக்கிறதெண்டாலும் வை, ஆனால் எக்காரணம் கொண்டும் உவங்கள் இஞ்ச தங்கியிருக்க நானும் ஊரும் சம்மதியம்'' என்று விதானை சொல்லிவிட்டானாம்.

21. ஒன்றுஞ் செய்யப் பாதையில்லாத தாமிப் பரியாரி குஞ்சனையையும் செல்லியையும் ஊர்மனையை விட்டுத் தூரமாக வடக்கு உவர்த் தரவைக்குள் ஒரு சின்னக் கொட்டிலைப் போட்டுத் தங்கச் சொன்னார். கொட்டிலுக்குத் தேவையான மரந்தடிகளையும் அவரே கொடுத்தாராம். ஒவ்வொரு நாளும் செல்லியைப் போய்ப் பார்த்து மந்திரித்தும் வந்தாராம். ஆனால் அரை மண்டல மருந்து முடிவதற்குள்ளேயே செல்லி உடல் எரிவுக் கொடுமை தாங்க மாட்டாமல் வடக்குக் கடலுக்குள் விழுந்து இறந்து போனாராம்.

22. குஞ்சன் நிரந்தரமாக அந்த உவர்த்தரவைக் கொட்டிலி லேயே தங்கிவிட்டார். வடக்கு பெரு வீதி அமைக்கப்பட்டபோது அவ்வீதி குஞ்சனின் கொட்டிலுக்கு மிக அருகாகவே சென்றது. வீதி அமைக்கும் கூலி வேலையாட்களாக வந்த சிலரும் குஞ்சனின் கொட்டிலருகே குடிசைகளை இணக்கிக் கொண்டு தங்கினார்கள். இந்த உவர்த்தரவை யாழ்நகருக்கு அருகாமைப் பகுதி என்பதோடு இத்தரவை அரசாங்கக் காணியாய் இருந்தபடியால் எவரும் எங்கேயும் காணியைப் பிடித்து ஆளக்கூடியதாய் இருந்தது.

23. ஊர் மனையிலிருந்து கணிசமான தூரத்தில் இப் புதிய கொட்டில்கள் முளைத்ததால் விதானையோ ஊர்க்காரர்களோ இதுபற்றி பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. தவிரவும் இப்போது ஊர்மனையிலிருந்தும் இல்லாததுகள் இயலாததுகள் கோவில் காணிகளில் குடியிருந்து பின் வெளியேற்றப்பட்டவர்கள் போன்றவர் களும் இப்புதிய குடியிருப்பில் வந்து சேர்ந்தார்கள். அப்படி வந்தவர்களில் பல சாதிச் சனங்களும் இருந்தார்கள். கொட்டில்களும் எட்டத்துக்கே அமைக்கப்பட்டன.



24. உப்பாய் பொரியும் குஞ்சன் வயலுக்கு குடிதண்ணீர் வேண்டுமென்றால் ஊர்மனைக்குப் போய்த்தான் அள்ளி வர வேண்டும். காலையில் குடிதண்ணீருக்கு புறப்படும்போதே குஞ்சன் வயல் சனங்களுள் கண்டிப்பாக யாராவது ஒரு வெள்ளாடிச்சியும் இருப்பாள். ஊர் சங்கக் கிணற்றில் இவள் தான் தண்ணீர் இறைத்து ஊற்றுவாள். அது மட்டுமல்லாமல் வேறு சாதியினர் எவராவது கிணற்றுத் தண்ணியில் கைவைத்து அள்ளுகிறார்களா என்பதையும் கண்காணிப்பாள்.

25. குஞ்சன் வயலுக்குள் இயக்கங்கள் நுழைந்த காலங்களில் மற்றைய ஊர்களைப் போலவே இங்கேயும் சாதிவாரியாகத் தான் இயக்கங்களில் இணைந்து கொண்டார்கள். அல்லது இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

26. இயக்கங்களால் 'சமூகவிரோதிகள்' எனச் சொல்லப்பட்டு சனங்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட போதும் மற்றைய ஊர்களைப் போலவே இங்கேயும் முதலில் சுட்டுக் கொல்லப்பட்டவர் ஒரு பஞ்சமரே.

மூன்றாவது குறுக்குத் தெருவினால் வந்து பிரதான வீதியில் மிதந்து சைக்கிளை மிதித்தாள் பிரின்ஸி.* பிரதான வீதியில் முழத்துக்கு முழம் இந்திய இராணுவத்தினர் நின்றிருந்தார்கள். இவள் சைக்கிளை மிதிக்கும் போதெல்லாம் அணிந்திருந்த பாடசாலை கவுண் முழங்கால்களுக்கு மேல் உயர்வதையும் விழுவதையும் எல்லா இராணுவத்தினரும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிரதான வீதி நெடுக நிறைய மாணவிகள்

*கரும்புலி மேஜர் பொற்கொடி (ஏசுராசன் பிரின்ஸி நிர்மலா, 1974-1990)

இவளுக்கு முன்னும் பின்னுமாக நடந்தும் சைக்கிள்களிலும் சாளி வண்டிகளிலும் சென்று கொண்டிருந்தார்கள்.

2. ஹோலி ஃபமிலி மடத்துக்கு நூறு மீற்றர்களுக்கு முன்னால் வீதியில் இந்திய இராணுவத்தின் மட்ராஸ்-7 படைப்பிரிவின் ஒரு பெரிய சோதனைச் சாவடியையும் தடை முகாமையும் அமைத்திருந்தார்கள். அதனைக் கடப்பதென்பது மாணவிகளுக்கு நாளும் பொழுதும் பெரிய சித்திரவதையாகக் கிடந்தது.

3. முன்பு ஒரு பெரிய புத்தகக்கடை நடந்து வந்த கட்டடத்தில் இந்திய இராணுவத்தினர் இந்தத் தடை முகாமை அமைத்திருந்தார்கள். இத் தடைமுகாமின் கொமாண்டராக மேஜர் கல்யாண சுந்தரம் என்றவொரு பெரு நரை மீசைக்காரன் இருந்தான். அவனின் கெடுபிடிகளும், நக்கல் சேட்டைகளும் மாணவிகளால் சகிக்க முடியாமல் இருந்தது. சோதனைச் சாவடியை நெருங்க நெருங்க பிரின்ஸிக்கு இரத்தம் எல்லாம் தண்ணியாகியது.

4. இவளுக்கு வாயினுள் எச்சில் சுரந்தது. கிழே துப்பக் கூட முடியாத அளவுக்கு சாலையின் இருபக்கங்களிலும் இராணுவத்தினர் நெருக்கமாக நின்றிருந்தனர். அடைக்கல மாதா கோவில் எட்டுமணி ஆராதனைக்கான ஆயத்த மணிச்சத்தம் காற்றிலே தேய்ந்து வந்தது. பிரின்ஸி கண்களைப் பாதி மூடி நெற்றியிலும் நெஞ்சிலும் தொட்டு 'பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே: ஆமென்' சொல்லிக் கொண்டாள்.

இனி சோதனைச் சாவடியைக் கடக்கும் வரை சைக்கிளை உருட்டியபடியே நடந்து தான் செல்ல வேண்டும். மாணவிகள் வரிசையாகச் சைக்கிள்களை உருட்டியபடியே செத்த முகங்களுடன் நடந்து கொண்டிருந்தார்கள். ஒருவரையொருவர் பார்க்கும் போது சீவனில்லாமல் புன்னகைத்துக் கொண்டார்கள்.

5. சோதனைச் சாவடிக்குள் சாக்குகளால் மூடிய வண்ணம் ஒரு உருவம் அமர்ந்திருந்தது. அந்த உருவத்தின் தலைப்பகுதியில் இரண்டு துவாரங்கள் மட்டும் இருந்தன. அவ்வுருவத்தின் முன்பாக மாணவிகள் வரிசையாக நடக்கக் கட்டளையிடப் பட்டார்கள். அங்கே மாணவிகள் தமது அடையாள அட்டைகளைக் கொடுத்தனர். தடுப்பு முகாமின் முன்புறமுள்ள மின்சாரக் கம்பமொன்றில் இரத்தத்தில் தோய்த்தெடுக்கப்பட்ட ஒரு இளைஞனைக்



கட்டிப்போட்டிருந்தனர். பிரின்ஸி பெரியண்ணனை நினைத்துக் கொண்டாள்.

6. அண்ணன் கொழும்புக்குப் போய் ஒரே ஒரு கடிதம் வந்தது. இவள் எத்தனையோ கடிதங்கள் அண்ணனுக்கு எழுகூதி விட்டாள். ஒரு பதிலு இல்லை. பல நாட்கள் பிறகு சென்ற வாரம் பிரின்ஸி கிராமத்துக்குச் சென்ற ஒரு நாள் தங்கியிருந்தான. 'நாங்கள் இஞ்ச பட்டினியால் சாகிறம் அவன் கொழும்பில ஆடித்திரியிறான்' என்று பப்பா சொன்னார், பெரியண்ணா அப்பிடியான இல்லை, சரியான பொறுப்பான ஆள்' என்று இவள் நினைத்துக் கொண்டான்.

7. அண்ணன் எவ்வளவு கெட்டிக்காரன் - அமைதியானவன். ஆனால் படு பயங்கரமான துணிந்த கட்டை. அவன் பேசுகையில், சாப்பிடுகையில், உடை அணிவதில் எல்லாம் ஒரு வேகமும் அதேயளவு நளினமும் இருக்கும். கோபம் வந்தால் மட்டும் பேசமாட்டான். யார் எவர் என்று இல்லை அடித்துவிடுவான். அம்மாவுக்கும் அடித்திருக்கிறான்.

8. பிரின்ஸிக்கு 'மரியாயின் சேனை'யில் சேர்ந்து துப்பட்டி போட்டு கோவில் அடுத்தாரில் இருந்து பூசைக்குப் பாடவேண்டும் என்பது நினைவு தெரிந்த நாளிலிருந்தே இருந்து வந்த ஆசை. பப்பா மாதாங்கோவில் அறைவீட்டுக்குள் புகுந்து பாதிரியாரைப் போட்டு அடித்து நொருக்கி 'லோ' கழற்றித் தூக்கி முன்னால் இருந்த குட்டைக்குள் போட்டதன் பின்பாக பாதிரியார் இவளின் குடும்பத்தையே பங்கிலிருந்து விலக்கி விட்டார். பப்பா பாதிரியாருக்கு எதிராய் ஒற்றைச் சூலத்தை வைத்து வைரவர் கோவில் தொடங்கியது ஒரு பெரிய கதை.

9. 'பப்பாவால் தான் எங்கட குடும்பத்துக்கு இந்தக் கல்வாரி உத்தரிப்பும் கண்ணீரும் சோறும்' என்று பிரின்ஸி நினைத்துக் கொண்டாள். 'வேற ஒரு மனிசனுக்கு நாங்கள் பிள்ளையளாய்ப் பிறந்திருக்க வேணும். அம்மாதான் பாவம் செய்த சீவன். கடைசி மட்டும் பப்பாவிட்ட போடுதடியாய்க் கிடந்து கஸ்ரப்படுறா....'

10. இவளின் முன்னால் நிற்கும் மாணவியை 'ஏய் நீ சுதந்திரப் பறவையா? புலியா?' என்று ஒரு இராணுவத்தினன் மிரட்டினான். அவள் நடுங்கிக் கொண்டு நின்றாள். அடுத்தது பிரின்ஸி.

11. ''எங்க போகிற?''

12. பிரின்ஸி கழுத்தில் கிடந்த சிவப்பு வெள்ளை கோடு போட்ட கழுத்துப் பட்டியைச் சுட்டிக் காட்டி ''ஹோலி ஃபமிலி கொன்வென்ட் சேர்'' என்றாள்.

13. 'சரி நீ அங்க ஆபிஸர் கிட்ட போயி கையெழுத்துப் போட்டுட்டுப் போ'' என்றான் அந்த இராணுவத்தினன்.

14. கட்டடத்தின் முன்னால் மேசை போட்டுக் கதிரையில் சாய்ந்து சுறுசுறுப்பாய் இருந்தான் மேஜர் கல்யாண சுந்தரம். கட்டடம் முழுவதும் அமைதிப்படையினரால் நிரம்பிக் கிடந்தது. ஒரே கேலியும் கிண்டலுமாய் அவர்கள் மாணவிகளைப் பார்த்துக் கூச்சலிட்டார்கள்.

15. பிரின்ஸி மேஜருக்குக் கொஞ்சத் தூரத்தில் போய் நின்றாள். முகாமின் முன்னால் ஒப்படைத்திருந்த அவளின் அடையாள அட்டை மேஜரின் முன்பாக மேசையில் கிடந்தது.

16. மேஜர் அவளின் முகத்தையும் அடையாள அட்டையையும் மாறி மாறிப் பார்த்தான்.

17. ''பாப்பா உன் பேர் என்ன?''

''பிரின்ஸி சேர்''

''ஃபாதர் பேரு?''

''ஏசுராசன்''

''வயசு?''

''ஃபிப்டீன் சேர்''

''சரி இதில கையெழுத்துப் போடு''

18. பிரின்ஸி கையெழுத்துப் போடுவதற்காக மேசையின் அருகில் வந்து மேஜரின் முன்னால் மேசையில் குனிந்து பேனாவையெடுத்தாள். அவளின் மார்புகள் மேஜரின் முகத்தைக் குத்துவதுபோல் நெருக்கமாய் நின்றன.

19. மேஜர் ஒரு இளிப்புடன் கொஞ்சம் கீழே சாய்ந்து கண்களால் பிரின்ஸியின் மார்புகளைச் சுட்டி பிரின்ஸியின் முகத்தைப் பார்த்து மெதுவாய் கேட்டான்.



20. ''இங்கே என்னா பாம் வைச்சிருக்கேயா?''

பிரின்ஸி பேனாவைக் கீழே போட்டு விட்டு நிமிர்ந்தாள். மேஜர் இமைப் பொழுதில் எழுந்து இடுப்புத்துப்பாக்கியை உருவப் போக இவள் மேசையில் ஏறி விழுந்து மேஜர் கல்யாண சுந்தரத்தைக் கட்டிப் பிடித்தாள்.

21. அவள் உதடுகள் 'இயேசுவே இரட்சியும்' என்று சொன்னதும் அவளின் மார்பிலே பொருத்தப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததும் ஒரே கணத்தில் நிகழ்ந்தன.

முகாமின் பின்னால் தயாராகக் காத்திருந்த புலிகள் தடைமுகாமுக்குள் சுட்டுக் கொண்டும் ரொக்கட்டுகளை ஏவிய வாறும் புகுந்தார்கள்.

22. இது தான் இந்திய அமைதிப்படையின் மீது புலிகள் நிகழ்த்திய இறுதித் தற்கொலைத் தாக்குதல். இது நிகழ்ந்த அடுத்த மாதம் இந்திய இராணுவத்தினர் இந்தியாவுக்குப் பழிகளுடன் திரும்பினர்.

ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தேழாம் வருடம் டிசம்பர் மாதம் இருபத்தியிரண்டாம் திகதி இரவு ஏழு மணிக்கு கொழும்பின் ஐந்தாவது குறுக்குத்தெருவும் ஒல்கோட் மாவத்தயும் சந்திக்கும் 'போஹாந்திய' சந்தியில் வைத்து இலங்கை இராணுவத்தினரால் நான் கைது செய்யப்பட்டேன்.

2. எனது அடையாள அட்டையில் பிறந்த இடம் என்ற குறிப்புக்கு அருகில் எழுதப்பட்டிருந்த யாழ்ப்பாணம் என்ற சொல் காரணமாகவே - அதனால் மட்டுமே - அவர்கள் அப்போது என்னைக் கைது செய்தார்கள்.

3. இராணுவத்தினரது வாகனத்துக்குள் தூக்கியெறிப்பட்டு விழுந்த என்னை ஒரு இராணுவத்தினன் மிகுந்த ஆதரவோடு தூக்கி இருக்கையில் உட்கார வைத்தான். நான் இரத்தத்தால் தோய்ந்த ஒரு

நன்றி - நூலகத்திட்டம்

இருக்கையில் உட்கார வைக்கப்பட்டிருப்பதைக் கவனித்தேன். என் அருகே இரத்தத்தில் தோய்ந்த ஒரு பெரிய சட்டிப் பனங்காய் அளவான பொதி இருப்பதையும் கண்டேன். என்னை ஆதரவோடு தூக்கிய அந்த இராணுவத்தினன் அந்தப் பொதியை எடுத்து என் மடியில் வைத்திருக்குமாறு இளித்துக்கொண்டே சொன்னான்.

4. மெள்ள பொதியை எடுத்து மடியில் வைக்கும்போது தான் அது ஒரு உரச்சாக்கிலே பொதியப்பட்டிருக்கும் மனிதத் தலை என்பதை உணர்ந்து கொண்டேன். எனக்காகவும் இவர்கள் ஒரு உரச்சாக்கை வைத்திருக்கிறார்கள் என நம்பத் தொடங்கினேன்.

5. ஆனால் கதை வேறு மாதிரியானது. அவர்கள் என்னைக் கொலை செய்ய முன்பு நீ ஏன் யாழ்ப்பாணத்தில் பிறந்தாய்? என்றொரு 'நீதி விசாரணை'க்கு முயன்றிருக்கலாம் என எண்ணு கிறேன். ஆகவே நான் ஏராளமான தமிழர்களோடு மாற நகரத்துச் சிறையில் அடைக்கப்பட்டேன்.

6. நான் சிறையில் அடைக்கப்பட்ட அன்றே ஒரு கரிய அழகிய இளைஞன்* என்னைச் சந்தித்துப் பேசினான்.

7. அவன் எடுத்த எடுப்பிலேயே ''அண்ணே நீங்கள் இயக்கமா?'' என்று கேட்டான். நான் உடனேயே அவன் ஒரு இராணுவ உளவாளி என்று தீர்மானித்து ''இல்லையுங்கோ நான் நாலாம் குறுக்குத் தெருவில கடையில சம்பளத்துக்கு நிக்கிறன்'' என்று அழுவாரைப் போல சொன்னேன்.

8. அதற்கு அவன் கண்களைச் சிமிட்டிக்கொண்டே மிக இரகசியமான குரலில் ''நான் இயக்கம் அண்ணன், டம்மிங் குறுப்பில இருந்தனான். இப்ப ஆக்களத் தட்டி கனகாலமாகுது. விரலெல்லாம் துடிக்குது'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே படக் படக் என்று விரல்களை நெட்டி முறித்துக் காட்டினான்.

9. 'இதென்ன இது சட்டியுக்குள்ளயிருந்து நெருப்புக்குள்ள விழுந்த கதையா என்ர கதை ஆகிப்போட்டுதே' என்று நான் யோசித்துக்கொண்டே அவனிடமிருந்து விலகினேன்.

* நடராசா உதயசூரியன் (1976-1991) நீண்ட நாட்களாக விசாரணைகள் ஏதுமின்றி பயங்கர வாதத் தடுப்புச்சட்டத்தின் (D.O.) கீழ் மாற சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்து Schizophrenia மனநோய் முற்றிய நிலையில் சிறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.



10. அவன் ஒவ்வொரு நாளும் என்னைச் சந்திக்கும் போது தன்னைக் குறித்து ஒன்றுக்கொன்று முரண்பட்ட கதைகளை எனக்குச் சொன்னான். 'அவன் எவ்வளவு காலமாக இச்சிறையினுள் இருக்கிறான்?, என்று கேட்டேன்.

11. ''சலங்கையை இயக்கம், சி.ஐ.டி எண்டு சுட்டு பஸ் ஸ்ராண்டில போட்ட அண்டு இஞ்ச வந்தனான்'' என்று சொன்னான்.

12. பின்பு அவன் எனக்குச் சொன்ன கதை கீழ்வருமாறு.

13. அப்போது அவனுக்கு பதினேழு வயதாய் இருந்தது.

14. அது இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகமாக இருந்த காலம். ஆறுமணிச் சட்டத்தின் காரணமாக நகரத்திலிருந்து வாகன ஓட்டங்களை ஐந்து மணியுடனேயே தடைபண்ணியிருந்தார்கள்.

15. இவன் அல்லைப்பிட்டி, மண்கும்பான், வங்களாவடி, புளியங்கூடல், சரவணை, செருக்கன் ஊடாக ஊர்காவற்துறை வழித்தட மினிபஸ்ஸில் 'கொண்டக்டராக' வேலைசெய்தான்.

16. இவனின் பஸ்ஸே கடைசி பஸ்ஸாக நகரத்திலிருந்து ஊர்காவற்துறைக்குப் புறப்படும். கடைசி பஸ்ஸில் பயணிகள் எப்போதும் மிகக் குறைவாகவே காணப்படுவர். இவன் வழமை போலவே வாசற்கதவுக்கு அருகான இருக்கையில் உட்கார்ந் திருப்பான். அந்த ஹிப்பித் தலைக்காரியும் வழமை போலவே இவனுக்கு அருகில் உட்கார்ந்திருந்து ஆங்கிலப் பத்திரிகை வாசித்துக் கொண்டிருப்பார்.

17. கையில்லாத பிளவுஸ், 'மாடு முட்டவாற' நிறங்களில் சேலை, குதிக்கால் செருப்பு, எப்போதுமே புன்னகை கீறும் உதடுகள் என அவர் நிதானமாக கரம்பொன் முருகமூர்த்தி கோவிலடியில் இறங்கிக் கொள்வார்.

18. மினிபஸ்ஸின் சாரதி ராஜ்குமார் தான் அந்தப் பெண்ணின் பெயர் சலங்கை என்று இவனுக்குச் சொன்னான். சலங்கை, யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரிக்கு முன்னாலுள்ள லக்கி ஹோட்டலில் 66 வது இலக்க அறையில் தொழில் செய்து வருகிறாராம். சலங்கைக்கு சிணி என்றும் சலங்கையோடு படுத்தால் நசல் வரும் என்றும் ராஜ்குமார் இவனுக்குச் சொன்னான்.

19. இப்போது இவன் சலங்கையோடு கதைபோட முயன்றான்.

20. ''அக்கா இண்டைக்கு சரியான வெய்யில்'' என்றான். 'ஒருத்தருக்கும் பறைஞ்சுபோடாதேயுங்கோ கெதியில காரைநகர் நேவிக்காம்பை ஈபியெல்லார் அடிக்கப் போகுது'' என்றான். சலங்கை அதுக்கும் சிரித்தார். இதுக்கும் சிரித்தார்.

21. கதையோடு கதையா இவன் ஒரு நாள் சலங்கையிடம் ''அக்கா நான் ஈரோஸ் இயக்கம்'' என்றான்.

22. சலங்கை கண்கள் மருள இவனைப் பார்த்தார். பின்பு ''என்ன? இயக்கம் எண்டு சொல்லுறீர் பின்ன, எப்ப பார்த்தாலும் மினிபஸ்ஸிலேயே திரியிரீர்'' என்று கேட்டார்.

23. ''அக்கா எங்கிட நோக்கமெல்லம் கொழும்பு தான். அடுத்த முறை பம்ஸோட அநேகமா நான் தான் கொழும்புக்குப் போவன்.''

24. இதற்கு ஒரு நான்கு நாட்களுக்குப் பிறகு இவன் மிகுந்த தயக்கத்தோடு தன்னோடு ஒரு முறை சந்தோசமாக இருக்க வருமாறு சலங்கையிடம் கேட்டான்.

25. சலங்கை காசுக்காகச் சம்மதித்தாரா, இல்லை நாட்டுக்காக இளம் வயதிலேயே போய்ச் சாகப் போகிற பொடியன் என்பதற்காகச் சம்மதித்தாரா என்பது இந்த நிமிசம் வரை இவனுக்குத் தெரியாதாம்.

26. சலங்கை ஒத்துக்கொண்டவுடனே இவனுக்கு பெரிய பதற்றமாகப் போய்விட்டது. ராஜ்குமாருக்கு விசயத்தைச் சொல்லாமலேயே உடம்புக்குச் சுகமில்லை என்று கூறி மறுநாள் லீவு எடுத்துக்கொண்டான்.

27. அடுத்த நாள் மாலையில் ஒரு பார்சல் கொத்துரொட்டியும் ஒரு லயன் ஸ்ரவுட் பியரும் வாங்கிக்கொண்டு தயாராகவிருந்தான். சலங்கைக்கு கொடுப்பதற்காக இருபத்தைந்து ரூபா காசும் வைத்திருந்தான்.

28. யாழ் நகரத்திலிருந்து ஊர்காவற்துறை நோக்கி வந்து கொண்டிருந்த மினிபஸ் மண்கும்பான் தாண்டியதும் ஆள் அரவமற்ற ஒரு பகுதியில் நின்று அதிலிருந்து சலங்கை இறங்கிக் கொண்டதும் மீண்டும் புறப்பட்டது. சலங்கை வீதியிலிருந்து இறங்கி கடற்கரையை நோக்கி வேகமாக நடந்தார். அவர் சேலைத் தலைப்பால் தலைக்கு முக்காடு போட்டிருந்தார்.

29. கடற்கரையில் இருந்த கைவிடப்பட்ட ஓலைக் கொட்டிலுக்குள் தயாராக இருந்து பார்த்துக் கொண்டிருந்த இவன் பியர் போத்தலை பற்களால் கடித்து திறப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தான்.

30. கொத்துரொட்டிப் பார்சலை பார்த்தவுடனேயே தனக்குப் பசி, சாப்பிட வேண்டும் என்று சொல்லி சலங்கை சாப்பிட ஆரம்பித்தார். இவன் அவர் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தான். அவர் சிரித்துக் கொண்டே ஒரு பிடி எடுத்து இவனுக்கு ஊட்டிவிட்டார்.

31. அப்போது ஐந்து இளைஞர்கள் அந்தக் கொட்டிலுக்குள் புகுந்து துப்பாக்கியை நீட்டிக்கொண்டே ''ஹாண்ட்ஸ் அப்'' என்று கத்தினார்கள். இவன் ஏங்கி விறைத்துப் போனான். சலங்கை மினிபஸ்ஸில் இருந்து இறங்கி ஆளில்லாத கடற்கரைப் பக்கமாய் போவதை யாரோவொரு தேசபக்தன் கவனித்துவிட்டு இயக்கக் காரரிடம் போட்டுக்கொடுத்திருக்க வேண்டும்.

32. சலங்கையின் ஹிப்பித் தலையையும் சாயம் பூசின உதடுகளையும் அவரின் பையிலிருந்த ஆங்கிலப் பத்திரிகைகளையும் கண்ட இயக்கக்காரர் சலங்கை ஒரு சி.ஐ.டி. என்ற கோணத்திலேயே அவரை விசாரித்தார்கள்.

33. பின்பு இயக்கக்காரர் இவனை தனியே கொண்டு போய் விசாரித்தார்கள். இவன் தனக்கு பியர் குடிக்க ஆசையாய் இருந்ததால் யாருக்கும் தெரியாமலிருக்க கடற்கரைக்கு வந்ததாகவும் அப்போது இந்த அம்மா வந்து - இவன் அம்மா என்ற வார்த்தையை மிகுந்த இரக்கத்துடன் உச்சரித்தானாம் - பசிக்கிறது என்று சொன்னபடியால் கொத்துரொட்டி கொடுத்ததாகவும் சாதித்தான்.

34. இயக்கம் மறுபடியும் சலங்கையிடம் சென்று விசாரித்தது. இவன் தான் ஈரோஸ் இயக்கம் என்று சலங்கையிடம் சொன்னதை அவர் இயக்கக்காரரிடம் சொல்லிவிடுவாரோ என்று நினைத்து நடுங்கிக் கொண்டிருந்தான்.

35. கடைசியாக இயக்கம் இவனின் பெயர் விலாசங்களை எழுதி வாங்கிக்கொண்டு ''ஓடு இனி இந்த பக்கம் உன்னைக் காணக்கூடாது'' என்று சொல்லி துரத்திவிட்டது. இவன் திரும்பியும் பாராமல் ஓடி வந்துவிட்டான்.

36. சலங்கையை இயக்கம் தொடர்ந்து விசாரித்துக் கொண்டிருந்ததாம்.

பரவைக்கடலுக்குள் ஊன்றப்பட்டிருந்த வலைகள் களவாடப் பட்டதைத் தொடர்ந்து இயக்கக்காரர்களிடம் சம்மாட்டிமார் முறையிட்டார்கள். குஞ்சன் வயலுக்குள் இருப்பவர்களில் தான் அவர்களுக்கு ஐமிச்சம் என்றும் இயக்கக்காரர்களிடம் சொன்னார்கள். சந்தேகத்தின் பேரில் இயக்கத்தால் பிடிக்கப்பட்டவர்களில் கொரில்லாவும் ஒருவன்.

2. கொரில்லாவை இயக்கம் நெவிள் பறக்க அடித்து நொருக்கி விட்டது. கொரில்லாவுக்கும் நிலமை முன்பு மாதிரி இல்லையெனவும் இனி இயக்கக்காரர்களோடு தாக்காட்ட முடியாது, வீணாய் வெடி வாங்கவேண்டும் என்பதும் விளங்கிவிட்டது. அவன் இன்னொரு முறை கொழும்புக்கு வந்து நாலாம் குறுக்குத் தெருவில் தங்கினான். அவன் கொழும்புக்கு வந்த பதினைந்தாம் நாளே அவனுக்கு ஒரு துண்டுக் கடிதம் வந்தது. அந்தத் துண்டுக் கடிதம் கீழ்க்கண்டவாறு இருந்தது.

3.

குஞ்சன் வயல்
அல்லைப்பிட்டி
18.01.1985

அன்பும் பாசமும் கொண்ட எனது ஆசைநாயகர் அறிவது. உங்கள் சுகத்திற்காக உத்தரிய மாதாவை வேண்டுகிறேன்.

நேற்றுக்காலை பெரிய மகனார் ரொக்கிராஜ் கடிதம் எழுதிவைத்து விட்டுப் புலிப்படைக்குப் போய் விட்டார். நான் ஜெயசீலியையும் கூட்டிக் கொண்டு வங்களாவடிக்குப் போய் புலிப்படைக்காரரிடம் விசாரித்த போது அவர்கள் தங்களுக்குத் தெரியாது என்று சொல்லி விட்டார்கள். ரொக்கி நேற்றுக் காலையில் போகும் போது கிளாக்கரின் வீட்டுக்கு நாடகம் பழகப் போவதாக ஜெயசீலியைக் கண்டபோது சொன்னவராம். எதற்கும் நீங்கள் கூடிய கெதியில் இவ்விடம் வரவும்.

May god bless you.

உங்கள்
அன்பு மனைவி
W.J. ஜெனோவா



4. வடக்கு ரோட்டில் ஒரு 'ரக்ஸி' முளைத்து குஞ்சன் வயலைக் கடந்து ஊர் மனைக்குள் போனது. 'ரக்ஸி'க்குள் கொரில்லா இருப்பதைக் கண்டதாகச் சிலர் கொரில்லாவின் இளையமகன் மிக்கல் ராஜிடம்* சொன்னார்கள்.

5. மிக்கல் ராஜுக்கு கண்பார்வை சிறிது குறைவு. ஒருவரின் முகத்தைப் பார்த்து அவர் யாரெனக் கண்டு பிடிக்க வேண்டுமென்றால் மிக்கல்ராஜால் அவரின் மூக்குவரை தனது கண்களைக் கொண்டு சென்று தான் கண்டுபிடிக்க முடியும். அவனது உடற்கட்டு கண்டிப்பாக ஒரு பதினாறு வயதுப் பொடியனுக்கு உரியதல்ல. அவன் நல்ல சிவலையும் சுருட்டைமுடியும் அரைப்பனை உயரமுமான ஆள். கைகளும் கால்களும் அசாதாரண நீளமானவை. உள்ளங்கையும் விரல்களும் மணல் ஏற்றும் சவள் பிடித்துப் பிடித்துக் காய்த்து மரமாய்க் கிடந்தன. ஐந்து நிமிடங்களில் அவனால் ஒரு டிராக்டர் பெட்டியை - ஒரு டிராக்டர் பெட்டியின் கொள்ளளவு முக்கால் கீப் அளவு எனப்படும் - சவள் அடித்து மணலால் நிரப்பிவிட முடியும். அவன் மூன்றாம் வகுப்பு படிக்கும் போதே இவனை மக்கோனாவுக்குத் தான் அனுப்ப வேண்டும் என சொல்லி தலைமை வாத்தியார் 'சேர்டிபிக்கற்றில சிவப்பு பேனையால கீறி' பள்ளியை விட்டுக் கலைத்து விட்டார்..

---

* ஏசுராசன் யூட் மிக்கல்ராஜ் (1969-1989) : ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வடக்கு-கிழக்கு மாகாண சபை ஆட்சிக்காலத்தில் அவர்கள் இந்தியஅமைதி காக்கும் படையினரின் உதவியோடு 'தமிழ் தேசிய இராணுவத்துக்கு' கட்டாய ஆள் சேர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டபோதுபலவந்தமாக தமிழ் தேசிய இராணுவத்துக்கு பிடிக்கப்பட்டு பின் தப்பியோடுகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

6. கொரில்லா 'ரக்ஸி'யில் ஊர் மனைக்குள் போனதைக் கேள்விப்பட்ட மிக்கல்ராஜ் வீட்டுக்கு வந்து செனோவாவிடம் வியளம் சொல்லிவிட்டு கிறீஸ் கத்தியை எடுத்து இடுப்புக்குள் செருகிக் கொண்டு சைக்கிளில் ஊர்மனையை நோக்கிப் பறந்தான்.

7. மிக்கல் ராஜ் ஊர்மனைக்குள் நுழைந்த போது கிளாக்கன் வீடு அல்லோல கல்லோலப் பட்டிருந்தது. கிளாக்கன் வளவு முன்வேலியை ஒரு யானை பிய்த்துப் போட்டது மாதிரி கொரில்லா பிய்த்தெறிந்தி ருந்தான். எவ்வளவு தான் பகையாய் இருந்தாலும் ஒருவரின் வளவுக்குள் இறங்குவதையோ அல்லது வீடு புகுந்து சண்டை பிடிப்பதையோ இப்பகுதியில் யாரும் செய்யமாட்டார்கள். அப்படி வீடு புகுந்தாலோ வளவுக்குள் இறங்கினாலோ ஒரு புழு கூடப் பொறுத்துப் போகாது. செய்தவனுக்கு சாவு நிச்சயம்.

8. கொரில்லா வீதியில் நின்று கொண்டிருந்தான். வேலியைப் பிய்த்தெறியும் போது அவனுக்குக் கையில் காயம் பட்டிருக்கிறது. அதனிலிருந்து இரத்தம் வடிகிறது. சாரத்தைச் சண்டிக்கட்டாய் கட்டியிருந்தான். 'சேர்ட்'டைக் கழற்றிச் சுருட்டி ஒரு பூவரசுக்குள் செருகியிருந்தான். கிளாக்கன் வீட்டைப் பார்த்துப் பார்த்து கொரில்லா படு தூசணத்தால் ஏசினான். அவன் பேசும்போது அவனின் கருகருவென்ற நீண்ட கைகளும் கால்களும் நாலாபக்கமும் விசுக்கிக் கொண்டன. கொரில்லாவுக்கு 'ஓ' வென்ற தொண்டை. சும்மா சுழன்று சுழன்று கொரில்லா கத்தினான்.

9. ''டேய் கிளாக்கா என்ர மகனை வெளியில விடு, எங்கேயடா அவனை அனுப்பினி? டேய் விட்டுவாங்கி பொண்ணையா வாடா வெளியில இண்டைக்கு உன்னை ஆறாம் நம்பர் காயவார்ட்டுக்கு அனுப்பாட்டி நான் காட்டான்ர மோன் இல்ல. இஞ்ச உன்னட்ட வந்து தானே அவன் கொம்யூனிஸ்ட் படிக்கிறவன். டேய் நக்கி நாயே உனக்கு ஆறு பொம்பிளைப் பிள்ளையள் உனக்கு கொம்யூனிஸ்ட் வேணும். எனக்கேனடா கொம்யூனிஸ்ட்? வெறுமசத்தி நாயே எங்கயடா என்ர மகன்? அவன்ர காலை முறிச்சுக் கொண்டு போய் வீட்டில போடுறன். எங்கை அவனை அனுப்பினனி எண்டு சொல்லடா?''

10. கிளாக்கனின் பெண்சாதி வீட்டுக்குள்ளிருந்து மெல்ல வெளியே வந்து முற்றத்தில் நின்று சுற்றுமுற்றும் பார்த்தார். வேலிகளுக்குள்ளாலும் பொட்டுகளுக்குள்ளாலும் சனங்கள் விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கிளாக்கனின் மனைவியும் கத்தினார்.



11. ''டேய் வெறிக்குட்டி விசரா ஏனடா இதில வந்து நிண்டு கத்துறாய். உன்ர மோன் இஞ்ச வரவும் இல்லை. அவனை என்ர மனுசன் அனுப்பவும் இல்லை. உம்மிட வெறிக்கு நாங்கள் ரேஸ்ற்றில்ல கண்டீரோ..''

12. கொரில்லாவும் பெருங்குரலெடுத்து மறுத்தான் கொடுத் தான். ''அக்கா என்ர பிள்ளை எங்கையெண்டு இப்ப எனக்கு உன்ர புரியன் சொல்லாட்டி, அக்கா நீ வெள்ளைச் சீலை தான் கட்டப் போறாய்.''

13. ''தம்பி உனக்குத் தான் ஐ.ஆர்.சி. வேலை தெரியும் எண்டு நினைக்காத, எங்களுக்கும் ஆக்கள் இருக்கினம். எக்கணம் இதைக் கேள்விப் பட்டா எங்கிட மண்டை தீவார் வந்து உன்னை மேடர் செய்து போடுவாங்கள்.''

14. ''என்ர மசிரைத்தான் புடுங்குவினம். டேய் பொண்ணையா வாடா வெளியில... நீயும் ஒரு மனுசனோடா? டேய் எழுவத்தி ஒன்பதாம் ஆண்டு நீ என்னைப் பற்றிப் பொட்டிசம் எழுதிப் பொலிசுக்குப் போட்ட ஆள் எல்லோடா நீ.''

15. கிளாக்கன் திடீரென வீட்டுக்குள்ளிருந்து ஓடிவந்தான். கிளாக்கன் வேட்டியைச் சிரைத்துக் கொடுக்காய் கட்டியிருந்தான். ''வந்தா வருகுது போனாப் போகுது'' என்பது மாதிரி வெறியோடு கொரில்லாவை நோக்கி ஓடி வந்தான். அவனின் கையில் ஒரு திருக்கைவால். ஓடி வந்த வீச்சுக்கு கொரில்லாவின் முகத்துக்குத் திருக்கைவாலை வீசினான். கொரில்லா வலு 'ட்றிக்சா'க விசுக்கப் பட்ட திருக்கைவாலுக்கும் கமக்கட்டுக்கும் கீழாகப் போய் கிளாக்கனின் கொடுக்குக்கட்டைப் பிடித்துக் கொண்டான். கிளாக்கன் திருக்கைவாலை கீழே போட்டு விட்டு வேட்டியை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டான். கொரில்லாவுக்கு கிளாக்கனுக்கு வாறாக அடிக்கும் திட்டமில்லை. கிளாக்கனின் பிடரியில் சின்னச் சின்ன அடிகள் அடித்து ''எங்கயடா என்ர பிள்ளையை அனுப்பினி?'' என்று நெறுமினான்.

16. கிளாக்கன் சண்டைக்குக் கிளம்பும் போதே ஒரு திட்டத்தோடு தான் கிளம்பியிருக்க வேண்டும். அதன்படிக்குக் கொரில்லா கிளாக்கனோடு மினக்கெட்டுக் கொண்டிருக்கும் போதே கிளாக்கனின் மூத்த மருமகன் வீட்டுக்குள்ளிருந்து பூனை மாதிரி ஓடி வந்து ஒரு சலாகையால் கொரில்லாவின் முதுகில் வாறாக அடித்தான். எதிர்பாராத அடியால் கொரில்லா கிளாக்கனை விட்டு விட்டு ஒரு செக்கன் ஏங்கி நிற்கக் கிளாக்கனும் பாய்ந்து கீழே கிடந்த திருக்கை வாலை எடுத்து கொரில்லாவின் கால்களில் அடித்தான். இவ்வளவு நேரமும் சைக்கிளில் இருந்து ஒரு வீதியோரப் பூவரசு மரத்தைப் பிடித்தவாறு நடப்பவற்றை அனுமானித்துக் கொண்டிருந்த மிக்கல்ராஜ் சைக்கிளைப் பொத்தெனப் போட்டு விட்டு ஓடி வர கிளாக்கனின் மருமகன் திரும்பி ஓடத் தொடங்கி விட்டான்.

17. மிக்கல் ராஜ் அவனை விரட்டிக் கொண்டு ஓடி நாலு எட்டில் அவனைப் பிடித்து அவன் விலாவில் மெதுவாக கிறிஸ் கத்தியால் கீறினான். கொரில்லா கிளாக்கனைத் தூக்கித் தன் தலைக்கு மேலாகச் சுற்றி வீதியில் எறிந்தான்.

''மலரப் போகும் தமிழீழத்தில் நாம் சந்திப்போம்'' என்று தெளிவான கையெழுத்துடன் ரோஜாப்பூக்கள், வண்ணத்திப்பூச்சிகள் வரைந்த ஒரு புது வருட வாழ்த்து அட்டை. அதைப்பார்த்து பதின்நான்கு வயதாகும் சிவானந்தியும் அவளின் வயதான தந்தையும் கண்ணீர் வடிக்கிறார்கள்.

2. யாழ்ப்பாணத்திலிருந்து பத்துக் கிலோமீற்றர்கள் தொலைவி லிருக்கிறது அவர்களின் செம்மண் கிராமம். வாழ்த்து அட்டை அனுப்பிய அவளது சகோதரன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (PLOT) என்ற அமைப்பின் உறுப்பினன். மாவோ என்ற பெயருடன் தமிழ்நாட்டில் தேனிப்பகுதியில் இந்திய அரசினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பயிற்சி முகாமில் பயிற்சி பெறுகிறான்.

3. இப்படிப் 'பொடியன்கள்' போராட்டத்தில் இறங்குவதால்



கலங்கும் தமிழ்க் குடும்பங்களின் எண்ணிக்கை கடந்த ஒரு வருடமாகக் கணிசமாக அதிகரித்துள்ளது. தமிழ் இளைஞர்களைப் போராட்டத்திற்கு இழுக்கும் வேலையில் தமிழ் இயக்கங்கள் படுதீவிரமாக இயங்கி வருகின்றன. சமீப காலமாகப் பள்ளி மாணவர்களிடையே இவர்களின் பிரச்சாரம் வலுத்திருக்கிறது. யாழ் இந்துக் கல்லூரியில் மட்டும் ஆண்டு விடுமுறைக்குப் பின்பாக 163 மாணவர்கள் பள்ளிக்குத் திரும்பவில்லை.

4. உதாரணம்: மண்டைதீவு என்ற கிராமத்திலுள்ள மகா வித்தியாலயத்தில் பத்தாம் வகுப்புப் படித்து வந்த ஞானராஜ், 16.

5. தீவுப் பகுதியின் ஒரு அமைதியான கிராமத்தைச் சேர்ந்த அவன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிடம் (EPRLF) பயிற்சி பெறச் சென்றான். அவன் குடும்பத்தின் பிற ஆண்கள் இருவரும் கடலில் சிறீலங்கா கடற்படையினரால் வெட்டிக் கொல்லப் பட்டிருந்தார்கள். இந்தக் கொடூரச் செயல் இவனை இயக்கியது.

6. தமிழ்நாட்டின் பயிற்சி முகாம்களிலும் வன்னிப் பகுதிகளிலுள்ள காடுகளிலும் பல இளம் போராளிகள் உருவாகி றார்கள். ஒரு போராளிக் குழுவின் 'வயர்லெஸ்' பேச்சுக்களை இடைமறித்துக் கேட்டதில் 'புதுப் புத்தகங்கள்' என்ற வார்த்தை அடிபட்டதாகச் சிறீலங்கா அரசின் புலனாய்வு வட்டாரங்கள் சொல்கின்றன. ஏப்ரல் 9 அன்று நடந்த ஒரு பேச்சில் 'அவசரமாகப் புதுப் புத்தகங்கள் வேண்டும்...' என்று உத்திரப் பிரதேசத்தில் பயிற்சி முகாம்களை வைத்திருக்கும் ஈழப்புரட்சி அமைப்பு (EROS) கேட்டது. புதுப் புத்தகங்கள் என்றால் புதிய ஆட்கள் தேவை என்று அர்த்தம்.

7. உயர்தர வகுப்பில் கல்வி கற்று வந்த யூலி TENA வில் பயிற்சி பெற்றான். 'ஆயுதம் என்னை ஈர்த்தது' என்று சாதாரணமாகச் சொல்கிறான் யூலி. ஆனால் TENA வின் செயலில்லாத தன்மையால் மனதை மாற்றிக் கொண்டான். அவனும் இன்னும் மூன்று இளைஞர்களும் பயிற்சி முகாமிலிருந்து தப்பி தமிழீழ விடுதலை இயக்கத்தில் (TELO) இணைந்து கொண்டனர்.

8. பயிற்சியில் இருக்கும் இளைஞர்களின் வீடுகளில் சோகம் நிழலாடுகிறது. லெபனானில் பலஸ்தீன விடுதலை இயக்க

மொன்றின் பயிற்சி முகாமில் இருக்கும் ரஹீமின் அம்மா தவமணி 'நான் சாவதற்கு முன்பு அவனைப் பார்க்க வேண்டும்' என்கிறார்.

*9.* விடுதலை இயக்கங்கள் கிராமம் கிராமமாகக் கூட்டங்கள் வைத்துப் பிரச்சாரம் செய்கிறார்கள். இந்த முயற்சியில் போராளி களுக்கும் பெருவெற்றி என்றே கூறவேண்டும். கடந்த சில மாதங்களில் பயிற்சிக்குச் சென்றிருக்கும் இளைஞர்களின் எண்ணிக்கை உயர்ந்திருப்பது இதற்கு ஆதாரம். கடந்த மாதத்தில் குறைந்தது அறுநூறு பேராவது பாக்கு நீரிணையைக் கடந்து இந்தியாவுக்குள் புகுந்திருக்கக் கூடும். இதைத்தவிர உள்ளூர் களிலேயே நடாத்தப்படும் பயிற்சி முகாம்களிலும் கணிசமான இளைஞர்கள் பயிற்சி பெறக்கூடும்.

*10.* பயிற்சி முகாமில் புகுந்த மறுகணமே புதிய போராளி களுக்குத் தமிழீழம் என்பது நிதர்சனமான ஒன்றாகி விடுகிறது. சேர்ந்தவுடனே ஆயுதங்களைக் கையாள்வதிலும் ஆபத்தான நிலைகளில் சமாளிப்பது பற்றியும் அவர்களுக்குக் கடுமையான பயிற்சி அளிக்கப்படுகிறது. ''முழுமையான பயிற்சிக்குப் பின்பு தொடர்ச்சியான கொரில்லாத் தாக்குதல்களின் மூலம் மக்கள் போராட்டத்தை நோக்கி நகர்வோம்'' என்கிறார் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறிசபாரத்தினம்.*

*11.* 'தமிழ்ப் பயங்கரவாதத்துக்குச் சர்வதேச அனுதாபங்களைப் பெற்றுக் கொடுப்பதே இந்திய அரசின் புதிய வியூகம்' என்கிறார் சிறிலங்காவின் அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தன.

*12.* 'தமிழ்த் தீவிரவாதக் குழுக்களைத் தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதன் மூலம் அவை இந்தியாவை மீறிய சக்தியாய் வளராமல் பார்த்துக் கொள்வதே இந்தியாவின் நோக்கம்' என்கிறார் தமிழ்மக்களின் சுயநிர்ண உரிமையைத் தான் ஆதரிப்பதாக ஒப்புக் கொள்ளும் வாசுதேவ நாணயக்கார (NSSP).

*13.* பயிற்சி முகாம்களில் பல அப்பாவி இளைஞர்கள் உளவாளிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இயக்கத் தலைமைகளால் கொல்லப்பட்டதாகவும் இயக்கங்களை விட்டு வெளியேறிய சிலர் கூறுகிறார்கள்.

*14.* கிட்டத்தட்ட ஐந்தாயிரம் வரையிலான போராளிகள் களத்தில் இறங்குவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துப் பயிற்சி முகாம்களில் காத்திருப்பதாகத் தெரிகிறது.

இதில் மற்றொன்றையும் கவனிக்க வேண்டும். ஐந்தாயிரம் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

---

*சுந்தரம் சபாரத்தினம். மறுபெயர் பெரிய சிறீ. 06.05.1986 அன்று யாழ்ப்பாணக் கிராமமான கோண்டாவிலில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நன்றி - நூலகத்திட்டம்

தொடரும்...

இரவு முத்தா ரொக்கிராஜ் ஒரு கண் நித்திரை கொள்ளயில்ல. விடிய விடிய முழிச்சுக்கொண்டு எப்ப திருந்தாதி மணி அடிக்குமெண்டு பார்த்துக்கொண்டிருந்தான். ஓல்றெடியா ஒரு அம்பச மாட்டுத்தாள் பையுக்குள்ள தன்னட்டயிருந்த ரெண்டு அரைக் காற்சட்டையையும் ரெண்டு சேர்ட்டையும் சுருட்டி வைச்சிருக்கிறான். கொடியில் காய்ஞ்சுகொண்டிருந்த அவன்ர தம்பிக்காரன் மிக்கல்ராஜின்ர றண்ணிங் சோட்சையும் ஒருத்தரையும் அருட்டாமல் எட்டிக் கொடியிலயிருந்து நைசா உருவி மாட்டுத்தாள் பையுக்குள்ள சுருட்டி வைச்சுக்கொண்டான். றெயினிங்குக்கு கட்டாயமாய் றண்ணிங் சோர்ட்ஸ் தேவைப்படும் எண்டு அவன் கேள்விப் பட்டிருந்தவன்.

2. உத்தரிய மாதாங்கோயில் திருந்தாதி மணி ஊர்மனைக்குள்ள அடிச்சுக் கேட்ட சத்தத்தோட ரொக்கிராஜ் அரவமில்லாமலுக்கு எழும்பி தன்ர அம்பச மாட்டுத்தாள் பையையும் தூக்கிக்கொண்டு வெளிக்கிட்டான். கொட்டிலுக்க இருந்த 'டிம்'மான அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில ஒரே வாங்கிலில மிக்கல்ராஜும் பிரின்ஸியும் நல்லா அயர்ந்து கிடக்கிறது தெரியுது. தங்கச்சிக்காரி தன்ர காலை அண்ணனில எறிஞ்சு ஆத்தலாத்தான் நித்திரை கொள்ளுறாள்.

3. ரொக்கிராஜ் விறுவிறெண்டு வெளியில வந்து அந்தக் கொட்டிலோட சேர்த்து பத்தியாய் இறக்கி அவையள் குசினியாய் பாவிச்சுப் புழங்குற மூலைக்குள்ள போய் சாரத்தை சிரைச்சுப் பிடிச்சுக்கொண்டு தன்ர சஸ்பென்ரருக்குள்ள நேற்றுப்பின்னேரமே றெடியாய் எழுதிவைச்சிருந்த கடிதத்தையும் அதோட வைச்சிருந்த நெருப்பெட்டியையும் எடுத்தான். மாட்டுத்தாள் பையை கமக் கட்டிலும் கடிதத்தை வாயிலுமாய் கவ்விக்கொண்டு நெருப்புக் குச்சி ஒண்டையெடுத்து தட்டி வெளிச்சம் பிடிச்சுப் பார்த்து மூலைக்குள்ள இருந்த வெல்லப் போணியை எடுத்தான். வெல்லப் போணியைத்

திறந்து அதுக்குள்ள கடிதத்தைப் போட்டு மூடினான். 'அம்மா * இன்னும் கொஞ்ச நேரத்தால எழும்பி தேத்தண்ணியப் போட்டிட்டு வெல்லப் போணியை திறக்கேக்கதான் என்ர கடிதத்தைக் காணுவா. அதுக்குள்ள நான் அல்லைப் பிட்டிய பாஸ் பண்ணியிருப்பன்' எண்டு நினைச்சுக்கொண்டான்.

4. நிலம் இன்னும் வெளிக்கயில்ல. றொக்கிறாஜின்ர கொட்டில் வீட்டிலயிருந்து வடக்கு ரோட் எண்ணி ஒரு இருவது கவடுதான். வடக்கு ரோட்டில ஒரு சைற்றா அந்தோனியார் சுரூவம் இருக்குது. இது இஞ்ச தொழிலுக்கு வாற குருநகர், பாஷையூர் சனங்கள் கட்டின சுரூவம். கடல்தொழிலுக்கு அந்தோனியார் தான் காவல் அர்ச்சிட்டர் எண்டு சொல்லுவினம். இந்த அந்தோனியார் சுரூவத்துக்குப் பின்னால றொக்கிறாஜ் தன்ர அம்பச மாட்டுத்தாள்ப் பையை ஒளிச்சு வைச்சுப்போட்டு கொஞ்சம் நடந்துபோய் வடக்குக் கடலுக்குள்ள இறங்கி முழங்கால் மட்டு தண்ணிக்குள்ள நிண்டுகொண்டு முகம் கைகால் கழுவினான். றொக்கிறாஜுக்கு கைவிரல்இறை கால்விரல் இறை எல்லாம் சிரங்கும் சொறியுமாய் கிடந்ததில அவனுக்கு தேகத்தில உப்புத்தண்ணி பட பத்தி எரிஞ்சுது. வருசக்கணக்கா இந்த சொறியும் சிரங்கும் றொக்கிறாஜை அரியண்டப்படுத்துது. றொக்கிறாஜும் முள் முருக்கயிலை அரைச்சுப் பூசிப்பார்த்தான், வீசிக் கந்தோரில மாசம் ஒருக்கா வந்து போற மிஸியிட்ட பால் மாதிரி ஒரு மருந்து வாங்கி கோழிச் செட்டையால தொட்டு இறையில பூசிப்பார்த்தான், ஒரு நாள் விடாமல் கடல் உப்புக் தண்ணியில குளிச்சான். ஆனால் ஒரு மருந்து வாகடத்துக்கும் சொறியும் சிரங்கும் சொல்வழி கேக்குதில்ல.

5. தூரத்தில தொழில முடிச்சுக்கொண்டு வள்ளங்கள் கரைக்கு வாற சிலமனாய் இருக்க றொக்கிறாஜ் நேராய் வந்து அந்தோனியார் சுரூவத்துக்கு முன்னால் முழங்காலில இருந்தான்.

---

*ஜெனோவா ராசேஸ்வரி (1949-1990): இரண்டாம் ஈழப்போரின் ஆரம்ப நாட்களில் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியிருந்த யாழ் டச்சுக் கோட்டை இராணுவத்தினரை மீட்பதற்காக 22.08.1990 அன்று வடக்குப் பெரு வீதியால் முன்னேறிய இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அன்றைய நாளில் மட்டும் குஞ்சன்வயலில் முப்பத்தியிரண்டு பேர்கள் சிங்கள இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.



6. 'இனி எப்ப அந்தோனியாரே உம்மைக் காணுவனோ தெரியாது. நான் எங்கேயாவது போய் மண்டையைப் போட்டா என்ர மையம் தன்னும் இஞ்ச வருமோ வராதோ எண்டதும் தெரியாது. அர்ச்சிட்ட அந்தோனியாரே எனக்காக யேசுவிடம் மன்றாடும்' எண்டு கேட்டுக் கொண்டான்.

7. அஞ்சு பரமண்டலமும் ஒவ்வொரு பரமண்டலத்துக்கும் இடையால அஞ்சு பிரியத்தமுமாய் செவம் சொன்னான். 'புதுமையள செய்யிற அந்தோனியாரே எங்கிட பப்பா மனந்திருந்தி தேவபக்தியும் அமைதலும் உள்ள நல்ல மனுசனாக நடக்க வழி பண்ணித்தாரும்' எண்டும் மண்டாடினான். 'எங்களுக்கு கெதியன தமிழீழம் கிடைக்க அந்தோனியாரே உதவி செய்யும்' எண்டும் றொக்கிறாஜ் வியாகுலத்தோட மண்டாடினான்.

ஏது இந்தப் பதினேழு வயதுப் பொடி கடவுளிட்ட 'எங்களுக்கு தமிழீழம் தாரும்' எண்டு மண்டாடினதோ?

2. ஓம்... இதைக் கேளுங்கோ!

3. வேலணைப் புலவர் எண்டால் எழுபத்தேழு எழுபத்தெட்டாம் ஆண்டுகளில தெரியாத சனமில்லை. ஆள் வலு பேமஸ். ரெண்டு மாசத்துக்கொருக்கா அவர் மறியவீட்டுக்கு போயிற்று வாற நியூஸ் 'சுதந்திரப் போராளி புலவர் விடுதலை; சிறிலங்கா பேரினவாத அரசின் பொய் வழக்கு அம்பலம்' எண்டு சுதந்திரன் பேப்பரிலும் 'வென்று வந்தார் வேலணைப் புலவர்; வெட்கி தலைகுனிவாரா ஜே. ஆர். கிழவர்?' எண்டு தீப்பொறி பேப்பரிலும் வரும்.

4. அல்லைப்பிட்டி இலந்தையடியில் பொலிசுக்காறரால கொலை செய்து எறியப்பட்டுக் கிடந்த இன்பத்தின்ர பிரேதத்தையும் செல்வத்தின்ர பிரேதத்தையும் போய் பார்த்திற்று வந்து 'இந்த இன்பம் எண்டுற பொடியன் நெடுகவும் புலவரைத் தேடி வந்து போறவன்' எண்டு சனங்கள் ரகசியம் பறைஞ்சவை.

5. புலவர் கூட்டணியின்ர கூட்டங்களில பேசுற படிச்ச

பொடியன், ஊர் வேலையளை முன்னிண்டு செய்யிற மனுசன், எம்.பி. கா.பொ. ரெத்தினத்தாற்ற செல்லம் எண்டு தான் சனத்துக்குத் தெரியும்.

6. அந்த நாளையில லீவுக்கு வீட்ட போயிற்று திரும்பவும் நயினாதீவு நேவிக்காம்பில வேலையைப் பாரம் எடுக்கவாற நேவிக்காரர் யாழ்ப்பாண ரவுணிலயிருந்து வலு கலாதியாய் சீ.ரீ.பி. பஸ்ஸில ஏறி வந்துதான் குறிகட்டுவானிலயிருந்து நயினாதீவுக்கு லோஞ்சி எடுக்கிறவை.

7. இப்படி ஆராவது நேவிக்காரன் தனியா சந்திச்சா அவனைப் போட்டுத் தள்ளுறது எண்டு புலவர் முடிவு செய்தார்.

8. புலவருக்கும்* கூட்டாளிமாருக்கும் இப்ப ஒரு துவக்குத் தேவைப்பட்டுது.

9. வேலனை விதானையிட்ட ஒரு துவக்கு இருக்கிறது புலவருக்குத் தெரிய வந்துது. விதானை வன்னிப் பக்கம் இருக்கயிக்க வேட்டைக்குப் பாவிச்ச திறமான சொட்கன் அது.

10. விதானையிட்ட துவக்கக் கேட்டா அவன் உடன பொலிசுக்குத் தான் அறிவிப்பான். அந்த நேரத்தில வீடு பூந்து துவக்குப் பறிக்கிறதெல்லாம் நடக்கக் கூடிய காரியமில்லை.

11. எல்லா வழியாலும் புலவர் யோசிச்சுப் பார்த்தார். அவருக்கு துவக்கத்தவிர வேற எதுவும் வாழ்க்கையில இந்த செக்கனில முக்கியமில்ல போல கிடந்துது. கடைசியா புலவர் தன்ர தாயை விதானையார் வீட்டுக்கு அனுப்பி விதானையின்ர மகளை தனக்கு சம்மந்தம் கேட்டார்.

12. கலியாணம் முடிஞ்ச இருபத்தி நாலு மணி நேரத்துக்குள்ள புலவர் வலு பக்குவமா மாமனோட கதைச்சுத் தனக்கு சீதனமா அந்த துவக்கை மட்டும் வாங்கிக் கொண்டேர்.

13. துவக்கை வாங்கின நாப்பத்தெட்டு மணித்தியாலத்தில

* தோழர் புலவர் (காராளபிள்ளை அருந்தவநாதன் 1953-1985): நான்கு ஆண்டுகள் சிறைவாசத்திற்குப் பின்பு மட்டக்களப்பு சிறையுடைப்பில் தப்பிய இவர், பின்பு இவர் இயங்கி வந்த அமைப்புக்குள் எழுந்த உள்முரண்பாடுகளால் அமைப்பின் தலைமையால் கம்பம் (தமிழ்நாடு) பகுதியில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.



புலவரும் கூட்டாளிமாரும் ஒண்டல்ல ரெண்டு நேவிக்காரரைச் சுட்டினம். பிறகு அண்டர் கிறவுண்டுக்கு போனவை.

14. ஆனால் மூண்டாவது நாளே சடாட்சரம் எண்ட ஒரு யு.என்.பிக் காரன் காட்டிக் குடுத்ததால புலவர் தெல்லிப்பழையில வைச்சு பொலிசிட்ட பிடிபட்டேர்.

செவத்தையும் முடிச்சுக்கொண்டு மாட்டுத்தாள் பையையும் எடுத்துக்கொண்டு சாரத்தையும் தூக்கி சண்டிக்கட்டாய் மடிச்சுக் கட்டிக்கொண்டு ரொக்கிராஜ் வலுவீச்சாய் தெற்குமுன்னாய் நடந்தான். குஞ்சன்வயல் கழிய மட்டுக்கும் அவன் திரும்பிக் கூடப் பார்க்கயில்ல.

2. நிலம் இப்பதான் சாதுவாய் வெளிச்சுக்கொண்டு வருகுது. ஊர்மனையை ரொக்கிராஜ் நெருங்கிற கட்டத்தில ஊர்மனைக்குள்ள இருந்து ஒரு பொம்புள உலாஞ்சி உலாஞ்சி ஆடிக்கொண்டு குஞ்சன்வயல் முன்னாய் வாறதை ரொக்கிராஜ் கண்டான். அவன் தலையைக் குனிஞ்சு கொண்டு விறு விறெண்டு நடந்தான். 'திரும்பிப் போனாலோ இல்லாட்டி வயலுகளுக்குள்ளால குறுக்க விழுந்து வாற ஆளை விலத்திப்போனாலோ தேவையில்லாமல் ஒரு ஐமிச்சத்தை தான் முன்னால வாற பொம்பிளைக்கு உண்டாக்கிப் போடுவான்' எண்டு அவன் நினைச்சான்.

3. அந்தப் பொம்பிளை இப்ப இவனை நெருங்கி வந்திற்றாள். ரொக்கிராஜ் மெள்ள கடைக்கண்ணால ஆள் ஆர் எண்டு நோட் பண்ணினான். அது ஜெயசீலி.* ரொக்கிராஜ் மெள்ளமாய் சண்டிக் கட்டை அவிட்டு விட்டான்.

* வில்லியம் றெஜினா ஜெயசீலி (1953) :1988 ல் இரண்டாவது தடவையாக சவூதி அரேபியாவிற்கு பணிப்பெண்ணாய்ச் சென்றவர். பின் எந்தத் தகவலும் கிடையாது. ஒரு திருட்டு வழக்கில் இவர் தண்டிக்கப்பட்டு சவூதி அரேபியச் சிறையில் இருக்கிறார் என்றும் சவூதியில் அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டது என்றும் பல மாதிரியாக குஞ்சன் வயலில் பேசிக்கொள்கிறார்கள்.

4. இந்த ஊரில தன்னைப் பார்த்து ஒரு ஆள் சண்டிக்கட்டை அவிட்டு விடுறான் எண்டால் ஜெயசீலிக்கு அது பெரிய புதினம்தான். ஜெயசீலி றெசிங்கவுணுக்கு மேலால ஒரு மினுக்கு மினுக்கெண்ட சீலையை தாறுமாறாய் சுத்தியிருந்தாள். அவளின்ர தலை மயிரெல்லாம் சிலும்பி காத்தில பறக்க அவள் கண்ணைச் செம்மிக்கொண்டு தள்ளாடிக்கொண்டு நிண்டாள்.

5. 'மனுசி காலம்பிறையே வெட்டிரும்பு குடிச்சிற்றுதா இல்லை ராத்திரிப் போட்டது இன்னும் முறியேலையோ' எண்டு ரொக்கிராஜ் யோசிச்சான். 'பப்பாவின்ர பரவணியே ஒரு ஒக்குமாக்கு பரவணியா வந்து அமைச்சிருக்குது' எண்டும் உள்ளுக்குள்ள சீறிச் சினந்துகொண்டான். ரொக்கிராஜுக்கு ஜெயசீலியைக் கண்டாலே ரென்சன் ஏறிரும். ஏலுமான அளவுக்கு அவளுக்கு டொச் பண்ணித்தான் திரிவான். இப்ப கடைசியாய் ஒரு நாலு மாசத்துக்கு முதல் இவனுக்கு பள்ளிக்கூடத்தில சோதினைக்காசு நாப்பத்தைஞ்சு ரூவா கட்டவேண்டியிருந்தது. தாய்க்காறி செனோவாவக் கொண்டு ஏசுராசனிட்ட காசு கேட்க அவன் 'வா வையென்னா சீனாவில கொண்டே மேசை துடைக்க சேர்த்து விடுறன்' எண்டான். கடைசியில ஒண்டும் செய்யப் பாதையில்லாமலுக்கு ரொக்கிராஜ் ஜெயசீலியிட்டப் போய்த்தான் காசு வேண்டி சோதினைக் காசு கட்டினான். அதுக்கு பிறகு ரெண்டு தரம் ஜெயசீலியை வழிதெருவில கண்டுபோட்டு உச்சிக்கொண்டு ஓடியிற்றான். இப்ப கொஞ்ச நாளைக்கு முதல் ஏசுராசன் ஜெயசீலியின்ர பாஸ் போர்ட்டைப் பறிச்சு அதை ரோட்டில போட்டு காவோலையளால மூடி நெருப்புக் கொழுத்தி அந்த நெருப்பில உன்னையும் தூக்கிப் போடுறன் பாரெண்டு ஜெயசீலியை விட்டுக்கலைக்க ஓடித்தப்பின ஜெயசீலி அதுக்குப் பிறகு இண்டைக்கு வர ஏசுராசன் வீட்டு முத்தமும் மிதிக்கயில்ல.

6. 'இண்டைக்கெண்டு இந்த மனுசியை இப்பிடி முகத்துக்கு முகம் சந்திக்க வேண்டியாய்ப் போச்சுதே. எக்கணம் மனுசி என்னை பையும் கையுமாய்க் கண்டதை எங்கிட வீட்டை போய் உடன சொல்லிப்போட்டுதெண்டால் தம்பி சைக்கிளையும் எடுத்துக் கொண்டு என்னைத் தேடி வந்திருவான். இல்ல... ஒரு பிசகும் வராது, அந்தோனியார் விடார்' எண்டு ரொக்கிராஜ் நினைச்சுக் கொண்டான்.



7. ஜெயசீலி ரொக்கிராஜைப் பார்த்து சிரிச்சுக்கொண்டே நிண்டாள். அவளால நேரா நிக்க ஏலாமலுக்கு கிடக்கு. அவளுக்கு சாடையான கிறல் எண்டால் மட்டும் தான் அவள் ரொக்கிராஜை 'மருமோன்' போட்டுக் கதைப்பாள்.

''மருமோன் எங்க வெள்ளனக் காலம்பிறையே வெளிக் கிட்டாச்சு?''

''கிளாக்கர் வீட்டை போறன். நாடகம் பழகப்போறன் அன்ரா''

''என்ன ட்ராமா?''

''புதியதொரு வீடு... எண்டு''

8. ஜெயசீலி ரொக்கிராஜின்ர கையில இருக்கிற மாட்டுத்தாள் பையைக் கண்ணைச் சுருக்கிக் கொண்டு பார்க்கிறத கவனிச்சிப் போட்டு ரொக்கிராஜ் டக்கெண்டு சொன்னான்.

''இது நாடகத்துக்கு போடுற உடுப்புக்கள் அன்ரா''

''அய்வா, இப்பிடி நாடகம் போட்டுத் திரிஞ்சால் படிப்பு என்ன மாதிரி?''

''சோதினை எழுதினானல்லோ இப்ப மறுமொழிக்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறன் அன்ரா''

''ரொக்கி திறமாய் பாஸ் பண்ணுவீங்களோ?''

''ஓம் அன்ரா''

9. ஜெயசீலி தன்ர நெஞ்சுச் சட்டைக்குள்ள கையை விட்டு நாலாய் மடிச்சிருந்த ஒரு அஞ்சுரூவாத் தாளை எடுத்து ரொக்கி ராஜிட்ட குடுத்துப் போட்டு சிரிச்சுக்கொண்டே ரொக்கிராஜின்ர கையைப் புடிச்சு குலுக்கு குலுக்கெண்டு குலுக்கினாள். 'மனுசி சவூதிக்கு போய்ற்று வந்த நாளிலயிருந்து ஒரு பெற்றனாத் தான் திரியுது' எண்டு ரொக்கிராஜ் நினைச்சான்.

10. அவன் காசை சேர்ட் கை மடிப்புக்குள்ள செருகிக் கொண்டு நடந்தான். ஊர்மனையைக் கடந்து தெற்குக் கடக்கரைக்கு வந்து கடக்கரை சைற்ரைப் பிடிச்சு வேலணைப் பக்கமாய் நடந்தான். பிறகு கொஞ்சத்தூரம் ஓடினான்.

11. ஓடுறதும் பிறகு களை வந்தா நடக்குறதுமாய் போய்க்

கொண்டிருந்தான். ஒரு ஒண்டு ஒண்டரை மணித்தியாலத்தில சாட்டி சிந்தாத்திரை மாதாங்கோயிலடிக்கு போய்ச் சேர்ந்தான். அங்கயிருந்து தான் ரொக்கிராஜை றெயினிங் காம்புக்கு கூட்டிக்கொண்டு போறதா அவையள் சொல்லியிருக்கினம்.

கடக்கரையை அண்டி ஒரு பத்தைக் காடு. கன்னா, வலியக்கொழுவி, ஈச்சை, தாளை எண்டு பலதும் பத்தும் வளர்ந்து நிக்கிற காடு. அந்தக்காட்டுக்குள்ள கிடுகுகளால இணக்கி எட்டுப் பென்னம் பெரிய கொட்டில்கள் போட்டிருக்கினம். காட்டின்ர ஒரு பக்கத்தைக் கொஞ்சம் வெட்டித் திருத்தி ஒரு சின்ன 'கிரவுண்ட்' செய்திருக்கினம். அந்தக் கிறவுண்டில நாலு வரிசையா உசரப்படி வரிசைப்படுத்தி இருபது இருபது பேரா இருத்தி வைச்சிருக்கினம். முதலாவது வரிசையில தன்ர உசரப்படி ஆறாவது ஆளாய் ரொக்கிராஜ் குந்தியிருந்தான்.

2. ரொக்கிராஜ் ஒருக்கா சபையை சுத்தும் முத்தும் பார்த்தான். றெயினிங் எடுக்க வந்த ஆள்களில பதின்மூண்டு பதினாலு வயது தொடங்கி முப்பது நாப்பது வயது மதிக்கத்தக்க ஆள்களும் இருக்கினம்.

3. இப்ப றெயினிங் காம்புக்கு பொறுப்பானவன் வந்து எல்லாருக்கும் முன்னுக்கு நிண்டு சபையைப் பார்த்தான்.

''ஹெய் நிலத்தில வடிவா சப்பாணி கொட்டி இரும் ஐஸே.'' காலில குந்தியிருந்த ரொக்கிராஜ் பொத்தெண்டு நிலத்தில சப்பாணிகொட்டி சக்கப்பணிய இருந்தான். 'என்ன சவம் வந்தது வராததுமாய் மாஸ்டரிட்ட ஏச்சு வாங்கிப்போட்டேனே' எண்டு அவன் சரியாய்க் கவலைப்பட்டான்.

4. இப்ப பொறுப்பாளன் றெயினிங் எடுக்க வந்திருந்த எண்பது பேருக்கும் சின்னனாய் ஒரு ஸ்பீச் குடுத்தான்.

5. ''இப்ப வந்து பயிற்சி எடுக்க விரும்பாத ஆக்கள் திரும்பி



வீட்டபோற யோசினையில இருக்கிற ஆக்கள் இப்பவே என்னட்ட சொல்லிப்போட வேணும். றெயினிங் தொடங்கினாப் பிறகு இடையில ஆராவது விட்டுப்போட்டு ஓடினா இல்ல ஓட நினைச்சால் நல்ல பணிஸ்மென்ற் கிடைக்கும்.

காலையில நாலு மணிக்கு எல்லாரும் எழும்பிப் போட வேணும். சரியா அஞ்சு மணிக்கு பிஸிகல் றெயினிங் தொடங்குவம். எட்டு மணிக்கு காலைச் சாப்பாடு. பிறகு சில வகுப்புக்கள் பாடங்கள் நடத்துவம். வகுப்புகள் முடிய மத்தியானச் சாப்பாடு. பின்னேரம் நாலு மணிக்குப் பிறகு ஆம்ஸ் றெயினிங். ஆறுமணிக்கு ஏதாவது கேம் விளையாடுறது. ஏழுமணிக்கு எல்லாரும் சாப்பாட்டை முடிச்சுக் கொண்டு அவையவையின்ர சென்ரிப் பொயின்ருகளுக்கு போயிட வேணும். இப்ப் வந்து இந்த றெயினிங் காம்பில எங்களுக்கு டிஸிப்பிளின் வலு முக்கியம். ஓடர கரியேட் பண்ணவேணும். இப்ப உங்கள் எல்லாருக்கும் ஒரு பேப்பர் தருவம். அதைக் கவனமாய் நிரப்பி நீங்கள் கையெழுத்துப் போடவேணும்....''

6. எல்லாருக்கும் பெயர், ஊர், வயசு எண்டு கேள்வியள் கேட்டு இருக்கிற ஒரு போர்ம் குடுத்திச்சினம். சில பொடியங்கள் அதை எப்பிடி நிரப்புறது எண்டது பற்றி பொறுப்பாளனோட கதைச்சாங்கள். அதிலும் சில பொடியள் பயிற்சி குடுக்கிறவையளை சேர் போட்டு கூப்பிட்டது ரொக்கிராஜுக்குப் பெரிய புதினமாய்க் கிடந்தது. 'இதென்ன பள்ளிக்கூடமே? நான் அண்ணே எண்டு தான் அவையளைக் கூப்பிட வேணும்' எண்டு இவன் மனதுக்குள்ள நினைச்சுக் கொண்டான்.

7. ரொக்கிராஜ் தனக்கு தரப்பட்ட பேப்பரை வடிவா நிரப்பி அதில எழுதியிருந்த பத்துக் கொண்டிசன்களையும் தீர வாசிச்சு ஏ.ரொ.ராஜ் எண்டு கையெழுத்து வைச்சு பொறுப்பாளனிட்டக் குடுத்தான். அதில பத்தாவது கொண்டிசன் இப்பிடியாய் இருந்தது.

8. << நீங்கள் எமது புரட்சிகர இயக்கத்திலிருந்து விலக்கப்படும் அல்லது விலகிக்கொள்ளும் பட்சத்தில், நீங்கள் வேறு அரசியல் இயக்கங்களில் இணைந்துகொண்டாலோ அல்லது புதிதாய் ஒரு அரசியல் இயக்கத்தைத் தொடங்கினாலோ எமது இயக்கத்தின் அதி உயர் பட்சத் தண்டனையான மரணதண்டனை உங்களுக்கு வழங்கப்படும்.>>

9. பொடியளுக்கு நிரப்பக் குடுத்த பேப்பரில 'இயக்கப் பெயர்' எண்டொரு கேள்வி இருந்தது. ஆனால் அதை இப்ப நிரப்ப வேணாமெண்டு பொறுப்பாளன் சொல்லிப்போட்டான். ரொக்கிராஜ் தனக்கு வைச்சுக் கொள்ளுறதுக்காக மூண்டு பெயர்களை செலக்ஷன் செய்து வைச்சிருக்கிறான். முதல் பெயர் சங்கிலியன், ரெண்டாவது பெயர் அரபாத், மூண்டாவது பெயர் நேதாஜி. எண்டாலும் இப்ப அவன் பைனலாய் அரபாத் எண்ட பெயரைத்தான் வைச்சுக்கொள்ளத் தான் விரும்பினான்.

10. சொல்லி வைச்சது மாதிரி பொறுப்பாளன் சபையைப் பார்த்து இப்ப உங்களுக்கு நாங்கள் இயக்கப் பெயர் வைக்கப்போறம் எண்டான்.

11. ரொக்கிராஜூம் தனக்கொரு புதுப்பெயரை வைச்சுக் கொள்ளுறதுக்கு கடுமையான ஆசையிலதான் இருந்தான். ஆனால் அவன்ர 'அரபாத்' எண்ட ஆசையில இண்டைக்கு மண் விழத்தான் போகுது எண்டு அவன்ர மனம் சொல்லிச்சுது.

12. ஏனெண்டால் பொடியள் நாலு வரிசையாய் இருக்கினம் இல்லையா? இவ்விரண்டு வரிசைக்கு இடையால ரெண்டு பொறுப்பாளர்மார் உள்ளிட்டு வலு வேகமாய் இடப்பக்கம் இருந்த பொடியனுக்கு இம்மெண்ட முதல் ஒரு பெயரும் வலப்பக்கம் இருந்த பொடியனுக்கு அம்மெண்ட முதல் ஒரு பெயருமாய் வாய்க்கு வந்தபடி வைச்சுக்கொண்டு வருகினம். அவையள் வைச்ச பெயரை உடனடியா அந்தந்தப் பொடியள் நிரப்பிக் குடுத்த பேப்பரிலும் எழுதிக்கொண்டு வருகினம். என்னதான் பொறுப்பாளர்மார் வாய்க்கு வந்தபடி பெயர் வைச்சாலும் அவையள் வைச்ச இடப்பெயருக்கும் வலப் பெயருக்கும் இடையில ஒரு கொனக்சன் இருக்கத்தான் செய்யுது.

13. ரேகன் - ஜிம்மிகார்ட்டர்.
ரஜனி - கமல்.
மணியன் - அகிலன்.
மல்லி - நங்கி.

14. பெயரை வைச்சுக்கொண்டே பொறுப்பாளன் ரொக்கிராஜூக்கு கிட்டவர 'எனக்கு அரபாத் எண்டு பெயர்



வையுங்கோ' எண்டு கேட்பமோ எண்டு ரொக்கிராஜ் யோசிச்சான். எண்டாலும் அவனுக்கு வாய் திறக்க மாட்டுதாம். அதோட இப்பிடி தாங்கள் நினைச்ச பெயரை எங்களுக்கு வைக்கிறதுக்கும் இயக்கத்திற்ற ஏதாவது முக்கியமான காரணம் இருக்கலாம் எண்டும் யோசிச்சான். சரி எதுக்கும் தன்ர பெயர்ப் பிரச்சனையை பிறகு பைய பையக் கவனிக்கலாம் எண்டு அவன் முற்றெடுத்தான்.

15. இப்ப ரொக்கிராஜூக்கும் அவன்ர வலக்கைப் பக்கம் இருந்த பொடியனுக்கும் இடையில பொறுப்பாளன் வந்து நிண்டு கொண்டு அந்தப் பொடியனுக்கு ராஜிவ் எண்டு பெயர் வைச்சான். பிறகு ரொக்கிராஜூக்கு சஞ்சய் எண்டு பெயர் வைச்சான். ரொக்கிராஜூக்கு பின்னால இருந்த சோடிக்கு சிவலை - மயிலை எண்டு பொறுப்பாளன் பெயர் வைச்சான்.

16. அண்டைக்கு இரவுச் சாப்பாடு சாப்பிடப் போகுமட்டுக்கும் ரொக்கிராஜ் பயிற்சிக்கு வந்திருந்த மற்றப் பொடியளுக்குத் தன்னை சஞ்சய் எண்டு இன்டடியூஸ் பண்ணிக்கொண்டான். பிறகு இரவுச் சாப்பாடு முடியுற நேரத்தில குசினிக்குள்ள வேலை செய்து கொண்டு நிண்ட தயாவரமூர்த்தியைக்★ கண்டான்.

17. தயாவரமூர்த்தி ரொக்கிராஜூவின்ர கிளாஸ் மேட்டாய் படிச்சவன். ரொக்கிராஜின்ர வீட்டிலயிருந்து ஒரு கட்டை தூரத்தில ஊர்மனைக்குள்ள இருக்கிற பொடியன். அவன் ஆள் கொஞ்சம் அலம்பலும் குளப்படியும்.

18. இஞ்ச இதற்கு முதல் நடந்த பச்சில தயாவரமூர்த்தி றெயினிங் எடுக்க வந்திற்று. வந்த மூண்டாம் நாளே வயித்துக்குத்து, முழங்கால் உழைவு, நாரிப்பிடிப்பு, சத்திக்குணம் எண்டு மாறி மாறி வரவும் தயாவரமூர்த்தி இரவோட இரவா றெயினிங் காம்பிலயிருந்து சொல்லாமல் கொள்ளாமலுக்கு ஓடிற்றானாம். இப்ப இயக்கம் ஆளைத் தேடிப் பிடிச்சு அடிச்சு மூஞ்சையுடைச்சுப் போட்டு கொண்டு வந்து குசினிவேலையில ஆளைப் பணிஸ்மென்ற் குடுத்து வைச்சிருக்கு.

★ விநாயகமூர்த்தி தயாபரமூர்த்தி (1968 - 1985) : இயக்கத்தினரால் கடுமையாக தாக்கப்பட்டபோது சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு சில நாட்களிலேயே மரணம்.

*19.* தயாவரமூர்த்திக்கு தன்ர கிளாஸ்மேட்டை கண்டவுடனே குண்டியில தட்டின புளுகம் வந்திற்று. ஓடி வந்து ரொக்கிராஜோட கதைச்சான். ஆனால் ரொக்கிராஜ் தண்டனையை அனுபவிக்கிற ஆளோட கதைச்சுப் பேசுறது டிஸிப்பிளின் இல்லாத வேலை எண்டு நினைச்சு தயாவரமூர்த்தியோட கதைக்கக் கொஞ்சம் பஞ்சிப் பட்டான்.

*20.* தயாவரமூர்த்தி றெயினிங் காம்ப் புதினங்களை சிரிச்சுக் கொண்டும், சில விசயங்களை திறில்லாவும், சில விசயங்களை ஒரு ரகசியச் சாங்கத்திலயும் சொல்லச் சொல்ல ரொக்கிராஜ் 'உம்' சொல்லிக்கொண்டு பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

*21.* தயாவரமூர்த்தி தன்ர கிளாஸ் மேட் சிநேகிதனை பெரிய வாரப்பாட்டோட கொரில்லா கொரில்லா எண்டே கூப்பிட்டான். இடையில ஒருக்கா ரொக்கிராஜ் தன்ர இயக்கப் பெயர் சஞ்சய் எண்டும் சொல்ல தயாவர மூர்த்தியும் தன்ர இயக்கப் பெயர் அங்கொட எண்டு சொல்லிப்போட்டு பிறகும் பிறகும் ரொக்கிராஜை கொரில்லா எண்டே கூப்பிட்டான்.

*22.* இது எப்பிடித்தான் பரவிச்சுது எண்டு தெரியேல்ல. ஒரு ரெண்டு மூண்டு நாளிலேயே காம்ப் முழுக்க கொரில்லா எண்ட பெயர் பரவிற்றுது. ரொக்கிராஜ் ஒருத்தர் ரெண்டு பேரெட்ட தன்னை கொரில்லா எண்டு கூப்பிட வேணாம் எண்டும் தன்ர பெயர் சஞ்சய் எண்டும் சொல்லிப்பார்த்தான். ரெண்டுதரம் சஞ்சய் எண்டு கூப்பிடுவாங்கள், பிறகு மூண்டாந்தரம் ஓட்டமெற்றிக்காய் கொரில்லா எண்டே கூப்பிட்டாங்கள். அது எங்க? பொறுப்பாளன் கூட ஒரு புஞ்சிரிப்போட கொரில்லா எண்டுதான் இவனைக் கூப்பிடுறான்.

*23.* இயக்க அடையாள அட்டையில மட்டும் பெரிய பவராய், பெயர்: சஞ்சய். இரத்தப் பிரிவு : B. ஒதுக்கப்பட்ட பிரதேசம் : தீவுப்பகுதி எண்டு எழுதிக்கிடக்கு.



ரொக்கிராஜுக்கு பயிற்சி கொஞ்சம் கஸ்டமாய் தானிருக்குது. குஞ்சன்வயலுக்குள்ள இருக்கிற எந்த ஒரு இளந்தாரியின்ர உடம்பும் மண் ஏத்த சவள் அடிச்சும், குழை வெட்டியும், சிப்பி எரிச்சும், சுண்ணாம்பு காய்ச்சியும் கை காலெல்லாம் காய்ச்சுப்போய் பொடியள் துடியனாய் இருப்பாங்கள்.

2. ஆனால் ரொக்கிராஜ் படிக்கிறன் படிக்கிறன் எண்டு எப்ப பார்த்தாலும் ஒரு கொப்பியையும் ஒரு ஈழநாட்டு பேப்பரையும் சுருட்டி கமக்கட்டுக்குள்ள வைச்சுக்கொண்டு திரிஞ்சதால றெயினிங்கில ஆளுக்கு உடம்பு வளையுது இல்ல. எண்டாலும் தான் திறமா பயிற்சி எடுத்துக் காட்டவேணுமெண்ட ஒரு வெறியும் ஆங்காரமும் அவனிட்ட இருந்தது.

*3.* உசரங்களில இருந்து குதிக்கேக்க, முள்ளுக் கம்பியளுக்கு கீழால குறோலிங் செய்யேக்க, மங்கி றோப் செய்யேக்க ஏதாவது அவசரப்பட்டு மொக்குத்தனமாய் செய்து நெடுகவும் ரத்தக் காயம் பட்டான். அவன்ர ரெண்டு காலும் வீங்கிப் போய் நடக்கவே கஸ்டப்பட்டாலும் பல்லைக் கடிச்சுக்கொண்டு ஓடினான், தவண்டான், பாய்ஞ்சான்.

*4.* பயிற்சியின்ர ஒரு கிழமையின்ர முடிவில எல்லாப் பொடியளுக்கும் சூட்டிங் பயிற்சி குடுத்திச்சினம். ரொக்கிராஜ் முதல் தரத்திலேயே அவனுக்கு குடுத்த ரெண்டு ரவுண்ஸிலும் ஒரு புள்ளும் ஒரு இன்னரும் அடிச்சான்.

5. காலையில பிஸிக்கல் றெயினிங் முடிஞ்சாப் பிறகு நடக்குற வகுப்புகள் தான் ரொக்கிராஜுக்கு கொஞ்சம் மனவருத்தத்தைக் குடுத்துது. வகுப்பெண்டால் ஏதாவது பொலிடிக் கிளாஸ் நடக்கும் எண்டுதான் ரொக்கிராஜ் நினைச்சுக் கொண்டிருந்தவன். ஆனால் வகுப்பெடுத்த சிறி மாஸ்டர் வகுப்பில தமிழீழத்துக்கு வடக்குப் பக்கமாவோ இல்ல தெற்குப் பக்கமாவோ இந்தியா கிடக்குது எண்ட அளவில கூட பொலிடிக்ஸ் கதைக்காதது இவனுக்கு அந்தரமாய்

கிடந்தது. எண்டாலும் 'நமக்கு இருக்கிற அரசியல் அறிவுக்கு சிறி மாஸ்டரிட்ட படிக்க என்ன கிடக்குது' எண்டு நினைச்சு ஆறுதல் பட்டுக்கொண்டான்.

6. சிறி மாஸ்டரின்ர இந்த வகுப்பு ரொக்கிராஜுக்கு துப்புரவாய் கஸ்டமில்லாமலுக்கு வலு சிம்பிளாய் இருந்துது.

7. S.M.G - இது ஸ்டோர்லிங் சப் மெஷின் கன் எனப்படும். இதன் ரவையின் அளவு 9 mm இந்தத் துப்பாக்கி பிளேபாக் அக்ஸனில் இயங்குகிறது. இதன் செல்லும் தூரம் 200 மீட்டர்கள், கொல்லும் தூரம் 100 மீட்டர்கள்.

8. A.K. 47 - இது அவ்டமெட் கிளாஸ்நிகோவ் 47 எனப்படும். இதன் ரவையின் அளவு 7.62 x 42 ஆகும். இந்த ரவையை வோர்சோ ரவை எனவும் சொல்லலாம். இது காஸ் அக்ஸனில் இயங்குவது. செல்லும் தூரம் 1000 மீட்டர்கள், கொல்லும் தூரம் 500 மீட்டர்கள்.

9. S.L.R - இது செல்வ் லோடிங் ரைபிள் எனப்படும். தமிழில், தானே குண்டேற்கும் துப்பாக்கி எனக் குறிப்பிடலாம். இதில் சுடப்படும் ரவையின் அளவு 7.62 x 51 ஆகும். இந்தத் துப்பாக்கி ஹெக்லர் அன்ட் கொக் A3 : G3 துப்பாக்கியின் முன்னைய வடிவமாகும். இதன் ரவையை 'நேட்டோ ரவை' என்றும் அழைப்பார்கள்.

10. L.M.G - இது லைற் மெஷின் கன் எனப்படும். இதை இலகு இயந்திரத் துப்பாக்கி எனத் தமிழ்ப்படுத்தலாம்... இப்படியாய் வகுப்புக்குள் நடக்கும்.

11. வகுப்பில வேற சில புதினங்களும் நடக்கும். கண்ணிவெடி வைக்க, கிரினைட் பொருந்த 'டக்' கெண்டு வலு வீச்சாய் பத்தியெரியக் கூடிய மாதிரி ஒரு திரி பாவிக்கறவையள். இது ஒரு றோஸ் கலர் நிறத்திலயிருக்கும். இந்த திரியின்ர பெயர் கோட்டெக்ஸ். வகுப்பில வாத்தி இந்தப் பேரை சொல்லேக்க சில பொடியள் விழுந்து விழுந்து சிரிப்பாங்கள். வாத்தியும் சில நேரங்களில அடக்க ஏலாம சிரிச்சுப்போடுவான். ரொக்கிராஜுக்கு முதலில ஒண்டுமா விளங்கயில்ல.

12. பிறகு தான் ரொக்கிராஜ் இந்தக் காரியத்தை ஒரு பொடியனட்ட விசாரிச்சுப் பார்த்ததில்ல பொம்பிளையள் சுகமில்லாமல் இருக்கிற நாள்களில அவையள் பாவிக்கிற பஞ்சுத் துண்டின்ர பேரும் கோட்டெக்ஸ் தான் எண்டதை அறிஞ்சு கொண்டான். இதில சிரிக்கிறதுக்கு ஏதும் கிடக்குமாப்போல ரொக்கிராஜுக்கு தெரியேல்ல.

13. இதைவிட ரொக்கிராஜ் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்காத ஒரு காரியமும் அங்க நடந்தது. பயிற்சி முகாம் முடியுற தறுவாயில கடைசிப் பயிற்சிகளான பேஸ் விட்றோ, நைட் மார்ச்சிங், டம்மியான காம்ப் அற்றாக், அம்புஸ் எல்லாத்தையும் பயிற்சி எடுத்த பொடியள் முடிச்சிற்று இருக்கேக்க ஆகக் கட்டக் கடைசியா ஒரு ஸ்பெஷல் றெயினிங் நாங்கள் தரப்போறம் எண்டு வாத்திமார் அறிவிச்சினம். அந்த முக்கியமான பயிற்சி ஆமியிட்டயிருந்து தப்புறது எப்படி எண்டதை சொல்லித்தரப்போகுது எண்டும் வாத்திமார் சொல்லிச்சினம்.

14. பின்ன, எல்லாப் பொடியளும் வலு உசாராய் அந்தப் பயிற்சி எடுக்க றெடியாய் இருந்திச்சினம். றெயினிங் காலங்களில ஓடவும், பாயவும், விழவும், பிஷப் அடிக்கவும் பஞ்சிப்பட்டு காலில முள்ளு கையில உழுக்கு நாரியில பிடிப்பு எண்டு கள்ளம் ஒழிச்சு காம்புக்குள்ளேயே படுத்துக்கிடந்த பொடியள் கூட இந்தப் பயிற்சி எடுக்க வலு கலாதியாய் றெடி பண்ணிச்சினம். அது தெரு வழிய ஒழுங்கை வழிய ஆமிக்காரரட்ட எதிர்பார்க்காம பொடியள் மாட்டுப்பட்ட காலம். ஆமிக்காரர் தங்கிட நினைச்சபாட்டுக்கு சுத்திச் திரிஞ்ச காலம். அதால இந்த ஆமியிட்டயிருந்து தப்புற பயிற்சியை ஒரு பொடியளும் மிஸ் பண்ண விரும்பயில்ல.

15. அங்க இருந்த ஆகப்பெரிய கொட்டிலுக்கு முன்னால எல்லாப் பொடியளையும் வாத்திமார் வரிசையில இருக்கும்படி ஓடர் போட்டினம். எல்லாமா எழுவத்தி சொச்சம் பொடியள் லைன் கட்டி நிண்டாங்கள்.

16. பயிற்சி தொடங்கேக்க எல்லாமா எண்பது பொடியள் தான் இருந்தவங்கள். ஆனால் றெயினிங் நடந்து கொண்டிருக்கிற காலங்களிலேயே ஒரு அஞ்சு பொடியள் எஸ்கேப் ஆயிற்றாங்கள். அதில மூண்டுபேர் திரும்பவும் இயக்கத்திற்ற பிடிபட அவங்கள மரைக்க மொட்டையடிச்சு குசினி வேலையில இயக்கம் விட்டிருக்கு.

17. ஆமியிற்ற இருந்து தப்புற பயிற்சி தொடங்கிற்றுது. ரொக்கிராஜ் லைனில ஆறாவது ஆளாய் நிக்கிறான். லைனில இருந்த முதலாவது பொடியனை ஒரு வாத்தி வந்து கொட்டிலுக்குள்ள

கூட்டிக் கொண்டு போனான். பொடியன் போய் ஒரு ரெண்டு செக்கன் தன்னும் செண்டிருக்காது ''ஐயோ அம்மா நான் புலி, ஐயோ ஐயோ நான் புலியில்ல, அடிக்காதேயுங்கோ சேர் அடிக்காதேயுங்கோ ஐயோ என்ர மண்டை கூழாம்பாணியாய்ப் போச்சுதே'' எண்டு போன பொடி கத்திக் குழறுற சத்தம் கொட்டிலைக் கிழிச்சுக் கொண்டு கேக்குது.

18. ரொக்கிராஜ் ஒருக்கா முன்னாலேயும் பின்னாலேயும் நிண்டுகொண்டிருந்த பொடியளைப் பார்த்தான். எல்லாற்ற முகமும் ஓடிக் கறுத்துக் கிடக்கு. ஆளை ஆள் பொடியள் குழப்பமா பார்த்திச்சினம்.

19. றெயினிங் தொடங்குறதுக்கு முன்னம் ஒரு நாளும் இல்லாத திருநாளாய் பொட்டி பொட்டியாய் யானை மார்க் இனிப்புச் சோடாப் பொட்டியள் கொட்டிலுக்க கொண்டு போகப்பட்டதை ரொக்கிராஜ் கண்டவன். அதோட ஒரு வாத்தியார் பஞ்சு, மருந்து, பண்டேஜ் சாமான் சக்கட்டுக்களோட கொட்டிலுக்க போனதையும் கண்டவன். அப்பவே ஏதோ இண்டைக்கு பிசகுதான் எண்டு ரொக்கிராஜ் யோசிச்சிற்றான். அவன் எதுக்கும் றெடியாய் இருந்தான்.

20. முதல் போன பொடியன் திரும்பி வரயில்ல. அதுக்குள்ள வரிசையில ரெண்டாவதாய் இருந்த பொடியனையும் கூட்டிக் கொண்டு போகினம். போன பொடியும் போன கையோட அடிச்சு வைச்சுக் குழறிக்கேக்குது. மூண்டாவது, நாலாவது, அஞ்சாவது பொடியளும் ஒவ்வொருத்தரா உள்ளுக்க போனவை. ஆனா ஒருத்தரும் திரும்பி வரயில்ல. ''ஐயே சேர் அடிக்காதேயுங்கோ, நான் இயக்கமில்ல'' எண்டு கத்துறதும் குழறுறதும் மட்டும் அகோரமாய்க் கேக்குது. அடுத்தது ரொக்கிராஜ் தான்.

21. என்ன வந்தாலும் வரட்டுக்கும் எண்டு ரொக்கிராஜ் தன்ர நெஞ்சைத் தைரியப்படுத்திக் கொண்டான். ரெண்டு கையையும் பொத்திப்பிடிச்சு ஒருக்கா நல்லாக் காத்து இழுத்து நெஞ்சுக்குள்ள விட்டு நெஞ்சை விரிச்சு விரிச்சு சுருக்கினான். டக்கெண்டு மண்டைக்குள்ள ஒருக்கா தமிழீழத்தைக் கொண்டு வந்தான்.

22. ஒரே பச்சை, எந்த வளத்தால பார்த்தாலும் பச்சை. வரிசையாய் ஒரே அளவான சின்ன ஆனால் வடிவான ஒரே மாதிரியான வீடுகள். பச்சைகளுக்கு நடுவில் முதுகில துவக்குகளோட நிண்டு ஆம்பிளையளும் பொம்பிளையளும் வயல் வேலை செய்யினம்.



23. 'டேய் கொரில்லா நீ வா' எண்டு ஒரு வாத்தி வந்து கூப்பிட ரொக்கிராஜ் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு தளும்பாமலுக்கு நடந்து கொட்டிலுக்குள்ள போனான். கொட்டிலுக்க போய் எங்கால போறது என்ன மாதிரிச் செய்யிறது எண்டு ரொக்கிராஜ் யோசிக்க முன்னமே கொட்டிலின்ர ஒரு மூலைக்குள்ள பதுங்கியிருந்த ஒரு வாத்தி பாய்ஞ்சு விழுந்து தன்ர முழங்காலை மடக்கி ரொக்கிராஜின்ர நெஞ்சில ஒரு உதை உதைய ரொக்கிராஜ் மல்லாக்க விழுந்தான்.

24. அப்பிடியே ரொக்கிராஜை ஒரு கோழியை அமத்துற மாதிரி அமர்த்திப் பிடிச்சுக் கொண்டினம். ''டேய் நீ கொட்டியாவா? நீ றெயினிங் எடுத்தனியா? உனக்குச் சுடத் தெரியுமா? உம்ப ரஸ்தவாதி அப்பிட்ட போம்பா தாலா நெய்த?'' எண்டு கேட்டு கேட்டு பொல்லுகள், வயர்துண்டுகள், எஸ்லோன் பைப்புகளால ரொக்கிராஜைப் போட்டு அடிச்சு பவுடர் பண்ணிப் போட்டினம்.

25. வாத்திமார் மட்டுமே அடிச்சவை? ரொக்கிராஜுக்கு முதல் பயிற்சி எடுக்க வந்த அஞ்சு பொடியளும் இப்ப தலை கை காலுகளில ரெத்தம் ஒழுக ஒழுக தாறுமாறாய் பண்டேஜ் கட்டிக் கொண்டு நிக்கிறாங்கள். அவங்களுமா சேர்ந்து தான் ரொக்கிராஜுக்கு அடிச்சாங்கள்.

26. ரொக்கிராஜுக்கு இப்ப இந்தக் கேம் கிளியரா விளங்கிற்றுது. அதாவது இவையள் ஆமிக்காரராம். இவையளிட்ட ரொக்கிராஜ் பிடிபட்டிருக்கிறானாம். இவையள் எவ்வளவு தான் ரோச்சர் செய்து ஆக்கினைப்படுத்தினாலும் ரொக்கிராஜ் தான் இயக்கம் எண்டு ஒத்துக் கொள்ளக் கூடாதாம். இது தான் ஆமியிட்டயிருந்து தப்புற பயிற்சி.

27. ஏற்கனவே முகமுடைபட்டு நிண்ட ஒரு பொடியன் வந்து வலோத்காரமாய் ரொக்கிராஜை தூக்கி நிப்பாட்டி வைச்சான். பிறகு டாரெண்டு ஒரே நேரத்தில தன்ர ரெண்டு கையையும் சுழட்டி ரொக்கிராஜின்ர செவிட்டா வடியைப் பொத்தி ஒரு பொலிஸ் அடி அடிச்சுப் போட்டுக் கேட்டான், ''அடோ ஆர் யு டைகர்'' பிறகு குனிஞ்சு ரொக்கிராஜின்ர வயித்தில தன்ர தலையால இடிச்சான்.

''நோ சேர் ஐ ஆம் எ ஸ்டுடண்ட்'' எண்டு சொல்லிக் கொண்டே காதாவடியை ஒரு கையால பொத்திக் கொண்டும் வயித்த மற்றக் கையால பொத்திக் கொண்டும் நிலத்தில விழுந்தான்

ரொக்கிராஜ். ஒரு பொடியனுக்கு கொஞ்சம் சிங்களம் தெரியுமாக்கும் - இவன்ர பெயர் இஸ்மாயில் - இவன் தான் முதலும் சிங்களத்தால கேட்டு ஆய்க்கினை செய்தவன். அவன் 'அடோ பொறு கியண்ட எப்பா'' எண்டு கத்திக் கொண்டே ஓடி வந்து ரொக்கிராஜின்ர வயித்தில பொத்தெண்டு குதிச்சான்.

28. ரொக்கிராஜோ எவ்வளவு அடி வேண்டியும் கடைசி மட்டுக்கும் தான் இயக்கமில்லையெண்டும், இயக்கத்துக்கு சப்போர்ட் கூட இல்லையெண்டும் சாதிச்சான். ரொக்கிராஜ் இப்படி மூஞ்சி முகம் உடைபட்டும் இல்லையெண்டு சாதிச்சுக் காட்டினதால அவன் கடைசியில பயிற்சியில பாஸ் பண்ணியிற்றான்.

29. பிறகு ரொக்கிராஜின்ர காயங்களுக்கு மருந்து போட்டு விட்டிச்சினம். ஏற்பூசி ஒண்டும் போட்டிச்சினம். அவனுக்கு ஒரு இனிப்புச் சோடாவும் குடுத்தவை.

பயிற்சியை முடிச்சுக்கொண்டு எல்லாப் பொடியளும் அடிபாட்டுக்கு இறங்கிற தருணத்தை ஆவேசத்தோட எதிர்பார்த்துக் கொண்டிருந்தாங்கள். இந்தக் கட்டத்தில தான் சிங்கள ஆமிக்காரர் 'அசுர அடி' எண்டவொரு ஒப்பிறேசனை ஸ்ராட் பண்ணினாங்கள்.

2. ஆமி எல்லாப் பக்கத்தாலும் வெளிக்கிடப் பார்த்துது. காரைநகரிலயிருந்து நேவி வெளிக்கிடப் பார்க்குது, நாவற்குழி, பலாலி, காங்கேசன்துறை எண்டு ஆமி வெளிக்கிடப் பார்க்குது.

3. எல்லா இயக்கங்களும் தங்களால ஏலுமான வழியளால ஆமியை மறிச்சு அடிபட்டினம். யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரியின்ர ஏழாம் நம்பர் எட்டாம் நம்பர் காய வார்ட் முழுக்க இயக்கப் பொடியளால நிறைஞ்சு போச்சு. காயப்பட்ட இயக்கப் பொடிய ளுக்கு இரத்தம் குடுக்க பள்ளிக்கூட பொடி பொட்டையளிலயிருந்து கிழடு கட்டைகள் வரைக்கும் ஆஸ்பத்திரி வாசலில லைனில நிக்குதுகள்.

4. ஆமிக்காரருக்கு படு பயங்கரமான இழப்பு. இரத்மலா



னைக்கும் ஜெயவர்த்தனபுர பெரியாஸ்பத்திரிக்கும் அம்புலன்சுகள் ஓடிக்கொண்டேயிருக்க பார்ளிமென்றில 'ஜே.ஆர். ஜெயவர்த்தன வால சண்டையில வெல்ல ஏலாட்டி எங்களட்ட பொறுப்பைத் தாங்கோ' என்று நாளும் பொழுதும் சிறிமாவின்ர பார்ட்டி கூக்காட்டி பார்ளிமென்ர குழப்பத் தொடங்கிற்றுது.

5. எல்லாப் பக்கத்தாலும் ஆமியை இயக்கங்கள் மறிச்சாலும் தீவுப்பக்கத்தைக் கவனிப்பாரில்ல. இரவோட இரவா கோட்டையில யிருந்து ஆமிக்காரர் தீவுப்பக்கமா முன்னேற வெளிக்கிட்டாங்கள்.

6. கடலுக்கு நடுவாய்க் கிடந்த பண்ணைப் பாலத்தால கோடு கிழிச்சுக்கொண்டு ஒரு கிலோ மீற்றர் மட்டுக்கும் முன்னுக்கு வந்த ஆமி மண்டைதீவுச் சந்தியில ஒரு மினி முகாமைப் போட்டாங்கள். இந்த ஒரு கிலோமீற்றர் வெறும் பாலத்தைப் பிடிக்க அண்டைக்கு நாப்பத்திமூண்டு உயிர்கள ஆமிக்காரர் கொலை செய்தாங்கள். அவங்கள் இந்த மினிக்காம்பை கடைசி மட்டுக்கும் விட்டிட்டுப் போகயில்ல.

7. இப்பிடி பண்ணைப் பாலத்தால ஆமி வெளிக்கிடும் எண்டு ஒரு இயக்கமும் எதிர்பார்க்கயில்ல. நாலு பக்கமும் கடலுக்கு நடுவில ஆமி காம்ப் போட்டிட் டாங்கள். இனி அங்கையிருந்து தீவுப்பகுதிக்க ஆமி உள்ளிடலாம். அதை சமாளிக்க இயக்கம் முடிவு செய்துது.

8. தீவுப்பகுதியின்ர தலைவாசலாய் இருந்த குஞ்சன்வயலுக்க இயக்கம் ஒரு சென்றிப்பொயின்ரப் போட்டுது. மண்மூடைகளால காபந்து பண்ணின சென்றிப்பொயின்ற். அதுக்குமேலாலா தென்னோலையளைப் போட்டு உருமறைப்பு. அதுக்குப் பக்கத்தி லேயே பொடியள் சமைக்கவும் படுக்கவும் ஒரு கொட்டில் எண்ட செற்றப்போட இயக்கம் அந்த சென்றிப்பொயின்ருக்கு தறோவா றெயினிங் எடுத்த ஆறுபொடியளை ரெண்டு துவக்கோடும் ஆறு கிரினைட்டோடும் மூண்டு சிலிண்டரோடும் ஒரு வோக்கி டோக்கியோடும் அனுப்பிச்சுது. இப்பிடியாய் குஞ்சன் வயலுக்க இயக்கம் வந்து குந்திக் கொண்டுது.

9. தீவுப்பகுதி, அதுவும் குறிப்பாய்ச் சொன்னால் மண்டைதீவு, குஞ்சன்வயல், அல்லைப்பிட்டி ஏரியாக்கள் ஒரு கொரில்லாச் சண்டைக்கு தோதான இடமில்லை. வெறும் கன்னாப்பத்தையள் மட்டும் வளர்ந்துகிடக்கிற வெளியும் சுத்திவரக் கடலும். இந்த

நன்றி - நூலகத்திட்டம்

ஏரியாக்களிலயிருந்து விட்றோ பண்ணுறதெண்டால் கூட எவ்விடத்தில கடலில குதிச்சு எவ்விடத்தில கரை ஏறவேணு மெண்டது இந்த ஏரியாவை தண்ணிபட்ட பாடாய் அறிஞ்சு வைச்சிருக்கிற ஆக்களுக்கு தான் தெரியும். *

10. இதையெல்லாத்தையும் யோசித்துப் பார்த்துப்போட்டு அப்ப முழுத்தீவுப்பகுதிகளின்ரயும் இயக்கப் பொறுப்பாளனாய் இருந்த ஓஷீலா, குஞ்சன்வயல் ஏரியாவை நல்லாத் தெரிஞ்சு வைச்சிருந்த ரொக்கிராஜையும் குஞ்சன்வயல் சென்ரிப் பொயின்ருக்கு போகச் சொல்லி ஓடர் போட்டான்.

11. இந்த ஓடரைக் கேட்டவுடன ரொக்கிராஜுக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு நெஞ்சத்தண்ணி வத்திப்போச்சு. அண்ணே... எண்டு இழுத்துக்கொண்டு ஓஷீலாவைப் பார்த்து தலையைத் தலைய சொறிஞ்சான்.

12. ஓடரைப் போட்டிட்டு போக வெளிக்கிட்ட ஓஷீலா ரொக்கிராஜின்ர பஞ்சிப்பட்ட கோலத்தைப்பார்த்திற்று ''என்ன கொரில்லா அங்க போக விருப்பமில்லையோ? செத்துப் போயிடுவமெண்டு பயப்பிடுறாயோ?'' எண்டு கேட்டான்.

13. இந்த நக்கல் கேள்வியை ரொக்கிராஜால தாங்கிக்கொள்ள ஏலாமல் கிடந்துது. நேராய் கோட்டைக்குள்ள குண்டு கட்டிக் கொண்டு பாய் எண்டு சொன்னா சொன்னவுடன பாயுறதுக்கு ரொக்கிராஜ் ரெடியாய் இருந்தான். அப்பிடிப் பட்டவனுக்கு சாகப்பயமோ எண்டு ஓஷீலா கேட்கவும் நடுறோட்டில சீலை உரிஞ்சு விழுறமாதிரிக் கிடந்தது. 'ஒழுங்கில்லா அப்பனுக்குப் பிறந்தா இப்பிடி எல்லா மரியாதைகேட்டையும் பட்டு உத்தரிக்கத்தான் வேணும்' எண்டு ரொக்கிராஜின்ர மனம் சொல்லிச்சுது.

14. ''இல்லையண்ண, அந்தச் சென்ரிப்பொயின்ருக்குப்

* 22.8.1990 அன்று கோட்டை இராணுவத்தினரை மீட்கு முகமாக குஞ்சன் வயல், அல்லைப்பிட்டி, மண்டைதீவு பகுதிகளை சிங்கள இராணுவத்தினர் முற்றுகையிட்டபோது தப்பிக்க முடியாது அல்லைப்பிட்டி கடற்படுகையில் 30 இளம் போராளிகள் (இவர்கள் பேபி குறூப் என அழைக்கப்பட்டனர்) சயனைட் அருந்தி இறந்தனர்.



போனால் வீட்டுக்காறர சந்திக்க வேண்டிவரும். பிறகு கரைச்சல்...'' எண்டு ரொக்கிராஜ் இழுக்க ஓஷீலா ''இஞ்ச பார் கொரில்லா வீட்டுக்காரர் எண்டால் அப்பிடித் தான் இருப்பினம். அவையளுக்கு நாங்கள் தான் எங்கிட போராட்டத்தைப்பற்றியும் எங்கிட தாயகத்தின்ர விடுதலையைப் பற்றியும் மெதுவா விளங்கப்படுத்தி அவையளையும் எங்கிட ஆதரவாளர்களாய் மாத்தவேணும்'' எண்டு ஒரு சின்ன லெக்சர் அடிச்சான்.

15. இந்த சிக்கலான நேரத்திலும் தன்ர தேப்பனுக்கு* தான் அரசியல் படிப்பிக்கிற சீனை யோசிக்க ரொக்கிராஜுக்கு சிரிப்பு வந்தது. வாறது வரட்டும் எண்டு யோசிச்சுக்கொண்டு அந்தோனியார் மேல பழியப்போட்டுட்டு ரொக்கிராஜ் குஞ்சன்வயல் சென்ரிப் பொயின்ருக்கு வெளிக்கிட ஆயத்தம் பண்ணினான்.

16. ரொக்கிராஜுக்கு ஒரு ஜே.ஆர். கிரினைட்டும் ஒரு சயனைட் குப்பியும் இயக்கத்தால குடுக்கப்பட்டுது.

இயக்கத்தின்ர பச்சை வான் ரொக்கிராஜைக் கொண்டுவந்து வடக்குறோட் அந்தோனியார் சுருவத்தடியில இறக்கிவிட்டுது. அவ்விடத்திலயிருந்து சென்ரிப்பொயின்ற் ஒரு அரைக் கட்டை தூரம் வரும். சென்ரிப்பொயின்ருக்கு வாகனத்தைக் கொண்டு போனால் சிலவேளை நோண்டியாய் போகும். ஆமி கண்டானெண்டால் ஷெல்லாய்ப் பொழிவான்.

2. ரொக்கிராஜ் அந்தோனியாருக்கு ஒரு சலூட் அடிச்சுப் போட்டு சென்ரிப்பொயின்ரைப் பார்த்து நடந்தான். சில குஞ்சன்வயல் சனங்கள் ரொக்கிராஜைக் கண்டு புதினமாய் பார்த்துக் கொண்டு

*வில்லியம் மனுவேல் ஏசுராசன் (1944 -1996) : மன்னார் பள்ளிக்குடாவில் இருந்து அகதிகள் படகில் மண்டபம் (தமிழ்நாடு) நோக்கிச் செல்கையில் மண்டபத்திலிருந்து மூன்று கடல்மைல்கள் தொலைவில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நிண்டுதுகள். சில சனங்கள் அவனட்ட சுகம் கேட்டுதுகள். ரொக்கிராஜ் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு நடந்தான். தான் வந்து குஞ்சன்வயலுக்குள்ள இறங்கின நியூஸ் இப்ப வீட்ட போய் சேர்ந்திருக்கும் எண்டதை நினைக்கத்தான் அவனுக்கு தலை கொஞ்சம் கிறுகிறுத்தது.

3. அந்த சென்ரிப்பொயின்ருக்கு ஊத்தைச் சாந்த பொறுப்பாயிருந்தான். அவனுக்கு வலு உதவிகரமாய் ரொக்கிராஜ் வேலை செய்தான். ரொக்கிராஜ் வந்த அண்டு இரவோட இரவா வடக்கு ரோட்டில மண்டை தீவு சந்தி முன்னாய் மூண்டு சிலிண்டர்களை ரொக்கிராஜூம் பொடியளுமாய் ரோட்டைக் கிண்டி புதைக்க திட்டம் போட்டாங்கள். இந்த வேலைகளுக்கு குஞ்சன் வயல் சனங்களும் வலு அன்பாய் உதவி செய்துதுகள். இரவிரவா குஞ்சன்வயல் வீடுகளிலயிருந்து பொடியளுக்கு தேத்தண்ணி வந்து கொண்டிருந்தது.

4. முதலாவது சிலிண்டர் பொடியளின்ர சென்ரிப்பொயின்ரிலயிருந்து ஒரு இருநூறு யார் தூரத்திலயும் அடுத்த சிலிண்டர் அவ்விடத்திலயிருந்து இன்னும் இருநூறு யார் தூரத்திலயும் புதைக்கப்பட்டுது. மூண்டாவது சிலிண்டரை தூக்கிக் கொண்டு ரொக்கிராஜூம் இன்னும் மூண்டு பொடியளுமாய் கன்னாப் பத்தைகளுக்குள்ளால தவண்டு தவண்டு போய் ஆமியின்ர சென்ரிப்பொயின்ரை எவ்வளவு நெருங்க ஏலுமோ அவ்வளவுக்கு நெருங்கி சத்தமில்லாமல் புதைச்சாங்கள். திரும்பி வரயிக்க ஆமிக்காரர் திண்டு குடிச்சுப் போட்ட சாப்பாட்டு, பியர் தகரப் போணியள் சிலதை பொறுக்கிக் கொண்டு வந்தாங்கள்.

5. இந்த ஜொனிவெடி, பண்டிசார்ஜ், கிளைமோர் எல்லாம் பின்னிட்டு வந்த சாமான்கள். முந்தி பொடியள் சிலிண்டரைத் தான் பாவிச்சாங்கள். சிலிண்டர் எண்டால் ஒரு எட்டு இஞ்சி அல்லது ஒம்பது இஞ்சி றவுண்டான ஒரு குழாய். இந்தக் குழாயின்ர நீளம் மூண்டு அல்லது நாலு அடி அளவுக்கு வரும். மத்திமமான இரும்பிலேயோ இல்லாட்டி டெம்பரான பிளாஸ்டிக்கிலேயோ அந்தக் குழாய் செய்து இருக்கும். அதுக்குள்ள நிறைய சக்கை மருந்தை நிரம்பி போடவேணும். சக்கைமருந்துக்குள்ள இரும்புத் துண்டுகள், சைக்கிள் போள்ஸூகள், நட்டுக்கள் எல்லாம் கலந்திருக்கும். சக்கையை நிரப்பினாப் பிறகு குழாயின்ர ரெண்டு பக்க வாசலையும் சீமெந்தால அடைக்க வேணும். சக்கை மருந்துக்கு நடுவில டிக்னேட்டர் வைச்சிருக்கும். இந்த டிக்னேட்டரில வயரைத் தொடுத்து எவ்வளவு தூரம் வேணுமோ அவ்வளவு தூரத்துக்கு வயரை நீட்டிக்கொண்டு வந்து தேவைப்படுற நேரத்தில வயர் மூலமாய் பற்றிக் கரண்ட் பாஸ் பண்ணினால் சிலிண்டர் வெடிக்கும். வெடியெண்டா சும்மா சப்புச் சவர் வெடியில்ல... இந்த ரைப் சிலிண்டர் தான் மன்னார் பரப்புக் கடந்தான்ில* ஒரு பவள் ஆமட்காரரையே தூக்கி எறிஞ்சது.

6. பொடியள் மூண்டு சிலிண்டர் வயர்களையும் வலு கவனமாய் நிலத்துக்குள்ளால புதைச்சு இழுத்துக் கொண்டு வந்து சென்ரிப்பொயின்ற்றில றெடியா வைச்சினம். பண்ணைப் பாலத்தால இயக்கமும் ஆமியும் சண்டைக்கு அடுக்குப்பண்ணி றெடியாய் நிக்க, பதினைஞ்சு பதினாறு வரியங்களுக்குப் பிறகு திரும்பவும் கடலுக்குள்ளால பட்டணம் போய் வர தொடங்கிச்சினம். இந்த முறை தீவாருக்கு ரூட் வேலணை: அராலித்துறை, தம்பாட்டி: காரைநகர், அல்லைப்பிட்டி: நாவந்துறை எண்டு அமைஞ்சுது.

ரொக்கிராஜ் குஞ்சன்வயலுக்கு திரும்பி வந்தப் பிறகு ரெண்டு நாளா ஒரு இடமும் போகாமல் சென்ரிப் பொயின்ரிலேயே இருந்தான். வீட்டை போய் ஒருக்கா எட்டிப்பார்த்திற்று வருவமா எண்டு மண்டையைப் போட்டு குழப்பினான். கடைசியாய் 'நான் இயக்கத்துக்கு வந்ததுக்குப் பிறகு பப்பாவில ஏதும் நல்ல மாற்றம் வந்தாலும் வந்திருக்கும்' எண்டு மனதை தேற்றிக்கொண்டு சைக்கிளையும் எடுத்துக்கொண்டு ஊத்தைச் சாந்தவிட்ட சொல்லிக்கொண்டு வெளிக்கிட்டான். ஊத்தைச் சாந்த ''கொரில்லா, ஏலுமெண்டா அம்மாவிட்ட சொல்லி ஏதாவது சாப்பாடு செய்து கொண்டு வா'' எண்டு சொல்லி விட்டான்.

---

* *16.6.1985 அன்று நடந்த தாக்குதலில் பிரிகேடியர் எஸ்.எம். எட்வேர்ட் அமரதுங்க உட்பட 23 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.*

2. ரொக்கிராஜ் சைக்கிளை உழக்கினபடியே வீட்டைச் சுத்தி ரெண்டு ரவுண்ட் அடிச்சான். தேப்பன்காரனின்ர தலைக்கறுப்பை காணயில்ல. சைக்கிளை நிப்பாட்டி வேலியோட சாத்திவைச்சுப் போட்டு மெதுவாய் கொட்டிலுக்குள்ள போனான்.

3. ரொக்கிராஜைக் கண்ட செனோவா ஒண்டு பறைய இல்ல. இவனைக் கண்டவுடன மிக்கல்ராஜ் சேர்ட்டையும் கொழுவிக் கொண்டு வெளியில வெளிக்கிட்டுப் போயிற்றான். பிரின்ஸி தான் தமையனுக்குப் பக்கத்தில இருந்துகொண்டு இவ்வளவு நாளும் இஞ்ச நடந்த கதையளை, தேப்பன் கிளக்கர் வீட்டோட சண்டை பிடிச்சதை விக்கி விக்கிச் சொன்னாள்.

4. எல்லாத்தையும் கேட்டுக் கொண்டிருந்த ரொக்கிராஜ் ''தங்கச்சி இவ்வளவு நாளும் விட்ட விளையாட்டுக்களை பப்பா இனியும் விட ஏலாது. இனியும் அவர் அடங்க இல்லையெண்டால் இயக்கம் கையைக் காலை முறிச்சு படுக்கையில தான் போடும்'' எண்டு சொன்னான்.

5. அதுமட்டுக்கும் ஒரு மூலையிலயிருந்து எல்லாத்தையும் கேட்டுக் கொண்டிருந்த செனோவா ''அந்த மனுசன் உன்ர கையைக் காலை முறிச்சு உன்னை பாயில போடப் போகுதாம்'' எண்டாள்.

6. ரொக்கிராஜுக்கு இதைக் கேட்டதும் விசர் வந்திற்றுது. அவக்கெண்டு எழும்பி கொட்டிலை விட்டு வெளியில வந்தான். வந்து பார்த்தால் ரொக்கிராஜ் நிப்பாட்டி வைச்ச சைக்கிளுக்குப் பக்கத்தில்ல கொரில்லா குந்திக்கொண்டு இருந்தான்.

7. ரொக்கிராஜ் தலையைக் குனிஞ்சுகொண்டு நடந்து வந்து சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளிக்கிட கொரில்லா பாய்ஞ்சு எழும்பி சைக்கிளின்ர கான்ட்பாரை பிடிச்சுக் கொண்டான். ரொக்கிராஜ் நிமிர்ந்தும் பார்க்கயில்ல. ஆனால் சைக்கிளை உருட்ட ட்ரை பண்ணினான். அது அசையுதில்ல.

8. கொரில்லா சைக்கிளை ஒரு உலுப்பு உலுப்பிப் போட்டுக் கேட்டான் ''தம்பி உன்னை இயக்கம் என்ன சமையலுக்கோ வைச்சிருக்கு.'' ரொக்கிராஜுக்கு கை கால் எல்லாம் நடுங்கத் தொடங்கிற்றுது. சைக்கிளை அப்பிடியே விட்டுப்போட்டு சண்டிக்கட்டைத் தூக்கி கட்டினான். சடாரெண்டு கொரில்லா ஒரு



ரெண்டு எட்டு பின்னுக்குப் போனான். பொத்தெண்டு விழுந்த சைக்கிளை தூக்கி நிமிர்த்தி உருட்டிக்கொண்டு போனான் ரொக்கிராஜ். இனி ஏதும் கதைச்சால் தேப்பனுக்கு அடிபோடுறது எண்ட முடிவுக்கு அவன் வந்திற்றான்.

9. ஒரு ரெண்டு நிமிசம் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடந்தான். கொரில்லாவிட்ட இருந்து ஒரு சவுண்டும் வரயில்ல. சைக்கிளில் ஏறி உழக்கிக்கொண்டு போனான்.

இப்ப முதுகுக்குப் பின்னால கொரில்லா கத்திக் கேக்குது ''டேய் இனி நீ இஞ்ச வரக் கூடாது. நீர் நெச்ச நேரம் வந்து போக இது வேசை வீடில்ல தெரிஞ்சு கொள்.''

10. ரொக்கிராஜ் அங்கயிருந்து போய் ஒரு அஞ்சு நிமிசம் தன்னும் செண்டிருக்காது. எங்கேயிருந்தோ ஜெயசீலி ஆத்துப் பறந்துகொண்டு ஓடி வந்தாள். ''ரொக்கி வந்தவனாமே... எங்கே உள்ளுக்கேயே இருக்கிறான்?''

11. இப்பிடி ஜெயசீலி கொரில்லாவைக் கேட்டு கேட்ட வாய் மூட முன்னுக்கு படாசெண்டு ஜெயசீலியின்ர அலகைப் பொத்தி அடிச்சான் கொரில்லா.

''எடி தோற உன்னால தானடி அவன் கெட்டழிஞ்சு போனவன். படிப்பிக்கிறன் படிப்பிக்கிறன் எண்டு பாசு காட்டி அவன புலிப்படைக்கு அனுப்பிப் போட்டு இப்ப விடுப்பு பார்க்க வாறீரோ?'' காலைத் தூக்கி ஜெயசீலியின்ர நாரியில ஒரு உதை உதைச்சான் கொரில்லா.

12. நாரியைப் பொத்திக்கொண்டு அப்பிடியே நிலத்தில குந்தியிற்றாள் ஜெயசீலி. டக்கெண்டு அவள் தன்ர பல்லை நறுமிக் கொண்டு ''ஆ பொம்பளைக்கு அடிக்கிற சண்டிய மயிரே, எளிய சேத்தான். ஏலாவாளியோட சண்டித்தனம் காட்ட தூ தூமைச்சீலை உனக்கு வெக்கமில்லையோ? எடியே பட்டணத்து கல்ப் நீரும் உம்மிட புரியனை அடிக்க ஏவி விட்டுப் போட்டு மச்சுனோன் மாதிரி பார்த்துக் கொண்டு நிக்கிறீரோ? இப்ப போய் புலிப்படையைக் கூட்டிக் கொண்டு வந்து உன்ர புரியனை றிமாண்ட் பண்ணிக் காட்டுறன் பார்த்துக் கொண்டு'' எண்டு நாரியப் பொத்திப் புடிச்சுக் கொண்டே மெள்ள மெள்ளமாய் நடந்து போனாள் ஜெயசீலி.

நன்றி - நூலகத்திட்டம்

13. ''இந்தா புலிப்படையை இத வந்து றிமாண்ட் பண்ணச் சொல்லு'' எண்டு சாரத்தைக் கிளப்பிக் காட்டினாள் கொரில்லா.

14. பிரின்ஸி எல்லாத்தையும் கேட்டுக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டு கொட்டிலின்ர மூலைக்குள்ள இருந்து கொண்டு நெத்தியிலும் நெஞ்சிலுமாய் அறுவத்தெட்டு பிதாச்சுதன் போட்டுக் கொண்டிருந்தாள். 'ஐயோ, உத்தரிய மாதாவே இந்த பப்பாவோட என்னை உத்தரிக்கவிடாமல் என்னைக் கொண்டு போக மாட்டீரோ' எண்டு சொல்லி சொல்லி அழுதாள். அந்த நேரத்தில அவள் சாமத்தியப்பட்டாள்.

சென்றிப்பொயின்ற்றுக்கு வந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு நிண்ட ஜெயசீலியைக் கண்டவுடன றொக்கிராஜ் விழுந்து மண் மூட்டையளுக்குப் பின்னால கவர் எடுத்து ஒளிச்சுக் கொண்டான்.

2. ஊத்தைச் சாந்த*தான் ஜெயசீலியை விசாரிக்க அவள் ஒரு பெரிய டிராமா போட்டாள்.

3. ''இஞ்ச பாருங்கோ கொமாண்டர் றொக்கிராஜ் என்ர மருமகன் தான். அவரை நான் பார்க்க அவற்றை வீட்ட போக அவற்ற ஃபாதர் கொரில்லா என்னை அடி அடியெண்டு அடிச்சு முறிச்சுப் போட்டார். நான் உங்களட்ட முறைப்பாடு செய்வன் எண்டு சொன்னதுக்கு உங்கிட மூவ்மென்ரையும் மரியாதைக்கேடாய் ஏசுறார். நீங்கள் ஒருக்கா அவரைப் பிடிச்சுக் கொண்டு வந்து விசாரிக்க வேணும்'' எண்டாள்.

4. ஊத்தைச் சாந்த அவளை ஏசித் துரத்தி விட்டான். ஜெயசீலி போனபிறகால சென்றிப் பொயின்ரிலயிருந்த ஒரு பொடியன்

*சாந்த (வேதநாயகம் சுரேஷ்குமார், 1965-1987) : விமானக் குண்டுவீச்சில் உயிரிழந்தார்.



ஜெயசீலி மாதிரி நெளிச்சு நெளிச்சு ''இஞ்ச பாருங்கோ கொமாண்டர்...'' எண்டு கதைச்சுக் காட்டி நக்கல் பண்ணினாங்கள். றொக்கிராஜ் அதைப் பெரிய மானக்கேடாய் பீல் பண்ணினான்.

5. இதுக்குப் பிறகு தான் எக்காரணம் கொண்டும் இனி தன்ர வீட்டுக்குப் போறதில்லையெண்டு றொக்கிராஜ் முடிவெடுத்தான்.

6. இது நடந்து கொஞ்ச நாளில தங்கச்சியாருக்கு தண்ணி வார்ப்பு சடங்கு நடந்ததெண்டும் சடங்கிலும் கொரில்லா பெரிய கலவரம் செய்தானெண்டும் றொக்கிராஜ் கேள்விப்பட்டான்.

7. என்னவோ றொக்கிராஜுக்கு தங்கச்சியப் போய்ப் பார்க்க வேணும் எண்டு ஆசையாய்க் கிடந்துது. போகேக்க தங்கச்சிக்கு பிறசன்ட் ஒண்டு கொண்டுபோகவும் ஆசைப்பட்டான். நேராய் அடிச்சு அள்ளிக் கொண்டு போய் ஜெயசீலி வீட்டில நிண்டு ''அன்ரா எனக்கொரு இருநூறு ரூவாக் காசு வேணும்'' எண்டு கேட்டான்.

8. ''என்ர மருமோன் நீர் தானே கடையளில வரி எல்லாம் வேண்டி நிறையக் காசு வைச்சிருக்கிறீராம். நீரெல்லோ அன்ராவுக்கு காசு தர வேணும்'' எண்டு சொண்டுக்குள்ள சிரிச்சுக் கொண்டு ஜெயசீலி சொன்னாள்.

9. றொக்கிராஜ் ஒண்டும் பறையாமல் நிக்கவும் ஜெயசீலி கொட்டிலுக்கு உள்ள போய் சுருட்டு சுருட்டெண்டு சுருட்டி வைச்சிருந்த நாலு அம்பது ரூவா தாளைக் கொண்டு வந்து அங்காலும் இஞ்சாலும் பார்த்துப் போட்டு றொக்கிராஜின்ர சேர்ட் பொக்கற்றுக் குள்ள வைச்சுப் போட்டு ரகசியம் பறையிற குரலில ''இஞ்ச றொக்கி ஒரு பிரச்சினை, ஒவ்வொரு நாளும் ஏமஞ்சாமத்தில ஆரோ ஒரு ஹராம் இஞ்ச வந்து இருட்டுக்க நிண்டுகொண்டு சீக்காய் அடிக்கிறதும் செத்தையில குறுணிக்கல்லுகள் பொறுக்கி எறியிறதுமாய் என்னோட தனகிறான். அடி பார்த்துச் சொன்ன தம்பிராசாக் குஞ்சியப்பு இது செவத்தியாம்பிள்ளை மாஸ்டரின்ர அடிதான் எண்டு கொண்டிசனாய்ச் சொல்லிப் போட்டார். எனக்கும் அந்த சேய்த்தானில தான் டவுட். அவன் பொண்டிலையும் கலைச்சுப் போட்டு இப்ப பொம்பிளை புடிக்கத் திரியறான். எதுக்கும் நீர் அவனை ஒருக்காப் பிடிச்சு எங்குவாரி பண்ணவேணும்'' எண்டு கேட்டாள்.

10. ரொக்கிராஜ் ஓமெண்ட மாதிரியும் இல்லாமல் இல்லையெண்ட மாதிரியும் இல்லாமல் ஒரு சாங்கமாய் தலையை ஆட்டிப்போட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு போனான்.

11. சைக்கிளில போகப் போக 'இந்த கட்டாந் தரவைக்குள்ள இடிவிழுந்தாலும் ஒரு பள்ளம் விழாது. இதில அவர் அடி பார்த்துச் சொன்னவராம் இவ ஒரு பத்தினித் தெய்வம் என்னட்ட என்றி போட வந்திற்றாவாம்' எண்டு நினைச்சு நினைச்சு ஜெயசீலியை மனதுக்குள்ள ஏசிக்கொண்டு போனான்.

12. வங்களாவடிச் சந்தியில இருந்த 'றோயல் ஃபான்ஸி ட்ரேடர்ஸி'ல ஒரு மொண்டியா பொட்டையளின்ர மணிக்கூடு நூத்திதொண்ணூறு ரூவாவுக்கு வேண்டிக்கொண்டு தங்கச்சிக்காரிய பார்க்கப் போனான்.

13. இப்பயும் ரொக்கிராஜ் தரவைக்குள்ளால கொட்டிலைச் சுத்தி ரெண்டு சைக்கிளில ரெண்டு ரவுண்ட் அடிச்சுப் பார்த்தான். ஒரு சிலமனுமில்ல. ஒருக்கா பெல் அடிச்சான். பிரின்ஸி வெளியில வந்து தமையன்காரனை கண்டவுடன மெல்லிசாய் சிரிச்சாள். பப்பா இல்லையெண்டு கையால சிக்னல் போட்டாள்.

14. ரொக்கிராஜ் வீட்டுக்குள்ள போயிருந்து பிரின்ஸியோட கதைச்சுக் கொண்டிருந்தான். ''இந்த மரியாதை கெட்ட மனுசனோட தன்னால இனியும் சீவிக்க ஏலாதெண்டும் - பிரின்ஸியின்ர சடங்கு வீட்டுக்கு வந்திருந்த அயலட்டச் சனத்தை நடுச் சடங்கு நேரம் பார்த்து 'இஞ்ச என்ன சோத்துக்கா வந்தனீங்கள்?' எண்டு கேட்டு நிறைதண்ணியில கொரில்லா கலைச்சுப்போட்டானாம்-அம்மா தனக்கொரு அம்மா மாதிரி இல்லையெண்டும், அம்மா தனக்கொரு அக்கா மாதிரி மட்டுமே இருக்கிறா எண்டும் அவவும் தன்னோட சேர்ந்து பப்பாவுக்கு பயப்பிட்டுக் கொண்டிருக்கிறா எண்டும், தன்னைக் கூட்டிக்கொண்டு போய் எங்கேயாவது சிஸ்டர் மடத்தில சேர்த்துவிடச் சொல்லியும் இல்லாட்டி தான் கூடிய கெதியில மருந்து குடிச்சுச் சாவனெண்டும் பிரின்ஸி விக்கி விக்கிச் சொன்னாள்.

15. ஒரு மூலைக்குள்ள இருந்து பிரின்ஸி கதைக்கிறதையே கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த செனோவா எழும்பி வந்து ரொக்கிராஜ் தங்கச்சிக்காரிக்கு குடுத்த மணிக்கூட்டை ஒத்தி பறிக்குமாப் போல எடுத்து ''எக்கணம் இதைக் கண்டால் அந்த மனுசன் இதையும் கொண்டு போய் அடைவு வைச்சுக் குடிச்சுப்போடும்'' எண்டு சொல்லிக்கொண்டே அந்த மணிக்கூட்டை ஒரு சொப்பிங் பாக்கில சுருட்டி செத்தைக்குள் செருகி வைச்சுப் போட்டு ''புத்தியறிஞ்ச பொட்டைக்கு நல்ல சத்தான தீன் குடுக்கவேணும்... இஞ்ச ஒண்டுமில்ல'' எண்டு மெள்ளச் சொன்னாள்.

16. ரொக்கிராஜுக்கு இதைக் கேக்க பெரிய அந்தரமாய்க் கிடந்துது. தேப்பன் மட்டுமில்லாமலுக்கு தம்பியாரும் தேப்பன் மாதிரியே குழப்படி விட்டுக்கொண்டு திரியிறதை நினைக்கவும் அவனுக்கு ஒரு வெறி தான் கொண்டெழுப்புது. பேசாமல் எழும்பி வெளிய போய் சைக்கிளை எடுத்துக்கொண்டு சென்ரிப் பொயின்ருக்கு போய் படுத்தான். அண்டைக்கு இரவு கொரில்லாவின்ர கொட்டில் பத்தி எரிஞ்சுது.

17. ரொக்கிராஜ் வீட்ட வந்து போனது எப்பிடித்தான் கொரில்லாவுக்கு தெரிஞ்சுதோ வீட்ட வந்த கையோட மனுசிக்காறியையும் மகள்காறியையும் கொரில்லா அடிச்சு நொருக்கிப்போட்டான்.

18. கொட்டிலுக்கயிருந்த ஒரு பிலிப்ஸ் றேடியோப் பொட்டி, ஒரு வாங்கில், பிரின்ஸியின்ர பள்ளிக்கூடப் புத்தகம் கொப்பிகள், சட்டிபானையள் எல்லாத்தையும் உடன வெளிய முத்தத்தில கொண்டு போய் வைக்கச் சொல்லி செனோவாக்கு சொல்லிப் போட்டு கடைக்குப் போய் லாம்பெண்ணெய் வாங்கிக்கொண்டு வந்து ஊத்தி ஓ கொட்டிலைக் கொழுத்திப் போட்டு அது பத்தி எரிய 'ஓ ரொக்கிராசா வீட்டில சிவப்புக் குதிரை பறக்குது' எண்டு கொரில்லா கத்தினான்.

19. அயலட்டத்துச் சனங்களெல்லாம் ஓடி வந்து, 'ஏனப்பா உன்ர வீட்டைக் கொழுத்தினி?' எண்டு கேட்க கொரில்லா ''காட்டுக்குள்ள நிக்கிற புலி வீட்டுக்குள்ள வந்தா வீட்டைக் கொழுத்தத்தானே வேணும்'' எண்டு மறுமொழி சொன்னான்.

நன்றி - நூலகத்திட்டம்

கொரில்லாவுக்கு ஜா-எல எண்டும் ஒரு பட்டப் பெயர் இருக்குது. இந்தப் பட்டப் பெயர் செனோவாவின்ர சொந்தக் காரருக்கு இடையில தான் புழக்கத்தில இருந்தது. கொய்யாத் தோட்டத்து செனோவாவை கதைச்சு கொரில்லா லவ் பண்ணித் திரியேக்க தான் ஜா-எல எண்ட சிங்கள ஊரில பொலிஸ் இன்ஸ்பெக்டராய் வேலை பார்க்கிறதாய் சொல்லியிருந்தவன். கொரில்லாவின்ர ஸ்மார்ட்டைப் பார்த்திற்று செனோவாவின்ர சொந்தக்காரரும் அதை உண்மை யெண்டு நம்பியிருந்தவை.

2. ஜா-எல எண்ட ஊரில இருந்த ஒரு பாங்கின்ர விலாசத்தோட கொரில்லாவிற்ற ஒரு செக் புத்தகம் இருந்துது. அந்த செக் புத்தகத்தில எழுத்தே மங்கிப் போன நிலையில உக்கலாய் ரெண்டு மூண்டு தாளும் இருந்துது. ஆனால் இப்பயும் அந்த பாங்க் இருக்கோ தெரியாது. அந்தப் பழைய செக் புத்தகத்தைத் தேடி எடுத்து மடியில கட்டிக்கொண்டு காதுக்குள் ஒரு பென்சிலும் செருகிக்கொண்டு கொரில்லா ஒரு திட்டத்தோட திரிஞ்சான்.

3. ஒரு நாள் தீவுப்பகுதிப் பொறுப்பாளன் ஓஷீலா குஞ்சன் வயலுக்கு வந்து சென்றிப்பொயின்ரைத் தறோவா செக் பண்ணினான். பொடியள் சென்றிப் பொயின்ரை வலு கவனமாயும் ரெக்னிக்காயும் தான் வைச்சிருந்தாங்கள். பிறகு ஓஷீலா ஏதோ ஒரு திட்டத்தோட 'வடக்கு கடக்கரையை வடிவா ஒருக்கா பார்க்க வேணும்' எண்டான். ரொக்கிராஜ் ஓஷீலாவை சைக்கிள் முன்பாரில ஏத்திக்கொண்டு வடக்கு ரோட்டால சைக்கிளை உழக்கினான்.

4. இப்ப தரவைக்குள்ளால வலு வேகமாய் ஓடி வந்த உசரமான ஒருத்தன் சைக்கிளை நிப்பாட்டச் சொல்லி நடு ரோட்டில நிண்டு கையை ஆட்டினான். 'அது ஆர்?' எண்டு ஓஷீலா ரொக்கிராஜைக் கேட்க ''அது என்ர அப்பன், இவனை மண்டையில போட்டாத் தான் தமிழீழத்துக்கும் நல்லது எனக்கும் நல்லது'' எண்டு மெதுவாய்ச் சொன்னான் ரொக்கிராஜ். சைக்கிள் கொரில்லாவுக்கு கிட்ட வர ஒரே



பாய்ச்சலாய்ப் பாய்ஞ்சு சைக்கிள் ஹாண்ட் பாரை கொரில்லா பிடிச்சான். சைக்கிள் ஒருக்கா உலாஞ்சினது. ஓஷீலா சைக்கிளில யிருந்து குதிச்சிற்றான். ரொக்கிராஜ் சைக்கிள நிப்பாட்டி பக்கத்தில யிருந்த மதகில காலை ஊண்டினான்.

5. கொரில்லா ஓஷீலாவின்ர கையைப் பிடிச்சுக்கொண்டே கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தான். பிறகு இடது கையை தன்ர கன்னத்தில வைச்சு ஒரு சோகமாய் ஓஷீலாவைப் பார்த்தான். 'எதுக்கு இவன் இப்ப இந்தப் பாஸ் காட்டுறான்?' எண்டு ரொக்கிராஜ் யோசிச்சுக்கொண்டிருக்க கொரில்லா மடியிலயிருந்து செக் புத்தகத்தை எடுத்து பிறகு காதில செருகியிருந்த பென்சிலையும் ஸ்ரைலா எடுத்து ஒரு செக் எழுதி கிழிச்சு வலு மரியாதையாய் ரெண்டு கையாலையும் ஓஷீலாவிட்ட நீட்டினான்.

6. ''தம்பி நீர் தானே கொமாண்டர்? தம்பி இந்தாரும் இதில ரூ லெக் ருப்பீஸ் எழுதியிருக்கிறன். இதை வைச்சுக் கொண்டு என்ர மகனை வெளியில விடும்'' எண்டு சொன்னான். ஓஷீலா செக்கை வாங்கிப் பார்த்துப் போட்டு பிறகு ரொக்கிராஜை ஒரு புன்சிரிப்போட பார்த்தான். ரொக்கிராஜ் ஒண்டும் பறையாமல் ஓஷீலாவைச் சைக்கிளில ஏத்தினான். கொரில்லாவோ இவையின்ர மறுமொழி ஒண்டையும் பார்த்துக் கொண்டிருக்காமல் விறு விறெண்டு தரவைக்குள்ள இறங்கி நடந்து போனான். என்ர கையால தான் இவனுக்குச் சாவு எண்டு ரொக்கிராஜ் ஓஷிலாவுக்கு ஆத்திரத்தோட சொன்னான்.

குஞ்சன்வயலில இருந்து வடக்குப் பரவைக் கடலுக்குள் ளால யாழ்ப்பாணத்துக்கு போறதுக்கு எவ்வளவு தோணி றெடி பண்ண ஏலுமோ உடன றெடி பண்ணி வையுங்கோ எண்டு புங்குடுதீவு லக்கிசெவன் பேஸிலயிருந்து குஞ்சன்வயல் சென்றிப் பொயின்ருக்கு வோக்கி டோக்கியில அறிவிச்சினம்.

நன்றி - நூலகத்திட்டம்

2. றொக்கிராஜ் லைன் ஓடிக்கொண்டிருந்த தோணிகளை மறிச்சு ஆயத்தப்படுத்தி, கரையில தோணிகளை இழுத்து விட்டிருந்த தோணிக்காரர் வீட்ட போய் அவையளையும் கூட்டிக்கொண்டு வந்து எல்லாமா எட்டு தோணிகள றெடி பண்ணி வைச்சான். என்ன ஒரு அவசரம் எண்டாலும் தோணிகளில அவுட் மோட்டர் பூட்டி ஓட ஏலாது. இருந்தாப் போல ஹெலிகொப்டரில வந்து வடக்கு கடலை றெக்கி எடுப்பாங்கள். தோணிக்காரர் கம்பு ஊண்டியோ பாய்விரிச்சோ போய்க் கொண்டிருந்தினம் எண்டால் அவ்வளவா பிரச்சினை இல்லை. அவுட் மோட்டர் பூட்டிப் போனால் ஹெலியிலயிருந்து கட்டாயமாய்ச் சுடுவான். அந்த அராலிப் பரவைக்கடலில குஞ்சன் வயலிலயிருந்து மேற்குப் பக்கமாய் ஓடினால் காரைநகர் நேவிக்காம்பும் வடக்க ஓடினால் அந்தலையில யாழ்ப்பாண கோட்டை ஆமிக்காம்பும் கிழக்க முன்னா ஓடினால் மண்டைதீவுச் சந்தியில மினிக் காம்புமாய் ஏதோ கடலைப் புடிச்சு மறியல் வைச்சிருக்கிற பெற்றனில ஆமிக்காரர் சுத்திவர இருந்தாங்கள்.

3. சென்றிப்பொயின்ரில இருந்த பொடியளுக்கெல்லாம் ஒரே திறில்லாய்க் கிடந்துது. ரவுணுக்குப் போய் ஏதாவது ஆயுதங்கள் கொண்டு வரப்போறமா? இல்லாட்டி நெடுமாறன் மாதிரி ஆராவது பெரியாக்கள் பயணம் செய்யப் போயினமா? எண்டு ஆளை ஆள் கேட்டாங்கள்.

4. வடக்கு ரோட்டால வலு வேகமாய் வாகனங்கள் வந்து அந்தோனியார் சுருவத்தடியில நிண்டன. அவ்விடத்தில தான் தோணிகள் றெடியாய் இருக்கு. முன்னுக்கு வந்த வாகனத்தில ஓஷீலா இருந்தான். அதுக்கும் பின்னால வரிசையாய் ஆறு வாகனங்கள். அவ்வளவு வாகனத்துக்குள்ளயும் வரிசையாய்ப் பிரேதங்கள்.

5. குஞ்சன்வயல் கடக்கரையே ரெத்த வெடில் பிடிச்சுது. ஒவ்வொரு வாகனமாய் ஓடி ஓடி றொக்கிராஜ் பிரேதங்களைப் பார்த்தான். அவனால நிலத்தில நிக்கக் கூட ஏலாமலுக்கு தலை சுத்தி அப்பிடியே ரோட்டில இருந்திற்றான். குழந்தை, குஞ்சு, குருமான், ஆம்பிளையள், பொம்பிளையள் எண்டு எல்லாமாய் ஐம்பத்து சொச்சப் பிரேதங்கள்.



6. எல்லாரையும் வெட்டித்தான் கொலை செய்திருக்கிறாங்கள். கையில்லாமல், காலில்லாமல், தலையில்லாமல், கைக்குழந்தையைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு கிடந்த பிரதேங்களை தோணிகளில ஏத்தினாங்கள். தோணியள் நாவாந்துறையைப் பார்த்து போகுது. நாவந்துறையில இருந்து பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போறதுக்கு அங்கயும் வாகனங்கள் றெடியாய் நிக்குதெண்டு செய்தி கிடைச்சுது. குஞ்சன்வயல் சனங்கள் ஒரே ஆத்திரமும் அழுகையுமாய் பிரேதங்களை தோணியில ஏத்திறதுக்கு உதவி செய்தவை.

7. காலையில வழமை போல நெடுந்தீவிலையிருந்து குமுதினி* லோஞ்சு வெளிக்கிட்டிருக்கு. அது நேராய் புங்குடுதீவு குறிகட்டுவான் ஜெற்றிக்கு வரவேணும். ஆனால் இப்ப அப்பிடி வர ஏலாது. இடையில பாதையை மாத்தி நயினாதீவு நேவிக்காம்புக்கு போக வேணும். நேவி செக் பண்ணி பிடிக்கிற பொடி பொட்டையளை பிடிச்சுக்கொண்டு விட்டாப் பிறகுதான் குறிகட்டுவானுக்கு வர ஏலும். எப்பிடியும் காலையில பத்து மணிக்குப் பிந்தாமல் குமுதினி லோஞ்சி குறிகட்டுவான் ஜெற்றிக்கு வந்திரும்.

---

* கடலம்மா...!

கடலம்மா ... நீயே சொல்
'குமுதினி' ஏன் பிந்தி வந்தாள்
எம்மவரின் அவலங்களைச்
சடலங்களாய்ச் சுமந்துகொண்டு
'குமுதினி' குருதி வடிய வந்தாள்
கடலம்மா கண்டாயோ
கார்த்திகேசு என்னவானான்?
எந்தக் கரையில்
உடலூதிக் கிடந்தானோ?
ஓ...! சோழகக் காற்றே
நீ,
வழம்மாறி வீசியிருந்தால்...
'குமுதினி' வரமாட்டாள் என்று
நெடுந்தீவுக்குச் சொல்லியிருப்பாய்,
பாவம்

நன்றி - நூலகத்திட்டம்

8. ஆனால் அண்டைக்கு குமுதினி நயினாதீவு நேவிக் காம்புக்கு வர முன்னமே நேவிக்கப்பலுகள் குமுதினியை தேடிப்போய் நடுக்கடலில மறிச்சுப் பிடிச்சுக்கொண்டுதுகள்.

9. ஒரு பச்சப் பாலகனுக்கு - பிறந்து ஆறு மாசம் கூட இருக்காது - நெஞ்சில வாளல குத்தி அந்தப் பிள்ளையின்ர ஆணுடம்பை அறுத்து அந்தப் பாலகன்ர வாயுக்குள்ள ஆணுடம்பை அடைஞ்சு வைச்சிருக்கிறாங்கள். லோஞ்சியல பயணம் செய்த ஒருத்தரும் உசிரோடு தப்பயில்ல. எல்லாரையும் வெட்டிச் சரிச்சுப் போட்டுத்தான் போயிருக்கிறாங்கள்.

10. பத்து மணிக்கு வரவேண்டிய குமுதினி வரயில்ல. அது மத்தியானத்துக்குப் பிறகு குறிகட்டுவான் துறையில நிண்ட சனங்களின்ர கண்ணில தெரிஞ்சுது. குமுதினி ஜெற்றியைப் பார்த்து வராமல் கடலுக்குள்ளேயே அலையிறதைக் கண்டு போட்டு

---

மரணங்களின் செய்தி கூடக்
கிட்டாத தொலைதீவில்
ஏக்கங்களையும் துக்கங்களையும்
கடலலைகளிடம் சொல்லிவிட்டுக்
காத்திருக்கும் மக்கள்...
கடலம்மா நீ மலடி
ஏனந்தத் தீவுகளை
அனாதரவாய்த் தனியே விட்டாய்?

கடலம்மா
உன் நீள்பரப்பில்
அனாதரவாய் மரணித்த எம்மவரை
புதிய கல்லறைகளை எழுப்பி
'அனாதைக் கல்லறைகள்' என நினைவூட்டு
ஆனால்,
இனி வருங் கல்லறைகள்
வெறும்
இழப்புக்களின் நினைவல்ல
எமது
இலட்சியங்களின் நினைவாகட்டும்

- நிலாந்தன் (1985/அலை-26)



துறையிலயிருந்த சனம் வள்ளத்தில ஏறிப்போய் குமுதினியைப் பார்த்தால் இந்தக் கொடூரம். ஒரு மாதிரி போன ஆக்கள் குமுதினிய ஜெற்றிக்கு கொண்டு வந்து சேர்த்திச்சினம்.

11. எல்லாப் பிரேதங்களையும் தோணியில ஏத்தி அனுப்பினாப் பிறகு அப்பிடியே கடலுக்குள்ள இறங்கி எல்லாப் பொடியளும் கால், முகம் கழுவிச்சினம். பிறகு ஓஷீலா ''நேவிக்கு அழிவு காலம் கிட்டுது'' எண்டு சொன்னான்.

12. பொடியள் சொன்ன மாதிரி செய்து காட்டினாங்கள். ஒரு நாள் நயினாதீவு நேவியின்ர ஜெற்றியையும் ஜெற்றியில நிண்ட வள்ளங்களையும் வேரோடும் வேரடி மண்ணோடும் கிளப்பினாங்கள்.

13. ''எல்லாமா எத்தின நேவி முடிஞ்சிருப்பாங்கள்?'' எண்டு ரொக்கிராஜ் கேட்கவும் ஓஷீலா ஒரு செக்கன் கண்ணை மூடித் திறந்து போட்டு ''கிட்டத்தட்ட கணக்கு சரியா வந்திருக்கும்'' எண்டான்.

14. ''அண்ணே நாங்கள் கதைக்கிறது பிழையோ? இது கணக்குப் பார்க்கிற காரியமில்லை'' எண்டு சடாரெண்டு ரொக்கிராஜின்ர வாயில வந்திற்றுது. ஓஷீலா ஒரு மாதிரி சொண்டைச் சுழிச்சுக் கொண்டே ரொக்கிராஜைப் பார்த்து ''எனக்கே அரசியலா?'' எண்டு கேட்டான். சுத்தி நிண்ட பொடியள் சிரிச்சாங்கள்.

பிறகு பயிற்சியை முடிச்சுக்கொண்டு குஞ்சன்வயல் சென்றிப் பொயின்ருக்கு எட்டாவது ஆளாய் மஜீத் வந்து சேர்ந்தான். குஞ்சன் வயலுக்குள்ள ஒரேயொரு சோனகக் குடும்பந்தான் இருந்தது. அந்தக் குடும்பத்தின்ர தலைப்பொடியன் மஜீத் தான். மஜீத்தின்ர தேப்பன் வாளி ஒட்டுறது, கிழிஞ்ச குடை ஒட்டுப் போடுறது எண்டு தொழில் செய்யிறவர். சமைக்கிறதுக்கே கஸ்டப்படுற குடும்பம் அது. மஜீத்தின்ர தாய்க்காரி ரொக்கிராஜைக் காணயிக்க எல்லாம் மஜீத்தைப் பற்றி விசாரிச்சு அழுவா. இப்ப மஜீத் அவையின்ர கண்ணுக்கு முன்னால இருக்கிறதால மஜீத்தின்ர குடும்பத்துக்கு கொஞ்சம் நிம்மதி.

*2. அண்டைக்குப் பின்னேரக்கையாய் சனத்திற்ற இயக்கத்துக்கு சாப்பாட்டுப் பார்சல்கள் வேண்டிக்கொண்டு வாறதுக்காய் ஊர்மனைக்குள்ள போன மஜீத் போனகையோட திரும்பி வந்தான். அவன் தன்ர சைக்கிள் கரியலில 'வேலும் மயிலும் ஸ்டோர்ஸ்' கடைக்காரன இருத்திவைச்சு கூட்டிக் கொண்டு வந்தான். கடைக்காரனின்ர தலையில ஒரு பெரிய சீலைத்துணிக் கட்டு கட்டியிருக்கு. அவன்ர வெள்ளைச் சேர்ட்டில ரத்தம் ஊறிக்கிடக்கு. கடைக்காரனின்ர வலது கண் இமை சாடையாய்க் கிழிஞ்சு போய்க் கிடக்குது.*

*3. சென்ரிப்பொயின்ரில இருந்த ஊத்தைச் சாந்தவக் கண்டது தான் தாமதம் கடைக்காரன் ஒரு சின்னப் பிள்ளை மாதிரி சிணுங்கி சிணுங்கி அழத் தொடங்கியிற்றான். ஊத்தைச் சாந்த என்ன நடந்ததெண்டு கடைக்காரனை விசாரிச்சான். ரொக்கிராஜ் ஒரு பக்கம் இருந்து துவக்குக்கு புள்துறு இழுத்துக்கொண்டே நடக்கிறதை கவனிச்சுக் கொண்டிருந்தான்.*

*4. ''ஐயோ தம்பியவை இஞ்ச ரத்தத்தப் பார்த்தீங்களோ? நான் பிள்ள குட்டிக்காரன் கண்டீங்களோ? இந்தக் கொரில்லா எண்டுறவன் நெடுக நெடுக கடையில வந்து வெத்திலை, பீடி, சுருட்டு எண்டு நித்தம் ஒரு அரியண்டம் குடுத்துக்கொண்டேயிருக்கிறான். நானும் வயித்துப்பாட்டுக்காய் ஊர் விட்டு ஊர் வந்து கடை திறந்த இந்த ரெண்டு வரியத்திலயும் ஒரு நாள் எண்டாலும் அவனுக்கு குடுத்த சாமான்களுக்கு ஒரு சதமெண்டாலும் வேண்டியறியன். சரியோ... இண்டைக்கு நான் பின்னேரமாய் தான் கடை திறந்தனான். கைவியளத்துக்குக் கூடி ஒரு யாவாரம் செய்யேல்ல அவன் கொரில்லா வந்து அம்பது ரூவாய் கப்பம் கேட்டான். தர ஏலாது இயக்கத்திற்ற போய் முறைப்பாடு குடுப்பன் எண்டு நான் சொன்னதுக்கு அவன் தானும் இயக்கம் தானாம் எண்டு சொல்லிப்போட்டு இஞ்ச பாருங்கோ என்ர கண்ணைத் தோண்டிப் போட்டான்'' எண்ட கடைக்காரன் தன்ர வலக் கண் இமையை விரலால தூக்கிப் பிடிச்சுக் கொண்டு தன்ர கண்ணைச் சாடையாய்ப் புலுந்திக்காட்டினான். கடைக்காரனின்ர கண் ரெத்தப்பழமாய் சிவந்து கிடந்தது.*

*5. ''பிறகு தம்பி நான் பின் கதவைத் திறந்து ஓடிப் பறியப் பார்க்க கொரில்லா எட்ட நிண்டு மண்டாவால என்ர மண்டையை*



*அடிச்சு கூழாம்பாணி ஆக்கிப்போட்டு 'மண்டாவால குத்தினா ஒரு குத்து ரெண்டு ஓட்டை' எண்டு சொல்லிப் போட்டு காசுப் பட்டறையிலயிருந்த டொபிப் போத்திலையும் வைபோசாய் தூக்கிக் கொண்டு போயிற்றான்....''*

*6 ஊத்தைச் சாந்த கண்ணை மூடிக்கொண்டு கழுத்தைச் சொறிஞ்சு கொண்டான். பிறகு கண்ணைத் திறந்து ரொக்கிராஜைப் பார்த்தான். ''இப்ப என்ன மாதிரிச் செய்யிறது?'' எண்டும் கேட்டான்.*

*7. ''என்ன செய்யிறது! கப்பம் கேட்டதுமில்லாமல் இயக்கத்தையும் தேவையில்லாமல் கொண்டெம் பண்ணி கதைச்சால் ஆளைத் தூக்கிக் கொண்டு வந்து கையைக் காலை முறிச்சு அனுப்பிறது தான். இல்ல அவனுக்கு வெடிவைக்கிறது எண்டாலும் நான் ஓட்டுத்தான்'' எண்டு ரொக்கிராஜ் துள்ளத் தொடங்கியிற்றான்.*

*8. கொரில்லாவைத் தூக்கி விசாரிக்க ஊத்தைச் சாந்த ஓடர் குடுத்தான். ரொக்கிராஜும் ரவியனும்* ஒரு சைக்கிளிலயும் இன்னொரு சைக்கிளில மஜீத்துமாய் வலு வேகமாய் வெளிக் கிட்டிச்சினம். கொரில்லாவைக் கட்டிக்கொண்டாறதுக்கு கயிறும் கொண்டு போனவை.*

*9. சென்ரிப்பொயின்ரிலயிருந்து ஒரு மூண்டு நிமிசத்தில அந்தோனியார் சுருவத்தடிக்கு வந்திற்றினம். சுருவத்தடியில சைக்கிளை சாத்தி வைச்சுப்போட்டு தரவைக்குள்ளால இறங்கி கொரில்லாவின்ர கொட்டிலடிக்கு வந்து சேர்ந்தினம்.*

*10. கொரில்லாவின்ர கொட்டிலின்ர முன்பக்கத்தில மட்டும் ஒரு காவோலை வேலி கிடக்கு. வேலிக்கு நடுவில ஒரு கடப்பு. வேலித் தொங்கலில ரொக்கிராஜும் ரவியனும் நிண்டு கொண்டினம். ரொக்கிராஜ் மஜீத்தைப் போய் தன்ர தேப்பனையும் தேப்பனின்ர மண்டாவையும் அரஸ்ட் பண்ணிக்கொண்டு வரச்சொன்னான். மஜீத்தும் கடப்புக்கு முன்னால போய் நிண்டு ''மாமோய்...*

---

**ரவி (சின்னாண்டி திருக்கேதீஸ்வரன் (1970 -1990) : இங்கிலாந்துக்கு புலம் பெயர்ந்த சில தமிழ் இளைஞர்களுக்கு இடையே நடந்து வரும் குழு மோதல்களின் காரணமாக லண்டன் திரையரங்கினுள் வைத்து மூன்று தமிழ் இளைஞர்களால் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.*

மாமோய்...'' எண்டு கூப்பிட்டான். கடப்படிக்கும் கொட்டில் வாசலுக்கும் ஒரு இருவது முப்பது பாகம் தூரம் இருக்கும். கொரில்லா வலு சைலன்சாய் கொட்டிலுக்க இருந்து நடந்து வந்தான். வந்தவன் கடப்பில தன்ர ஒரு காலைத் தூக்கி வைச்சுக் கொண்டான். அவன்ர வாய் என்னத்தையோ சப்பிக் கொண்டிருந்தது. எட்ட நிண்டு எல்லாத்தையும் கவனிச்சுக் கொண்டு நிண்ட ரொக்கிராஜ் கொரில்லா சப்பிக்கொண்டிருக்கிறது வேலும் மயிலும் ஸ்டோர்ஸ் டொபியாய்த் தான் இருக்கவேணும் எண்டு நினைச்சுக்கொண்டான்.

11. ''ஓ மஜீத் என்ன கத்தாவ? உள்ளுக்க வாரும் தண்ணி குடிச்சிற்றுப் போகலாம். இந்தாரும் சொக்கிளேற் சாப்பிடுமன்'' கொரில்லா சண்டிக்கட்டுக்குள்ள கையை விட்டு கொஞ்ச டொபியளை அள்ளி மஜீத்துக்கு முன்னால் நீட்டினான்.

12. ''மாமா வேலும் மயிலும் ஸ்டோர்ஸ் கடைக்காரனுக்கு அடிச்சுப் போட்டு டொபிப் போத்திலையும் தூக்கிக் கொண்டு வந்திற்றீங்களாம். அந்தாள் அங்க சாகிறமாதிரிக் கிடக்குது. உங்களை விசாரிக்க வேணும், ஒருக்கா காம்புக்கு வந்திற்றுப் போங்கோ.''

13. கொரில்லா ஒருக்கா வேலி நீட்டுக்கு கண்ணெறிஞ்சு வேலி அந்தலையில நிண்ட ரொக்கிராஜைப் பார்த்துப் போட்டு கீழ ஓங்காளிச்சுக் காறித் துப்பினான். பிறகு வலு சாந்தமான ஒரு அக்ஷனோட வலக்கையை மேல உசத்தி மஜீத்துக்குச் சொன்னான் ''தம்பி மஜீத் ஏசுநாதர், அல்லா எல்லாம் ஒராள் தான். நான் ஏசுநாதர்... எது? ஏசுராசன் ஏசுநாதர் மாதிரி''கொரில்லா சொல்லி முடிய மேல ஆசிர்வாதம் செய்யிற ஸ்ரைலில வைச்சிருந்த கையை அவக்கெண்டு இறக்கி தன்ர நெஞ்சில படார் படார் எண்டு அடிச்சான். அந்தச் சத்தம் இங்க ரொக்கிராஜுக்குக் கேட்குது.

14. மஜீத் இப்ப சரியாய் குழப்பிப் போனது மாதிரி தெரியுது. அவன் நிலத்தைப் பார்த்துக்கொண்டே ''மாமா எதுக்கும் நீங்கள் ஒருக்கா காம்புக்கு வந்திற்றுப் போங்க, உங்கள விளங்க வேணும்... கடையில போய் பஹா கேட்டனிங்களாம்...'' எண்டு சொன்னான்.

15. ''ஓ அதுவும் அப்பிடியோ ஆர் விளங்கப் போறியள்?''

16. ''இயக்கம் விசாரிக்கும்.''

17. ''தம்பி காக்கா இதைத் கேளு'' எண்டு சொல்லிக் கொண்டே கொரில்லா கடப்பால ஏறிப்பாய்ஞ்சு மஜீத்தை நெருங்கினான். ''காக்கா இந்த ஏரியாவுக்கு ஆரு எஸ்.பி?''

18. மஜீத் ஒண்டும் பறையாமல் நிண்டு கொண்டிருந்தான். மெள்ளக் கடைக்கண்ணால் ரொக்கிராஜைப் பார்த்தான். கொரில்லா 'காக்கா' எண்டு சொன்னவுடனேயே மஜீத்தின்ர முகம் ஓடிக் கறுத்துப்போச்சு.

19. கொரில்லா மஜீத்தை ஒரு சுத்துச் சுத்தி வந்துபோட்டு பெலத்துக் கத்தினான் ''இந்த ஏரியாவுக்கு ஊத்தை எஸ்.பி. கண்டுகொள். ஊத்தை எஸ்.பி. எண்டால் கொரில்லா ஐ.ஜி எண்டு போய் அவனட்டச் சொல்லு கம்மாகோ சிக்காகோ.'' அவ்வளவுதான் கொரில்லா திரும்பவும் கடப்பை பாய்ஞ்சான். விறுவிறெண்டு கொட்டிலுக்குள்ள போயிற்றான். ஊர், உலகம் ஏசுராசனைக் கொரில்லா எண்டு கூப்பிடுது. ஆனால் இண்டைக்குத் தான் அவன் தன்ர வாயால தன்னைக் கொரில்லா எண்டு சொன்னவன்.

20. வேலி அந்தலையில நிண்ட ரொக்கிராஜ் விசர்கொண்டு கடப்படிக்கு நாலு பாய்சலில ''டேய் கள்ளா'' எண்டு கத்திக் கொண்டே ஓடி வந்தான்.

21. ரொக்கிராஜின்ர கண் ரெண்டும் சிவந்து தெறிக்க அவன்ர தேகமெல்லாம் நடுங்குது. பல்லை நெறுமிக்கொண்டே கடப்பைக் காலால உதைஞ்சு விழுத்தி அதிலயிருந்து ஒரு கருக்கு மட்டையை உருவி எடுத்து கையில வைச்சுக்கொண்டு கொட்டில் வாசலைப் பார்த்துக் கத்தினான்.

22. ''டேய் கொரில்லா மசிராண்டி, வாடா வெளியில நீ என்ன பெரிய சண்டித்தன மசிரோ? சும்மா ஏலாவாளியளிட்ட சண்டித்தனம் காட்டுறீரோ? வாடா வந்து என்னோட ஒருக்கா சண்டித்தனம் காட்டு பார்ப்பம். நீர் கப்பம் கேக்குறீரோ? லைட் போசில தான் உன்னைக் கட்டித் தூக்குவன். நீ இவ்வளவு நாளும் விட்ட சொறிச்சேட்டையளை இனியும் விட இயக்கம் பார்த்துக்கொண்டிருக்கும் எண்டு நினைச்சியோ? நீ வா வெளியில இண்டைக்கு உன்ர ஹைப்பார்ட் எவ்வளவு எண்டு பார்ப்பம்.''

23. இப்ப கொட்டிலின்ர தட்டி திறந்துது. செனோவா கொட்டிலுக்கயிருந்து வெளிய வந்தாள். வந்தவள் ஒண்டும்

பறையாமல் கடப்பைத் தூக்கி சரிப்பண்ணினாள். ரொக்கிராஜ் ஓடிப்போய் செனோவாவின்ர கையில இருந்த பனை மட்டைகளைப் புடுங்கி எறிஞ்சான் ''என்ன றொக்கி பாக்க வந்தினியா? போ போய் உன்ர வறுவாஸ் புரியனை வெளியில அனுப்பு, என்ன சேட்டையா விடுறியள்?'' எண்டு கத்திக்கொண்டு செனோவாவை நெட்டித் தள்ளினான்.

24. ''ரொக்கி என்னோட நீ ஏன் வாறாய்? எனக்கு மனிசனாலும் நிம்மதியில்ல, பிள்ளையளாலும் நிம்மதியில்ல'' செனோவா சொல்லி சொன்ன வாய் மூட முன்னுக்கு ரொக்கிராஜ் பாய்ஞ்சு அவளின்ர கன்னத்தைப் பொத்தி அடிச்சான். ''போ உன்ர புரியனை அனுப்பு.'' செனோவா ஒருக்கால் நிமிர்ந்து ரொக்கிராஜைப் பார்த்தாள். அவளின்ர முகத்தில ஒரு உணர்ச்சியும் இல்ல. கன்னத்தைப் பொத்திப் புடிச்சுக்கொண்டே அவள் கொட்டிலுக்குள்ள போனவள்.

25. செனோவா கொட்டிலுக்குள்ள போன கையோட கொட்டிலுக்குள்ளயிருந்து கொரில்லா வெளியில வந்தான். அவன் இப்ப வெறும் சஸ்பென்ரர் மட்டும் தான் கட்டியிருந்தான். வலு மெதுவாய் அவன் ரொக்கிராஜையும், ரவியனையும், மஜீத்தையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே அடிக்கு மேல அடிவைச்சு நடந்துவந்தான். அவன்ர வலது கையில ஒரு நெத்தி முட்ட உசரமான காட்டு மல்லிகைத் தடி.

26. இந்த காட்டு மல்லிகைத் தடி எண்டுறது லேசில கிடைக்காத ஒரு சாமான். சொல்லப்பட்ட சண்டியர்மார் எல்லாருமே குறளிவித்தை காட்டுறவன் கையில கட்டாயம் ஒரு தடிவைச்சிருக்கிற மாதிரி இந்த தடியை வைச்சிருக்கிறத ரொக்கிராஜ் கண்டிருக்கிறான். காட்டு மல்லிகைத் தடியால ஒரு அடி அடிச்சாலே அடி வாங்கின ஆள் செத்துப் போயிருவான் எண்டும் கேள்விப்பட்டிருக்கிறான்.

27. மஜீத் மெள்ளமாய் ரொக்கிராஜைச் சுரண்டி ''மச்சான் காட்டு மல்லிகைக் கம்பு'' எண்டான். கொரில்லா இவங்களை நெருங்கிக் கொண்டிருந்தான். கொரில்லா இவங்களுக்கு அடிக்கத்தான் வாறானா இல்லையா எண்டதை ரொக்கிராஜுக்கு கொரில்லாவின்ர முகத்திலயிருந்து மட்டுக்கட்ட ஏலாமலுக்கு



கிடந்தது. இந்த முகபாவனையும் சொல்லப்பட்ட சண்டியர்மார் எல்லாரும் காட்டுற ஒரு றிக்ஸ் தான்.

காட்டு மல்லிகைத் தடியைக் கண்ட உடனேயே ரவியன் கொஞ்சம் பின்னடிக்கத் தொடங்கியிற்றான். சனங்களுக்கு இடையில போகேக்க கையில துவக்க வைச்சு ஷோ காட்டக்கூடாது எண்டு இயக்கம் சொன்னது இப்ப பிழையாப் போச்சு எண்டு ரொக்கிராஜ் கவலைப்பட்டான். ஆனால் ரவியன் எப்பயும் தன்ர இடுப்பில ஒரு கிரினைட் வைச்சிருப்பான். ''ரவி அடியடா கிரினையிட்ட இண்டையோட இவன் முடியட்டும்'' எண்டு ரொக்கிராஜ் கத்தினான்.

28. ரவியன் இடுப்பில கை வைச்சு கிரினைட்டை எடுத்து கொரில்லாவின்ர முகத்துக்கு நேர காட்டினான். வந்த கொரில்லா சடாரெண்டு ஒரு பிரேக் அடிச்சான். திரும்பி ஓட்டமும் நடையுமாய் போய் கொட்டிலுக்குள்ள பூந்து தட்டியைச் சாத்தியிற்றான். ரவியன் கிரினைட்ட தூக்கி ஆட்டிக் கொண்டு கொரில்லாவுக்கு பின்னாலேயே போனவன் கொட்டிலுக்கு வெளியாலேயே நிண்டுகொண்டான்.

29. 'கொட்டிலுக்குள்ள பூந்து ஆளை அமத்துவமா?' எண்ட லைனில ரொக்கிராஜ் யோசிச்சுப் பார்த்தான். 'அது பிசகில முடியலாம்... காட்டு மல்லிகைத் தடி, மண்டா, திருக்கை வால் எண்டு ஊருப்பட்ட ஆயுதங்களோட அந்த மனிசன் இருக்குது. கொட்டிலுக்குள்ள எங்கேயாவது ஒளிச்சிருந்து நாங்கள் உள்ளிட ஏத்தி இழுத்துப்போடும் எண்டும் பயந்தான்.

30. நிலம் இருட்டிக்கொண்டு வருகுது. எப்பிடியும் இண்டைக்கு ஆளைப் பிடிச்சுக் கொண்டு போய் புளியங்கூடல் காம்பில அடைக்கவேணும் எண்ட முடிவோடதான் ரொக்கிராஜ் அவ்விடத்தில நிக்கிறான். இடைக்கிடை டேய் / கொரில்லா /கள்ளா /வெளிய வாடா/சாகப்போறாய் எண்டு ரொக்கிராஜ் சவாலும் விட்டுக் கொண்டிருந்தான். மஜீத்துக்கும் ரவியனுக்கும் சீ எண்டு போச்சு. விடுப்பு பார்க்கிற சனங்களும் சேர்ந்திற்றுதுகள்.

31. எங்கயோ இருந்து சைக்கிளில மிக்கல்ராஜ் வந்து சேர்ந்தான். அவன் ரொக்கிராஜுக்கு கிட்டப் போய் மெள்ளமான குரலில ''ரொக்கி ஏன் இதில நிண்டு கத்திக் குழறி எங்கிட மரியாதையைக் கெடுக்கிறாய்?'' எண்டு கேட்டான். ரொக்கிராஜ் வந்த விசரில

நன்றி - நூலகத்திட்டம்

மிக்கல்ராஜின்ர நெஞ்சில கையை வைச்சுத் தள்ளி விட்டான் ''ஓ உங்களுக்கு ஒரு மரியாதைப் பூளல் வேறையோ, அவனொரு கொரில்லா நீயொரு சின்னக் கொரில்லா, நியாயம் தெண்ட வந்திற்றார்... மரியாதையா உன்ர கொப்பனை வந்து சரண்டர் பண்ணச் சொல்லு.''

32. இப்ப கொட்டிலின்ர தட்டி திறந்துது. செனோவாவும் பிரின்ஸியும் வெளிய வருகினம். செக்கலாய் இருக்குது. பிரின்ஸியின்ர கையில ஒரு அரிக்கன் லாம்பு இருக்குது. ''வேசையளே நடவுங்கடி முன்னுக்கு'' எண்ட குரல் செனோவா வுக்கும் பிரின்ஸிக்கும் பின்னால இருந்து கேட்குது. செனோவாவும் பிரின்ஸியும் முன்னால் நடந்து வர அவையளில கவர் எடுத்துக் கொண்டு பின்னால கொரில்லா வந்தான்.

33. ''எங்கையடா அடியுங்க பார்ப்பம் உங்கிட பம்ஸ.''

34. ரொக்கிராஜும் தோழர்மாரும் சென்ரிப்பொயின்ருக்கு திரும்பி போய்ச்சினம். போற வழி முழுதும் மஜீத் விழுந்து விழுந்து சிரிச்சுக் கொண்டே போனான். விசயத்தைக் கேட்ட ஷத்தைச் சாந்தவுக்கும் பயங்கரச் சிரிப்பு.

35. அண்டைக்கு இரவு ரொக்கிராஜும் ரவியனும் தங்கிட சென்ரி ரைம் முடிய இரும்புக் கம்பியளோட வந்து அந்தோனியார் சுருவத்தடியில ஒளிச்சுக் கிடந்தினம். கொரில்லா எத்துப்பட்டால் அடிச்சு நொருக்கிற பிளான். ஆனால் அண்டைக்கு இரவு இவங்கிட கண்ணில கொரில்ல ஆப்பிடயில்ல.

36. இனி, கண்டால் கண்ட இடத்தில வைச்சு கொரில்லாவை அடிச்சு முறிக்கிறதுக்கு ரொக்கிராஜ் றெடியாய்த் திரிஞ்சவன்.



மின்னாமல் முழங்காமல் இலங்கை அரசாங்கமும் இயக்கங்களும் ஒரு நாள் போர்நிறுத்த எக்கிரிமென்ட் போட்டுக் கொண்டிச்சினம். இனி, ராஜீவ் காந்தியின்ற மூதாவில பேச்சு வார்த்தை நடக்குமெண்டும் தனித்தமிழ் ஈழம் இல்லாமல் ஆனால் தமிழீழத்துக்கு கிட்டவா ஒரு மாநில சுயாட்சி மாதிரி ஒரு சொலிசன் வரும் எண்டு நியூஸ் பேப்பருகளில எழுதிச்சினம். இஞ்ச குஞ்சன்வயல் சென்ரிப்பொயின்ரில இருந்த பொடியள் எல்லாரும் முதல் தரமாய் உசார் கெட்டுப்போய் இருக்கிறாங்கள்.

2. தீர்வு கிடைச்சு சண்டை முடிஞ்ச உடன தான் விட்ட படிப்பை தொடரப் போறதாய் தம்பாவும் - இவன் தம்பா எண்ட பேரில அப்ப பேமஸாய் இருந்த தமிழீழ இராணுவம் எண்ட இயக்கத்திலயிருந்து வேலை செய்து பிறகு வெளிய வந்து ரொக்கிராஜ் ஆக்களோட சேர்ந்துகொண்டவன் - ஒரு ரெண்டு வரியத்துக்கு வெளிநாட்டுக்குப் போய் உழைச்சுக்கொண்டு வரப்போறதாய் ரவியனும் உசாரில்லாமல் கதைச்சுக்கொண்டினம்.

3. இந்த பேச்சுவார்த்தை எண்ட விசயத்தைப் பற்றி ஒரு நாள் விளக்கமாய் ஒஷீலாவோட ஆக்கியுமென்ற் பண்ண ரொக்கிராஜுக்கு ஒரு சான்ஸ் கிடைச்சுது. தன்ர ஆர்க்கியுமென்ரின்ர இடையில இந்திய ஏகாதிபத்தியம், சிறிலங்கா தரகு முதலாளித்துவ அரசு, சுய பொருளாதார பூர்த்தி, உட்கட்டுமானம் எண்டு சில சொல்லுகளை ரொக்கிராஜ் சும்மா சுழட்டி எறிஞ்சு கதைச்சான். ஒஷீலா ஒரு புதினமாய் ரொக்கிராஜை பார்த்துக் கொண்டிருந்தான்.

4. உண்மையில என்ன நடந்தது எண்டால், ஒரு நாலைஞ்சு நாளைக்கு முன்னம் ஒரு வழியால ரொக்கிராஜுக்கு ஒரு சின்னப் புத்தகமொண்டு அம்பிட்டுது. அந்த புத்தகத்தை புளொட் இயக்கம் வெளியிட்டிருந்துது. அந்தப் புத்தகத்தின்ர பெயர் 'வங்கம் தந்த பாடம்.' அந்தப் புத்தகத்தை கொண்டுபோய் கடக்கரையில தனிய இருந்து ரொக்கிராஜ் திரும்பவும் திரும்பவும் வாசிச்சான். சில

நன்றி - நூலகத்திட்டம்

பொயின்ருகளை வாசிக்கேக்க அந்தப் போயின்ருகள் அவனைக் கொண்டெழுப்பித் தான் போட்டுதுகள். அந்த புத்தகத்தைப் படிச்சு முடிச்சவுடனேயே இனி தன்ர பெயரை மாத்திக்கொள்ள ஒரு சான்ஸ் கிடைக்கு மெண்டால் முஜிபுர் எண்டு மாத்தி வைச்சுக் கொள்ள வேணும் எண்டு ரொக்கிராஜ் முடிவெடுத்தான்.

5. ஆனாலும் ஒஷீலாவோட கதைக்கயிக்க இந்தப் புத்தகத்தைப் பற்றி சொல்லவேணாம் எண்டு ரொக்கிராஜின்ர உள்மனம் சொல்லிச்சுது. அவன் வலு கவனமாய் தான் ஒஷீலாவோட ஆர்க்கியுமென்ற் செய்தான்.

6. எல்லாத்தையும் சொண்டைச் சுழிச்சுக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்த ஒஷீலா ரொக்கிராஜுக்கு இப்பிடி மறுமொழி சொன்னான். ''இஞ்ச பார் கொரில்லா ரஷியாவில கேக் சாப்பிடுகினம் எண்டதால நாங்கள் கேக் சாப்பிட ஏலாது. வியட்நாமில பாம்பு சாப்பிடுகினம் எண்டதால நாங்களும் பாம்பு சாப்பிட ஏலாது. எங்கிட சூழலும் வேற, யுத்த முறைகளும் வேற, அரசியல் வழிகளும் வேற. ஏனெண்டால் எங்களுக்கெண்டு தனி ஒரு பண்பாடு இருக்கு, பாரம்பரியம் இருக்கு, மரபு இருக்கு, மண்வாசனை இருக்கு. கொரில்லா இன்னொரு விசயத்தையும் நாங்கள் கவனிக்க வேணும்... இதுவரையான வரலாற்றுப் பாடங்களை நாங்கள் எங்களுக்கான படிப்பினைகளாய் எடுத்துக் கொள்ள ஏலாது எண்டதை நாங்கள் சந்தோசத்தோட சொல்லிக் கொள்ளலாம். ஏனெண்டால் இதுவரையான வரலாற்றிலேயே இல்லாதது மாதிரியான ஒரு உறுதியான ராசதந்திரமுள்ள தலைவர் எங்களை வழிநடத்துறார்'' இதோட இந்த ஆர்க்கியுமென்ற் முடிஞ்சுபோச்சு.

7. இது நடந்த அடுத்த கிழமையே போர்நிறுத்தம் கிழிஞ்சுபோச்சு. பொடியள் மறுக்காவும் உசார் கொண்டு எழும்பினாங்கள். யாழ்பாணத்து △02 காம்புக்கு வந்து சேரச்சொல்லி மஜீத்துக்கு ஓடர் வந்துது. அவன் குஞ்சன்வயல் சென்றிப் பொயின்றிலயிருந்து வெளிக்கிட்டு போகயிக்க ரொக்கிராஜிட்ட ''மச்சான் போர்நிறுத்தம் முடிஞ்சு போய்ச்சாம். எங்க போய் மௌத் ஆகிறனோ தெரியா, போற வழியில ஒரு ஒறேஞ் பார்லி அடிச்சிற்றுப் போறன் ஏதாவது காசு கிடந்தால் தா'' எண்டு கேட்டான்.



8. தங்கச்சிக்காரிக்கு உருளோஸ் வாங்கிக் குடுத்தது போக மிச்சக்காசு பத்து ரூபாயை ரொக்கிராஜ் வலு பவுத்திரமா வச்சிருந்தவன். அதைத் தூக்கி ரொக்கிராஜ் மஜீத்துக்கு குடுத்தவன்.

9. மஜீத்துக்கு கரி நாக்கு.*

அண்டைக்கு இரவு மண்டை தீவுச் சந்தி மினிக்காம்பிலயிருந்து ஆமிக்காரர் கொஞ்சத்தூரம் வெளியில'நடை பவனி'யா வந்தாலும் வருவாங்கள், அதுக்கான அடுக்குகள் நடக்குமாப் போல தெரியுது' எண்டு றெக்கிக்கு போய்ற்று வந்த பொடியன் சொன்னான். பின்ன, குஞ்சன்வயல் சென்றிப்பொயின்ற் புள் அலேர்ட் ஆயிற்றுது. அண்டைக்கு ரொக்கிராஜ் தான் ஹீரோ. அவனுக்குத் தானே இந்த ஏரியாவில எங்க மதகு இருக்குது, ஆறு இருக்கு, குளம் இருக்குது எண்ட விசயமெல்லாம் தெரியும். அவனும் ஓடி ஓடி அலுவல் பார்த்தான். 'அந்தோனியாரே ஆமிக்காறன் கனதூரம் வேணாம், தாட்டிருக்குற முதலாவது சிலிண்டருக்கு வந்தானெண்டால் போதும். அப்பிடியே அடிச்சு தூக்கிரலாம்' எண்டு நினைச்சுக் கொண்டான். மூண்டு சிலிண்டருக்குமான வற்றி, பயர் கொனக்சன் எல்லாத்தையும் செக் பண்ணி ரெடியாய் இருந்தான்.

2. ஆமியின்ர சத்தம் ஒண்டையும் காணயில்ல. ஆனால் தூரத்தில ஒரு பாட்டுச் சத்தம் தான் கேட்டுது. அந்தச் சத்தம் வர வர சென்றிப் பொயின்ரை நெருங்குது. அதுவொரு ஓவெண்ட குரல். ரீ.எம். சௌந்தரராசன விட படு பயங்கரமான அக்ஷன்கள் போடுற குரல். பாடிக் கொண்டு வாறது தன்ர பப்பா தான் எண்டது குரலைக் கேட்டவுடன ரொக்கிராஜுக்குத் தெரிஞ்சு போச்சு.

3. நாங்களே பீல்ட் செய்யிற ரென்ஸனில இருக்கிறம். இந்த நிலைமைக்குள்ள இவர் சென்றிப்பொயின்ருக்கு வந்து ஏதும்

* வாப்பா சகிபு அப்துல் மஜீத் (1966-1985) யாழ். கோட்டையிலிருந்து வெளியேறி நகருக்குள் நுழைய முயன்ற சிறீலங்கா இராணுவத்தினரை தடுத்து நிறுத்தி மோதிய போது இராணுவத்தினரின் எறிகணையில் சிக்கி உயிரிழந்தார்.

அலட்டலோ சேட்டையோ விட்டால் எனக்கு வாற விசருக்கு இண்டைக்கு இந்த இடத்தில கட்டாயம் ஒரு 'மிஸ் பயரிங்' நடக்கும் எண்டு ரொக்கிராஜ் நினைச்சான்.

4. கொரில்லா ரசிச்சு ரசிச்சு பாடிக்கொண்டு வாறான். அது இன்பம் யாவுமே துன்பம் ஆகுமே எண்டவொரு பாட்டு. அந்தப் பாட்டின்ர ஒரு கட்டத்தில முறிச்சு 'மகனே நீ இருக்கும் வரை தான் இத்தனை தொல்லையடா' எண்டு அவன் பாடினான். பிறகு படு தூசணத்தால கொரில்லா மூச்சு விடாமல் கத்திக்கொண்டிருந்தான். ரொக்கிராஜ் மெள்ளமாய் இருட்டோட இருட்டாய் 'டக்வோக்' கில போனான். பின்னால பம்பிக்கொண்டு ஊத்தைச் சாந்தவும் இன்னொரு பொடியனும் பொகினம்.

5. கொரில்லா கத்துமட்டும் கத்திப் போட்டு கீழ குந்தியிருந்து மூத்திரம் பெய்தான். அந்தத் தருணம் பார்த்து ரொக்கிராஜ் ஒரு பூனை மாதிரி நடந்து போய் கையிலயிருந்த VZ 52 எண்ட பென்னம் பெரிய துவக்கின்ர சோங்குப் பக்கத்தை கொரில்லாவின்ர உச்சந் தலையில இறக்கினான். கொரில்லா அப்பிடியே ஒரு மிருகம் மாதிரி கத்திக் கொண்டு முகம் குப்புற விழுந்தான். விழுந்து கிடந்தவனின்ர முதுகிலயும் சோங்கால ரொக்கிராஜ் ''செத்துப் போ...செத்துப் போ'' எண்டு சொல்லிச் சொல்லி இடிச்சான். சாந்த கொரில்லாவின்ர சாரத்தை உருவி உரிஞ்சு அதால கொரில்லாவின்ர ரெண்டு கையையும் பின்னால சேர்த்துக் கட்டினான். கொரில்லா இப்ப உரிஞ்சாங்குண்டியா நிக்கிறான். 'ஒரு மகன் தேப்பனைப் பார்க்கக் கூடாத கோலம்' எண்டு ரொக்கிராஜ் நினைக்க நினைக்க அவனுக்கு அழுகை வருகுது. கொரில்லாவுக்கு நிலைகெட்ட வெறி. ஊத்தைச் சாந்தவப் பார்த்து 'அன்னே மகே மாத்தையோ, மம துப்பத் மினிசு எக்கனக் காண்ட எப்பா மம மங்கொள்ளக் காரய நெவி மாத்தையே' எண்டு சிங்களத்தில புலம்பினான்.

6. கொரில்லாவை மூண்டு நாளா சென்ரிப் பொயின்ரில இயக்கம் கட்டி வைச்சிருந்துது. கொரில்லாவோட பொடியள் எல்லாம் பிறண்ட் ஆகியிற்றாங்கள். கொரில்லா சிரிக்க சிரிக்க கதைக் கிறானாம். அவன் எக்கச்சக்கமான செக்ஸ் பகிடிகள் இயக்கப் பொடியளுக்கு சொல்லி பைம்பலாய் இருந்தவனாம். இந்த மூண்டு நாளும் ரொக்கிராஜ் சென்ரிப் பொயின்ற் பக்கமே போகயில்ல. அவன் புளியங்கூடல் மெயின் காம்பில வந்து தங்கியிருந்தான்.



7. புளியங்கூடல் மெயின் காம்பில காசி எண்டு ஒரு புது ஆள் வாட்ட சாட்டமாய் இருந்தான். இவன் தான் இப்ப ரெண்டு நாளா தீவுப்பகுதிக்கு - ரொக்கிராஜுக்கும் சேர்த்து - பொறுப்பாளனாம். ரொக்கிராஜ் அங்கயிருந்த பொடியளட்ட ஓஷீலா எங்கேயெண்டு கேக்க அவங்கள் ஓஷீலா இயக்கத்துக்கு துண்டு குடுத்திற்றான் எண்டாங்கள். ரொக்கிஜுக்கு 'திக்'கெண்டு போச்சு. ஓஷீலாவா வது துண்டு குடுக்கிறதாவது...எண்டு தனக்குள்ள சொல்லிக் கொண்டான். 'ஆனால் அது தான் உண்மை. ஓஷீலா இந்த நேரம் எங்கேயாவது அவுஸ்ரேலியாவில அப்பிள் பழமோ பிரான்ஸில பியர்ஸ் பழமோ பொறுக்கிக் கொண்டிருப்பான்' எண்டு சொல்லிப் பொடியள் சிரிச்சாங்கள்.

8. 'ஆரு வாறாங்கள் எண்டும் தெரியுதில்லை, ஆரு போறாங்கள் எண்டும் தெரியுதில்ல. இவ்வளவு காலமும் உன்ர பேச்சைக் கேட்டெல்லோ நடந்தனாங்கள், போகயிக்க ஒரு வார்த்தை ஏன் போறாய் எண்டு சொல்லிற்றுப் போனால் என்ன?' எண்டு மனதுக்குள்ள ஓஷீலாவை ரொக்கிராஜ் திட்டினான். பிறகு காசியிற்ற தன்ர பிரச்சினையை விளங்கப்படுத்தி தேப்பனை இப்ப சென்ரிப் பொயின்ரில கட்டி வைச்சுற்றுத் தான் வாறான் எண்டதையும் சொல்லி தன்னை எங்கேயாவது தூர ஏரியாவுக்கு மாத்திவிடச் சொல்லிக் கேட்டான்.

9. காசி ரொக்கிராஜின்ர தோளில கையைப் போட்டு நல்ல வடிவாய் சிரிச்சான் 'மச்சான் உன்னைப் போல படிச்ச அரசியல் தெரிஞ்ச பொடியன் தான் எனக்குத் தேவை' எண்டு சொன்னான். அப்பிடியெண்டால் என்ன பிரச்சினை வந்தாலும் பரவாயில்லை தீவில தான் வேலை செய்யுறது எண்டு ரொக்கிராஜ் முற்றெடுத்தான்.

10. அடுத்த நாள் காலம்பிற ரொக்கிராஜ் நித்திரையால எழும்பயில காம்ப் அல்லோலகல்லோலப்பட்டுது. காம்ப் மதிலில ஒரு சின்னப் போஸ்டர் ஒட்டுப்பட்டிருக்கு. அந்தப் போஸ்டரில 'பாஸிஸ்டுகளே ஓஷீலா எங்கே?' எண்ட தலைப்பில இயக்கத்தை கிழிச்சு எழுதியிருக்கு. தீவுப் பகுதியில எல்லா முக்கிய இடத்திலும் இந்தப் போஸ்டர் ஒட்டப்பட்டிருக்கெண்டு செய்தியள் வந்துது. இந்தக் காம்ப் சுவரிலேயே துணிஞ்சு போஸ்டர் ஒட்டுறாங்கள் எண்டால் இது உள்வீட்டு வேலையாய் இருக்குமா? எண்ட லைனில ரொக்கிராஜ் யோசிச்சுப் பார்த்தான்.

எல்லா இடத்திலேயும் அடிக்கத் தொடங்கியாச்சு எண்டும் அவங்கள் குஞ்சன்வயல் கடக்கரையால ரவுணுக்கு தப்பியோடி னாலும் ஓடலாம் எண்டும் சிலபேர் திக்குத் திசை தெரியாமல் குஞ்சன்வயல் பக்கமாய் ஓடி வரலாம் எண்டும் அந்த இயக்கக் காறரை கண்டால் பிடிக்க வேணும் எண்டும் ஏலாட்டி ஃபயர் பண்ணு எண்டும் குஞ்சன்வயல் சென்ரிப் பொயின்ருக்கு வோக்கி டோக்கி யில செய்தி வந்திச்சுது.

2. ரொக்கிராஜ் வோக்கி டோக்கிக்கு பக்கத்திலேயே அண்டு முழுவதும் இருந்தான். எல்லா இடத்திலேயும் அவங்கள் விற்றோ பண்ணிக்கொண்டிருக்கிறாங்கள் எண்டும் கல்வியங்காட்டில மட்டும் இன்னும் சண்டை நடந்து கொண்டிருக்கெண்டும் ஊத்தைச் சாந்த சொன்னான்.

3. ஆனால் இது சம்பந்தமான முழு டீரெய்லையும் ரொக்கிராஜ் பி.பி.சி. செய்தியில தான் அறிஞ்சான். அந்த இயக்கக்காரரில நிறையப் பேர் இந்தியா றெயினிங் காம்புகளில இருக்கிறதால அவங்கள் இந்தியாவிலயிருந்து ராவோட ராவா வள்ளத்தில வந்து இறங்கினாலும் இறங்குவாங்கள் எண்டு சொன்ன ஊத்தைச் சாந்த கொஞ்சப் பொடியளை தெற்குக் கடக்கரைக்கு சென்ரிக்கு அனுப்பினான். ஊர் மனைக்குள்ள அந்த இயக்கத்தின்ர சப்போட்டர் ஒருத்தன் இருந்தான். பவா எண்டு பெயர். அவனைப் போய் பிடிச்சுக்கொண்டு வரச்சொல்லி ரொக்கிராஜுக்கும் ரவியனுக்கும் ஊத்தைச் சாந்த கொமாண்ட் குடுத்தான். எல்லாரையும் அனுப்பி றதுக்கு முதல் ஒரு நிமிஷம் 'நெல்லுக்குள்ள புல்லுப் புடுங்குறதைப்' பற்றிக் கதைச்சான்.

4. ரொக்கிராஜின்ர மண்டைக்குள்ள ஒரு சாகசம் விரிஞ்சுது. ஆனால் ரொக்கிராஜ் அதை விசுவாசம் எண்டு தனக்கு தானே சொல்லிக் கொண்டான். என்ன காரணத்தின்ர பேராலும் தன்ர விசுவாசத்தை சந்தேகப்பட அவன் ரெடியில்ல. ராவோட ராவா ரொக்கிராஜும் ரவியனும் பவாவின்ர வீடு பூந்தாங்கள். பவாவின்ர வீடு செத்தவீட்டுக் கோலம் கொண்டு கிடந்துது. அவன்ர தாய்க் கிழவி 'ஐயோ கிளி காலம்பிற பெரியகடைக்கு போனவன்தான் இன்னும் திரும்பி வரயில்ல' எண்டு அழுதாள். அவன் வந்த உடன அவனைக் கூட்டிக்கொண்டு வந்து சென்ரிப் பொயின்ரில பாரம் தர வேணும் எண்டு ரொக்கிராஜ் கொஞ்சம் உறுக்கி தாய்க்கிழவிக்குச் சொல்லிப்போட்டு வீட்டை விட்டு வெளிய வந்தான்.

5. எண்டாலும் அந்த வீட்டுக்குள்ள தான் துவக்கோட உள்ளிட்டது நியாயமில்லாத வேலையோ எண்ட சந்தேகம் அவனுக்கு ஒரு செக்கன் வந்தது. பிறகு 'சண்டையில என்ன நியாயமும் அநியாயமும். அவன் வீட்டுக்குள்ள ஒளிச்சிருந்து கை முந்தியிருந்தால் - எந்த காரணத்தின் பெயராலும் தன்ர விசுவாசம் சந்தேகப்பட ஏலாதது - எல்லாம் பிசகிப் போயிருக்கும்' எண்டு நினைச்சான்.

6. அடுத்த நாள் வெள்ளணக் காலம்பிற அந்தச் சப்போட்டர் பவாவின்ர தாய்க்கிழவி சென்ரிப் பொயின்ருக்கு வந்திற்றாள். ''மகன் இன்னும் திரும்பி வரயில்ல, நீங்கள் தான் அவனைப் பிடிச்சு வைச்சிருக்கிறியள். என்ர கிளியள் ஒருக்கா என்ற மோனை என்ர கண்ணில காட்டுங்கோ'' எண்டு குழறி அழுதாள்.

7. ஒண்டில்ல ரெண்டில்ல நாலு நாள் அந்தத் தாய்க்காரி குஞ்சன்வயல் சென்ரிப்பொயின்ற் வாசலில அன்னந் தண்ணியில் லாமல் கிடந்து அழுதாள். வேற எங்க போய் ஆரட்ட என்ன விசாரிக்கிறது எப்பிடி மகனைக் கண்டு பிடிக்கிறது எண்டதைப் பற்றி அந்தத் தீவுக் கிழவிக்கு என்ன தெரியப் போகுது? நாலாம் நாள் பின்னேரம், ரயர் போட்டு எரிச்சதால கருகிப்போய் மகனின்ர பிரேதம் தின்னவேலிச் சந்தியில கிடக்குது எண்ட செய்தி அந்தக் கிழவிக்கு வந்து சேர்ந்துது.

8. அந்தக் கிழவி தட்டுத் தடுமாறி எழும்பி சென்ரிப் பொயின்ரில இருந்த ரொக்கிராஜிட்ட தன்னையும் சுட்டுச் சாக்கொல்லச் சொல்லி கை எடுத்துக் கும்பிட்டுது.

ரொக்கிராஜின்ர கெட்ட காலமோ நல்ல காலமோ அண்டைக் கெண்டு ஊத்தை சாந்த சென்ரிப்பொயின்ரில இல்ல. அவன் ரவுண் மெயின் காம்புக்கு போயிற்றான். இப்பிடிப் போனா இருட்டினாப் பிறகு தான் திரும்ப வருவான்.

2. ஊர்மனைக்குள்ளயிருந்து ரெண்டு ஆக்கள் ஆத்துப்பறந்து சென்றிப்பொயின்ருக்கு ஓடி வந்து ஒரு றக்ரர் தெற்குக் கடக்கரையில மண் அள்ளிக் கொண்டு நிக்குது எண்டும், தாங்கள் இஞ்ச மண் ஏத்தக் கூடாது எண்டு சொல்லவும் அதை மதியாமலுக்கு மண் அள்ளுறாங்கள் எண்டும் சொல்லிச்சினம்.

3. மண் அள்ளுறதால கடல் அரிப்பு வந்து ஊர் அழியுது எண்டு சனங்கள் பொட்டிசனுக்கு மேல பொட்டிசனாக் குடுத்தும் ஒண்டும் சரிவராமல் இருக்கயிக்க எழுவத்தெட்டாம் ஆண்டோ என்னவோ யோகேந்திரா துரைச்சாமி ஜீ. ஏயாய் பொறுப்பு எடுத்த கையோட அவன் மண் அள்ளுறதை மறிக்கிறதுக்கு ஒரு சட்டம் போட்டான்.

4. ஆனாலும் மண் ஏத்துப்பட்டுக் கொண்டுதானிருந்தது. அல்லைப்பிட்டிச் சனங்களில அரைவாசிப் பேருக்கு கூலிக்கு மண் ஏத்துறதுதான் தொழில். அதைவிட நாகர்கோயில், அரியாலை மண்ணுகள் பூச்சு வேலைக்குத் தோதுப்படாது. விலையும் அறாவிலை. அதால அல்லைப்பிட்டி, மண்கும்பான் பக்கத்து மண்ணுக்கு நாட்டுப் பக்கத்தில நல்ல டிமாண்ட். சட்டம் போட்டாப் பிறகு இடக்கிடை மண் அள்ளுற லொறிகளை, றக்ரருகளை பொலிசுக்காரன் பிடிப்பான். ஆனால் 'சந்தோசம்' வேண்டிக் கொண்டு பிடிச்ச வாகனங்களை விட்டிடுவான்.

5. இயக்கங்கள் தலை எடுத்தாப் பிறகு தான் கடும் ஸ்ரிக். ஒருத்தரும் மண்ணள்ளக் கூடாது. இந்த ஸ்ரிக்கையும் சனங்கள் உடைச்சுக் காட்டியிருக்கும், அதுக்குள்ள பண்ணைப் பாலத்தால போக்குவரத்து நிண்டுபோன படியால நாட்டுப்பக்கத்து லொறி களும் மண்ணள்ள வர ஏலாமல் போச்சுது. கூலிக்கு மண் ஏத்திச் சீவிச்ச சனங்களும் அரைப்பட்டினி குறைப்பட்டினியாய் சுண்ணாம்பு எரிக்க, கொட்டுப்பனை கொத்த எண்டு வேற கூலி வேலையள் கிடைக்கேக்க செய்துகொண்டிருக்கினம்.

6. சிற்றிவேசன் இப்பிடியிருக்க இப்ப ஆர் திடீரெண்டு கடக்கரையில மண் அள்ளுறது எண்டு யோசிச்சுக் கொண்டு ரவியனையும் சைக்கிளில ஏத்திக்கொண்டு ரொக்கிராஜ் கடக்கரைக்குப் போனான்.

7. அங்க ஒரு எக்ஸ் மொடல் றக்ரர் - அதின்ர நம்பர் 32 சிறி 7676-நிக்குது. றக்ரர் பொட்டியில பெரிய சிவப்புக் கலர் எழுத்துக்களில 'சிங்கப்பூர் ஹார்ட் வெயார்ஸ்' எண்டு



எழுதியிருக்கு. றைவர் சீற்றில கொக்கத்தடி போல வளர்ந்த ஒருத்தன் இருந்தான். இன்னும் ரெண்டு பேர் கடகத்தோடும் மம்பட்டி யோடும், பொட்டிக்குள்ள இருக்கினம். கிட்டத்தட்ட புள் பொட்டியும் மண்ணால நிரம்பியிருக்குது. ஊர்ச்சனங்கள் ஒரு ஏழெட்டுப் பேர் றக்ரரை சுத்தி நிண்டு றைவர் சீற்றில இருந்தவனோட வாக்குவாதப்பட்டுக் கொண்டிருக்கினம். இது மட்டும் இயக்கங்கள் வாற காலத்துக்கு* முந்தியாய் இருக்கு மெண்டால் தங்கட ஊருக்குள்ள வந்து தங்களோடேயே வாக்குவாதப் படுறவனோட சனங்கள் வாயால பேசி இருக்க மாட்டினம். இத்தறைக்கு கையைக் காலை வாங்கியிருப்பினம்.

8. ரொக்கிராஜ் போய் வலு மரியாதையா றைவர் சீற்றில இருந்த வளர்ந்தவனிட்ட ''அண்ண எங்கயிருந்து வாறியள்'' எண்டு கேட்டான்.

9. அதுக்கு அந்த வளர்ந்தவன் 'ஏன்' எண்டு எதிர்க்கேள்வி கேட்டான்.

10. வளர்ந்தவனோட முதலில இருந்தே கதைவெளிப்பட்டுக் கொண்டிருந்த ஆனந்தக்கரசு - இவன் இணக்க சபை, ஐக்கியநாணய

---

* 1986ம் ஆண்டு காலப் பகுதியிலே ஈழத்துப் புதினப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த பிரபலமான துணுக்குச் செய்தியொன்று:

அந்தத் தனியார் மினிபஸ் ரவுணிலிருந்து அளவெட்டியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. வண்டியினுள்ளே மிகுந்த சன நெரிசல். எலியோடிக் கம்பியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டே ஒரு முதியவர் நிற்கமுடியாதவாறு தள்ளாடுகிறார். முதியவருக்கு அருகில் ஒரு இளைஞன். முதியவர் இளைஞனிடம் பேச்சுக் கொடுக்கிறார்.

''கேக்கிறன் எண்டு குறைவிளங்கக் கூடாது, தம்பி ஏதும் இயக்கமோ?''

''இல்லைப் பெரியவர்''

''தம்பி இயக்கத்துக்கு சப்போர்ட்டோ?''

''இல்லைப் பெரியவர் ஏன் கேக்கிறீயள்''

''தம்பியின்ர சொந்தக்காரர் ஆரும் இயக்கத்தில இருக்கினமோ?''

''இல்லைப் பெரியவர்''

''தம்பிக்கு தெரிஞ்சவை ஆரும் இயக்கத்தில இருக்கினமோ?''

''ஓ நோ!''

''அப்ப எடடா காலை. பஸ் வெளிக்கிட்டதிலயிருந்து நீ என்ர காலை மிதிச்சுக்கொண்டெல்லோ நிக்கிறாய்''

சங்கம், பந்தடி எண்டு ஊர் வேலையளில மினக்கெடுற ஆள் - ''அவற்ற செடிலைப் பார்த்தீரே தம்பி? இவங்கள் வேலணை ஆக்களாம்.'' எண்டு சொல்லிக் கொண்டு ரொக்கிராஜுக்குப் பக்கத்தில வந்தான்.

11. ''அண்ண இஞ்ச மண் ஏத்தக் கூடாது எண்டு இயக்கம் ஓடர் போட்டிருக்குது'' எண்டு ரொக்கிராஜ் வளர்ந்தவனுக்குச் சொல்ல வளர்ந்தவன் வலு கூலாய் ஸ்ரேறிங்கில தாளம் போட்டுக்கொண்டு ''எந்த இயக்கம்?'' எண்டு கேட்டான்.

12. ரொக்கிராஜும் அவசரப்படாமலுக்கு இன்ன இன்ன மாதிரி தான் இன்ன இயக்கம் எண்டு சொன்னான்.

13. இதைக் கேட்ட வளர்ந்தவன் ''ஓ அதுவும் அப்பிடியோ? நான் காசி அண்ணையிட்ட கதைச்சுக் கொள்ளுறன்'' எண்டு போட்டு பிறகு வலு நிதானமாய் ரக்ரறை ஸ்ராட் செய்தான்.

14. ரொக்கிராஜ் ஓடிப்போய் ரக்ரருக்கு முன்னால நிண்டு ரக்ரறை மறிக்குமாப் போல ரெண்டு கையையும் விரிச்சுப் பிடிச்சுக்கொண்டு நிண்டான். ஊர்ச்சனங்களும் ''ஆமோ? அப்பிடியோ? கதைச்சுக்கொண்டு நிக்கயிக்கயே நீர் ரக்ரறை ஸ்ராட் பண்ணுவீரோ?'' எண்டு கேட்டு வளர்ந்தவனோட சண்டைக்கு ஆயத்தம் பண்ணிச்சுதுகள்.

15. வளர்ந்தவன் ரொக்கிராஜைப் பார்த்துக் கத்தினான் ''இஞ்சேரும் தம்பி இது விசயகுமார் அண்ணனின்ர ரக்ரர். அவர் சொல்லித்தான் நாங்கள் மண் அள்ள வந்தனாங்கள். விசயகுமார் அண்ணனை உமக்குத் தெரியாட்டில் உங்கிட காம்பில விசாரிச்சு அறிஞ்சு கொள்ளும்.''

16. ''எந்தப் பணியாரக் குமாரின்ர ரக்ரராவும் இருக்கட்டும் இஞ்ச மண் ஏத்த ஏலாது...'' எண்டு ரொக்கிராஜ் தொடங்கவும் இணக்கசபை ஆனந்தக்கரசு ரொக்கிராஜைப் பார்த்து ''சரி தம்பி அவங்கள் ஏத்தினவங்கள் ஏத்திப்போட்டாங்கள். இந்த ஒரு லோட்டை மட்டும் கொண்டு போக விடுவம். ஆனால் மண் என்ன சும்மாவோ? பள்ளிக்கூடத்துக்கு எண்டு இருநூறு ரூவாக் காசு தந்திற்று போகட்டுமன்' ' எண்டு சொன்னான்.

17. ரொக்கிராஜுக்கும் இந்தப் பிளான் நல்லதாய் தெரிஞ்சுது.



அவன் வளர்ந்தவனிட்ட ''சரி இந்த லோட்டை மட்டும் கொண்டு போங்கோ... முந்தியெண்டால் வீசிக் கந்தோர் மண்ணுக்கு வரி வாங்கும். இப்ப அது இல்லாததால பள்ளிக்கூடத்துக்கு இருநூறு ரூவா தரவேணும்'' எண்டான்.

18. வளர்ந்தவன் ஒரு நக்கல் சிரிப்பு சிரிச்சுக் கொண்டு ''தம்பி நாங்கள் இயக்கத்துக்கு லெச்சம் லெச்சமாய் குடுக்கிற ஆக்கள். இருநூறு ரூவாய் பிச்சைக் காசுக்காய் எங்களை மறிக்கிறியோ?'' எண்டு சொன்னவன் தன்ர பொக்கற்றுக்க கையை விட்டு கையோட வந்த அம்பச ஒருரூவாக் குத்தியளை ரொக்கிராஜுக்கு முன்னால் எறிஞ்சு போட்டு சைற்றில ஒருக்கா ஒங்காளிச்சுக் காறித் துப்பிப் போட்டு அக்சிலேட்டரை ஒருக்கா உன்னி உறுமிப்போட்டு கியரில கையைப் போடவும் பொட்டிக்கு புறத்தால நிண்டு நடக்குறதுகளைப் பார்த்துக்கொண்டு நிண்ட ரவியன் ஓடி வந்து ரக்ரர் மக்காட்டால தொத்தி விழுந்து வளர்ந்தவன்ர கையை ஒரு கையால பிடிச்சுக்கொண்டு மற்றக் கையை சடாரெண்டு தன்ர இடுப்புக்குள்ள விட்டு ஒரு கிரினைட்டை எடுத்து வளர்ந்தவன்ர மூஞ்சிக்கு நேராய்ப் பிடிச்சுக்கொண்டு ''ரக்ரறை எடுத்தியெண்டால் கிளிப் அடிப்பன்'' எண்டு கத்தினான்.

19. வளர்ந்தவன் ஒரு மூச்சும் காட்டயில்ல. பொட்டிக்குள்ள இருந்த ரெண்டு பேரையும் இறங்குங்க எண்ட மாதிரி திரும்பி பார்த்துக் கண்ணக் காட்டினான். பொட்டிக்குள்ள இருந்தவங்கள் கீழ இறங்கினவுடன டிப்பரைத் தூக்கினான். ஏத்தின மண்ணை அவ்விடத்திலேயே பறிச்சான். தன்ர ஆக்களயும் ஏத்திக்கொண்டு வெறும் ரக்ரரோட போனான்.

20. ரொக்கிராஜ் அவ்விடத்தில நிண்ட சனங்களுக்கு இந்த மண் அள்ளுற விசயத்தைக் கவனிக்கிறதுக்கு 'தான் இயக்கத்தோட கதைச்சு ஒரு மக்கள் கண்காணிப்புக் குழு கட்டப்போறன்' எண்டு சொன்னான். சனங்களும் ஒண்டு ரெண்டாய்க் கலையத் தொடங்க ரவியன் ''கடலில குளிச்சுப் போட்டு ஏலுமெண்டால் பட்டி பார்த்துக்கொண்டு போனமெண்டால் நண்டு கொண்டுபோய் ஆரட்டயாவது குடுத்து சமைச்சு சென்ரிப்பொயின்ருக்கு எடுப்பிக் கலாம்'' எண்டு சொன்னான். சென்ரிப்பொயின்ரில எக்காரணம் கொண்டும் அடுப்பு மூட்டவோ, நெருப்பு கொழுத்தவோ கூடாது.

புகையைக் கண்டாலே அங்கயிருந்து பார்க்கிற ஆமிக்காரன் ஷெல் அடிக்கத் தொடங்கியிருவான்.

21. பின்ன ரொக்கிராஜுூம் ரவியனும் சனங்கள் போக மட்டுக்கும் அங்க ாலேயும் இங்காலேயுமாய் கடக்கரையில திரிஞ்சு போட்டு சனங்கள் எல்லாரும் போனவுடன கட்டியிருந்த சாரத்தை அவிட்டு அதில தங்கிட கிரினைட்டுகளையும் குப்பிகளையும் வைச்சு சுருட்டி மணலில தாட்டு வைச்சுப் போட்டு கடலுக்குள்ள இறங்கிச்சினம்.

22. அண்டைக்கு நல்ல வாசி. அலை பருவமாய் இருந்திச்சு. வேணாம் வேணாம் எண்ட நண்டுகள் பிடிபட்டுது. ஒரு ரெண்டு மணித்தியாலம் மட்டில கடலில மினக்கெட்டுப் போட்டு கரைக்கு வந்து வடலியில ஓலை கிழிச்சு நண்டுகளை குடலையாய்க் கட்டிக் கொண்டு ரெண்டு பேரும் வெளிக்கிட்டிச்சினம்.

23. இவையள் சைக்கிளில வடக்கு ரோட்டில ஏறி அந்தோனியார் சுருவத்தடியில வந்து கொண்டிருக்கினம், இவையளுக்குப் பின்னால ஒரு வண் எயிற்றிபைவ் மோட்ட சைக்கிள் வந்து இவையளை ஓவர்டேக் பண்ணிச்சுது.

24. ஓவர்டேக் பண்ணயிக்கதான் இவங்கள் கவனிச்சாங்கள். மோட்ட சைக்கிளில பின்னுக்கு இருக்கிறவன் அந்த வளர்ந்தவன். வளர்ந்தவனும் இவங்களைப் பார்த்துப் போட்டு மோட்ட சைக்கிளை ஓடிக் கொண்டிருந்தவனுக்கு ஏதோ சொல்ல மோட்ட சைக்கிள் அப்பிடியே றோட்டை உரஞ்சி கீச்சிட்டுக் கொண்டு நிண்டுது. இவங்களும் தங்கிட சைக்கிளை நிப்பாட்டினாங்கள்.

25. மோட்ட சைக்கிளை ஓடி வந்தவன் ஒரு சிவலைத் தடியன். வேட்டியை சண்டிக்கட்டாய்க் கட்டியிருந்தான். மார்ட்டின் சேர்ட் போட்டிருந்தான். அவன் மோட்ட சைக்கிளை ஸ்ராண்ட கூடப் போடாமல் அவக்கெண்டு குதிச்சு இறங்கவும் விழப்போன மோட்டசைக்கிளை வளர்ந்தவன் பிடிச்சுக் கொண்டான்.

26. சிவலைத் தடியன் ரொக்கிராஜையும் ரவியனையும் பார்த்து வரயிக்கயே வாய்க்குள்ள ஏதோ புறுபுறுத்துக் கொண்டு வாறான். ரொக்கிராஜுூக்கும் ரவியனுக்கும் கிட்ட வந்தவுடன ''உங்களைத் தேடித் தான் சென்றிப்பொயின்ருக்கு போறம்? எங்க சாந்த?'' எண்டு கேட்டான்.



27. ''சாந்த அண்ண இரவுக்குத் தான் வருவேர். அண்ண முதலில என்ன நடந்ததெண்டு கேளுங்கோ...'' எண்டு ரொக்கிராஜ் தொடங்கவும் ''என்ன நடந்தது? ஆரடா என்ற றக்ரருக்கு கிரினைட் அடிப்பன் எண்டு சொன்னவன்? கிரினைட் அடிப்பன் எண்டு எழுதித் தா, நான் அதைக் கொண்டு போய் ரவுணில அம்மானோட கதைச்சுக் கொள்ளுறன்'' எண்டு சிவலைத் தடியன் சன்னதமாடினான்.

28. ரவியனும் விடயில்லை. ''நீ ஆரடா? நான் தான் கிரினைட் அடிப்பன் எண்டு சொன்னனான் எடு பேனையும் பேப்பரும் எழுதித் தாறன்'' எண்டு சொல்லி சொன்ன வாய் மூடயில்ல ''நாலாம் நம்பர் றீல் கட்டை மாதிரி இருந்துகொண்டு நீ லோ கதைக்கிறியோ?'' எண்டுகொண்டே சிவலைத் தடியன் பாய்ஞ்சு ரவியன்ர சேர்ட்டைப் பிடிச்சான். ரெண்டு கையாலும் சைக்கிளைப் பிடிச்சுக் கொண்டு நிண்ட ரவியன் சிவலைத் தடியன் பாய்ஞ்ச போர்ஸ் தாங்காமல் கொஞ்சம் தளும்பியிற்றான்.

29. சிவலைத் தடியன் இப்பிடிக் கை வைப்பானெண்டு ரொக்கிராஜ் கொஞ்சமும் எதிர்பார்க்கயில்ல. அவன்ர கை ஓட்டமெற்றிக்கா சுழண்டுது. கையிலயிருந்த நண்டுக் குடலையால சிவலைத் தடியன்ர மூஞ்சிய லெக்குப் பார்த்து அடிச்சான். ஒரு அடியில சிவ்லைத் தடியன்ர மூஞ்சியிலயிருந்து ரெத்தம் கொப்பளிச்சுது.

30. இதுக்குள்ள ரவியனும் அலேர்ட்டாகி சைக்கிளப் பணியப் போட்டுட்டு சிவலைத் தடியன்ர வயித்தில கட கடவெண்டு வீச்சாய் தன்ர ரெண்டு கையையும் பொத்தி இடிக்க சிவலைத் தடியன் பொத்தெண்டு கீழ விழுந்தான். ''டேய் இயக்கத்துக்கே அடிக்கத் துணிஞ்சிற்றியோ?'' எண்டு கேட்டுக் கேட்டு ரொக்கிராஜுூம் ரவியனும் சிவலைத் தடியன உருட்டி உருட்டி அடிச்சாங்கள்.

31. வளர்ந்தவன் கிட்டயும் வரயில்ல. ஆனால் ''ஐயோ ஐயோ சாக்காட்டுறாங்கள்'' எண்டு பெரிசாய் சத்தம் போட்டுத் குழறவும் இப்ப குஞ்சன்வயலில இருந்து ஆணும் பெண்ணுமாய் கொஞ்சச் சனங்கள் இந்த ஸ்பொட்டைப் பார்த்து ஓடி வந்து கொண்டிருக்குதுகள்.

32. இவங்கள் ஆர்? இவன் என்ன கணக்கில இயக்கத்துப்

பொடியனில கை வைச்சவன்? எண்டு ரொக்கிராஜுக்கு ஒண்டுமா விளங்கயில்ல. சிவலைத் தடியனைப் பிடிச்சு சென்றிப் பொயின்ருக்கு கொண்டு போவமா எண்டும் யோசிச்சான். எதுக்கும் சாந்த வரட்டுக்கும். றக்ரர் நம்பர் தெரியும், வேலணை ஆக்களெண்டும் தெரியும். பிறகென்ன தேடிப்பிடிச்சுத் தூக்கலாம் எண்டு முடிவெடுத்தான்.

33. இந்த அல்லோலகல்லோலத்துக்குள்ள தான் ஓடிவந்து கொண்டிருக்கிற குஞ்சன் வயல் சனங்களுக்குள்ள ''டேய் கம்மாகோ சிக்காகோ'' எண்டு கத்திக் கொண்டு தன்ர தேப்பன்காரன் ஓடிவாறதை ரொக்கிராஜ் கவனிச்சான். கொரில்லா உயர்த்திப் பிடிச்சு சுழட்டுற கையில ஒரு பெரிய சுருள்வாள். அது காத்தக் கிழிக்கிற சத்தம் இஞ்ச கேக்குது.

34. இந்த ஊட்டுக்குள்ள கீழ விழுந்து கிடந்த தடியன் எழும்பி மோட்ட சைக்கிளைப் பார்த்து ஓட, வளர்ந்தவன் மோட்ட சைக்கிளை ஸ்ராட் பண்ணினான். சிவலைத் தடியன் பின்னால ஏறினவுடன மோட்ட சைக்கிள் றோட்டை விட்டு இறங்கி றோட்டுக்கும் கடலுக்கும் இடையால மேற்க முன்னாய், தரவைக்குள்ளால பறந்துது.

35. சிவலைத் தடியன் தன்னை வெட்டத்தான் ஒருத்தன் சுருள்வாளோட ஓடி வாறான் எண்டு நினைச்சிருப்பான்.

36. ஆனால் பப்பா தன்னைத் தான் வெட்ட ஓடி வாறார் எண்டு ரொக்கிராஜ் நினைச்சான். ஓடின மாதிரியும் இல்லாமல் ஆனால் வலு வீச்சாய் நடந்து போய் பணியக் கிடந்த சைக்கிளை எடுத்துக்கொண்டு ரொக்கிராஜும் ரவியனுமாய் சென்றிப் பொயின்ரைப் பார்த்துப் போனவை.

இரவு ஏழு மணி ஆயிற்றுது.

2. ரொக்கிராஜும் ரவியனும் றக்ரர்-மண்-சிவலைத் தடியன்-அடிபட்டது எண்டு விளக்கமாய் பொடியளுக்குச் சொல்ல



பொடியள் ''இதென்ன விளையாட்டு நீ ஏன் அவனை விட்டுப் போட்டு வந்தனி? ஆளைப் பிடிச்சுக் கொண்டு வந்திருக்க வேணும். அவன ஆடாக் கட்டி தோலா உரிச்சிருக்கலாம்'' எண்டு சொன்னாங்கள். தம்பா 'அவங்கள் இன்னும் இங்கினேக்கதான் நிக்கிறாங்களோ எண்டு தேடிக்கொண்டு வாறன்' எண்டு வெளிக்கிட்டான்.

3. ''அவங்கிட கதையைப் பார்த்தால் அவங்கள் காசியண்ணையின்ர பிறண்ட்ஸ் மாதிரித் தான் கதைக்கிறாங்கள். நாங்களா ஒண்டும் முற்றெடுக்கக் கூடாது. எதுக்கும் சாந்த அண்ண வரட்டுக்குமன். அவரட்டச் சொல்லி இதுக்கொரு அக்ஷன் எடுப்பம்'' எண்டு சொன்னான். இதைச் சொல்லயிக்க ரொக்கிராஜின்ர நெஞ்சில காசியைப் பற்றின மதிப்பில முதல் முதலா ஒரு குறை விழுகுது.

4. இந்தத் தருணம் பார்த்து வோக்கிடோக்கி கூப்பிடுது.

''ஹவானா நம்பர் லெவன், ஹவானா நம்பர் லெவன் சிரியா ஓவர்''

ரொக்கிராஜ் தான் வோக்கி டோக்கிய எடுத்துக் கதைச்சான் ''சொல்லுங்கோ அம்மான் ஓவர்''

''அங்க சஞ்சய் எண்டு ஆரும் இருக்கினமோ அம்மான்? ஓவர்''

''நான் கொரில்லா கதைக்கிறன் அண்ணே, என்ர இயக்கப் பெயர் தான் சஞ்சய் ஓவர்''

''அப்பிடியோ, சரி கொரில்லா நீயும் இண்டைக்கு உன்னோட இருந்த பொடியனும் உடன வெளிக்கிட்டு இஞ்ச பேஸுக்கு வாங்க ஓவர் அன் அவுட்.''

5. ஏதோ பிரச்சினை பெரிசாப் போகப் போகுது எண்டது மாதிரி ரொக்கிராஜுக்கு தெரிஞ்சுது. ஊத்தைச் சாந்த இன்னும் திரும்பி வரயில்ல. அவன் இல்லாத நேரத்தில இடம் வலம் தெரியாத பொடியளைத் தனிய சென்றிப்பொயின்ரில விட்டிட்டுப் போக அவனுக்கு மனம் வரயில்ல. ரவியனோ 'வா உடன பேஸுக்குப் போவம்' எண்டு நிண்டான். எட்டு மணியளவில ஊத்தைச் சாந்த வந்து சேர்ந்தான். வந்த உடன 'இன்னும் நீங்கள் பேஸுக்கு போகயில்லையா?' எண்டு கேட்டான். ''நீங்கள் வரமட்டுக்கும் பார்த்துக் கொண்டு நிண்டனாங்கள். இந்தா

வெளிக்கிட்டிட்டம். என்னண்ணே ஏதும் சிக்கலோ'' எண்டு ரவியன் ஊத்தைச் சாந்தயிட்டக் கேட்டான்.

6. ''சிக்கலோ? உங்களுக்கு விசயகுமார் அண்ணை ஆரெண்டு தெரியுமோ? நீங்கள் எப்ப வந்தனிங்கள் இயக்கத்துக்கு? எண்பத்தி மூண்டில தலைவரே நேர நிண்டு செய்த பொலிகண்டி அம்புஸில வைச்ச மைன்ஸ், விசயகுமார் அண்ணையின்ர லோர்த் பட்டறையில தான் கடைஞ்சது. அந்தக் காலத்திலயிருந்து எங்களுக்கு உதவி செய்யிற ஆள் அவர். பொலிஸ் பிரச்சினை, ஆமிப்பிரச்சினை எல்லாத்துக்கேயும் மற்றச் சனங்கள் பயந்து கொண்டிருந்த காலத்தில எங்கட சப்போர்ட்டராய் இருந்தவர். எனக் கொண்டும் தெரியாது. கெதியாய் பேஸுக்குப் போய் காசியண்ணையை சந்தியுங்கோ, பணிஸ்மென்ற் தந்தால் வாங்குங்கோ'' எண்டு ஊத்தைச் சாந்த சினந்தான்.

7. ஒண்டும் பறையாமல் ரொக்கிராஜும் ரவியனும் சைக்கிள எடுத்திச்சினம். ரொக்கிராஜ் சைக்கிளை ஓட ரவியன் முன்னுக்கு பாரில இருந்தான். வடக்கு ரோட்டால சைக்கிள் வேலணை முன்னாப் போகுது. ''என்ன கொரில்லா இப்ப என்ன நடக்கப் போகுது?'' எண்டு ரவியன் கேட்டான். ''என்ன எங்களில ஏதும் பிசகே? கிரினைட் அடிப்பம் எண்டு நீ கதைச்சது பிழை தான். அதுக்கு அடிக்க வந்தால் சும்மா விடுறதே. வா போய் நியாயத் தைக் கதைப்பம்'' எண்டான் ரொக்கிராஜ். ''ஓஷீலாவோட ரீமில இருந்திற்று இப்ப காசியனோட வேலை செய்யிறது கஸ்டமாய் இருக்கு. இவன் என்ன ஏதோ எங்களை சம்பளத்துக்கு வைச்சிருக்கிற வேலைக்காரர் மாதிரி எல்லோ வா எண்டுறான் வராத எண்டுறான், போ எண்டுறான், போகாத எண்டுறான், இரு எண்டுறான், எழும்பு எண்டுறான், நாட்டாமை நல்லாத்தான் செய்யிறான்'' எண்டு ரவியன் புலம்பினான்.

8. இவங்கிட சைக்கிள் அராலிச் சந்தியால திரும்ப எதிரில ஒரு வாகனம் வலு வேகமாய் வருகுது. வாகனத்தின்ர ஹெட்லைட் வெளிச்சத்தப் பார்த்தே 'நம்மிட வாகனம் தான் வருகுது' எண்டு சொன்னான் ரவியன். ரொக்கிராஜ் சைக்கிளை சிலோ பண்ணினான். வாகனம் இவங்களுக்கு பக்கத்தில உரசிக்கொண்டு நிண்டுது. றைவர் சீற்றில காசி தான் இருந்தான். ரெண்டு பேரையும் சைக்கிளத் தூக்கி வானில போட்டிட்டு வானுக்குள்ள ஏறச் சொன்னான்.



வானுக்குள்ள தேவா, டொமினிக், விஜி, வல்லி ஆக்கள் துவக்குகளோட இருந்தாங்கள்.

9. காசி வாகனத்த ஓடிக்கொண்டே பின்னால சடாரெண்டு ஒருக்கா திரும்பிப் பார்த்து ''டேய் கொரில்லா நீ என்ன பெரிய ரக்ஸோ?'' எண்டு கேட்டான். சைக்கிளில வரயிக்கயே மண் பிட்டியிலும், ரோட்டிலும் நடந்த கதைவெளிகளையும், அடி பாட்டையும் எப்படி சரியாய் காசிக்கு பிறசென்ற் பண்ணுறது எண்டதைப் பற்றி ரொக்கிராஜ் ஒரு பிளான் போட்டுக் கொண்டு தான் வந்தவன். அவன் வயைத் திறந்து மறுமொழி சொல்ல முதலே மெயின் ரோட்டுக் கரையில இருந்த ஒரு வீட்டுக்கு முன்னால வாகனத்தை நிப்பாட்டிப் போட்டு ரொக்கிராஜையும், ரவியனையும் காசி இறங்கச் சொன்னான்.

10. அது ஒரு பென்னம் பெரிய மாடி வீடு தான். வீட்டுக்கு முன்னால ஒரு மினிபஸ்ஸும், ஒரு காரும் ஒரு றக்ரரும் நிக்குது. வீட்டு போர்டிக்கோவில ஒரு பெற்றோல்மக்ஸ் எரியுது. அந்தப் வெளிச்சத்தில றக்ரரை பார்த்த உடனேயே இது விசயகுமாரின்ர வீடு தான் எண்டு மட்டுக் கட்டிற்றான். போர்டிக்கோவில கதிரை போட்டு விசயகுமாரும் இன்னும் மூண்டு பேரும் இருந்து கதைச்சுக் கொண்டிருந்தினம். காசி ரொக்கிராஜையும் ரவியனையும் கூட்டிக் கொண்டு நேரா விசயகுமாரிட்டப் போய்க் கேட்டான். ''அண்ணே இவங்கள் தானா உங்கிட தேகத்தில கை வைச்ச ஆக்கள்?'' விசயகுமார் கதிரையை விட்டு எழும்பி வந்து பக்கத்திலயிருந்த டோர்ச் லைட்ட எடுத்து ரொக்கிராஜின்ர மூஞ்சிக்கும் ரவியன்ர மூஞ்சிக்கும் லைட் அடிச்சுப் பார்த்தான். பெற்றோல்மக்ஸ் வெளிச்சமே நல்ல பவராத் தெரியுது. அதிலேயே அடையாளம் தெரியும். இவன் தேவையில்லாமல் மூஞ்சிக்கு டோர்ச் அடிச்சு நக்கல், நளினம் பண்ணுறானே எண்டு ரொக்கிராஜ் யோசிச்சான். விசயகுமார் திரும்பவும் போய் கதிரையில இருந்து கொண்டு வேற ஒரு கதிரையைக் காட்டி காசியை இருக்கச் சொன்னான். ரொக்கிராஜும் ரவியனும் நிண்டு கொண்டு தான் இருக்கினம். விசயகுமார் காசியைப் பார்த்துச் சிரிச்சுக் கொண்டே இவையள் தான் அந்த நெத்தலிப் பயில்வான்கள் எண்டான்.

11. ரவியனுக்கு கோவம் வந்திற்றுது.. ''என்ன நெத்தலிப் பயில்வான் எண்டு தேவையில்லாத கதைகள்'' எண்டு மெதுவாய்ச்

சொன்னான். காசி ஆவேசமாய் ''டேய் பொத்தடா வாயை'' எண்டு ரவியனைப் பார்த்துக் கத்தினவன். பிறகு ''ரெண்டு பேரும் செய்தது பிழையெண்டு அண்ணையிட்ட மன்னிப்புக் கேளுங்கோ, உங்க ளால இயக்கத்துக்கெல்லோ தலைகுனிவும் பரிசுகேடும்.'' ரொக்கி ராஜுக்கு சுள்ளெண்டு பத்திற்றுது. ''நாங்கள் ஏன் மன்னிப்பு கேக்க வேணும், அவையள் மண் ஏத்தினது முதல் குற்றம். கடலரிப்பு வராமல் மறிக்கிறதுக்காக...'' எண்டு ரொக்கிராஜ் முடிக்கயில்ல காசி பாய்ஞ்சு ரொக்கிராஜின்ர கன்னத்தில அடிச்சான். ''உனக்கு நான் இவற்ற றக்ரரை மறிக்கச் சொல்லிச் சொன்னனானோ? இஞ்ச நீ இயக்கம் நடத்துறியா? இல்லை நான் இயக்கம் நடத்துறனா? போய் ஏறுங்கடா வானில'' எண்டு காசி கத்தினான். அப்ப விசயகுமார் ''காசி அண்ணே, என்னால எதுவும் வந்ததா இருக்கக் கூடாது'' எண்டு ரெண்டு கையையும் உயர்த்திக் காட்டினான். இவர் பெரிய போஞ்சியோ பிலாத்து கை கழுவி விடுறேராம் எண்டு மனதுக்குள்ள நெறுமிக்கொண்டே ரொக்கிராஜ் வாகனத்தப் பார்த்து நடந்தான். இவனுக்குப் பின்னால காசி வாறான். ரொக்கிராஜுக்கு முன்னால நடந்து கொண்டிருந்த ரவியன் கண் மூடி கண் துறக்கிறதுக்குள்ள ஒரு மான் மாதிரிப் பாய்ஞ்சு அங்க நிண்ட மினிபஸ்ஸுக்குப் பின்னால மறைஞ்சான். காசி திடுக்கிட்டு 'டேய்' எண்டு சத்தம் போட்டு முடிக்கையில்ல மினிபஸ்ஸுக்கு அங்கால இருந்த மதிலுக்கு மேலால ஒரு உருவம் ஏறிப்பாய்ஞ்சது தெரிஞ்சுது. காசி★

★ காசி மறுபெயர் குட்டிராஜன் மறுபெயர் இளவழகன். 1980களின் முற்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மாணவர் தலைவர்களில் ஒருவர்.

இவர் இன்னொரு வகையிலும் அப்போது பல்கலைக்கழக வட்டாரத்தில் பிரபலமானவர். 1982இல் சிறிலங்காவில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர். ஜெயவர்த்தன (ஐக்கிய தேசியக் கட்சி) கொப்பேக்கடுவ (சிறிலங்கா சுதந்திரக் கட்சி) ரோகண விஜே வீர (மக்கள் விடுதலை முன்னணி) ஆகியோருடன் குமார் பொன்னம்பலமும் (தமிழ் காங்கிரஸ்) வேட்பாளராகப் போட்டியிட்டார். யாழ் பல்கலைக் கழகத்துக்கு அருகே நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் குமார் பொன்னம்பலம் 'சிங்கள ஆளுக்கு பயம் வர வேணும் சொல்லி தமிழ் ஆள் எல்லாம் ஒண்டுக்கு நிண்டு என்ட பேருக்கு வோட் போட்டு வேணும்' என்று உரையாற்றிக் கொண்டிருக்கையில் மேடையில் தாவி ஏறிய காசி (அப்போது இளவழகன்) குமார் பொன்னம்பலத்தின் கையிலிருந்த ஒலிவாங்கியைப் பறித்து 'நீங்க கொழும்பில ஜே. ஆரோட ரீவியில கை குடுத்து ரீ குடிக்கிறது. இங்க வந்து தமிழ் சொல்லி வோட் பொறுக்கிறது' என்று நையாண்டி செய்தார்.



ஓடிப் போய் மதிலால எட்டிப் பார்த்துப் போட்டு இடுப்பில இருந்த பிஸ்டலை உருவி ஒருக்கா இருட்டுக்குச் சுட்டான். வெடிச்சத்தம் கேட்டு வாகனத்துக்குள்ளயிருந்த நாலு பொடியளும் ஓடி வந்தாங்கள். வந்தவனில டொமினிக் தன்ர துவக்கால ரொக்கிராஜின்ர முதுகைத் தொட்டுக்கொண்டு போய் அவனை வாகனத்தில ஏத்த மற்றவையள் எல்லாருமாய் ரவியனைத் தேடிச்சினம். ரவியனைக் கடைசி மட்டும் ஒருத்தரும் கண்டு பிடிக்கயில்ல. ரவியன்ர இடுப்பில எப்பயும் ஒரு கிரினைட் இருக்கிறது ரொக்கிராஜுக்கு ஞாபகம் வந்துது. காசி திடீரெண்டு வலு வேகமாய் ஓடி வந்து ரொக்கிராஜின்ர கழுத்தில கிடந்த சயனைட் குப்பிய ஒத்தி அறுத்து தன்ர பொக்கற்றுக்குள்ள வைச்சுக் கொண்டான்.

ஒண்டுமில்லாத ஒரு பிரச்சினைக்கு இயக்கம் ஏன் தன்னை இப்பிடி அடைச்சுவைச்சு ஆய்க்கினைப் படுத்துது எண்டது ரொக்கிராஜுக்கு விளங்கயில்ல. ரொக்கிராஜை மூண்டு நாளாய் புளியங்கூடல் காம்பில மறிச்சு வைச்சிருக்கினம். ரவியன் எங்க ஓடிப் போனவன் சொல்லு? <<ஓஷீலா எங்கே?>> எண்டு இயக்கத்தையே கேள்விகேட்டு போஸ்டர் ஒட்டினது ஆர்? இது ரெண்டும் தான் கேள்வி. ரொக்கிராஜுக்கோ ரெண்டு கேள்விக்கும் விடை தெரியாது. ஆனால் ரொக்கிராஜுக்கு விடை தெரியுமாம். அவன் சரியான அமசடக்கு கள்ளனாம் எண்டு காசி சொன்னான்.

ரெண்டாம் நாள் நல்லா யோசிச்சுப் போட்டு ''இயக்கத்துக்காக வேணுமெண்டால் நான் விசயகுமாரிட்ட மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுறன்'' எண்டு ரொக்கிராஜ் காசிக்குச் சொன்னான். ''இந்த பயாஸ்கோப்பெல்லாம் இஞ்ச வேணாம். ரவியனைப் பிடிக்க மட்டுக்கும் உன்னை விட ஏலாது. அவன் சும்மா ஓடயில்ல, கிரினைட்டோட ஓடியிருக்கிறான். என்னடா உங்கிட திட்டம்? நீ தானே அந்த உறண்டலைக் கொணர்ந்து இயக்கத்தில சேர்த்தது?'' எண்டு கேட்டான் காசி.

2. ''அண்ணே அவன் நல்ல விசுவாசமான பொடியன் ஏதோ பயத்தில இப்பிடிச் செய்து போட்டான்.''

3. ''அது தான் என்ன பயம் எண்டு கேக்கிறன்? <<ஓஷீலா எங்கே>> எண்டு போஸ்டர் ஒட்டின பயமா? நீ தானே ஆர்டிஸ் மணியம், எழுதியிருப்பாய். அவன் ஒட்டினவன் என்ன? நீ ஓஷீலாவுக்கே அரசியல் படிப்பிச்ச ஆளெல்லோ...''

4. ரொக்கிராஜைப் பிடிச்சுக் கொண்டு வந்ததிலயிருந்து அவனும் தப்பியோடிருவான் எண்டு நினைச்சாக்கும் ரொக்கிராஜை இன்னொரு அடைபட்டிருக்கிற ஆளோட சேர்த்து விலங்கு போட்டு வைச்சிருக்கிறாங்கள்.

5. இரவு முழுவதும் விலங்கு பூட்டியிருக்கும். பகலில மட்டும் தான் அந்த விலங்கைக் கழட்டி விடுவாங்கள். அந்த இன்னொருத் தன்ர வலக் கையும் ரொக்கிராஜின்ர இடக்கையும் சேர்த்துப் பூட்டியிருந்தது. இரவில ஒண்டுக்கிருக்க, கக்கூசுக்கு ஆராவது ஓராள் போறதெண்டாலும் கூட ரெண்டு பேரும் சேர்ந்து தான் போக வேண்டியிருந்தது. ரொக்கிராஜுக்கு மனதுக்குள்ள வேறொரு திட்டம் வந்திச்சுது. அதுக்குப் பிறகு அவன் கொஞ்சம் நோமலாய் இருந்தான். நடக்கிறது நடக்கட்டுக்கும், எல்லாத்துக்கும் ஒரு வழியும் முடிவும் இருக்குத்தானே எண்டு மனசைத் தேத்தினான். அவனுக்கு உடனடியா ஒரு பேப்பரும் பேனையும் தேவையாய்க் கிடந்துது. ஆனால் அதைக் கேட்கவும் பயம். பொறுத்துக் கொண்டிருந்தான்.

6. ரொக்கிராஜோட சேர்த்து மாஞ்சு போடப்பட்டிருந்தவனை இயக்கத்துக்காரர் 'ஆறுமாதம்' எண்டு பேர் சொல்லிக் கூப்பிட்டிச் சினம். அவன் ஆறுமாதமாய் இஞ்ச அடைபட்டு இருக்கிறானாம். அவன் ரொக்கிராஜோட கதைக்கிறதுக்கு வலு ஆர்வமாய் இருக்குமாப் போல தெரியுது. ஆனால் ரொக்கிராஜ் தான் கள்ளன் காடனோட எல்லாம் தனக்கு என்ன கதை எண்டு போட்டு ஒண்டும் கதைக்காமல் இருந்தான். ஆறுமாதம் இரவு முழுக்க மூக்கை உறுஞ்சி உறுஞ்சி அழுதுகொண்டேயிருந்தான். ''டேய் மனுசரா படுக்க விடடா'' எண்டு சொல்லி ரொக்கிராஜ் அவனை இடக்கிடை வெருட்டுவான்.

7. மூண்டாவது நாள் இரவு நடுச்சாமம் இருக்கும்.



ரொக்கிராஜின்ர மண்டைக்குள் 'டிங்' எண்டு ஒரு மணிச்சத்தம் கேட்டுது. ரொக்கிராஜையும் இழுத்துக் கொண்டு ஆறுமாதம் துள்ளி எழும்பினான். ரொக்கிராஜின்ர கையை விலங்கு நெரிச்சு இழுத்துது. ஆறுமாதம் இவ்வளவு பொடிவில்லர் பலசாலியாய் இருப்பான் எண்டு ரொக்கிராஜ் நினைச்சிருக்கயில்ல. ஆறு மாதம் ஜன்னலைப் பார்த்து ஓடினான். ரொக்கிராஜும் பின்னாலேயே இழு பட்டுகொண்டு போனான். ஜன்னலுக்கு வெளியால ஹோலில காசியும் இன்னும் சில பொடியளும் மேசையில துவக்குகளோட இருந்தாங்கள். ஆறுமாதம் ஜன்னலுக்குளால பெலத்துச் சொல்லத் தொடங்கினான்.

8. என்ர பெயர் சுகுணராசா.

என்ர வயது முப்பது.

நான் செய்த குற்றங்கள்: கலாவைப் பற்றி வாசிகசாலை சுவரில கூடாமல் எழுதினது. கலாவின்ர அம்மாவோட படுத்தது. கலாவின்ர அம்மா களவெடுத்துத் தந்த கலாவின்ர தாலிக்கொடியை வித்தது. சொல்லி முடிஞ்சதும் ஒரு மெஷின் மாதிரி ஆறுமாதம் திரும்பி நடந்தான். மறுக்காவும் மணிச்சத்தம் கேட்டது. ஆறுமாதம் திரும்பியும் துடிச்சுப் பதைச்சு ஜன்னலுக்குப் பக்கத்தில வந்து நிண்டு 'என்ர பெயர் சுகுணராசா' எண்டு சொல்லத் தொடங்கவும் காசி ''சரி போடா'' எண்டு சொல்லிப் போட்டு ரொக்கிராஜைப் பார்த்து காசி ''கொரில்லா நீ நாளைக்கு உண்மையைச் சொல்லிப் போட வேணும்'' எண்டான். ஆறுமாதமும் ரொக்கிராஜும் திரும்பி வந்து படுக்கயிக்க ''இப்பிடித்தான் ஆறு மாதமாய் சொல்லிக் கொண்டிருக் கிறன்'' எண்டு தன்னாரவாரம் சொல்லி மூக்கை உறுஞ்சி ஆறுமாதம் அழுதான். ரொக்கிராஜுக்கு பார்க்க பெரிய பாவமாய்க் கிடந்துது.

9. அடுத்த நாள் பின்னேரம் ரவியன் யாழ்ப்பாண மெயின் காம்பில போய் சரண்டர் பண்ணியிற்றான் எண்டு காசி ரொக்கிராஜுக்குச் சொன்னான். பிறகு ''சரி கொரில்லா நீ இப்ப போகலாம். நீ இனி இயக்கத்துக்கு வேலை செய்ய வேணாம். ரக்ஸுகள் ரவுடியள் எல்லாம் எனக்குத் தேவையில்ல. இனி நீ எங்கேயாவது இயக்கம் கியக்கம் எண்டு கதைச்சது அறிஞ்சனோ கொண்டே டம் பண்ணிப் போடுவன்'' எண்டான்.

அனுப்புனர்:
சஞ்சய்
குஞ்சன் வயல்
அல்லைப்பிட்டி

பெறுனர்:
பொறுப்பாளர்
யாழ் மாவட்டத் தலைமை முகாம்.

3. அன்புள்ள அண்ணா அறிவது,

கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக தமிழீழ இலட்சியத் துடன் எனது குடும்பத்தாரை, படிப்பை ஒதுக்கித் தள்ளி இயக்கத்தில் இயங்கி வந்த என்னை தீவுப் பகுதி பொறுப்பாளர் இயக்கத் திலிருந்து இடை நிறுத்தியுள்ளார்.

4. உண்மையில் இதற்கான நீதியான காரணங்கள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எமது தாயகத்தை மீட்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் அதே ஈடுபாட்டுடன் எமது தாயகத்தின் உள் கட்டுமானப் பணிகளிலும் நாம் ஈடுபடவேண்டும் என்ற இயக்கக் கொள்கையின் காரணமாக தீவுப் பகுதியிலுள்ள அல்லைப்பிட்டிக் கிராமத்தில் மண் அள்ளும் வியாபாரிகளை நான் எப்போதும் தடுத்து வந்துள்ளேன். தீவுப் பகுதியின் முன்னைய பொறுப்பாளர் ஓஷீலாவும் எனது இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவாய் இருந்து வந்துள்ளார்.

5. இதற்கமைய அடாத்தாக மண் ஏற்றிச் சென்று கடலரிப்புக்கு காரணமாக இருப்பவர்களில் ஒருவரை நான் தடுத்து நிறுத்தியதன் பின்னாக அந்த மணல் ஏற்றிய வாகனத்தின் உரிமையாளரான



விசயகுமார் என்னையும், ரவியன் என்ற இயக்க உறுப்பினரையும் தாக்க வந்த போது நாங்கள் திருப்பித் தாக்கினோம்.

இது குறித்த நீதியான ஒரு விசாரணையை காசி மேற் கொள்ளாமல் எனக்கு அநீதி இழைத்து விட்டதாகவே கருதுகிறேன்.

6. இரண்டாவதாக <<ஓஷீலா எங்கே>> என்ற சுவரொட்டியை நான் எழுதி ஒட்டியதாக என்மீது ஒரு அபாண்டமான சந்தேகம் காசியால் எழுப்பப்பட்டுள்ளது. ஓஷீலா என்ன ஆனார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஓஷீலா இயக்கத்திலிருந்து விலகியிருந் தால் எமது தமீழீழக் கனவு திரண்டு வரும் போது தாழியை உடைத்த துரோகிகளில் அவரும் ஒருவர் என்பதே எனது கருத்து.

7. எனக்கு எனது தந்தையால் ஏற்பட்ட - ஏற்பட்டுக் கொண்டிருக்கும் - ஏற்படப்போகும் பிரச்சனைகள் காரணத்தால் நான் எப்போதுமே எனது ஊரில் வேலை செய்ய விரும்பியதில்லை. பல தடவைகள் என்னை வேறு பிரதேசங்களுக்கு அனுப்பும்படி ஓஷீலாவிடமும், காசியிடமும் கேட்டு வந்திருக்கிறேன். இதை அவர்கள் இருவருமே கவனத்தில் எடுக்கவில்லை. இப்போது பொறுப்பாளர் காசியை முன்னிட்டு நான் தீவுப்பகுதியிலேயே வேலை செய்ய விரும்பவில்லை.

நான் எப்போதுமே எமது இயக்க விதிகளுக்கு ஒழுகி வருகிறேன். ரவியன் தப்பியோடியதற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை. தயவு செய்து நீங்கள் இவை எல்லாவற்றையும் குறித்து ஒரு நீதி விசாரணை நடத்தும் போது என்னைக் குற்றமற்றவ னாகவே காண்பீர்கள். எவ்வளவு விரைவாக இதைச் செய்ய முடியுமோ, செய்து என்னை மீண்டும் இயக்கத்தில் இணைத்து மன்னார் பிரதேசத்துக்கு என்னை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். என் பிறப்பும் இந்த மண்ணில் தான், இறப்பும் இந்த மண்ணுக்காகத் தான் என்பதில் நான் உறுதியாகவுள்ளேன்.

8. தங்கள் உண்மையுள்ள
சஞ்சய்

விடியப்புறம் திருந்தாதி மணி அடிக்கிற நேரத்தில றொக்கிராஜ் வடக்கு றோட் அந்தோனியார் சுருவத்து படிக்கட்டில மைமல் இருட்டுக்குள்ள குந்திக்கொண்டிருந்தான்.

2. மூண்டு நாலு மணித்தியாலமா அப்பிடியே கடலை முறைச்சுப் பார்த்துக்கொண்டேயிருந்தான். இயக்கத்திலயிருந்து றொக்கிராஜை விலத்தின இந்த ஒரு கிழமையாய் றொக்கிராஜ் வெள்ளணக் காலம்பிற இவ்விடத்தில வந்து இருந்தா ஒரு எட்டு ஒம்பது மணிக்கு எழும்பி வீட்டுப்பக்கம் போவான். கொரில்லா வீட்டிலை இல்லையெண்டால் வீட்டுக்குள்ள போய் ஏதேனும் தீன் கிடந்தால் திண்டுபோட்டு, பிறகு தெற்கு கடற்கரைப் பக்கமாய்ப் போய் தாளங்காட்டுக்கயும் ஈச்சங்காட்டுக்கயுமாய் சுத்தித் திரிவான். வயிறு பசிச்சா வீட்டுக்கு வருவான், சாப்பிட்டுப் போட்டு பிறகும் இருட்ட மட்டுக்கும் கடற்கரைப் பக்கமாய் உலாத்து.

3. றொக்கிராஜுக்கு குஞ்சன் வயல் சனங்களின்ர முகத்தில முழிக்க உண்மையிலேயே பெரிய வெக்கமாய்க் கிடந்துது. இவன் இயக்கத்திலயிருந்து காசு அடிச்சதால தான் இவனுக்கு பணிஸ் மென்ற் குடுத்து இயக்கம் விலத்தி வைச்சிருக்கு எண்டு சனங்கள் பறைஞ்சவை. ஒண்டு ரெண்டு சனம் றொக்கிராஜிட்ட மூஞ்சிக்கு நேர இதப் பற்றி விசாரிச்சுதுகள். றொக்கிராஜ் இதை விசாரிச்சுப் பார்த்த மட்டில சனத்துக்கு இந்தக் கதையை ஊத்த சாந்த தான் சொல்லி யிருக்கிறான் எண்டதை அறிஞ்சு கொண்டான்.

4. இதை அறிஞ்சதும் றொக்கிராஜுக்கு ரெத்தமெல்லாம் கொதிக்குது. 'சரி எனக்கு இந்த ஊத்தையோட என்ன கதை? மேலிடத்துக்கு வலு கிளியரா கடிதம் குடுத்திருக்கிறன். என்னை விசாரிக்கக் கூப்பிடுவினம் தானே, அப்ப ஆரில சரி ஆரில பிழை எண்டதை பார்த்துக் கொள்ளுவம்' எண்டு தனக்குத் தானே சொல்லி மனதைத் தேற்றிக்கொண்டான்.

5. இதுக்குள்ள ஒரு நாள் ஜெயசீலி றொக்கிராஜிட்ட வந்து றொக்கிராஜ் இயக்கத்திற்ற அடிச்ச காசு எங்க? அதைத் தந்தால் றொக்கிராஜையும் தான் சவூதிக்கு கூட்டிக் கொண்டு போறதாச் சொல்ல அண்டைக்குத் தான் முதன் முதலா றொக்கிராஜ் ஜெயசீலியை அவளே, இவளே, வேசை, தாசி எண்டு மரியாதை இல்லாமல் நேருக்கு நேராய் ஏசினான்.

6. இதில இன்னொரு புதினம் என்னவெண்டால் றொக்கி ராஜை இயக்கம் விலத்திவிட்ட நாள் தொட்டு கொரில்லா றொக்கிராஜோட ஒரு சண்டைக்கோ, கதைவெளிப்படவோ போற தில்ல. றொக்கிராஜ் கொட்டிலுக்குள்ள படுத்திருந்தால் கொரில்லா கொட்டிலுக்குள்ளேயே வரமாட்டான். இதின்ர கிளைமாக்ஸாய் ரெண்டு நாளைக்கு முன்னம் ரவுனுக்கு போயிற்று வந்த கொரில்லா றொக்கிராஜுக்காக ஒரு சோடி களுசானும் சேர்ட்டும் வாங்கிக் கொண்டு வந்து செனோவாவிட்டக் குடுத்தான். ''எங்கேயோ ஆரையோ சுத்துமாத்துப் பண்ணி கண்ணைப் பொத்தியடிச்ச காசில வேண்டின உடுப்பை நான் தொடவும் மாட்டன்'' எண்டு றொக்கிராஜ் தாய்க்காரியிட்ட சொல்லிப் போட்டான். பிறகும் றொக்கிராஜ் கிழிஞ்ச சாரத்தோடும் சேர்ட்டோடும் திரியிறதைக் கண்டுபோட்டு கொரில்லா செனோவாவிட்ட விசாரிக்க அவள் ஏன் பிரச்சினையை எண்டு போட்டு ''அவன் அதை நத்தாருக்கு போடப் போறானாம்'' எண்டு சொல்லவும் ''நத்தாருக்கும் நான் ஒரு சோடி உடுப்பு வாங்கிக் குடுப்பன் தானே'' எண்டான் கொரில்லா.

7. 'உடுப்பு வாங்கித் தாறீரோ உடுப்பு, கெதியண என்னை மெயின் காம்பிலயிருந்து கூப்பிட்டு விசாரிப்பினம். அதுக்குப் பிறகு குஞ்சன்வயல் பக்கமும் வரமாட்டன். உம்மிட முகத்திலும் முழிக்க மாட்டன். அப்பிடியே மன்னார், மட்டக்கிளப்பு பக்கமாய் பீல்டுக் குப் போய் அடிபட்டுச் சாவன். அப்ப என்ர பிரேதம் இஞ்ச வந்தால் அதுக்குப் போடும் உம்மிட உடுப்பை' எண்டு றொக்கிராஜ் இப்பவும் தேப்பனை மனதுக்குள்ள திட்டிக்கொண்டு தானிருக் கிறான்.

8. ஒண்டு ரெண்டு குஞ்சன்வயல் சனங்கள் கடக்கரையி லயிருந்து மீன் பறிகளோட றோட்டை குறோஸ் பண்ணுதுகள். அந்த நேரம் பார்த்து வலு வேகமாய் ஒரு வாகனம் வேலணைப் பக்கமிருந்து வருகுது. இந்த நேரத்தில வாறதெண்டால் இது இயக்கத்தின்ர வாகனமாய்த் தான் இருக்க வேணும் எண்டு

யோசிச்சுக் கொண்டு ரொக்கிராஜ் சுருவத்தின்ர படிக்கட்டிலயிருந்து எழும்பி நிக்கவும் வந்த வான் அவனுக்குப் பக்கத்தில ஒரு சடன் பிரேக் அடிக்கவும் சரியாய் இருந்தது.

9. வந்து நிண்ட வானுக்குள்ளயிருந்து காசி தான் முதலில குதிச்சான். அவனுக்குப் பின்னால ஊத்தைச் சாந்தவும் இன்னும் மூண்டு பொடியளும் இறங்கினாங்கள். பொடியளின்ர கையில துவக்குகள். அவங்கள ரொக்கிராஜ் இதுவரை காணேயில்ல. புதுப் பொடியள்.

10. காசி கிட்ட வந்து ரொக்கிராஜை மேலயும் கீழயுமா ஒரு பார்வை பார்த்துப் போட்டு ''கொரில்லா வானில ஏறு'' எண்டான். 'அது தான் இவையோட எல்லாம் முடிஞ்சு போய்த்தானே மெயினுக்கு கடிதம் குடுத்திருக்கிறன், பிறகேன் என்னைத் திரும்பவும் கூப்பிடுகினம்' எண்டு மனதுக்குள்ள சினந்து கொண்டே ''மெயினிலயிருந்து ஏதாவது மெசேஜ் வந்ததோ?'' எண்டு கேட்டுப் போட்டு ரொக்கிராஜ் திரும்பவும் சுருவத்தின்ர படிக்கட்டில குந்திக்கொண்டான்.

11. சடாரெண்டு காசி குனிஞ்சு ரொக்கிராஜின்ர சேர்ட்டை இடக்கையால ஒத்திப் பிடிச்சு ரொக்கிராஜை இழுத்துக் கொண்டு வலக்கையால தன்ர இடுப்பிலயிருந்து பிஸ்டலை உருவியெடுத்து பிஸ்டல் பிடியால ரொக்கிராஜின்ர உச்சந்தலையில ஓங்கி அடிச்சான்.

12. ரொக்கிராஜ் கிறுகிறுத்துப் போனான். அவன்ர முகத்துல ரெத்தம் ஒரு கோடாய் வழியுது. ''புண்டையாண்டி ஏறடா வானில'' எண்டு பிஸ்டலை ரொக்கிராஜின்ர நெத்தியில வைச்சுக் கொண்டு காசி கத்தினான். ரொக்கிராஜ் ஒண்டும் பறையாமலுக்கு வானில ஏறி சீற்றில இருந்தான். பின்னாலேயே ஏறின காசி சீற்றில இருந்து ரொக்கிராஜை உதைஞ்சு கீழ விழுத்தினான். ரொக்கிராஜ் வானின்ர மூலைக்குள்ள தலையையும் பொத்திப் பிடிச்சுக் கொண்டு கடும் யோசனையில இருந்தான். அவனுக்கு பெரிய அவமானமாய்க் கிடந்துது. 'எதுக்கு என்னை இப்ப இவங்கள் தூக்கிக் கொண்டு போறாங்கள், எண்டு யோசிச்சு யோசிச்சுப் பார்த்தான். அவனுக்கு ஒண்டுமா பிடிபடயில்லை.



13. வாகனம் புளியங்கூடல் சந்தி காம்பிற்கு தான் போகுது எண்டு ரொக்கிராஜ் நினைச்சான். ஆனால் இறங்கின பிறகு தான் தெரிஞ்சுது இது வேற வீடு. ரொக்கிராஜ் இயக்கத்தில இல்லாத இந்த ஒரு கிழமைக்குள்ள இயக்கம் ஒரு புது வீடு புடிச்சிருக்கா இல்லாட்டி ரொக்கிராஜுக்குத் தெரியாமலேயே இந்த வீட்டை இயக்கம் வைச்சிருக்கா எண்டது அவனுக்குத் தெரியேல்ல.

14. அந்த வீட்டு விறாந்தையில ரெண்டு பொடியள் துவக்குகளோடும் வோக்கிடோக்கியோடும் இருந்தாங்கள். அவங்களும் ரொக்கிராஜுக்குப் புதுப் பொடியள். காசி ரொக்கிராஜையும் ஊத்தை சாந்தவையும் ஒரு பெரிய அறைக்குள்ள கூட்டிக் கொண்டு போனான்.

15. அந்த அறைக்குள்ள போனதும் முதல் காரியமா காசி வாசலில நிண்ட ஒரு பொடியனைப் பார்த்து ''கொஞ்சம் கோப்பித் தூள் கொண்டு வா'' எண்டு ஓடர் போட்டான்.

16. கோப்பித்தூள் வந்ததும் காசியே ரொக்கிராஜின்ர தலையை ஆராய்ஞ்சு காயத்தைக் கண்டு பிடிச்சு காயத்துக்கு கோப்பித்தூள் போட்டான். மூலையில கிடந்த ஒரு சாரத்தை எடுத்து ''இந்தா கொரில்லா முகத்தை துடைச்சுக்கொள்'' எண்டான். ரொக்கிராஜ் சாரத்தை வேண்டி முகத்தினை துடைச்சான். அவனுக்கு இப்ப சாடையா தலை சுத்துமாப் போல கிடந்துது.

17. பிறகு ரொக்கிராஜின்ர கண்ணை உத்துப் பார்த்துக் கொண்டே காசி கேட்டான் ''சிலிண்டரை எங்க வைச்சிருக்கிறாய்?''

18. ரொக்கிராஜ் கண்ணைச் சுருக்கிக் கொண்டு கேட்டான், ''எந்த சிலிண்டர்?''

19. அவ்வளவு தான். காசி சடார் படாரெண்டு ரொக்கிராஜின்ர கன்னம் கன்னமாய் அடிச்சான். ரொக்கிராஜை கீழ விழுத்தி காலால போட்டு மிதிச்சான். ''என்னடா இயக்கத்தோட விளையாடுறியோ'' எண்டு கேட்டுப் போட்டு, காசி வாசலில காவலுக்கு துவக்கோட நிண்ட பொடியனைப் பார்த்து 'டேய் ஒரு தடி முறிச்சுக் கொண்டு வா' எண்டு சொல்லவும் அந்தப் பொடியன் ஓடிப்போய் ஒரு பெரிய பொல்லாங்கட்டையை எங்கேயோ தேடிப் பிடிச்சு எடுத்துக் கொண்டு ஓடி வந்தான். அந்தப் பொல்லின்ர, கனத்துக்கு அதால

ஒரு அடி அடிச்சாலே ஆள் குளோஸ். இதைக் கவனிச்சுப்போட்டு ஊத்தை சாந்த மெள்ள வெளியில போய் அந்தப் பொடியனிட்ட இருந்து பொல்லை வாங்கி தூர எறிஞ்சு போட்டு திரும்பவும் அறைக்குள்ள வந்து கண்ணை மூடிக்கொண்டும் தலையை ரெண்டு கையால பொத்திப் பிடிச்சுக் கொண்டும் நிலத்தில குந்தியிருந்த ரொக்கிராஜைப் பார்த்து, ''ஏன் கொரில்லா வீணா அடி வாங்கிச் சாகிறாய்! எங்க சிலிண்டர்? எண்டு சொல்லிப்போடு'' எண்டான்.

20. ''எந்த சிலிண்டர் அண்ணை? என்னெண்டு விளக்கமா சொல்லுங்கோவன்'' எண்டு ரொக்கிராஜ் கேட்டான். அவன் குரல் இப்ப சிணுங்குமாப் போல இருக்குது. அதில பயம் இருக்குது. ஆனால் ஒரு கோபமும் வரப்பாக்குது.

21. ''எந்த சிலிண்டரோ'' கேட்டுக் கொண்டே காசி வெளிய ரொக்கிராஜுக்கு அடிக்க ஆயுதம் தேடி ஓடினான்.

22. ''கொரில்லா உள்ளதைச் சொல்லிப்போடு. காசியண்ண ஒரு புகை விட்டால் ஒரு கொலை செய்வேர் எண்டதை நீயும் கேள்விப்பட்டிருப்பாய் தானே'' எண்டு வெருட்டினான் ஊத்தை சாந்த.

23. இப்ப காசி கையில ஒரு பச்சை பனை மட்டையோட வந்தான். ''டேய் திரும்பி சுவரப் பார்த்துக் கொண்டு நில்லு. கையை மேலே தூக்கு'' எண்டு அவன் சொல்ல ரொக்கிராஜ் சொண்டை பல்லால கடிச்சுக் கொண்டு சுவர்ப்பக்கமாத் திரும்பி கை ரெண்டையும் மேல தூக்கினான். 'அந்தோனியாரே' எண்ட கூவல் வயித்திலயிருந்து அவன்ர தொண்டை மட்டும் வந்து நிண்டுது.

24. ரொக்கிராஜின் முதுகுல பச்சை மட்டை அடி சக்கு சக்கு எண்டு விழுகுது. அவன் முதுகில வரி வரியாய் ரெத்தம் துளிர்க்குது. அவன்ர கால் நிலத்தில நிக்க ஏலாமலுக்கு உலாஞ்சுது. ''ஐயோ என்ர அண்ணே அடிக்காதேயுங்கோ'' எண்டு குழறிக் கொண்டே திரும்பி காசியின்ர கையிலிருந்த பனை மட்டையைப் புடிச்சுக் கொண்டான். ரொக்கிராஜின்ர கண் ரெண்டிலயும் தண்ணியா ஓடுது. காசி பனை மட்டையை எறிஞ்சு போட்டு மூச்சு வாங்கினான்.

25. சென்றிப்பொயின்றில தாட்டு வைச்சிருந்த மூண்டு சிலிண்டரில நடுவாய் இருந்த சிலிண்டரை ராத்திரி நீ அறுத்துக்



கொண்டு போயிருக்கிறாய். நீ அதை எங்க ஒளிச்சு வைச்சிருந்தாலும் கண்டு பிடிச்சுப் போடுவன். நானாக் கண்டுபிடிச்சனோ மகனே உன்ன துரோகி எண்டு போர்ட் எழுதிக் கழுத்தில கட்டிப்போட்டு சந்தியில சனத்துக்கு முன்னால வைச்சு மண்டையில போடுவன். நீயா உண்மையை ஒத்துக்கொண்டாயெண்டால் எக்ஸ்கியூஸ் இருக்கு... உள்ளதைச் சொல்லிப் போடு....''

26. இதைக்கேட்டதும் ரொக்கிராஜுக்கு நெஞ்சுத் தண்ணி வத்திப் போச்சுது. ''அண்ணே உண்மையைச் சொல்லுறன் தலைவர் சத்தியமா நான் இந்தக் காரியத்தைச் செய்யேல்ல. நான் இயக்கத் துக்கு இப்பிடியொரு துரோகம் செய்வனா? நீங்கள் என்னிலேயா ஐமிச்சப்படுறீங்கள்?''. இதைச் சொல்லி முடிக்கயிக்க ரொக்கிராஜ் தலையைச் சுத்திக் கொண்டே சொன்னான். பிறகு அப்பிடியே மூலையில இருந்து சுவரோட சாய்ஞ்சான்.

27. ''அப்ப ராத்திரி எங்க போயிற்று வந்தனி? இந்தா ராத்திரி ஊத்தை உன்னைக் கண்டிருக்கிறான்.''

28. ''நான் சூளுக்குப் போயிற்று வரயிக்க தான் சாந்த அண்ண என்னைக் கண்டவர்.''

29. ''ஆரோட சூளுக்குப் போனனீ அதைச் சொல்லன்'' எண்டான் ஊத்தை சாந்த.''

30. ''குருசுவோட.''

31. காசி பாய்ஞ்சு ரொக்கிராஜின்ர தலையைப் பிடிச்சு சுவரோட அடிச்சான். ''ஈ.பி.ஆர்.எல்.எவ் வோட உனக்கென்னடா சேருமதி?''

32. ரொக்கிராஜ் ஒருக்கா ஊத்தை சாந்தவைப் பார்த்தான். அந்தப் பார்வை 'தகடு குடுத்தது தான் குடுத்தாய், அதை ஒழுங்காக் குடுத்தியா' எண்டது மாதிரிக் கிடந்துது. பிறகு ரொக்கி ராஜ் காசியைப் பார்த்து மெதுவாய் சொன்னான். ''அவன் ஈ.பி.ஆர்.எல்.எவ் இல்லை. சும்மா மூண்டு நாள் தான் அவங்கிட காம்பில இருந்தவன். தாய்க்காரி போய் அழுது அவனை வீட்ட கூட்டிக்கொண்டு போயிற்றா. இப்ப அவனுக்கு ஒரு தொடர்பும் இல்ல.

33. ''டேய் நிப்பாட்டு... எனக்குத் தெரியும் ஆர் ஆருக்கு ஸ்பை

பார்க்கிறாங்கள் எண்டு'' கொஞ்சம் யோசிச்சுப் போட்டு காசி சொன்னான். ''இஞ்ச வா கொரில்லா நீ உண்மையைச் சொன்னால் உன்னை நான் திரும்பவும் இயக்கத்தில சேர்த்துக் கொள்ளுறன். இல்ல உனக்கு வெளிநாடு போக விருப்பமெண்டாலும் அனுப்பி விடுறன்... எங்க சிலிண்டர்?''

*34.* ரொக்கிராஜுவும் செய்யாத சத்தியமெல்லாம் செய்து தான் உண்மையைத் தான் சொல்லுறதாயும் தனக்கு சிலிண்டரைப் பத்தி எதுவும் தெரியாதெண்டும் சொன்னான்.

*35.* கடைசியாய் ஊத்தை சாந்த ''கொரில்லா இதைச் செய்யிறதுக்கு உன்னை விட வேற ஆள் குஞ்சன் வயலுக்க இல்ல. உன்னைக் கும்பிட்டுக் கேட்கிறன் உண்மையைச் சொல்லிப்போடு'' எண்டு ரொக்கிராஜைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டான்.

*36.* ரொக்கிராஜுவும் ரெண்டு கையெடுத்து ஊத்தை சாந்தவைப் பார்த்துக் கும்பிட்டு ''அண்ண நானும் கும்பிட்டுச் சொல்லுறன் நான் சிலிண்டர எடுக்கயில்ல'' எண்டான்.

*37.* பிறகு ரொக்கிராஜை அந்த அறையுக்குள்ளேயே வைச்சுப் பூட்டிப் போட்டு காசியும் ஊத்த சாந்தவும் போயிட்டாங்கள். பாத்ரூம் போகவேணும் எண்டால் கதவைத் தட்டினால் வாசலில காவலுக்கு இருக்கிற பொடியங்கள் திறந்து விடுவாங்கள். ரொக்கிராஜுக்கு அரைமணித்தியாலத்துக்கு ஒருக்கா மூத்திரம் வந்து கொண்டிருந்தது.

*38.* ரொக்கிராஜுக்கு உடம்பெல்லாம் இறைச்சியாய் நோகுது. அந்த நோவும் வருத்தமும் கூட அவனுக்கு பெரிசாத் தெரியேல்ல. 'என்னை இவங்கள் மண்டையில போட்டாலும் எனக்கு அது பெரிய கவலை இல்லை. சாகத் துணிஞ்சு தானே நெஞ்சில குப்பி கட்டினான். ஆனால் கள்ளப் பட்டத்தோட செத்துப் போவனோ அந்தோனியாரே' எண்டு யோசிச்சுக்கொண்டே அந்த அறைக்குள்ள கிடந்தான்.

*39.* மத்தியானச் சாப்பாடு வந்துது. மீசை கூட சரிவர அரும்பாத ஒரு பொடியன் சாப்பாட்டை கொண்டு வந்து வைச்சுபோட்டு ''டேய் சிலிண்டர் கள்ளா, இது தான் உன்ர கடைசிச் சாப்பாடு சாப்பிட்டுப் போட்டு சாகிறதுக்கு றெடியாகு'' எண்டு சொல்லிப் போட்டு கதவைச் சாத்தி பூட்டிப் போட்டுப் போனான்.



*40.* ரொக்கிராஜ் சோத்தைக் குழைச்சுக்கொண்டே 'நான் இப்பிடி எத்தினை பேரை வெருட்டியிருப்பன். இப்ப இந்தப் பால்குடி என்னை வெருட்டப்பார்க்குது' எண்டு தலையை தலையை ஆட்டினான்.

*41.* ரொக்கிராஜை வைச்சுப் பூட்டியிருந்த அறைக்குப் பக்கத்து அறையிலும் ஆரையோ அடைச்சு வைச்சு அடிச்சு நொருக்கிற சத்தம் ரொக்கிராஜுக்கு கேட்டுக்கொண்டேயிருந்துது.

*42.* ஒவ்வொரு நாள் இரவிலும் ரொக்கிராஜை இயக்கம் விசாரிச்சுது. இந்தா சுடப்போறம்... இந்தா வெட்டித் தாக்கப் போறம்... இந்தா பச்சை வள்ளத்தில கொண்டுபோய் டம் பண்ணப் போறம்... உண்மையைச் சொல்லிப்போடு எண்டு ஒரே வெருட்டும் அடி உதையும்தான். ரொக்கிராஜின்ர கால் ரெண்டும் பொது பொதுவெண்டு வீங்கிப் போச்சு. இப்ப அவன் நடக்கவே கஸ்ரப் பட்டான்.

*43.* நாலாம் நாளிலயிருந்து அடி ஆய்க்கினைகள் கொஞ்சம் குறைஞ்சுது. அறையைப் பகலில திறந்து விட்டாங்கள். ரொக்கிராஜ் விரும்பினால் வெளி விறாந்தையில வந்து கொஞ்ச நேரம் காலில காத்துப்பட இருக்கலாம் எண்டு இயக்கம் சொல்லிச்சுது. ரேடியோவும் கேட்கலாம்.

*44.* விறாந்தைக்கு ரேடியோ கேட்க வந்த ரொக்கிராஜ் விறாந்தையிலயிருந்து ரேடியோவில பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்த குருசுவைக் கண்டான். சென்ரிக்கு நிண்ட பொடியள் கவனிக்காத நேரத்தில குருசுவும் ரொக்கிராஜுவும் மெள்ளமா கதைச்சுப் பேசிச்சினம்.

*45.* தன்ர பக்கத்து அறையில கேட்ட அழுகைச் சத்தம் குருசுவின்ர தான் எண்டு ரொக்கிராஜ் தெரிஞ்சு கொண்டான். ரொக்கிராஜைப் பிடிச்ச அண்டே குருசுவையும் இயக்கம் அவன்ர வீட்டில வைச்சு அரஸ்ட் பண்ணியிருக்கு.

*46.* ''கொரில்லா உன்னால தான் நானும் வீணாய் பிடிபட்டு அடி வாங்குறன். சுவறா ரெண்டு பேரையும் மண்டையில போடப் போறங்கள் நீ சிலிண்டரைக் குடுத்துப் போடு'' எண்டு குருசு ரொக்கிராஜோட அழத்தொடங்கியிற்றான்.

*47.* ''குருசு நீ என்ன விசர்க் கதை பறையிறாய்? அண்டைக்கு

இரவு நான் உன்னோட சூளுக்கு வந்திற்று உன்னோட உன்ர வீட்ட வந்து தானே முன் மாலுக்குள்ள படுத்துக் கிடந்தனான்...''

48. ''விடிய முன்னம் எழும்பிப் போய் நீ சிலிண்டரை அறுத்துப் போட்டாய்'' எண்டு குருசு கண்ணைக் கசக்கினான்.

49. ரொக்கிராஜுக்கு அடக்கி வைச்ச ஆத்திரமெல்லாம் நொதிச்சுக்கொண்டு வர பல்லை நெறுமிக்கொண்டு ரகசியமான குரலில ''டேய் உன்னைப் போல நான் கொம்மாவின்ர சீலைத் தலைப்பைப் பிடிச்சுக் கொண்டு இயக்கத்தை விட்டுப் போட்டு ஓடி வந்த ஆளில்லைக் கண்டுகொள். ஆமிக்கு வைச்ச சிலிண்டரை எடுத்தால் இயக்கத்துக்கு எவ்வளவு பிரச்சினை வரும், சனத்துக்கு எவ்வளவு பிரச்சினை வரும் எண்டு எனக்குத் தெரியும்'' எண்டு சொன்னான்.

50. ரொக்கிராஜ் சிலோன் ரேடியோவின்ர 'நாலு நேரச் செய்தி', 'செய்திச்சுருக்கம்', 'செய்தியின் பின்னணியில்' எல்லாத் தையும் வலு கவனமாய் உத்துக் கேட்டான். 'மண்டைதீவு மினி முகாம் அருகே பயங்கரவாதிகளால் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி ஒன்று பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டது' எண்டு ஒரு செய்திய ரேடியோ சொன்னாலும் சொல்லும் எண்டு எதிர்பார்த்தான். பிறகு 'ஆமி வந்து அறுத்துக் கொண்டு போக மட்டுக்கும் சென்ரியிலயிருந்த செம்மலியள் என்ன வெள்ளியோ பார்த்துக் கொண்டிருந்ததுகள்' எண்டு தனக்குள்ள சினந்தான்.

51. பிறகு 'இது உண்மையில சிலிண்டர் களவு போகயில்ல. நான் மெயினுக்கு கடிதம் குடுத்ததால காசியண்ண தான் நான் அவரை மேவி நடந்துபோட்டன் எண்ட கோபத்தில சிலிண்டரச் சாட்டா வைச்சு என்னைப் பிடிச்சுக்கொண்டு வந்து வைச்சு சாத்துறாரோ?' எண்டும் யோசிச்சான். 'பின்ன குருசு என்ன பாவம் செய்தவன்? என்ர லெற்றரைப் பற்றி மெயின் இன்னும் ஏன் ஒரு அக்ஷனும் எடுக்கயில்ல எண்டு அவனட்ட கன கேள்வியள் இருந்துது.

52. ரொக்கிராஜ் பிடிபட்ட ஆறாவது நாள் ஜெயசீலி இயக்கத்திட்ட பேர்மிஷன் எடுத்து ரொக்கிராஜை வந்து பார்த்துக் கொண்டு போனாள். அடுத்த முறை வரேயிக்க ஒரு செபமாலையும், புனித அந்தோனியார் தோத்திரப் புத்தகமும் கொண்டு வரச் சொல்லி ரொக்கிராஜ் சொல்லிவிட்டான்.

53. ஆனால் செபமாலையும் புத்தகமும் வாறதுக்கு முன்னமே மெயினிலயிருந்து ஆள் வந்துது. மெயின் ஆளின்ர மேசைக்கு முன்னால ரொக்கிராஜையும் குருசுவையும் கூட்டிக்கொண்டு போய் நிப்பாட்டிச்சினம்.

54. குருசுவைக் கண்ட மாத்திரத்தில மெயின் ஆள் கதிரையைப் பின்னுக்கு தள்ளிப்போட்டு அவக்கெண்டு எழும்பி ''டேய் ஈப்பி'' எண்டு உறுக்க குருசு வயித்தைப் பொத்திக் கொண்டு அழத் தொடங்கியிற்றான்.

55. மெயின் ஆள் பொத்திப் பிடிச்சிருந்த தன்ர கையை விரிச்சு ரொக்கிராஜுக்கும் குருசுவுக்கும் காட்டினான். மெயின் ஆளின்ர உள்ளங் கையில ரெண்டு தோட்டாக்கள் உருண்டுது. ரெண்டு பேரையும் நிலத்தில சம்மணம் கொட்டி இருக்கச் சொன்னான். ரொக்கிராஜும் குருசுவும் ஆளை ஆள் பார்த்துக்கொண்டு நிலத்தில சம்மணம் கொட்டி இருந்திச்சினம்.

56. மெயின் ஆள் மேசையிலயிருந்த ரெண்டு கோழி புறியாணி பார்சல்களை எடுத்து ''சாப்பிடுங்கோ'' எண்டு சொல்லிக் குடுத்தான். ரொக்கிராஜும் குருசுவும் பார்சலைப் பிரிச்சு சாப்பிடத் தொடங்கிச்சினம். அரைவாசிச் சாப்பாட்டில குருசு திடீரெண்டு குலுங்கி அழ அவன்ர வாயிலயிருந்த சோறு ரொக்கிராஜின்ர மூஞ்சியில பறந்துது.

57. ''டேய் ரெண்டு பேரும் சாகிறதுக்கு முதல் உண்மையைச் சொல்லிப் போடுங்கோ! எங்க சிலிண்டரை வைச்சிருக்கிறீயள்?'' மெயின் ஆள் தோட்டாவை உள்ளங்கையில உருட்டிக் கொண்டே கேட்டான்.

58. ரொக்கிராஜ் இப்ப அழவோ கலங்கவோ இல்லை. வலு தெளிவா தான் சிலிண்டரை எடுக்கயில எண்டும் குருசுவும் அண்டு இரவு முழுக்க தன்னோட தான் இருந்தவன் அதால அவனுக்கும் இதில சம்மந்தமில்லை எண்டும் சோத்தைப் பார்த்துக்கொண்டே குனிஞ்ச தலை நிமிராமல் சொன்னான்.

59. அப்ப மெயின் ஆள் ''டேய் உன்னையெல்லா இயக்கத்தை

விட்டுக் கலைச்சது. பிறகேன் திரும்பவும் திரும்பவும் கரைச்சல் தாறாய்?'' எண்டு கேட்டான்.

60. ''அம்மான் நான் எல்லாம் விளக்கமா எழுதி உங்களுக்கு ஒரு கடிதம் தந்து விட்டனான்...''

61. ''டேய் அரசியல் எனக்கு நீ வாய்க்க வைக்காத, எனக்கு விசயகுமார் அண்ணேயையும் தெரியும் உன்ர முழு ஸ்டோரியும் தெரியும். உங்கிட கொழும்புச் சுத்துமாத்த இயக்கத்தோட செய்யாத'' எண்டு சொல்லிப் போட்டு மெயின் ஆள் ரொக்கிராஜுக்கு பத்து ரூவாயும் குருசுவுக்கு பத்து ரூவாயும் குடுத்துப் போட்டு காசியை வெளியில கூட்டிக் கொண்டு போய் ஏதோ கதைச்சான். காசி மெயின் ஆளுக்கு முன்னால அம்மிக்கொண்டு நிண்டான். பிறகு காசி வந்து குருசுவை வீட்டை போகச் சொன்னான்.

62. குருசு கடைக்கண்ணால ரொக்கிராஜுக்கு 'போறன்' எண்டு சொல்லி சிக்னல் போட்டிட்டு விறு விறெண்டு போயிற்றான். பிறகு காசி ரொக்கிராஜை போய் முன்னுக்கு நிண்ட வானில ஏறச் சொன்னான்.

63. ரொக்கிராஜால நடக்க ஏலாமல் கிடந்துது. வீங்கின காலை மெல்ல மெல்ல வைச்சு சுவரைப் பிடிச்சுக் கொண்டே நடந்து போய் வானில ஏறி சீற்றில இருக்காமல் கீழ இருந்தான்.

64. றைவர் சீற்றில வந்து ஏறி இருந்த காசி வானை ஸ்ரார்ட் பண்ணி எடுத்தான். ஒரு அஞ்சு நிமிசத்தில வான் வங்களாவடி ஆஸ்பத்திரியில போய் நிண்டுது. ரொக்கிராஜை இறங்கச் சொன்ன காசி ''கொரில்லா போய் மருந்து கட்டிக் கொண்டு வீட்ட போ! தலையில எப்பிடி காயம் வந்துது எண்டு டொக்டர் கேட்டால் களவு எடுத்ததால இயக்கம் கொண்டு போய் அடிச்சதால வந்த காயம் எண்டு சொல்லு'' எண்டு சொல்லிப் போட்டு வானை எடுத்துக் கொண்டு போயிற்றான்.

ரொக்கிராஜ் இயக்கத்தின்ர வாகனத்தில வந்து இறங்கினத பார்த்துக் கொண்டு நிண்ட ஆஸ்பத்திரிக் கங்காணி ஓடி வந்து வலு மரியாதையாய் ரொக்கிராஜைப் பிடிச்சு கூட்டிக் கொண்டு போய் டொக்டரின்ர அறையில இருக்க வைச்சுப் போட்டு ''தம்பி இப்ப அஞ்சு நிமிசத்தில டொக்ரர் வந்திருவேர் என்ன சுகமில்லை'' எண்டு கேட்டான்.



65. ''கால் ரெண்டும் வீங்கிப் போச்சு; தலையிலயும் ஒருகாயம் சிதழ் கட்டியிருக்கும் எண்டு நினைக்கிறன். உச்சந்தலை விண் விண்ணெண்டு நோகுது.''

66. தலைமயிரை விலக்கி காயத்தப் பார்த்த கங்காணி ''இது என்ன தம்பி நடந்தது'' எண்டு கேட்டான். ரொக்கிராஜ் ஒண்டும் பறையாமல் இருந்தான். ரொக்கிராஜ் பறையாமல் இருக்கவும் காயம் பட்ட விதம் ஏதோ இயக்க ரகசியமாக்கும் எண்டு கங்காணி நினைச்சிருக்கலாம். 'தம்பி நான் டொக்டரை கூட்டிக்கொண்டு வாறன்' எண்டு சொல்லிப் போட்டு அவன் வெளியில போனான்.

67. டொக்டர் வந்து 'தலையில என்ன நடந்தது?' எண்டு கேட்க மட்டுக்கும் ரொக்கிராஜ் ஆஸ்பத்திரியில இருக்க விரும்ப யில்ல. மெதுவா சுவரைப் பிடிச்சுக் கொண்டே நடந்து போய் ஆஸ்பத்திரி பின் வாசலால வெளிய போனான். பல்லைக் கடிச்சுக் கொண்டு நடந்தான். ஒரு மணித்தியால நடையில சாட்டி கடக்கரை வந்துது. கடக்கரையால அல்லைப்பிட்டி முன்னா நொண்டி நொண்டி நடந்தான்.

ரொக்கிராஜ் எப்ப பார்த்தாலும் கொட்டிலுக்குள்ளேயே தலைப்பிள்ளைத்தாச்சி மாதிரி படுத்த படுக்கையாய்க் கிடந்தான். அவனால இப்ப கெந்திக் கெந்தி நடக்க ஏலும். கால் வீக்கம் வத்திக்கொண்டு வருகுது. எண்டாலும் ரொக்கிராஜ் வெளியில போக விரும்பயில்ல. பாயில படுத்துக் கிடந்து கொட்டில் முகட்டை முறைச்சு முறைச்சுப் பார்த்துக்கொண்டு கடுமையான யோசினை யில கிடந்தான்.

2. மிக்கல்ராஜ் தாய்க்காறியோட ஏதோ கதைக்கயிக்க கதையோட கதையா சிரிச்சுக்கொண்டே குருசு இரவு பகலாய் கன்னாப் பத்தைகளுக்குள்ளேயே திரிஞ்சுகொண்டிருக்கிறான் எண்டு சொன்னதை படுத்துக்கிடந்த ரொக்கிராஜ் கேட்ட செக்கனில அவனுக்கு குருசு தான் சிலிண்டரை அறுத்திருப்பானோ எண்ட

நன்றி - நூலகத்திட்டம்

ஐமிச்சம் வருகுது. குருசுவை ஒருக்கா சந்திச்சுக் கதைக்கவேணும் எண்டு யோசிச்சான்.

3. ஒரு செக்கலுக்குள்ள குருசுவே ரொக்கிராஜைத் தேடி வந்து கதைச்சான். அதாவது சிலிண்டரை அறுத்த கள்ளன்கள் இங்க தான் எங்கேயாவது கன்னாப் பத்தைகளுக்குள்ள ஒளிச்சு வைச்சிருப் பாங்கள். அதை நாங்கள் தேடி எடுத்துக்கொண்டு போய் இயக்கத் திற்ற குடுத்திற்றால் பிறகு நிம்மதியா வீட்டில படுக்கலாம். இப்ப வீட்டில படுக்கவே பயமாக்கிடக்கு. இயக்கம் நம்மில கரவு வைச்சிற்றுது. என்ன நேரம் என்ன நடக்கும், என்ன சாட்ட வைச்சு பிடிப்பாங்களோ, எப்ப தூக்கிக் கொண்டு போய் மண்டையில போடுவாங்களோ எண்டு ஒண்டுமாத் தெரியாது. நானும் கன்னாப் பத்தை கன்னாப் பத்தையாத் தேடுறன் ஒண்டும் எம்பிடயில்லை. நீயும் வந்தியெண்டால்மண்டைதீவுச் சந்திப் பக்கமாய்ப் போய் தேடிப்பாக்கலாம் எண்டு குருசு ரொக்கிராஜுக்குச் சொன்னான்.

4. ''நான் வரையில்ல, நீ போய்த் தேடுறதெண்டால் தேடு. மினிக்காம்ப் ஆமியிற்ற சூடு வாங்கு. அது சிலிண்டர் ஒண்டும் களவு போகயில்ல. காசி அண்ணே டபுள் கேம் விளையாடுறேர். ஏனெண்டு தெரியேல்ல'' எண்டு ரொக்கிராஜ் சொல்லி குருசுவை அனுப்பி னாலும் தன்னைக் கொண்டுபோய் லைட்போஸில கட்டி கழுத்தில <<துரோகி >> எண்டொரு போர்ட்டும் கட்டித் தூக்கிவிட்டு இயக்கம் வெடி வைக்கிற சீனை அடிக்கடி கற்பனை பண்ணிப் பார்த்தான். அப்பிடி ஏதும் நடக்குமெண்டால் அதுக்கு முதலே பொலிடோல் குடிக்கிறது தான் மரியாதையான செயல் எண்டும் யோசிச்சான்.

5. ரொக்கிராஜுக்கு ஒவ்வொரு நாளும் செனோவா மஞ்சள் மா ஒத்தணம் அவிச்சுக் குடுக்க பிரின்ஸி அவன்ர தேகத்து அடிகாயங்களுக்கு ஒத்தணம் பிடிச்சு விட்டாள். அண்டைக்கு காலம்பிற ஒத்தணம் குடுக்கயிக்க பிரின்ஸி ரொக்கிராஜுக்கு ஒரு காரியம் சொன்னாள். செனோவா பிள்ளைத்தாச்சி ஆகியிற்றாளாம். பிரின்ஸி வலு சந்தோசத்தோட எனக்கு ஒரு தம்பி தான் வேணுமெண்டாள். ரொக்கிராஜ் சொண்டை ஒரு மாதிரியாய் சுழிச்சுக்கொண்டே 'வெரிகுட் இன்னொரு கொரில்லா பிறக்கப் போகுது' எண்டான். பிரின்ஸிக்கு டக்கெண்டு நாடி விழுந்து முகம்



கறுத்துப் போச்சு. ஏன் பெரியண்ண அப்பிடிச் சொல்லுறாய்? எண்டு கேட்டாள். பிறகு நான் இப்ப வளர்ந்திட்டன் தானே, நான் நல்ல மாதிரி தம்பிய வளர்ப்பன் எண்டாள்.

6. ரொக்கிராஜ் ஒண்டும் பறையயில்ல. கொஞ்ச நேரம் சும்மாயிருந்தான். பிறகு 'ம், கடைசியா இயக்கம் எனக்கும் கள்ளப் பட்டம் கட்டிப்போட்டுது' எண்டு ஒரு கைப்பான சிரிப்போட மெள்ளமாய்ச் சொன்னான். இதைக் கேட்ட பிரின்ஸி ரொக்கி ராஜுக்கு ஒரு ரகசியம் சொன்னாள். ''சிலிண்டரை பப்பாவும் மிக்கலும் தான் அறுத்துக்கொண்டு வந்தவையள். இஞ்ச வீட்டுக்குள்ள வைச்சுத்தான் சிலிண்டரைப் பிரிச்சு சரை சரையாக் கட்டினவை. உன்னை இயக்கம் பிடிச்சுக் கொண்டு போன அண்டைக்கு இரவே வள்ளம் எடுத்து பப்பாவும் மிக்கேலுமாய்ப் போய் கொட்டடியில மீனுக்கு டைனமெற் அடிக்கிற ஆக்களுக்கு வித்துப் போட்டு கட்டுக் கட்டாய் காசு கொணந்து வைச்சிருக் கினம்.''

7. ரொக்கிராஜுக்கு ஏனோ தெரியாது, படாரெண்டு நெஞ்சுக்குள்ள ஒரு சந்தோசம் வந்திற்றுது. ''நீ கண்ணால கண்டனியோ?'' எண்டு பிரின்ஸியிட்டக் கேட்டான்.

8. ''ஓம் பெரியண்ண நான் நித்திரைப் பாயில கிடந்து எல்லாத்தையும் பார்த்துக் கொண்டுதான் படுத்திருந்தனான். பப்பா சிலிண்டரை சக்கை எண்டு தான் சொன்னவர். கொட்டடிக்கு கொண்டு போய் விக்கப்போயினம் எண்டு கதைச்சதையும் கேட்டனான். என்ன சொல்லு பார்ப்பம்? பப்பாவக் கொண்டுபோய் உங்கிட சென்றிப் பொயின்றில அடைச்சு வைச்சிருந்தனிங்கள் தானே, அப்ப மனுசன் எல்லாத்தையும் நோட் பண்ணி வைச்சிருந்த தாம்... இப்ப இந்த வேலையைச் செய்திருக்கு. சிலிண்டர் வித்த காசைக் கொண்டு வந்து அம்மாவிட்டத்தான் குடுத்து வைச்சி ருக்கினம். பெரியண்ண, நீ இயக்கத்திற்ற சொல்லிக் குடுக்கிற தெண்டாலும் சொல்லிக்குடு. இப்பிடிப்பட்ட ஒரு பப்பாவும் சகோதரமும் நமக்கு வேணாம்'' எண்டு பிரின்ஸி பட படவெண்டு சொல்லிப் போட்டு வெளியில போகவும் அவள் இப்ப நேராய் அந்தோனியார் சுருவத்தடிக்கு 'அந்தோனியாரே நீதியுள்ள பிள்ளை யாய் நான் இருக்க என் இருதயத்துக்கு பெலனைத் தாரும்' எண்டு

மண்டாடத் தான் போய்க் கொண்டிருக்கிறாள் எண்டு யோசிச்சுக் கொண்டு ரொக்கிராஜ் ஆடாமல் அசையாமல் இருந்தான்.

9. அண்டைக்கு இரவு தேப்பனும், தம்பியாரும் எப்ப வருவினம் எண்டு நித்திரை கொள்ளாமலுக்கு ரொக்கிராஜ் பார்த்துக் கொண்டேயிருந்தான். கடைசியா இரவு பதினொரு மணி மட்டில மிக்கல் நல்ல வெறியில செம்மிச் செம்மி வந்தான். அப்பயும் கொரில்லா வரயில்ல. மிக்கல்ராஜ் செத்தையைத் தடவிக்கொண்டே வந்தான். அவனைக் கண்டவுடன ரொக்கிராஜ் கேட்ட முதல் கேள்வி, ''மிக்கல் நீயும் பப்பாவுமாச் சேர்ந்தோ சிலிண்டர் அறுத்தனிங்கள்?''

10. மிக்கல்ராஜ் அப்பிடியே செத்தையைப் பிடிச்சுக் கொண்டே நிண்டிட்டான். அவனுக்கு ஏறக்குறைய வெறி முறிஞ்சிருக்கும். இதைக் கேட்டுக் கொண்டிருந்த செனோவா ஓடி வந்து ரொக்கிராஜுக்கு முன்னால நிண்டு கொண்டே ''டேய் விசரா இப்ப அதுக்கு என்ன செய்யப் போறாய், உனக்கு ஆர் இதைச் சொன்னது'' எண்டு கேட்டாள். ரொக்கிராஜ் இப்ப மிக்கல்ராஜைப் பார்த்தான், மிக்கல் ராஜ் சாரத்த துடைக்கு மேலால தூக்கிச் சண்டிக் கட்டாக் கட்டிக் கொண்டு எதுக்கும் ரெடியாய் நிண்டு கொண்டிருந்தான். ரொக்கிராஜ் வலு மெதுவான குரலில கிட்டத் தட்ட ரகசியம் பறையுமாப் போல தாய்க்காறியைப் பார்த்து ''இப்ப உங்களிட்ட காசு இருக்கு, எனக்கொரு ஆயிரம் ரூவா தாங்கோ, நான் கொழும்புக்குப் போய் எங்கேயாவது ஒரு கடை பார்த்து நிக்கப் போறன்'' எண்டு கேட்டான். அவன் சொன்னது உண்மையில செனோவாவுக்கு கேட்டிருக்காது.

11. ஜெயசீலிதான் ஆனையிறவிலயிருந்து மதவாச்சி வரைக்கும் இருந்த அத்தினை ஆமியின்ர சென்ரிப் பொயின்ரிலும் சிங்களத்தில சிரிச்சு சிரிச்சுக் கதைச்சு ரொக்கிராஜை பத்திரமாய் கொழும்புக்கு கொண்டுவந்து சேர்த்தாள்.

12. நாலாம் குறுக்குத் தெருக் கடையளில வேலைக்கு வாற பொடியளை முதலில குச்சுப் பிடிக்கத்தான் விடுவினம். பிறகு பட்டடை, பிறகு நிலுவைக்கு அனுப்புறது எண்டு தான் சிஸ்ரம். ஆனால் ரொக்கிராஜ் படிச்ச பொடியனெண்டு போட்டு அவனை நேரா பில் போடுற வேலையில இருத்திச்சினம்.



13. ரொக்கிராஜ் கொழும்புக்கு வந்ததிலயிருந்து மணிக் கணக்கா, நாள்க் கணக்கா, மாதக் கணக்கா, இப்ப வருசக் கணக்கா, தன்ர சேர்ட் பொக்கற்றுக்குள்ள ஒரு கடிதம் கொண்டு திரியிறான். முதலில தெரிஞ்ச அறிஞ்ச ஆக்களுக்கு மட்டும் 'தான் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதி வைச்சிருக்கிறதாய்' சொல்லிக் கொண்டு திரிஞ்சவன், இப்ப பார்க்கிற ஆக்கள் எல்லாருக்கும் அதைச் சொல்லித் திரியிறான்.

தொடரும்....

இந்த நாவலின் முதல் ஐம்பது வசனங்களில் நான் உனக்கு அறிமுகம் செய்து வைத்த யாகப்பு அந்தோனிதாசன்-இனி நான் அவனை அந்தோனி என்றே குறிப்பிடுவேன்-பிரான்ஸ் நாட்டில் கோரிய அரசியல் தஞ்சம் அனைத்து நிலைகளிலும் நிரா கரிக்கப்பட்டதன் பின்னாய், இப்போது என்னோடு தான் எனது அறையில் தங்கியுள்ளான்.

2. எனது இருப்பிடத்தை 'அறை' என்று வெறுமனே சொல்லி விடுவது ஒரு சரியான சித்திரிப்பாக இருக்க முடியாது. ஆறு சவப்பெட்டிகளை அருகருகாக அடுக்கி வைப்பதற்கு மிகக் குறைந்த பட்சமாக எவ்வளவு சதுர மீட்டர்கள் தேவையோ அச்சொட்டாக அதேயளவான சதுர மீட்டர்கள் பரப்பளவை கொண்டதே எனது இருப்பிடம்.

3. இரண்டாம் மகா யுத்தத்திற்குப் பின் சிதைவுகளாயும் சாம்பலாயும் கொட்டிக்கிடந்த இந்தத் தேசத்தை மீளக் கட்டி யெழுப்புவதற்காக ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் அல்ஜீரியாவி லிருந்து பிரஞ்சுக்காரர்களால் பிடித்து வரப்பட்ட ஒப்பந்தக் கூலிக்கார அராபியர்களை படுக்கவும் எழும்பவும் வைப்பதற்காக விசேடமாகக் கட்டப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதி, என்னில் பிழியப்பட்ட தேனடைகள் பற்றிய ஞாபகக் கணுக்களை உசுப்பி ஆடி நிற்பது.

4. இப்போது சிதிலமடைந்து கிடக்கும் இந்தத் தொழிலாளர் விடுதியில் சில அரபுக் கிழவர்கள் மட்டுமே பாரிஸ் நகரத்தின் பின் வனப்புக்கான உருக்குலைந்த இரத்த சாட்சிகளாய் அலைந்து கொண்டிருக்கிறார்கள். மற்றைய கூடுகள் அனைத்தும் இப்போது அகதிகளால் நிரம்பி வழிவன.

5. ஒரு அறையில் ஒரு அகதி மட்டுமே தங்குவதற்கு விடுதி மேலாளரால் அனுமதிக்கப் பட்டுள்ளார். தவிரவும் அவர் தொடர்ந்து

கண்காணிக்கவும் படுகிறார். நேர காலம் இல்லாதவாறுக்கு ஏமஞ் சாமங்களிலும் விடுதிக் காவலாளி அறைகளைத் தனது 'மாஸ்டர் திறப்பால்' திறந்து சோதனையிடலாம். அறையினுள்ளே மேலதிக அகதி ஒருவர் காணப்பட்டால், பனியோ மழையோ குளிரோ இரு அகதிகளையுமே வெளியேற்றிய பின் அறை மூடப்படலாம். தொடரும் விசாரணையின் போக்கே குற்றக் காசு கட்டிவிட்டு மீளவும் அறையை திறக்கச் செய்வதா அல்லது இன்னொரு சிதில விடுதி தேடி அலைவதா என்பதை நிர்ணயம் செய்யும்.

6. அந்த வெள்ளைக்கார கிழவனும், ஒரு மூலான் பழத்தைப் போன்ற உருண்டையான, பளபளப்பான மூஞ்சியை உடையவனுமான விடுதிக்காவலாளியோடு நான் விடும் தகிடுதத்தங்கள் சொல்லி மாளா.

7. அவன் பெரியதொரு வணக்கத்துடனும் நன்றி கூறலுடனும் நான் கொடுக்கும் வைன் போத்தல்களை ஒவ்வொரு வெள்ளிக் கிழமை மாலைகளிலும் பெற்றுக்கொண்டான். எனவே அவன் விடுதியின் எந்தவொரு பகுதியிலாவது அந்தோனியைக் காணும்படி நேரும் போதெல்லாம் நின்ற நிலையிலேயே கண்களை மூடி பிரார்த்தனை செய்ய ஆரம்பித்துவிடுகிறான். வெய்யிலைக் காட்டி 'இது நிச்சயமாக அழகானது' என ஆரம்பித்து பின் அந்தோனியைக் காட்டி 'இந்தப் புதிய இளைஞன் விடுதிக்கு வந்து போய்க் கொண்டிருக்கும் பார்வையாளன் மட்டுமே' என எனக்கு ஒரு தடவை சொல்லியிருக்கிறான்.

8. நண்பர் சிவலிங்கம் சிவபாலன் தனது புகழ்பெற்ற ஒரு சிறுகதையில் எழுதியது போலவே அந்தோனிக்கும் ஒழுங்கான விசா கிடையாது, ஒழுங்கான வேலை கிடையாது, இப்படிப் பல ஒழுங்கானவை கிடையாது. ஆனால் அவன் ஒழுங்காக விடுதியில் இருக்கும் அரபுக்களுடனும், ஆபிரிக்கர்களுடனும், வங்காளிகளுடனும் சண்டை போட்டு வந்தான்.

9. விடுதியின் கீழ்த் தளத்திலிருக்கும் இந்த முப்பத்து நான்கு அறைகளுக்கும் பொதுவான குளியலறைக்கு அந்தோனி குளிக்கப் போனாலும் பிரச்சனைப்பட்டான். பொதுவான சமையலறைக்கு சமைக்கப் போனாலும் பிரச்சனைப்பட்டான். (நல்ல வேளையாக இந்த விடுதியில் வேறு ஈழத் தமிழர்கள் எவரும் கிடையாது,



இருப்பின் இது கொலையில் தான் போய் முடியும் என லொக்கா அடிக்கடி சொல்வார்.) எனது நெடுநாளைய விடுதி நண்பர்களான டிடியே, கமறா, பராக், சம்பொன்டா, மன்சூர், வாசனை அத்தர்களும் குரானும் விற்பனை செய்யும் அரபுக் கிழவர் எல்லோருமே இந்தப் 'புதியவனைக்' குறித்து என்னிடம் குறைப்பட்டு முறையிட்டனர். அதிலும் அந்த அரபுக் கிழவர் 'இந்தப் புதிய தமூல் ஒரு இனவெறியனாய்த் தெரிகிறான்' என்று என்னிடம் தனது கண்களைத் துன்பத்துடன் விழித்தவாறே கூறிச்சென்றார்.

10. அன்றைய நாட்களிலே நான் மது அருந்தும் இரவுகளில் மிகுந்த ஆத்திரத்துடன் அந்தோனியிடம் இந்த முறைப்பாடுகளைக் குறித்து விசாரிப்பதுண்டு. அந்தோனியோ 'அடையார் கள்ளன்கள், கறுவல் ஊத்தைகள், வயித்துக்குத்த நம்பினாலும் வடக்கத்தியானை நம்பாதீர்கள்' என்று எனக்கு மறுமொழி சொல்லுவான். நானோ எனது மனிதாபிமானத்தை அந்தோனிக்கு மீண்டும் நிரூபித்து விடும் எத்தனத்தோடு அந்தோனியை வெளியே தள்ளிக் கதவை இறுக மூடிக்கொள்வேன். அந்தோனி 'சைஸ' என்று ஒரு ஜெர்மனிய வசைவச் சொல்லிக் கொண்டே போய் பொதுச் சமையலறைக்குள் படுத்துத் தூங்கிவிடுவான். நாங்கள் சலிப்பில்லாமல் இந்த நாடகத்தை நடித்துக் கொண்டேயிருந்தோம்.

11. 'சைஸ' என்பதோடு டொச்சு மொழியில் உருளைக் கிழங்குகளைக் குறிப்பதான ஒரு சொல்லை தமிழ் உச்சரிப்புச் சாயலுடனும் வசை ஓசையுடனும் 'கட்ட புளுக்கள்' என்று அடிக்கடி அவன் உபயோகித்துக் கொண்டான். பிரஞ்சு வெள்ளைத் தோலர்களை வசைபாடுவதற்காகவே இந்த 'கட்ட புளுக்கள்' என்ற பதத்தை அவன் பிரயோகித்தான்.

12. எனவே நான் அந்தோனியிடம் அவன் ஜெர்மனியிலிருந்தோ அல்லது ஜெர்மனி ஊடாகவோ பிரான்சுக்கு வந்தவனா? எனக் கேட்டேன். அவன் மிகுந்த அக்கறையுடன் தனது அகதித் தஞ்சக் கோரிக்கையின் கையெழுத்துப் பிரதியின் நகலைக் காண்பித்து தான் இத்தாலியூடாகவே பிரான்சுக்கு வந்ததாகவும், ஆனால் கொழும்பில் சில நாட்கள் டொச்சுமொழி வகுப்புகளுக்கு சென்று வந்ததாகவும் கூறினான்.

13. பின், லண்டன் போவதற்காகவே பிரான்சுக்கு வந்ததாகவும் கூடிய கெதியில் பிரான்ஸையும் இங்கிலாந்தையும்

படிக்கத் தொடங்கிய முப்பதாவது நிமிடமே 'இது ஒரு சைஸ பாசை' என்று சொல்லிவிட்டுப் போனான்.

19. ஒரு நாள் அதிகாலை நான்கு மணியளவில் அவன் என்னைத் தொலைபேசியில் அழைத்து 'தனக்கு பிரான்ஸில் வதிவிட விசா கிடைக்கப்போவதில்லை ஏனெனில் பிரஞ்சு அரசாங்கம் தன்னைத் திட்டமிட்டு பழிவாங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறி எனது பாஸ்போர்ட்டை இரவலாகத் தந்தால் தான் அதைப் பயன்படுத்தி லண்டனுக்கு போய் போய்ச் சேர்ந்ததும் தபாலில் திருப்பி அனுப்பி வைப்பதாகப் பதட்டத்தோடு பேசினான்.

20. எனது பாஸ்போர்ட்டை நான் ஏற்கனவே ஒரு பகுதிக்கு ஆறாயிரம் பிராங்குகளுக்கு விற்று விட்டேன் எனக் கூறினேன். நான் பொய் சொல்கிறேன் என்பதை எனது சீரற்ற பேச்சின் மூலம் அவன் ஊகித்திருக்கக் கூடுமோ தெரியவில்லை. அல்லது தூக்க மயக்கத்தினால் தான் நான் தடுமாற்றத்துடன் பேசுகிறேன் என்றுகூட அவன் நினைத்திருக்கலாம்.

21. இது நடந்து ஒரு மாதமிருக்கலாம். திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் இடது கையில் ஒரு அழுக்குத் தோல் பையுடனும் வலது கையில் தனது அரசியல் அகதித் தஞ்சக் கோரிக்கைகள் - ஆதாரங்கள் அடங்கிய கோப்புடனும் அந்தோனி எனது அறைக்கு வந்து தான் சில நாட்களுக்கு இங்கேயே தங்க வேண்டிய ஒரு சூழ்நிலை என்றும் விரைவிலேயே தான் லண்டன் போய் விடுவான் என்றும் சொன்னான்.

22. நான் தேநீர் தயாரித்தவாறே அந்தோனி தங்கியிருந்த பாரிஸ் பதினெட்டு அறைக்கு என்ன நடந்தது? என்று கேட்டேன். அங்கே இருப்பவர்கள் எல்லோருமே தமிழ் ஆட்கள்; அவர்கள் பேய்கள் என்றான். நான் கொஞ்சம் குழம்பிப்போய் நானும் தமிழன் தானே என்றேன். அதற்கு அந்தோனி நீங்கள் தமிழன்; அவர்கள் தமிழ் ஆட்கள் என்றான்.

23. இவன் என்ன புதினம் காட்டுகிறான்? என்று யோசித்துக் கொண்டே விடுத்து விடுத்துக் கேட்ட போது தான் அவனது கிராமத்திலே கிறிஸ்தவர்கள், இந்துசமயத்தவர்களை தமிழ் ஆட்கள் என்றே அழைப்பார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.



24. அப்படியா? அப்பிடிப் பார்த்தாலும் நானும் தமிழ் ஆள் தானே என்று கேட்டு சிரித்தேன். அந்தோனி கால்களை ஆட்டியவாறே 'இல்லை நீங்கள் கொம்யூனிஸ்ட் ஆள் என்பது எனக்குத் தெரியும்' என்றான்.

25. அது சரி, பாரிஸ் பதினெட்டு அறையை விட்டு ஏன் வெளியேறினாய்? என்று கேட்டேன். அவன் முகத்தில் ஏகப்பட்ட மகிழ்வு தொற்றிற்று. 'அண்ணா கடவுள் உலகத்துக்கே ஒளி கொடுக்கிறார் என்பதே உண்மை. ஆனால் பாரிஸ் பதினெட்டு அறையில் இருக்கும் மூடர்கள் சாமி படங்களை வரிசையாகச் சுவரில் தொங்கவிட்டு வண்ண வண்ண விளக்குகளால் சாமிக்கே ஒளி பாய்ச்சுகிறார்கள். இது தாங்கவொண்ணாத மூடத்தனம். என்னால் பொறுக்க முடியவில்லை. அவர்கள் எல்லோரும் வெளியே சென்றிருந்த தருணம் பார்த்திருந்து எல்லா சாமி படங்களையும் கழற்றி - அவை ஒரு இருபது இருக்கலாம் - எரித்து பின் மலக்குழியினுள் கரைத்துவிட்டேன். வெளியே இருந்து திரும்பி வந்த அந்தச் சூனியக்காரர்கள் எனது பையையும் என்னையும் தூக்கி வெளியிலே எறிந்துவிட்டார்கள்' என்றான்.

26. எனக்கு ஒருபுறம் சிரிப்பு வரினும் அதை கொடுப்பினுள் விழுங்கி 'அவர்களின் சாமி படங்களை நீ எப்படிக் கொழுத்தலாம்?' என்று கேட்டேன். அதற்கு அந்தோனி 'அனைத்து விக்கிரகங்களையும் தீயிலிடுமாறு வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளதே!' என்றான்.

27. பின், தனது இந்தத் தேவ ஊழியத்திற்கு பிரதிபலனாக கர்த்தர் தன் மேல் ஆசீரைப் பொழிந்து லண்டனில் கரை சேர்ப்பார் என்றும் சொல்லிக் கொண்டான்.

28. இதெல்லாம் சரியாக வராது முதலில் திருட்டுத்தனமாக எங்கேயாவது ஒரு வேலையைத் தேடிக் கொள் என்று சொல்லிக் கொண்டே எதேச்சையாக ஒரு சிகரட்டை உருவி அவனிடம் நீட்டினேன். அந்தோனி பொத்தென விழுந்து எழுந்து முழந்தாளில் நின்று கைகளை நீள விரித்து அன்பும் கருணையும் காணாமல் போன ஆட்டுக்குட்டியை கண்டடைகின்றவருமான அப்பா பிதாவே உமக்கு ஸ்தோத்திரம்... ஸ்தோத்திரம்... சகல சாத்தான் களிடமிருந்தும், சாவான பாவத்திலிருந்தும், அஞ்சனம், மது, சூது,

என்ற பொல்லாப்புகளிலிருந்தும் காத்து என்னை வழி நடத்துபவரே உமக்கு ஸ்தோத்திரம்... ஸ்தோத்திரம் என ஒரு விதமான மணிப்பிரவாளத்தில் விடாமல் செபித்துக் கொண்டேயிருந்தான்.

29. அந்தோனியை நான் முதன் முதலாகச் சந்தித்த போது அவனை சிகரட்டும் கையுமாகக் கண்டது எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அதற்கு பின்பாக மிக அண்மையில் தான் இவனை இந்தக் கர்த்தர் பேய் அடித்திருக்கவேண்டும்.

30. நேற்று அதிகாலையில் நானும் அவனும் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த போது என் மீது சொட்டுச் சொட்டாய் நீர் விழுவது உணர்ந்து அருண்டேன். கண்களை விழித்த போது இந்தப் பாழாய்ப் போன அறையின் மேல் தளத்திலிருந்து நீர் சொட்டுவதைக் கண்டு அந்தோனியை உலுக்கி எழுப்பி மேல் தளத்திற்குப் போய் என்ன ஆயிற்று? ஏன் தண்ணீர் சொட்டுகிறது என விசாரித்துவிட்டு வர முடியுமா? என்று கேட்டேன். திடுக்கிட்டு விழித்து அண்ணாந்து மேலே பார்த்தவன் மிக அமைதியான குரலில் 'விசாரித்து ஆகப்போவது எதுவுமில்லை; கர்த்தர் ஜலப்பிரளயத்தை உண்டு பண்ணி விட்டார், நீங்கள் கர்த்தரிடம் மனம் திரும்பியே ஆகவேண்டும்' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு இழுத்துப் போர்த்துக்கொண்டு மறுபடியும் தூங்கி விட்டான். நான் தலை தலையாய் அடித்துச் சிரித்துக் கொண்டே எழுந்து எனது காலைப் பொருத்திக்கொண்டு தட்டுத் தடுமாறி மேல் தளத்திற்கு செல்லும் மாடிப்படிகளில் ஏறிச் சென்றேன்.

31. மாலையில் பொது மண்டபத்திலிருந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த அத்தர் விற்கும் அரபுக் கிழவர் ஓடி வந்து எனது அறைக்கதவைத் தட்டி 'உனது நாட்டைக் குறித்து செய்தி அறிக்கையில் காட்டுகிறார்கள்' என்றான். நான் உடனே ஆர்வமாக பொது மண்டபத்திற்குச் சென்று பார்த்தேன். செய்தியறிக்கை முடியும் தறுவாயில் இருந்தது. எனினும் மீண்டும் ஒருமுறை ஓரிரு வரிகளில் தலைப்புச் செய்திகளை தொலைக்காட்சி மூஞ்சி இவ்வாறு சொல்லி மறைந்தது: கொழும்பின் புறநகரப் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான பாரிய எண்ணைக் குதங்களை இன்று அதிகாலையில் தனிநாடு கோரும் தமிழ் கொரில்லாக்கள் தாக்கி முற்றாக அழித்துள்ளனர். அந்தப் பகுதி



முழுவதுமே முளாசி எரிந்தவண்ணமே உள்ளது. நாடெங்கும் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

32. பகல் வேளைகளில் விடுதியில் தங்கியிருப்பதை இயன்ற வரை தவிர்த்துக் கொள்ளுமாறு அந்தோனியிடம் சொல்லியுள்ளேன். பகலில் விடுதிக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து நாட்டாமை பண்ணும் விடுதி மேற்பார்வையாளரான வெள்ளைக்காரியின் கண்களில் புதியவர்கள் எத்துப்பட்டால் பிரச்சனையாகி விடலாம். அநேகமாக காலையில் தேநீர் குடித்துவிட்டு விடுதியை விட்டுக் கிளம்பி வெளியே செல்லும் அந்தோனி நள்ளிரவில் தான் விடுதிக்கு திரும்புவதுண்டு. இந்தச் சம்பவம் சம்பவித்த இரவில் அவன் நள்ளிரவு தாண்டி வெகுநேரம் ஆகிய பின்னரே விடுதிக்கு திரும்பினான். 'என்ன அந்தோனி லா-சப்பல் பக்கம் சென்றி ருந்தாயா? இலங்கைச் செய்திகள் என்னவாம்?' என்று ஆர்வத்துடன் நான் கேட்க அவன் தனது இரு கைகளையும் மேலே உயர்த்தி 'கர்த்தர் கொழும்பில் புறஜாதியினர் மத்தியில் அக்கினியை இறக்கிவிட்டுள்ளார்' என்றான்.

33. அந்தோனியோடு எக்காரணம் கொண்டும் இனி வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதில்லை என இரண்டொரு நாட்களுக்கு முன்னதாக நான் முற்றெடுத்திருந்த காரணத்தால் ஒற்றை வரியில் 'இதோ பார் அந்தோனி இன்னும் ஒரு வார்த்தை அந்த நாசமாய்ப் போன கர்த்தரைப் பற்றி நீ பேசுவாயானால் நான் உன்னுடன் என்னுடைய அறையையும் என்னுடைய சோற்றையும் பகிர்ந்து கொள்ள முடியாதவனாய் இருப்பேன்' என்றேன். இதே வரிகளை மீண்டும் ஒரு தடவை அட்சரம் பிசகாமல் அவனுக்குத் தீத்தினேன்.

34. அவன் விரல்களைக் கோர்த்து நெட்டி முறித்தும் கண்களைத் தாழ்த்தி தரையைப் பார்த்துக்கொண்டும் 'சைஸ' என்று சொல்லிக்கொண்டான்.

35. காலையில் நான் கண் விழிக்கையில் அறையின் ஒரு மூலையில் சாய்ந்திருந்தவாறே அந்தோனி சிகரட் புகைத்துக் கொண்டிருந்தான்.

36. எனக்குத் தெரிய அந்தோனி ஒரேயொரு முறை தான் மது அருந்தியுள்ளான். தனது பெண்சாதி ஜீவராணியின் பிறந்த நாளை முன்னிட்டு லொக்கா எனக்கும் அந்தோனிக்கும், ரிடாவுக்கும்

அவர்களுடைய வீட்டில் ஒரு சின்ன விருந்துச் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அன்று லொக்காவின் வற்புறுத்தலால் அந்தோனி ஒரு கோப்பை வைன் குடித்துவிட்டு 'நான் வெளிநாட்டுக்கு போகவென்று வந்து இப்படி இடைவழியில் அந்தரித்து நின்று கண்டவனிடம் நக்கித் திரிகிறேனே, ஐயோ... ஐயோ... நான் தான் பொம்பருக்கும் பங்கருக்கும் பயந்து வந்தேனென்றால் நீ என்ன கோதாரிக்கு எண்பதாம் ஆண்டே பிரான்சுக்கு வந்தாய்?' என்று கேட்டு லொக்காவின் சட்டையைப் பிடித்து, வலியக் கொழுவலைப் போட்டான். லொக்கா அவனைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு தான் பிரான்சுக்கு வந்ததற்காக அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

லொக்காவைப் போலவே பேரன்பான சீவன் ஒன்றை என் வாழ்நாளில் இன்னொரு தடவை சந்திக்க நேர்ந்தபோது அவர் ஜீவராணியாய் இருந்தார். லொக்காவும் ஜீவராணியும் சாதிவிட்டு சாதி காதலித்ததால் அவர்களுடைய கிராமத்திலே மீண்டும் ஒரு சாதிச்சண்டை மூண்ட தருணத்திலே லொக்கா ஜீவராணியைத் தனியாகச் சந்தித்து ''நாங்கள் அடுத்த பிறவி என்று ஒன்றிருந்தால் அப்போது இணைவோம், இந்தப் பிறவியை இறுதி வரை உன் இனிய நினைவுகளுடன் தனியாகவே வாழ்ந்து விடுவேன்'' என்று வசனம் பேச ஜீவராணி லொக்காவைக் கடத்திக் கொண்டு போய் கலியாணத்தை எழுதினாராம். ஜீவராணி சென்ற வாரம் தான் தனது நாற்பதாவது பிறந்தநாளை எங்களுடன் கொண்டாடினார். லொக்காவுக்கு ஜீவராணியை விட இரண்டொரு வயதுகள் அதிகமாய் இருக்கக்கூடும்.

2. அந்தக் காலத்திலே லொக்காவின் மேடைப் பேச்சுக்களில் மயங்கியே - ''அக்கா வந்து கொடுக்க சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே'' - தான் அவரைக் காதலித்ததாக ஜீவராணி சொல்லிச் சிரிப்பதுண்டு. ஈழத் தமிழர்களின் தளபதியென்று ஒரு காலத்தில் இளைஞர்கள் தலையில் தூக்கிவைத்து ஆடி, இரத்தத் திலகம் இட்டு



மகிழ்ந்த அமிர்தலிங்கத்தாரின் முக்கிய தளபதியாக இருந்து பின் பொலிசாரால் தேடப்பட்ட காலத்தில் ஜீவராணியுடன் லொக்கா பிரான்சுக்கு ஓடிவந்து தஞ்சமடைந்தாராம். அமிர்தலிங்கத்துக்கு அரசியலில் முக்கிய எதிரியாய் அப்போது இருந்து வந்த கோவை வெற்றிவேலுவின் படுகொலையில் லொக்காவுக்கும் சம்மந்தம் இருந்ததாகவும் அதனாலேயே இரகசியங்களைக் காப்பாற்று வதற்காக அமிர்தலிங்கமே பணம் கொடுத்து லொக்காவை பிரான்சுக்கு அனுப்பி வைத்ததாகவும் கூட ஒரு கதையுண்டு. இதைப் பற்றி நான் ஒரு முறை லொக்காவிடம் கேட்டபோது 'தம்பி, அமிர் அண்ணன் ஒரு வன்முறை அரசியல்வாதி அல்ல, அவரால் வளர்க்கப்பட்ட நானும் வன்முறை அரசியலின் ஆதரவாளன் அல்ல' என்று கோபத்துடன் சொன்னார்.

3. லொக்கா ஜீவராணியுடன் பிரான்சுக்கு வந்த மறு வருடமே ஜீவா ஒரு குழந்தையைப் பெற்றெடுத்திருந்தும் - அந்தக் குழந்தைக்கு கொஞ்சம் வில்லங்கமான பெயரையே லொக்கா சூட்டியிருக்கிறார்; அரியாத்தை-பாரிஸில் இவர்கள் அப்போது வசித்து வந்த குளிரும் கூதலுமான கைவிடப்பட்ட கட்டட அறையொன்றினுள் உயிர்வாழ முடியாமல் பிறந்த ஒரு மாதத்திலேயே அந்தப் பச்சிளம் குழந்தை இறந்து விட்டதைச் சொல்லி லொக்கா இப்போதும் இடையிடையே கண் கலங்குவதுண்டு. 'உனக்கு நான் குழந்தை, எனக்கு நீ குழந்தை' என்று தமிழில் ஒரு மனோரதிய வழக்கு உண்டு. கிட்டத்தட்ட அந்தச் சாங்கத்தில் தான் அரவணைப்பும், தாலாட்டுமாக அவர்களின் வாழ்க்கை இப்போது அணு அணுவாய் ரசிப்புடன் நகர்கிறது என்பார் லொக்கா.

4. கொஞ்சக் காலத்துக்கு முன்பாக நகரில் நடந்த இலக்கியக் கூட்டம் ஒன்றில் கொழும்பிலிருந்து வருகை தந்திருக்கும் பேராசிரியர் ஒருவர் சிறப்புரை நிகழ்த்தப் போகிறார் என்றவாறாக நான் கேள்வியுற்று அவ்விடத்துக்குப் புதினம் பார்க்கச் சென்றிருந்தேன். ''புகலிட இலக்கியச் செல்நெறியும் தமிழ்ப் புலமை எடுத்துரைப்பு முறைகளில் அதன் வகிபாகமும்'' என்ற தலைப்பில் பேராசிரியர் கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்கும் மேலாக உரையாற்றிக் கொண்டிருந்தார். இன்னும் இரண்டு மணி

நேரங்கள் அவர் பேசினாலும் கூட அவரின் உரையிலிருந்து ஏதாவது ஒரு புள்ளியை என்னால் கிரகித்துவிட முடியாது என்பதை கிரகித்துக்கொண்டேன். பேராசிரியர் சும்மா வெண்டைக்காய் மாதிரி வழுக்கி வழுக்கி உரை நிகழ்த்தினார். எனக்கு தூக்கம் கண்களில் கனத்தது. பேசாமல் பறையாமல் வைனைக் குடித்து விட்டு அறையினுள்ளேயே இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்தி ருந்திருக்கலாம் என்றவாறாக விசாரப்படத் தொடங்கினேன்.

5. அப்போது தான் அந்த அல்லோல கல்லோலம் நிகழ்ந்தது. சபையின் நடுவேயிருந்து திடீரென ஆறடி உயரமும் அதற்கேற்ற உடற்கட்டும் இளநரை கொண்ட நீண்ட தாடியுடனும் ஒருவர் எழுந்து 'எனக்கு ஒரு கேள்வியிருக்கிறது' என்று கையை உயர்த்தினார். பேராசிரியரின் உரையில் தடங்கல் ஏற்பட பதறிப் போன நிகழ்ச்சி அமைப்பாளர்கள் 'பேராசிரியரின் உரை முடிந்ததும் கேள்விகளுக்கு நேரம் வழங்கப்படும். அதுவரை பொறுத் திருக்கவும்' என்று கேட்டுக்கொண்டார்கள்.

6. கேள்வி கேட்பதற்காக எழுந்த மனிதர் நிகழ்ச்சி அமைப்பாளர்களை பொருட்படுத்தவில்லை. உரத்த குரலில் பேசினார். ''மதிப்புக்குரிய பேராசிரியத் தோழரே! உங்களின் பிணம் தின்னும் சாத்திரங்களை என்னால் இன்னும் ஒரு நிமிடம் கூட கேட்டுக்கொண்டிருக்க முடியாது. இதுவரை ஈழத்திலே எழுத்தாளர்கள் கலைஞர்கள் மேல் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட கொலைகளுக்கான உங்கள் எதிர்ப்பை நீங்கள் எங்காவது நேர்மையுடன் பதிவு செய்தீர்களா? கனடாவுக்குப் போய் புலிகள் முஸ்லீம்களை விரட்டியதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கலாம் என்று கைப்புண்ணுக்கு கண்ணாடி கேட்கிறீர்கள். இதுவரை புகலிடத்தில் நடந்த சனநாயக மீறல்கள் பற்றி இங்கேயிருக்கிற தம்பிகளும், தங்கைகளும் குறைந்த பட்சம் இருபது கிலோ அளவான கட்டுரைகளையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளி யிட்டுள்ளனர். இது குறித்து எங்காவது நீங்கள் உங்களின் புலமையால் நிறைந்த வாயைத் திறந்ததுண்டா? பின் என்ன பின் மார்க்சியமும், மனித உரிமையும் மண்ணாங்கட்டியும் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்கென்ன? தெற்குக்கு தலையையும் வடக்குக்கு வாலையும் காட்டி துன்பப்படாமல்



பென்ஷனும் தோதுப்பட்டால் மாமனிதர் விருதும் வாங்கிக் கொள்வீர்கள். பேராசிரியரே! தோழர் சிவசேகரத்தின் கவிதை ஒன்றை நான் உங்களுக்குச் சொல்லு வேன்...'' என்று கவிதை சொல்ல ஆரம்பிக்க பேராசிரியர் சடாரென பக்கத்திலிருந்த கூட்ட அமைப்பாளரிடம் ஏதோ தாழ்ந்த குரலில் விசாரித்தார். அநேகமாக அது 'இப்போது பேசுபவர் பீக்கிங் விங்கா?' என்ற கேள்வியாய் இருக்கலாம் என்று நான் நினைத்துக் கொண்டேன். இவ்வாறாக ஒரு ஐந்து நிமிடங்கள் கோபமும், பதற்றமும், கதறலுமாய் பேராசிரியரைத் தும்பு தும்பாய்க் கிழித்துத் தோரணம் கட்டிவிட்டு அந்த மனிதர் கூட்டத்தை விட்டு வெளியேறினார். பேராசிரியரோ 'சிலருக்கு என் கருத்துக்கள் பிடிப்பதில்லை, பலருக்கோ என் இருப்பே பிடிப்பதில்லை' என்று வியாகுலப்பட்டு தனது உரையைத் தொடர்ந்தார். நான் குழப்பம் விளைவித்த மனிதரைத் தொடர்ந்து கூட்டத்தை விட்டு வெளியேறினேன்.

7. அந்த மனிதர் வெளியே நின்று சிகரட் புகைத்துக் கொண்டிருந்தார். நேராக அவரிடம் சென்று 'உங்களின் பேச்சில் தருக்கம், காரண காரியங்கள், தெளிவு இவை எல்லாம் உண்டோ, இல்லையோ உங்களின் பேச்சில் உங்களின் நேர்மையை உணர்கிறேன், உங்கள் பயத்தை உணர்கிறேன்' என்று சொல்லி அவரின் கைகளைப் பற்றிக் குலுக்கினேன். அவரின் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. 'பேராசிரியரைப் பேச விடாமல் இடையூறு செய்தது எனது தவறுதானே?' என்று அவர் கேட்டார். இப்படியாகத் தான் லொக்கா எனக்கு அறிமுகமானார்.

8. லொக்காவின் அறிமுகத்திற்குப் பின்பாக எனது ஞாயிறு மாலைகள் பெரும்பாலும் லொக்காவின் வீட்டிலேயே கழிந்தது. இப்போது சில மாலைகளில் நான் என்னுடன் அந்தோனியையும் அழைத்துச் செல்வதுண்டு. ரிடா கண்டிப்பாக வருவான். ஞாயிறு மாலையில் ஒலிவ் காய்கள், பாலாடைச் சலாட், குஸ்குஸ் என்று அராபிய உணவுகளாக எங்களுக்கு ரிடா சமைத்துத் தருவான்.

9. பூனை விழிகளுடன் ஒடிசலான தேகத்தைக் கொண்ட வனும் லொக்காவின் நெடு நாளைய, நண்பனுமான ரிடா துனிசியா நாட்டைச் சேர்ந்தவன். அவனும் மது அருந்துவதில்லை. மிக அருமையாக அரபுப் பாடல்களை மேசையில் தாளம் போட்டவாறே

பாடுவான். அவன் எப்போதும் பதற்றமானவனாகவும் எதற்கும் பயந்தவனாகவும் இருந்தான். லொக்காவின் வீட்டிலிருந்து சில வீடுகள் தள்ளி ஒரு அறையில் இருக்கிறான். நகரின் மையத்திலுள்ள மக்டொனால்ட்ஸ் உணவுச் சாலையில் வேலை செய்கிறான். லொக்காவின் வீடு அமைந்திருக்கும் பகுதி அரபுக்கள் பெருமளவில் வசிக்கும் பகுதியாக இருக்கிறது. ஓர் முறை ஜன்னல் வழியே தெருவில் இருந்த விளம்பரப் பலகையில் நகர்ந்து கொண்டிருந்த விளம்பரத்தை எனக்கு ரிடா காண்பித்தான்.

*10.* அந்த விளம்பரத்தில் இரண்டு பெண்கள் இடுப்பில் ஒரு உள்ளாடை மட்டும் அணிந்தவாறே அணைத்தவாறு முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். விளம்பரத்தில் ஒரு வாசகங்களுமில்லை. விளம்பரத்தின் அடியில் மட்டும் www.rebeca.com என்று எழுதப்பட்டிருந்தது. இதில் என்ன புதினம்? இதை ஏன் எனக்குக் காட்டுகிறாய் என்று ரிடாவிடம் கேட்டேன்.

*11.* ரிடா மிகுந்த சஞ்சலத்துடன் ரெபேக்கா என்றால் உனக்குத் தெரியாதா? என்று கேட்டான். தெரியுமே உலகம் முழுவதும் கிளைகளை வைத்திருக்கும், பிரபலமான தயாரிக்கப்பட்ட ஆடைகளை விற்பனை செய்யும் நிறுவனம் அது என்றேன். அதற்கு ரிடா 'என் சகோதரா சரியாகச் சொன்னாய். ஆனால் துணிக்கடைக்கு எதற்காக நிர்வாணப் படங்களைப் போட்டு விளம்பரம் செய்கிறார்கள் என்று யோசித்துப் பார்த்தாயா? இவ்விளம்பரங்களை இசுலாமியர்கள் நெருக்கமாக வசிக்கக் கூடிய பகுதிகளில் வைப்பதற்கென்றே பிரத்தியேகமாக அந்த நிறுவனம் வெளியிடுகிறது. இருந்து பார்! எங்களது புனித நோன்புக் காலங்களில் இந்த ரெபேக்கா நிறுவனம் ஒரு விளம்பரம் வெளியிடும். அதில் இப்போது இப்பெண்களின் இடுப்பில் இருக்கும் சிறு துணியும் காணாமல் போயிருக்கும். இனித் தான் உனக்கு இந்த விளம்பர விசயத்தின் சூட்சுமத்தை அவிழ்க்கப் போகிறேன். இந்த விளம்பரங்களை வெளியிடும் ரெபேக்கா நிறுவனம் யூத முதலாளிகளின் நிறுவனமாய் இருக்கிறது' என்று அவன் பதற்றத்தோடு பேசினான்.

12. இப்பிடியாக எங்களது ஞாயிறு மாலைகள் ஊர்க்கதை, அரசியல் கதை, சாப்பாடு, தண்ணி, வெந்னி என்று கழிந்தது. ஜீவராணி எங்கள் உரையாடலில் அதிகம் பங்கெடுப்பதில்லை.



சமையல் செய்வார். ரிடா சமையல் செய்யும் நாட்களில் அமைதியாக உட்கார்ந்திருந்து றேந்தை பின்னிக் கொண்டிருப்பார். சில நாட்களில் மட்டும் அவர் எங்களோடு சேர்ந்து சாப்பிடுவதுண்டு. நாங்கள் திரும்பி வரும்போது வாசல் வரை வந்து அன்புடன் வழியனுப்பி வைப்பார். லொக்காவிற்கு ஜீவராணி மனைவியாக வாய்த்தது லொக்காவுக்கு 'லொத்தர் அடிச்ச மாதிரி' என்று அந்தோனி லொக்காவுக்கே சொல்வதுண்டு. ஜீவராணி முன்பெல்லாம் லொக்காவை அவரின் பெயரைச் சொல்லி தனிநாயகம்... தனிநாயகம்... என்றே அழைத்து வந்தார். இப்போது எங்களைப் பார்த்து அவரும் லொக்கா என்றே சிரிப்புடன் கூப்பிட ஆரம்பித்திருக்கிறார். இந்த லொக்கா என்ற பட்டப் பெயரை அந்தோனிதான் அவருக்கு வைத்தான். இப்படியாகப் பல தேவையில்லாத விசயங்களில் அந்தோனிக்கு ஒரு அசாத்தியத் திறமை உள்ளதை நான் கவனித்திருக்கிறேன்.

சில நாட்களில் லொக்கா என்னைச் சந்தித்து உரையாடுவதற்காக எனது விடுதி அறைக்கே வந்துவிடுவது உண்டு. லொக்கா எப்போதுமே இலங்கை அரசியலைப் பற்றிப் பேசுவதிலேயே தீவிரமாய் இருந்தார். அதிலும் குறிப்பாக எழுபதுகளின் இறுதியிலான அரசியல் நிகழ்வுகள் பற்றி மீட்டிப்பார்ப்பதிலேயே ஆர்வமாய் இருந்தார். 'ஈழப் பிரச்சினை எங்கள் அனைவரது கைகளையும் விட்டுப் போய்விட்டது' எனவும் 'ஈழத்திலே காந்தி மாதிரியோ, மண்டேலா மாதிரியோ ஒரு மகாத்மா தோன்றும் வரை யாராலும் மக்களைக் காப்பாற்ற முடியாது. நாம் இப்போது செய்ய வேண்டியதெல்லாம் ஒரு மகாத்மாவுக்காகக் காத்திருப்பதே' என்றும் லொக்கா அடிக்கடி சொல்லிக் கொண்டார். அவரின் மிக அப்பாவித்தனமான பேச்சுக்கள் எனக்குப் பல தடவைகள் எரிச்சலையும் ஊட்டியிருக்கின்றன.

2. ஒரு பின்னேரத்தில், நானும் அந்தோனியும் கடைசித் தடவையாக அந்தோனியின் அரசியல் தஞ்சக் கோரிக்கையை மேன்

முறையீடு செய்து பார்த்துவிடுவது என்று முடிவெடுத்து அந்தோனியின் அரசியல் தஞ்சக் கோரிக்கைப் பிரதியை விரித்து வைத்துக் கொண்டு எங்கே தவறு நிகழ்கிறது? எங்கே ஓட்டை விழுகிறது என்று ஆராய்ந்து கொண்டிருந்த தருணம் பார்த்து லொக்கா வந்து கதவைத் தட்டினார். அவருக்கு குளிரிலும் வியர்த்து வழிகிறது.

3. நகரில் தொழிலாளர்களைத் திரட்டி ஒரு அஞ்சலிக் கூட்டம் போடுவோமா? என்று லொக்கா கேட்டார். அந்தோனி மிகுந்த ஆர்வத்துடன் 'செய்யலாமே. யாருக்கு அஞ்சலி செலுத்தப் போகிறோம்?' என்று கேட்டான். இந்தப் போன பஸ்ஸுக்கு கை காட்டும் வழக்கத்தில் எனக்கு அவ்வளவாக ஈடுபாடு இல்லாத போதும் லொக்காவின் ஆரவாரத்தால் உந்தப்பட்டு 'யாருக்கு அஞ்சலி லொக்கா' என்று கேட்டேன். 'என்ன அடுத்த கிழமை ராஜீவ் காந்தியின் நினைவு நாள் வருவதை மறந்து விட்டீர்களா? வன்முறையால் கொல்லப்பட்ட அந்த மனிதனுக்கு அஞ்சலி செலுத்தக் கூட்டம் போடுவோம்' என்றார் லொக்கா.

4. எனக்கு ஆத்திரத்தில் அடி முடியெல்லாம் பற்றிவிட்டது. 'லொக்கா இப்படிக் குட்டி முதலாளித்துவ மனிதாபிமானம் பேசும் கெட்ட பழக்கத்தை முதலில் விட்டொழியுங்கள். பிரபாகரன் ராஜீவ் காந்தியைக் கொலை செய்தால் அதை நாங்கள் ஆதரிப்போம், பிரபாகரனை யாராவது கொலை செய்தால் அதையும் ஆதரிப்போம். இது தான் நிலைப்பாடு' என்று சொன்னேன்.

5. நான் சொல்லி சொன்ன வாய் மூடவில்லை. அதற்குள் அந்தோனி பாய்ந்து வந்து ஆங்காரத்துடன் தனது கால்களை அகட்டி என் முன்னே நின்று கொண்டு 'நீர் என்ன கதைக்கிறீர்? ஊரிலே ஆடாத ஆட்டமெல்லாம் ஆடிப்போட்டு பிரான்ஸில வந்திருந்து தானும் ஒரு ஆளாம், தவிடும் நல்ல கொளுக்கட்டையாம் என்று நியாயம் தெண்டாதேயும், உம்முடைய செடில் கதைக்கு நீர் மட்டும் இப்போ ஊரில் இருந்தால் உமக்கு வெடி தான்' என்று கைகளைத் துப்பாக்கி போல பாவனை செய்து என்னை நோக்கி நீட்டினான்.

6. நான் வலு வேகமாகச் சுவரைப் பிடித்துக் கொண்டு எழுந்தேன். இடது கையை சுவரில் ஊன்றி முன்னேறியபடியே வலது கையால் அந்தோனியின் நீட்டப்பட்டிருந்த கைகளைப்



பலமாகத் தட்டினேன். 'தம்பி உனது அடாவடித்தனத்தை செய்ய இது ஒன்றும் யாழ்ப்பாணம் இல்லை. ஒரு அங்கவீனனிடம் உன் வீரத்தைத் தயவு செய்து காட்டாதே, நீ தூங்கும் போதே உன் தலையில் ஒரு பெரிய கல்லைப் போட்டு உன் பைத்தியம் பிடித்த மண்டையை நொருக்கிவிடுவேன்' என்று நான் ஆத்திரத்துடன் கத்தினேன். 'அடே சொத்திப் பயலே, நீ யாரை வெருட்டப் பார்க்கிறாய்? இதோ பார் உன் மற்றைய காலையும் இப்போது உடைத்துவிடுகிறேன்' என்று அந்தோனியும் கத்தினான்.

7. ஏங்கி விறைத்துப் போய் நின்றிருந்த லொக்கா தலையை குறுக்காவும் மறுக்காகவும் ஆட்டிக்கொண்டே ஓடி வந்து எனக்கும் அந்தோனிக்கும் இடையில் நின்று கொண்டார். 'தம்பி இரண்டு கண்களும் அழுகி விழுமளவிற்கு கொலைகளைப் பார்த்துப் போயிருக்கும் ஒரு நாட்டிலிருந்து வந்த அகதிகளா நீங்கள்? உன்னைச் சுடு என்னைச் சுடு என்று என்ன நீங்கள் பேசுவது? எழுதி வைத்துக் கொள்ளுங்கள் இது தொடர்ந்தால் வலு கெதியில் பிரான்ஸிலேயும் ஒரு கொலை விழும். அதற்குப் பிறகும் நீங்கள் திருந்துவீர்களா? அது எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரியும் - சிவசேகரம் அண்ணாவின் கவிதை ஒன்றிருக்கிறது - துவக்கு அவனைச் சுட்டு இவனைச் சுட்டு பின் சும்மாயிருந்த வனையும் சுட்டது....

இப்போதெல்லாம் நானும் அந்தோனியும் அநேகமாக ஒவ்வொரு நாளுமே சண்டை போட்டு வந்தோம். இந்தச் சண்டைக் காட்சி எங்களிருவருக்குமே ஒரு கிளர்ச்சியைக் கொடுத்து நாங்கள் சண்டைக்காக ஏங்கிக் கிடக்கிறோமா என்று கூட நான் சந்தேகப் பட்டேன். ஏனெனில் எந்தப் பெரியவொரு சண்டையின் முடிவில் கூட அவன் விடுதியை விட்டு வெளியேறியதில்லை. நானும் அவனை வெளியே போகுமாறு சொன்னதில்லை. அவனை நடு இரவில் அறையிலிருந்து வெளியே தள்ளும்போது கூட மறக்காமல் அவனது போர்வையையும் தூக்கி வெளியே எறிகிறேன். அவன்

பொதுச் சமையலறைக்குள் படுத்துத் தூங்கிவிட்டு இரவு எதுவுமே நடவாதது போல காலையில் தேநீருடன் வந்து கதவைத் தட்டுவான். லொக்காவுடன் பேசும்போதுதான் அந்தோனி 'தான் எப்போதும் சமையலறைக்குள் குளிருக்குள் படுத்துக் கிடப்பதை அறிந்த பிரஞ்சு மக்களுக்கு மகிழ்ச்சி தாள முடியவில்லை' என்றும், 'தான் ஒரு நல்ல சட்டை அணிந்திருந்தால் கூட பிரஞ்சுக் கட்ட புளுக்களின் முகம் சிறுத்துப் போய்விடுகிறது' என்றும் மிக விரைவிலே தான் லண்டனுக்குப் போய் ராசா மாதிரி வாழப்போவதாகவும் சொல்லிக்கொண்டான். லொக்கா அந்தோனியைக் குறித்து மிகக் கவலைப்பட்டார்.

2. ஒரு தடவை நானும் அந்தோனியும் பேசிக் கொண்டிருக்கும் போது நான் எப்போதும் வெடு சுடு என்றும் வெட்டுவேன் கொத்துவேன் என்றும் இருப்பதற்கான காரணத்தைத் தான் கண்டு பிடித்து விட்டதாகக் கூறினான். அதாவது எனக்கு முப்பத்து நான்கு வயதாகிறதாம். இவ்வளவு வயதாகியும் நான் திருமணம் செய்யாத காரணத்தாலேயே மனச் சமநிலை சரிந்து எப்போதும் எல்லா வற்றுக்கும் கோபப்படுகிறேனாம் என்ற அந்தோனி தான் எனக்கொரு கல்யாணம் பேசிச் செய்து வைக்கப் போவதாகவும் சொன்னான்.

3. ''சரி செய்வோமே, முடியுமென்றால் லண்டனிலேயே ஒரு பெண் பார்'' என்று அந்தோனியிடம் சொன்னேன்.

4. நான் நக்கல் செய்கிறேன் என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லை. மிகவும் தீவிரமாக 'என்னுடைய மச்சாள் ஒருத்தி ஈஸ்ட்ஹாமில் எஞ்சினியராய் இருக்கிறாள், தங்கையொருத்தி கிங்ஸ்புரியில் நேர்சாய் இருக்கிறாள்'' என்று சொல்லிக் கொண் டிருந்தவன் பின் என்னைப் பார்த்து அண்ணா நீங்கள் எங்கள் ஆட்கள் தானே? என்று கேட்டான்.

5. ''அது என்ன உங்கள் ஆட்கள்?''

6. அறையில் என்னையும் அவனையும் தவிர யாருமில்லை எனினும் அவன் தனது குரலை மிகவும் தாழ்த்தி ''அண்ணா நீங்கள் வேனா தானே'' என்று கேட்டுக் கண்களைச் சிமிட்டினான்.

7. ''இல்லை நான் தீனா, ஆகா தம்பி இது தானா நீ இயக்கத்திற்கு நாடகம் நடத்திய இலட்சணம்? சரி விட்டுத்தள்ளு



தீனாவின் பிச்சைச் சம்பளக் காசிலே தானே வேனா நக்கித் திரிகிறது'' என்று சொல்லி அறை வாசலை நோக்கி கையைக் காட்டினேன். அவன் 'சைஸ' என்று சொல்லிக்கொண்டே வெளியே போனான்.

8. பின் ஒரு நாள் நான் அந்தோனிக்கு கடைசியும் முதலுமாய்க் கை நீட்டி அடிக்க வேண்டியதாயிற்று. அந்த அடிதடிச் சம்பவம் நடந்த அன்று லொக்கா எனது ரூமுக்கு வந்திருந்தார். நானும் லொக்காவும் மது அருந்தினோம். அந்தோனி மீன் பொரித்தும் கடலை அவித்தும் எங்களுக்கு உபசாரம் செய்து கொண்டிருந்தான். கதையோடு கதையாக லொக்கா தனது கைப் பையிலிருந்து ஒரு பிரஞ்சு மொழி தினசரிப் பத்திரிகையை எடுத்து என்னிடம் தந்து தனது தமிழ் இலக்கிய நண்பர் ஒருவரின் பேட்டி அப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருப்பதாகவும் அதை வாசித்து தனக்கு தமிழ்ப் படுத்திச் சொல்லுமாறும் கேட்டார். பிரான்சுக்கு வந்து இவ்வளவு காலமாகியும் இன்னும் சரிவர பிரஞ்சு பேசவோ, படிக்கவோ தெரியாமல் இருப்பதற்காக ஒரு முறை அன்பாக லொக்காவைத் திட்டிவிட்டு பிரான்சுக்கு வந்து ஒரு வருடத்துக்கு மேலாகியும் ஓரிரு வார்த்தைகள் கூட அறியாமலிருப்பதற்காக ஒரு தடவை அந்தோனி யையும் திட்டிவிட்டு அந்தப் பேட்டியைப் படித்து கீழ்க்கண்டவாறு மொழிபெயர்த்துச் சொன்னேன்:

9. <<பிரான்ஸில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் தொண்ணூறு வீதமான தமிழர்கள் போலி அகதிகளே. இவர்கள் பிரஞ்சுப் பிரசா உரிமைக்காக மட்டுமே காத்திருக்கிறார்கள். ஆனால் நான் அப்படியானவன் அல்ல. நான் பதின்நான்கு வருடங்களாய் பிரான்ஸில் வசிக்கிறேன். நான் ஒரு போதும் பிரசா உரிமை கேட்டதில்லை. நான் எனது நாட்டுக்குத் திரும்பிப் போக விரும்பவில்லை. ஏனெனில் உயிருள்ள மீன்களும், கடலும், ஊரும் யுத்தத்தால் அழிந்துவிட்டது.>>

10. நான் வாசித்து மொழிபெயர்த்துச் சொல்வதையே உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த அந்தோனி ஆமோ? அப்பிடியோ? என்று சன்னதம் ஆடத் தொடங்கிவிட்டான். ''எது? நான் பொய் அகதி. பதின்நான்கு வருடத்துக்கு முன்பு-அதாவது முதல் வெடி விழ முன்னமே - ஓடி வந்த அவர் அசலான அகதியாமோ? ஏ! அந்தக்

குறுக்காலே போவான், இவ்வளவு காலமாக வேலையுமில்லாமல் விசாவுமில்லாமல் நான் பதுங்கிப் பதுங்கி வாழ்வதை ஆமோதிக் கிறானாமா? லொக்கா இந்தப் பேட்டி கொடுத்தவனின் கையைக் காலை முறிக்காமல் என் மனம் ஆறாது. அதற்குப் பின் என்னைப் பொலிஸ் பிடித்து நாடு கடத்தினாலும் பரவாயில்லை. மன நிம்மதியோடு கொழும்பில் போய் வெடிபட்டுச் சாவேன். உங்களின் நண்பன் தானே? அவனின் வீட்டைக் காட்டுங்கள். அதற்கு லொக்கா உங்களுக்கு பயமென்றால் அவனின் விலாசத்தையாவது தாருங்கள். அவனுக்கு நான் பேட்டி கொடுக்கிறேன். அறுகுது அல்லது கிழியுது.'' அந்தோனி கையைப் பொத்திப்பிடித்து சுவரில் ஓங்கிக்குத்த அடுத்த அறையிலிருந்து ''ஓ கொமான்ஸ் பா, சவப்பா லா தெத்?'' என்று மறுமொழி கிடைத்தது.

11. லொக்கா அந்தோனியை அமைதிப்படுத்த முயன்றார். ''தம்பி அவர் தன்னுடைய அபிப்பிராயத்தை பத்திரிகையில் தெரிவித்திருக்கிறார். அதற்கு நீ வெட்டுவேன் கொத்துவேன் என்று வெளிக்கிட்டால் எப்பிடி.''

12. ''லொக்கா உங்களுக்கு என்ன? உங்களுக்கு கட்ட புளுக்கள் பெரியதொரு விசா தந்திருக்கிறார்கள். நீங்கள் சாகும் வரை இங்கிருக்கலாம். என்னைப் போன்று விசா இல்லாமல் சாப்பாட் டுக்கும் படுக்கைக்கும் தவண்டையடிக்கும் ஒருவனிடம் போய் இந்தப் பேட்டி கொடுத்தவனை அடித்து முறிப்பது சரியா? தவறா? என்று அபிப்பிராயம் கேட்டுப்பாருங்கள். முதலில் உங்களைத் தான் அடிப்பான்.''

13. லொக்கா மிகவும் அமைதியாக அந்தோனியின் தோள் களைத் தட்டிச் சொன்னார் ''அவர் பேட்டியில் சொல்லி யிருப்பது தவறுதான். எனினும் அது அவரின் கருத்து. நாங்கள் கருத்தைக் கருத்தால் தான் எதிர்கொள்ள வேண்டும்.''

14. ''எது லொக்கா கருத்து? நான் உங்களைப் பார்த்து எனக்கு உங்களின் மனைவிக்கு ஒக்க ஆசையாய் இருக்கிறது என்று சொன்னால் அது கருத்தா?''

15. எல்லோரும் சில விநாடிகள் அமைதியாக இருந்தோம். பின் லொக்கா அந்தோனியின் முகத்தைப் பார்த்தவாறே சொன்னார், ''ஆம் அதுவும் கருத்துத்தான்.''



16. எனக்குச் 'சீ' என்று போய் விட்டது. என்ன மனிதர் இந்த லொக்கா? ஈழத்தில் ஒரு மகாத்மா தோன்ற வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக் கொள்கிறாரே, இவர் தன்னைத் தான் அந்த மகாத்மாவாக நினைத்துக் கொண்டிருக்கிறாரோ? என்ற சமுசயம் கூட எனக்கு ஏற்பட்டது.

17. இருந்த இருப்பிலேயே எட்டி ஒரு கையால் அந்தோனியின் சட்டையைப் பிடித்து இழுத்து மறு கையால் அந்தோனியின் முகத்திலே ஓங்கிக் குத்தினேன். அடுத்த முறை குத்துவதற்கு முன்பாக லொக்கா என்னைத் தடுத்து விட்டார். அந்தோனி எதிர்த் தாக்குதல் செய்ய முயலலாம் என்பதால் எனக்கு அருகில் கழற்றி வைத்திருந்த எனது மரக்காலை எடுத்து கைகளில் தயாராக வைத்திருந்தேன். ஆனால் அந்தோனி மரம் மாதிரி இருந்தான். பிறகு எழுந்து 'சைஸ' என்று சொல்லிக் கொண்டு கதவைத் திறந்து வெளியே போனான்.

18. லொக்கா என்னைப் பார்த்து ''நீ அந்தோனிக்கு கை நீட்டி அடித்தது பெரிய தவறு. அந்தோனியிடம் கண்டிப்பாக மன்னிப்புக் கேள்'' என்று கூறிவிட்டுப் போனார்.

19. மறுநாள் காலையில் ஆறு மணிக்கே லொக்கா வந்து எனது அறைக்கதவைத் தட்டினார். அறையினுள் அந்தோனியைக் காணா ததால் 'ஆள் எங்கே' என்று கண்களாலே கேட்டார். ''சமையல் அறையில் படுத்திருப்பான் போய்ப் பாருங்கள்'' என்றேன். லொக்கா போய் அவனை எழுப்பிக் கூட்டிக்கொண்டு வந்தார். லொக்கா அந்தோனிக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறார். பாரிஸ் நகரின் மத்தியிலுள்ள ஒரு மக்டொனால்ட்ஸ் உணவுச் சாலையில் வேலை. பிற்பகல் மூன்று மணியிலிருந்து நள்ளிரவு வரை வேலை நேரம். லொக்காவின் துனிசிய நண்பன் ரிடாவும் அங்குதான் வேலை செய்கிறான். ரிடா மூலமே இந்த வேலையை அந்தோனிக்கு லொக்கா ஏற்பாடு செய்திருந்தார். அந்த உணவுச் சாலை வெளிநாட்டார்களைப் போட்டு அடிமாட்டு வேலை வாங்கும் ஒரு இடம். நான் ஒரு முறை லொக்காவுடன் ரிடாவைச் சந்திப்பதற்காக அந்த உணவுச் சாலைக்குப் போயிருக்கிறேன். ரிடா வெள்ளைக்கார மனேஜருக்குத் தெரியாமல் திருட்டுத்தனமாய் பியரும் சீஸ்பேக்கரும் தந்து எங்களை உபசரித்திருக்கிறான்.

20. இப்போது வேலை என்றவுடனேயே அதை எப்படித் தட்டிக் கழிப்பது என்று அந்தோனி சிந்தனை செய்ய ஆரம்பித்து விட்டதாகத் தெரிகிறது. முதலில் தான் விரைவிலேயே லண்டன் போய்விடப் போவதாகக் கூறினான். 'அதுவரை இந்த வேலையைச் செய், கொஞ்சப் பணம் என்றாலும் உழைத்து அம்மா அப்பாவுக்கு அனுப்பு' என்றார் லொக்கா. பின் தனக்கு பிரஞ்சு கதைக்கத் தெரியாது என்றான் அந்தோனி. 'கதைக்கத் தெரியாவிட்டால் பரவாயில்லை, கழுவத் தெரிந்தால் போதுமானது' என்றார் லொக்கா. இறுதியான ஆயுதமாகவும் உறுதியான ஆயுதமாகவும் தனக்கு வேலை செய்வதற்கு அனுமதியுள்ள விசாவை இதுவரை பிரஞ்சுக் கட்ட புளுக்கள் தரவில்லை என்ற ஆயுதத்தை அந்தோனி பிரயோகித்தான்.

21. லொக்காவும் பின் வாங்கத் தயாராகவில்லை. தான் தன்னுடைய விசா அட்டையை அந்தோனிக்கு தருவதாகவும் தனது விசா அட்டையில் உள்ள புகைப்படம் பத்துவருடங்களுக்கு முந்தைய படம் என்பதால் அது அந்தோனியின் முகச் சாயலோடு பொருந்தக்கூடியது என்றும், வெள்ளைக்கார மக்டொனால்ட்ஸ் மனேஜரால் கறுப்பர்களின் முகச்சாயல்களை வேறுபடுத்தி அடையாளம் கண்டு பிடித்து விட முடியாதென்றும் ஒரு வேளை அப்படியே கண்டு பிடித்தாலும் நாம் கவலையடைய வேண்டிய தில்லை. ஏனென்றால் இப்போதெல்லாம் கள்ள விசாக்காரர்களுக்கு வேலை வழங்குவதில் உண்மையிலேயே முதலாளிகள் மகிழ்ச்சி அடைகிறார்கள். கள்ள விசாக்காரர்கள் ஒரு போதும் வேலை உரிமைகள் குறித்தோ, தொழிற் சங்கங்கள் குறித்தோ பேசப் போவதில்லையே! என்றும் லொக்கா சொன்னார்.

22. கடைசியில் மதியம் இரண்டு மணி அளவில் லொக்கா என்னையும் அந்தோனியையும் தன்னுடைய காரில் நகரின் மையப் பகுதிக்கு அழைத்துச் சென்றார். லொக்கா அந்த மக்டொனால்ட்ஸ் உணவுச்சாலைக்கு சற்றுத் தூரத்திலேயே காரை நிறுத்தி காரினுள் உட்கார்ந்திருக்க நான் மட்டும் அந்தோனியை கூட்டிக் கொண்டு மக்டொனால்ட்ஸ் உணவுச்சாலைக்கு சென்றேன். அந்தோனி லொக்காவின் விசா அட்டையிலுள்ள பெயர் வயது விபரங்களை தனது உள்ளங்கையில் எழுதிவைத்து அதைப் பாடமாக்கிக் கொண்டே வந்தான்.



23. அன்று ரிடாவுக்கு விடுமுறை என்று சொன்னார்கள். மனேஜர் ஒரு மலர்ந்த முகத்துடன் எங்களிருவரையும் தனது அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றான். கஃபே குடிக்கிறீர்களா? என்று கேட்டான். இல்லை எனக்கு தெமி பியர் தருவீர்களா என்று கேட்டேன். அதற்கு அவன் பியர் வழங்குவதற்கு தனக்கு அனுமதியில்லை என்று கூறி புன்னகையுடன் மன்னிப்புக் கேட்டான். நான் அந்தோனியைக் காட்டி இவர் பெயர் தனிநாயகம். இங்கு ரிடா கூறியபடி வேலைக்கு வந்திருக்கிறார் என்று சொன்னேன். தனிநாயகம் பிரஞ்சு மொழி பேச மாட்டாரா என்று மனேஜர் கேட்டான். நீங்கள் பேசினால் புரிந்து கொள்வார். ஆனால் அவ்வளவாக அவருக்குப் பேச வராது. எனினும் சிறிது ஆங்கிலம் பேசக்கூடியவர் என்றேன். அதற்கு மனேஜர் 'ஓ அது எனக்குத் தெரியுமே சிறிலங்காக்காரர்கள் எல்லோரும் ஆங்கிலம் பேசுவார்களே' என்று கூறி மெதுவாகச் சீட்டி அடித்தான். பின் அந்தோனியிடம் விசா அட்டையைக் கேட்டான். அந்தோனி லொக்காவின் விசாவை எடுத்து மனேஜரிடம் கொடுத்தான். அவன் அதை வாங்கி ஒரு முறை பார்த்து விட்டு அந்தோனியை நிமிர்ந்து பார்த்தான். பின் விறு விறென கணனியில் ஏதோ பதிவு செய்து விட்டு விசா அட்டையை அந்தோனியிடம் திருப்பிக் கொடுத்து விட்டு குசினிப் பக்கமாய் கையைக் காட்டி 'போய்க் கழுவ ஆரம்பிக்கலாம்' என்றான். அந்தோனி போன பின்பு வேறு இலங்கையர்கள் இருந்தாலும் வேலைக்கு அழைத்து வருமாறு மனேஜர் என்னிடம் கேட்டுக் கொண்டான். சரி பார்க்கலாம் என்று கூறி விட்டு வெளியே வந்தேன். அப்போது அந்தோனி கறுப்புக் காற்சட்டை, கறுப்புக் கோடுபோட்ட அரைக்கைச் சட்டை, தலையில் தொப்பி சகிதம் ஓடி வந்து யாரும் கவனிக்காதவாறு லொக்காவின் விசா அட்டையை எனது குளிர் அங்கியினுள் செருகிவிட்டு கண்ணடித்தான். நான் 'எதற்கும் இரண்டு நாட்களுக்கு இந்த விசாவை உன்னுடனேயே வைத்துக் கொள். மனேஜர் திடீரென விசாவைக் கேட்கலாம்' என்று கூறிவிட்டு விசாவை அவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு வீதியில் இறங்கி நடந்தேன்.

24. நானும் லொக்காவுமாக ஒரு மதுபானச்சாலைக்குள் போய் மிதமாக மது அருந்தினோம். சற்று மிதப்பான மனநிலையில் சிரித்துக் கொண்டே 'பின்ன, லொக்கா உங்கள் மகாத்மா

தோன்றிவிட்டாரா? இல்லை இனித்தான் தோன்றுவாரா? அப்பிடியே தோன்றினாலும் தேசியத்தலைவரின் வெடிக்குத் தப்பிப் பிழைப்பாரா?' என்று கேட்டேன். அதற்கு லொக்கா 'தம்பி தமிழ் சிவில் சமூகமே பாஸிஸச் சமூகமாய்ப் போய் விட்டது. அதிலிருந்து தான் இந்த நக்கல் நளினக் கேள்விகள் எல்லாம் வருகிறது' என்று கொஞ்சம் வேதனை யுடனேயே கூறினார்.

25. அன்று மாலை எட்டு மணியளவில் எனது அறையில் தனித்துப் படுத்திருந்தேன். தொலைபேசி ஒலித்தது. நண்பன் தங்கம் பேசினான். இன்று மாலை ஏழு மணியளவில் லொக்கா அவரது வீட்டில் வைத்துக் கொலை செய்யப்பட்டாராம். உடலெங்கும் இருபதுக்கும் மேற்பட்ட கத்திக் குத்துகளாம். இதைவிட வேறெந்த மேலதிகச் செய்தியும் தங்கத்துக்குத் தெரிந்திருக்கவில்லை. 'எதற்கும் இன்றிரவு நீ உனது அறையில் தூங்குவது நல்லதல்ல' என்றான் தங்கம்.

26. எழுந்து எனது அறையில் சிதறிக் கிடந்த தமிழ்ப் பத்திரிகைகள், அரசியற் பிரசுரங்கள் எல்லாவற்றையும் ஒரு பெரிய பையில் போட்டு மூட்டையாகக் கட்டினேன். சுவரில் ஒட்டப் பட்டிருந்த சே-குவராவின் படத்தையும் கிழித்தெடுத்து மூட்டை யினுள் போட்டேன். அவசர அவசரமாக சப்பாத்தையும் குளிர் அங்கியையும் அணிந்து கொண்டு அந்த மூட்டையையும் தூக்கிக் கொண்டு விடுதியை விட்டு வெளியேறினேன்.

27. ரயில் நிலையத்திலிருந்த குப்பைத் தொட்டியினுள் அந்த மூட்டையைப் புதைத்தேன். எதையும் என்னால் சிந்திக்க முடிய வில்லை. மண்டை விறைத்துப் போயிருந்தது. ரயில் நிலையத்தில் என்னைப் பார்த்து நலம் விசாரித்த அத்தர் விற்கும் அரபுக் கிழவரிடம் 'எனது மூளையைப் பிய்த்தெடுத்து கைகளில் வைத்துத்தான் ஆராய வேண்டும்' என்று மெதுவாகச் சொன்னேன்.

28. ரயிலில் ஏறி எவ்வித இலக்குமில்லாமல் நசியோன் நிலையத்தில் இறங்கினேன். அங்கு நின்றிருந்த இரண்டாம் இலக்க மெத்ரோவில் ஏறி பிகால் நிலையத் தரிப்பில் இறங்கினேன். எங்கேயாவது உடனடியாக மறைந்துவிட வேண்டி மனம் அடித்துக் கொண்டது. எதிரே ஒரு பெரிய புளூ ஃபிலிம் திரையரங்கு தெரிந்தது. மெதுவாக நடந்து சென்று முப்பத்தைந்து பிராங்குகளுக்கு ஒரு



அனுமதிச் சீட்டை வாங்கிக் கொண்டு போய் திரையரங்கின் கடைசி வரிசையில் இருளில் உட்கார்ந்து ஒரு சிகரட் மூட்டிக் கொண்டேன்.

29. என்ன நடக்கிறது? யார் இந்த அப்பாவியைக் கொலை செய்தவர்கள்? மனம் பேதலித்து கிடக்க திடீரென்று அந்தோனியின் ஞாபகம் வந்தது. அவன் வேலை முடிந்தவுடன் விடுதிக்குச் சென்று விடலாம். அவனைப் போய்ச் சந்தித்து அவனையும் அழைத்துக் கொண்டு ஏதாவது ஒரு ஹோட்டலில் இன்றைய இரவைக் கழித்து விடுவதாகத் திட்டம் போட்டேன். ஜீவராணிக்கு தொலைபேசி செய்து விசாரிக்கலாம் என்றும் தோன்றியது. எதற்கும் முதலில் அந்தோனியைச் சந்தித்து விட்டால் கொஞ்சம் தெம்பாய் இருக்கும் என்று யோசித்து ஒரு ரக்ஸி அமர்த்திக்கொண்டு மக்டொனால்ட்ஸ் உணவுச் சாலைக்குச் சென்றேன்.

30. உணவுச் சாலை கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. வாசலிலேயே நின்றிருந்த மனேஜரிடம் போய் தனிநாயகத்தைப் பார்க்க வேண்டும் என்று சொன்னேன். மனேஜர் எதுவும் பேசவில்லை. கலவரம் நிறைந்த நீல விழிகளால் என்னை உற்றுப் பார்த்தான். விடுதியின் உள்ளே ஒரு மேசையில் அமர்ந்திருந்த இரண்டு உயரமான வெள்ளைக்காரர்கள் என்னிடம் வந்தனர். மனேஜர் அவர்களைப் பார்த்து 'இவர் தான் தனிநாயகவை வேலைக்கு அழைத்து வந்தார்' என்று சொன்னான். ஒருவன் தனது இடது கையால் பொலிஸ் அடையாள அட்டையை விரித்துக் காட்டியவாறே மறு கையால் தனது இடுப்புத் துப்பாக்கியை உருவினான். மற்றவன் திடீரென்று தனது வலிய காலால் எனது காலைத் தட்டிவிட நான் மல்லாக்க விழுந்தேன். என்னைக் குப்புறத் திருப்பிப் போட்டு எனது கைகளில் விலங்கு பூட்டினார்கள். மக்கள் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்க்க, வெளியில் நின்றிருந்த ஒரு வாகனத்தில் கருநீல விளக்கு ஒளிர சைரன் ஒலிக்க ஆரம்பித்தது.

31. நகரைக் கிழித்துக் கொண்டு பொலிஸ் வாகனம் ஓடிக் கொண்டிருக்கிறது. கம்பி வலைகளால் தடுக்கப்பட்டிருந்த ஜன்னல் வழியே வெளியே பார்த்தேன். பொலிஸ் வாகனம் பஸ்ரில் சதுக்கத்தால் திரும்புகிறது. நிறைய மனிதர்கள் இந்த இரவிலும் பஸ்ரில் சதுக்கத்தை கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். நாளை மே தினம் என்பது என் ஞாபகத்துக்கு வந்தது.

நன்றி - நூலகத்திட்டம்

இரவு முழுவதுமே என்னிடம் எதுவித விசாரணைகளையும் மேற்கொள்ளாமலும் என்னிடம் எதுவித வாக்குமூலங்களையும் பெற முயற்சிக்காமலும் ஆனால் என்னை ஒரு கண் தூங்க விடாமலும் வெறுமனே பொலிஸ் நிலையத்தில் உட்கார வைத்திருந்தார்கள். தொடர்ந்து சிகரட் புகைத்துக் கொண்டிருந்த நான் ஒரு கட்டத்தில் சலிப்புற்று எதற்காக என்னைக் கைது செய்திருக்கிறீர்கள்? என்று கேட்டேன். அதற்குப் பொலிசார் 'பிரான்ஸில் தமிழ் பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்த சந்தேகம்' என்றார்கள். 'அப்படியானால் விசாரணையை ஆரம்பியுங்களேன், உங்களால் விசாரணையை உடனடியாக நடத்த முடியாவிட்டால் இப்போது என்னைப் போக அனுமதியுங்கள். பின்னர் நீங்கள் விசாரணை நடத்த ஆயத்தமாக இருக்கும் போது என்னை அழையுங்கள் வருவேன்' என்று சும்மா கதை விட்டுப் பார்த்தேன். 'உன்னை விசாரணையின்றியே காலவரையின்றி தடுத்து வைக்கும் அதிகாரம் பொலிசாருக்கு உள்ளது. ஏனெனில்...' அந்தப் பொலிஸ் அதிகாரியைப் பேசவிடாமல் நான் குறுக்கிட்டு 'ஏனெனில் நான் கறுப்பு நிற அந்நியன்' என்று சொல்லிவிட்டு இன்னொரு சிகரட்டைப் பற்ற வைத்துக் கொண்டேன்.

2. இதன் பின்பு நாற்காலியில் உட்கார்ந்த நிலையிலேயே நான் தூங்க முற்படும் போதெல்லாம் ஒரு பொலிசுக்காரன் என்னைத் தட்டி உலுக்கி 'இதோ விசாரணையை ஆரம்பித்துவிடப் போகிறோம் தயாராகு' என்று சொல்லிக் கொண்டேயிருந்தான். காலை எட்டு மணியளவில் என்னை விதம் விதமாக புகைப்படம் பிடித்தார்கள். என் பத்து விரல் ரேகைகளையும் பதிவு செய்து கொண்டார்கள்.

3. சரியாக மதியம் 12.06 மணிக்கு என்னை ஒரு மிக விசாலமான அறைக்குள் பொலிசார் அழைத்துச் சென்றார்கள். அந்த அறை 'பளிச்' என்று மிகச் சுத்தமாகவும் வெறுமையாகவும் 'ஓ' வென்று கிடந்தது. நான்கு மூலைகளிலும் நான்கு நாற்காலிகள் மட்டும் போடப் பட்டிருந்தன. பொலிஸ் அதிகாரி ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டி அதில் உட்காருமாறு கட்டளையிட்டான். அப்போது குள்ளமானவனும், உருளையானவனும், செம்பட்டையான தொங்கு மீசை கொண்டவனுமான ஒரு நடுத்தர வயது மதிக்கத்தக்க வெள்ளையன் கைகளில் சில கோப்புக்களுடன் அறைக்குள் பிரவேசித்தான். என்னைச் சூழ நின்று கொண்டிருந்த பொலிசார் வந்தவனுக்கு துடித்துப் பதைத்து சல்யூட் அடித்த விறுத்தத்திலேயே அவன் தான் தலைமை விசாரணை அதிகாரி என்பதைப் புரிந்து கொண்டேன். அந்த விசாரணை அறையில் எனக்குத் தொடர் ஆச்சரியங்கள் காத்திருந்தன.

4. முதலாவது ஆச்சரியமாக சும்மா சுடுதண்ணி குடித்த நாய் மாதிரி கடுப்பாய் வெடித்தும் மறு விநாடி விகாரமாய் இளித்தும் என்னோடு பேசிய அந்த விசாரணை அதிகாரி எனது கால் எங்கே எப்படி யாரால் துண்டிக்கப்பட்டது, எந்த நாட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றேன் என்பதையெல்லாம் மிகத் துல்லியமாகச் சொல்லி தான் சொல்வது சரியா எனக் கேட்டான். நான் மௌனமாகத் தலையாட்டினேன். அவன் வாய் கொள்ளாத சிரிப்புடன் 'அப்படியென்றால் நீ நாடு கடத்தப்படப் போவது உறுதியாகி விட்டதல்லவா?' என்று கேட்டான். எல்லாம் நான் எதிர்பார்த்தி ருந்தது தான், எதற்கும் நான் தயாராகத்தான் இருக்கிறேன் என்பது போல அவனைப் பார்த்து நானும் மெலிதாகச் சிரித்தேன்.

5. அடுத்த சில நிமிடங்களில் அந்த விசாரணை அறைக்கு அந்தோனி அழைத்து வரப்பட்டான். அவன் என்னைப் பார்த்ததுமே உற்சாகமடைந்தவனாகக் காணப்பட்டான். என்னையும் அந்தோனியையும் ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளக் கூடாது என விசாரணை அதிகாரி உத்தரவிடவில்லைதான். ஆனாலும் நாங்களிருவரும் பேச முயற்சிக்கவில்லை. பொலிசாரின் துளைக்கும் பார்வைகளும், சுடலை அமைதியுமாய் அந்த அறை இருந்த இருப்பு எங்களைப் பேசவிடாமல் தடுத்திருக்கலாம். அந்தோனி என் எதிர்ப்புற மூலையில் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டான். 'உன்னுடைய பெயர் என்ன?' இது தான் விசாரணை அதிகாரி அந்தோனியை நோக்கிக் கேட்ட முதலாவது

கேள்வியாய் இருந்தது. அந்தோனியால் புரிந்து கொள்ளக் கூடிய மாதிரி விசாரணை அதிகாரி பிரஞ்சு மொழியைக் கொச்சையாக உடைத்து உடைத்துப் பேசினான். கேள்விக்கு மறுமொழியாக அந்தோனி தன்னுடைய பெயர் தனிநாயகம் என்று சொன்னான்.

6. உடனே ஒரு வாட்டசாட்டமான பொலிசுக்காரன் விசாரணை அதிகாரியைப் பார்த்து கண்ணைச் சிமிட்டி தோள்களைக் குலுக்கியவாறே 'இந்தச் சின்னப்பயலான வேசி மகன் நேற்றைய இரவிலிருந்தே தன்னுடைய பெயர் தனிநாயகம் என்றும் தன்னுடைய வயது நாற்பத்து மூன்று என்றும் சொல்லிக் கொண்டிருக்கிறான்' என்று கூறிச் சிரித்தான்.

7. அந்தோனி லொக்கா கொல்லப்பட்டுவிட்ட விசயத்தை இன்னும் அறிந்து கொள்ளாதவனாய் இருக்கிறான். எனக்கு செய்த மாதிரியே, அவனை ஏன் கைது செய்திருக்கிறார்கள் என்ற காரியத்தை பொலிசார் இன்னும் அவனுக்கும் சொல்லாமலே யிருக்கிறார்கள். ஏதோ மக்டொனால்ட்ஸ் உணவுச் சாலையில் ஆள்மாறாட்டம் செய்து வேலை பெற்றுக்கொண்டான் என்ற சந்தேகத்தின் பெயரிலேயே தன்னைப் பொலிசார் கைது செய்திருக்கிறார்கள் என்பதாய் அந்தோனி நினைத்துக் கொண்டி ருக்கக்கூடும். யார் கண்டது? அவனைப் பிணை எடுத்துச் செல்வதற்காகவே நான் வந்திருப்பதாகவும் அவன் நினைத்துக் கொண்டிருக்கலாம்.

8. விசாரணை அதிகாரி வேகமாய் நடந்து போய் அந்தோனியின் நாடியைத் தூக்கி அந்தோனியின் கண்களைப் பார்த்தான். பின்னர் 'ஓ உன்னுடைய பெயர் தனிநாயகமா? நல்லது. அது மிக நல்லது. ஆனால் நான் உன்னை பெத்தி தனிநாயகம் என்றே அழைப்பேன். அப்படியானால் அது யார் க்றோன் தனிநாயகம் என்று யோசிக்கிறாயா? அவனைத் தான் இப்போது நீ சந்திக்கப் போகிறாய்' என்று இளித்தான். இப்போது லொக்கா விசாரணை அறைக்குள் அழைத்துவரப்பட்டார். லொக்காவைக் கண்ட தருணத்தில் என் மண்டைக்குள் ஒரு மகிழ்ச்சி மின்னிப் பறந்தது. லொக்காவுக்குப் புறத்தாலேயே ரிடாவும் விசாரணை அறைக்குள் அழைத்து வரப்பட்டான். அறைக்குள் மீதமிருந்த இரு நாற்காலிகளிலும் அவர்கள் உட்கார வைக்கப்பட்டார்கள்.



9. ஆச்சரியங்களாலே அந்த விசாரணை அறை நிரம்பி வழிவதாயிற்று. ஒரு மந்திரக் குகைக்குள் நிகழ்வது மாதிரி ஆட்கள் திடீர் திடீரெனத் தோன்றுகிறார்கள். இவ்வளவுக்கும் மந்திரவாதி - நான் விசாரணை அதிகாரியைக் குறிப்பிடுகிறேன் - அவனை அழைத்து வாருங்கள், இவனை அழைத்து வாருங்கள் எனத் தன் ஊழியரை ஏவிக்கொண்டிருக்கவில்லை. ஏற்கனவே எழுதிவைக்கப் பட்டிருந்த நாடகம் ஒன்று அரங்கேற்றப்படுவதை ஒத்ததாய் நிகழ்வுகள் அமைகின்றன.

10. லொக்கா ஒரு முறை தன் தலையைத் தூக்கி என்னைப் பார்த்துவிட்டு மறுபடியும் தலையைக் குனிந்து நிலத்தைப் பார்த்தவாறேயிருந்தார். ரிடா எப்போதும் போலவே பதற்றமாய் விழித்து எல்லோரையும் மாறி மாறிப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தான். அவனின் கால்கள் நடுங்கிக் கொண்டிருப்ப வையாய்த் தெரிகின்றன.

11. இப்போது விசாரணை அதிகாரி எங்களுக்கு நட்ட நடுவாய் வந்து நின்று கொண்டு செருமி குரலைச் சரிப்படுத்திக் கொண்டான். 'நல்லது பயல்களே நேற்றைய மாலையில் என்ன நடந்தது என்பதை உள்ளது உள்ளவாறே க்றோன் தனிநாயகமும் இந்தக் கண்ணியத்துக் குரிய அரபு இளைஞனும் எங்களுக்கு நடித்துக் காட்டட்டும். பயல்கள் நீங்கள் மிகவும் கவனமாக அதை நடிக்கவேண்டும். எங்கள் வீடியோப் படப்பிடிப்பாளரால் பதிவு செய்யும் இந்தக் காட்சிகள் உங்களின் வாக்குமூலங்களாக நீதிமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும். மிகையான, மேலதிகமான பாவனைகளும், உங்களுக்குள்ளேயே புதைக்கப்படும் பாவனைகளும் நீதிமன்றத் திலே உங்களுக்கு எதிராய் மாறிவிடக் கூடும். சரி அதை நாங்கள் ஆரம்பிப்போம். ஓகோ, க்றோன் தனிநாயகத்தின் மனைவியாக நடிப்பதற்கு ஒருவர் வேண்டுமல்லவா?'' அதிகாரி இந்த இடத்தில் பேசுவதை நிறுத்தி அந்தோனியைப் பார்த்து எழுந்திருக்குமாறு சுட்டுவிரலால் உத்தரவிட்டு 'ஏ பெத்தி தனிநாயகம் நீ க்றோன் தனிநாயகத்தின் மனைவியாக நடிக்கலாம். அது ஒன்றும் உனக்கு அவ்வளவு சிரமமாய் இருக்காது என்றே நம்புகிறேன். ஏனென்றால் பிணமாக நடிப்பதில் பெரிய சிரமங்கள் எதுவுமில்லையே.'

12. என் அடிவயிறு சுண்டி இழுத்து உதடுகள் தகித்து உலர்ந்து

போயின. இப்போது அதிகாரி என்னைப் பார்த்து 'நான் கூறியதை தெளிவாக இவர்களுக்கு மிகத் தெளிவாக மொழிபெயர்த்துச் சொல்லலாம். ஏனென்றால் இது கொலை வழக்கு. மிகவும் துல்லியமாக எதையும் செய்வதே எங்களுக்கும் நல்லது, உனது நண்பர்களுக்கும் நல்லது' எனக் கூறிவிட்டு ரிடாவைப் பார்த்து 'என்ன இளைய மனிதனே நாங்கள் ஆரம்பிப்போமா' என்று கேட்டான். ரிடா பதறியடித்துக் கொண்டு எழுந்து 'ஆம் உடனடியாக எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு என்னை இந்த நரகத்தி லிருந்து தயவு செய்து விடுவியுங்கள்' என்றான்.

13. எங்கள் நால்வரையும் விசாரணை அதிகாரியும் பொலிசா ரும் பக்கத்திலிருந்த இன்னொரு மண்டபத்துக்குள் அழைத்துச் சென்றனர். வியக்கத்தக்க முறையில் அந்த மண்டபத்தின் தரையில் வெண்கட்டிகளால் லொக்காவின் வீட்டின் அமைப்பும், தொலைக் காட்சி, நாற்காலிகள், மேசை சாமான் சக்கட்டுகளும் அச்சொட்டாக வரையப்பட்டிருந்தன. இந்த நாடகத்தை எங்கிருந்து ஒளிப்பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னால் கண்டுபிடிக்க முடியாமலுக்கு இருந்தது.

*14, 15, 16, 17, 18, 19*

மாலை ஆறு மணி, நாற்பது நிமிடங்கள். லொக்கா தனது குளிர் அங்கியுனுள் கையை நுழைத்து சாவியை எடுத்து வீட்டின் கதவைத் திறந்து கொண்டு வருகிறார். சோர்வாக வரவேற்பறையில் இருக்கும் நாற்காலியில் சாய்ந்து கொள்கிறார். வரவேற்பறையில் யாரும் இல்லாமலே தொலைக்காட்சி இயங்கிக்கொண்டிருப்பதால் சினந்து கொண்டே எழுந்து போய் தொலைக்காட்சியை அணைக்கும் போது தொலைக்காட்சிக்கு அருகில் இருக்கும் நாற்காலியின் முதுகில் ஒரு கறுப்புத் தடித்த தோலால் செய்யப்பட்ட குளிரங்கி தொங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்து யோசனையுடன் சுற்றும் முற்றும் பார்க்கிறார். குளியலறையில் தண்ணீர் விழும் சத்தம் கேட்கிறது. மெதுவாக நடந்து போய் குளியலறைக்கு வெளியே நின்று மூடப்பட்டிருக்கும் குளியலறையின் கதவையே பார்த்தவாறு ஒரு சிகரட் பற்றவைத்துக் கொள்கிறார். அப்போது குளியல் அறைக் கதவு திறக்க உள்ளிருந்து நிர்வாணமாக ரிடா வெளியே வருகிறான். (இந்தக் காட்சியின் போது ரிடா முதலில் சற்றுத் தயங்கிய போதிலும் ரிடா நிர்வாணமாக நடிப்பது தான் சட்டப்படி செல்லுபடியாகும் என்று விசாரணை அதிகாரி வலியுறுத்தினான்) ரிடா லொக்காவைக் கண்டவுடன் பதறுகிறான். அவன் சரீரம் உதறுகிறது.



**ரிடா**

*மாலை வணக்கம் தனிநாயகம்.*

**லொக்கா**

*தயவு செய்து வெளியே போய்விடு.*

*லொக்கா திறந்திருக்கும் கதவு வழியாக குளியலறைக் குள்ளே பார்க்கிறார். மார்பின் குறுக்காக ஒரு துண்டைக் கட்டியவாறே ஜீவராணி தலையைக் குனிந்து கொண்டு குளியலறையினுள்ளிருந்து வெளியேற முயற்சிக்கிறார். லொக்கா தனது மார்பால் ஜீவராணியை நெருக்கித் தள்ளி ஜீவராணியை மறுபடியும் குளியலறைக்குள் தள்ளிக்கொண்டு தானும் குளியலறைக்குள் நுழைகிறார் / ரிடா ஓடிச் சென்று படுக்கையறையினுள் நுழைந்து தனது ஆடைகளை எடுத்து அணிந்தவாறே அவசர அவசரமாக வரவேற்பறைக்கு வருகிறான். வரும்போது குளியலறைக் கதவு மூடப் பட்டிருப்பதைக் கவனிக்கிறான். வரவேற்பறைக்கு வந்து தனது குளிர் அங்கியை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்து வெளியேறுகிறான். கதவு சாத்திக் கொள்கிறது / குளியலறைத் தொட்டியின் விளிம்பில் ஜீவராணி தலையைக் குனிந்தவாறே உட்கார்ந்திருக்கிறார்.*

**லொக்கா**

*ஜீவா சுண்ணத்து செய்த சாமான் தான் உம்மிட அமரை அடக்குமெண்டால் நானும் என்ர நுனித்தோல வெட்டுறன்.*

*குளியலறையின் மாடத்திலிருக்கும் கத்திரிக்கோலை உருவி எடுக்கிறார். ஜீவராணி எழுந்து லொக்காவின் கை களைப் பிடிக்கிறார்.*

**ஜீவா**

*தனிநாயகம், நான் எத்தினை தரம் சொல்லிப் போட்டன்? ஒருத்தருக்கும் கரைச்சல் வேண்டாம். என்னை டிவோர்ஸ் எடுங்கோ.*

**லொக்கா**

*எடுத்தால்?*

**ஜீவா**

*ஒருத்தருக்கும் பிரச்சனையில்லை. நான் எங்கேயாவது போயிருவன்.*

**லொக்கா**

*எங்க? துனிஷியாவுக்குப் போவியோ? என்னை நீ ஆகத்தான் பொண்ணயன் ஆக்கிக்கொண்டிருக்கிறாய்.*

*சட சடவென கத்திரிக்கோலால் மூர்க்கத்துடன் ஜீவராணியின் மார்பு, முகம், குரல்வளை, அடிவயிறு, பெண்குறி எங்கும் குத்துகிறார் லொக்கா. (இதைச் செய்து காட்டும் போது காகித அட்டையால் செய்யப்பட்டிருந்த ஒரு கத்திரிக்கோல் பொலிசாரால் லொக்காவுக்கு கொடுக்கப் பட்டிருந்தது) ஜீவராணி நிலத்தில் துடித்து விழுகிறார். அழைப்பு மணி விடாமல் ஒலித்துக் கொண்டிருக்க லொக்கா ஜீவராணிக்கு அருகில் அமர்ந்திருந்து ஜீவராணியின் தலை முடியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கத்தரித்துக் கொண்டி ருக்கிறார்.*

*கதவைத் திறந்து வெளியேறிய ரிடா சில நிமிடங்கள் கதவுக்கு அருகிலேயே தயங்கியவாறு நிற்கிறான். பின் பதட்டத்துடன் அழைப்பு மணியை அழுத்துகிறான். யாரும் கதவைத் திறவாததால் மீண்டும் மீண்டும் விடாமல் அழுத்துகிறான். யாரும் கதவைத் திறக்கவில்லை. தனது குளிர் அங்கியினுள் கையை விட்டு கைத் தொலைபேசியை எடுத்து 17 என்ற இலக்கத்தை அழுத்தி தொடர்பு கொள்கிறான். 17 என்ற இலக்கம் பிரான்ஸின் அவசரப் பொலிசாரின் கட்டுப்பாட்டு அறைக்கு உரியது.*



அடுத்த சில விநாடிகளில் என்னையும் அந்தோனியையும் மட்டும் ஒரு மாடி அறைக்கு பொலிசார் அழைத்துப் போனார்கள். போகும் போது திரும்பி கடைக்கண்ணால் லொக்காவைப் பார்த்தேன். முகத்தைக் கைகளால் மூடியவாறு நாற்காலியில் சாய்ந்து கிடந்தார். ரிடாவைப் பார்த்து தலையசைத்தேன். அவனுடைய உதடுகள் பரிதாபமாய்ப் பிளந்து சிரிக்க முயன்றன.

2. கீழேயுள்ள விசாரணை அறைக்கு நேர்மாறாக இந்த அறை கருவிகளும், கணனிகளும், கோப்புகளும், சுவரில் ஒட்டப் பட்டிருக்கும் எண்ணற்ற புகைப்படங்களுமாய் தாறுமாறாய்க் கிடந்தது. ஒரு மேசையைச் சூழ பொலிசாரும் நாங்களும் உட்கார்ந்திருந்தோம். எனக்கு எதிரே மேசையின் அப்புறத்தில் ஒரு பொலிசுக்காரன் மிகச் சிறிய கணனியை மேசையில் வைத்து உபயோகித்துக் கொண்டிருந்தான். எனது இடது புறத்தே அந்தோனியும் அந்தோனிக்கு நேர் எதிராய் எனது வலப்புறத்தே விசாரணை அதிகாரியும் உட்கார்ந்திருந்தனர். உடனடியாக இன்னொரு விசாரணையை ஆரம்பிக்கப் போவதாக எங்களுக்கு அதிகாரி கூறி தனது அடிவயிற்றைத் தடவிக்கொண்டான். விசாரணைக்கு உள்ளாக்கப்படுபவர்களுக்கு ஓய்வே வழங்காமல் தொடர் விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் விசாரிக்கப் படுபவனை மனரீதியாய் துன்புறுத்தி மூளையை பிறாண்டி எடுக்கும் இந்த விசாரணை உத்தியை உலகத்தில் உள்ள எல்லாப் பொலிசுக்காரர்களும் கடைப்பிடித்து வருகிறார்கள் என நினைத்துக் கொண்டேன்.

3. கணனியோடு மாரடித்துக் கொண்டிருந்த பொலிசுக்காரன் எழுந்து சட்டையைக் கழற்றும்படி அந்தோனிக்கு உத்தரவிட்டான். அந்தோனிக்கு அவன் கூறியது புரியவில்லை. நான் அந்தோனிக்கு மொழிபெயர்ப்பில் உதவலாமா? என்று கேட்டேன். 'சரி பண்ணிக்கொள், ஆனால் அனைத்து விசாரணைகளும் ஒலிப்பதிவு

செய்யப்படுகின்றன என்பதை நீ மறக்கக்கூடாது' என்றான் விசாரணை அதிகாரி.

4. அந்தோனி சட்டையைக் கழற்றியவுடன் அவனது மார்புக் காம்பின் கீழே ஒரு ரப்பர் குமிழ் பொருத்தப்பட்டது. அந்த ரப்பர் குமிழ் ஒரு பிராங் நாணயம் அளவிலே இருந்தது. அந்தோனியின் கையில் முழங்கைக்கு மேலால் ஒரு குமிழ் பொருத்தப்பட்டது. அந்தோனி மிகவும் பயந்தவனாய் காணப்பட்டான். அந்தோனிக்கு ஏதாவது மின் அதிர்ச்சி கொடுக்கப் போகிறார்களோ என்று தான் முதலில் நினைத்தேன். திடீரென L'herbe rouge என்ற பிரஞ்சுத் திரைப்படத்தில் இந்தக் குமிழ்களைப் பார்த்தது மண்டையில் உறைத்தது. இது பொய் அறியும் கருவி.

5. விசாரணை அதிகாரி மீண்டுமொரு இளிப்புடன் 'இது என்னவென்று தெரியுமா?' என்று கேட்டான். தெரியும் என்று தலையாட்டினேன். 'நீ தான் பரபாஸ் கிரிமினல் ஆயிற்றே, உனக்கு தெரியாமல் போய்விடுமா? சரி உனது கூட்டாளிக்கு அவனது உடம்பில் பொய் அறியும் கருவி பொருத்தப்பட்டிருப்பதையும், உண்மைக்கு மாறாய்ப் பேசினால் அது காட்டிக் கொடுத்து விடும் என்பதையும் சொல்' என்றான். அதிகாரி கூறியதை அந்தோனிக்கு தமிழ்ப்படுத்திச் சொன்னேன். எனக்கே அந்தோனியின் முகத்தைப் பார்க்கச் சகிக்க முடியாத அளவுக்கு இருண்டு போய் அது ஒரு சவத்தின் முகமாய் விறைத்துக் கிடந்தது.

6. விசாரணை அதிகாரி எழுந்து போய் அந்தோனியின் பின்புறமாய் நின்று கொண்டான். அவனது குரல் பெரும் அச்சமூட்டுவதாய் ஆங்காரத்துடன் ஒலித்தது. அவனின் குரலை நான் அந்தோனிக்கு மொழிபெயர்த்தேன்.

7. ஏய் பெத்தி தனிநாயகம் உன் உண்மையான பெயர் என்ன? எங்கிருந்து பிரான்சுக்கு வந்தாய்?

8. பெயர், யாகப்பு அந்தோனி தாசன். இலங்கையிலிருந்து ரஷியா, இத்தாலி ஊடாக பிரான்சுக்கு வந்தேன்.

9. அதிகாரி மெதுவாக நடந்து போய் கணனித் திரையைப் பார்த்தான். ''பிசாசே நீ என்னிடமா பொய் சொல்கிறாய்'' அதிகாரி தனது காலைச் சுழற்றி அந்தோனியின் கழுத்தில் எத்தினான்.



அந்தோனி கதிரையோடு கீழே மல்லாந்து விழுந்தான். அதிகாரி அந்தோனியைத் தூக்கி நிறுத்தி மறுபடியும் உட்கார வைத்தான். 'இப்போது நீ எனக்குச் சொல்லவேண்டும்! நீ மூன்று வருடங்கள் ஜெர்மனி ஒல்லாந்து எல்லையிலிருக்கும் ஒக்றூப் நகரத்தில் வசிக்கவில்லையா?' அதிகாரி கைகளை ஓங்கியவாறே நின்றான். அந்தோனியின் கண்களில் நீர் கோர்த்திருந்தது. அது உண்மைதான் என்று அந்தோனி ஒத்துக் கொண்டான். நான் அதை அதிகாரிக்கு மொழி பெயர்த்துச் சொன்னேன்.

10. அதிகாரி கொஞ்சம் அமைதியடைந்தான். 'நல்லது இப்போது சொல் உனது உண்மையான பெயர் என்ன?'

11. 'என்னுடைய உண்மையான பெயர் ஏசுராசன் றொக்கிராஜ்' என்று என்னிடம் அந்தோனி சொல்ல நான் அதிகாரியிடம் 'அவனுடைய உண்மைப் பெயர் றொக்கிராஜ் என்பதை அவன் ஒப்புக்கொள்கிறான்' என்றேன்.

12. அதிகாரி கணனியோடு மாரடிக்கும் பொலிசுக்காரனைப் பார்க்க அவன் உதடுகளைப் பிதுக்கினான். அதிகாரி எட்டி அந்தோனியின் தலைமயிரை கொத்தாகப் பிடித்தான். 'நீ பொய் சொல்கிறாய், எனக்குத் தேவை உனது உண்மையான பெயர்...' அதிகாரி பேசி முடித்தவுடன் நான் மொழி பெயர்க்க தயாராக விருந்தேன். ஆனால் அதிகாரி பேசி முடிக்க முன்பு அவனின் இடுப்பிலிருந்த வொக்கி டோக்கி அவனை அழைத்தது. அதிகாரி பேசுவது எனக்கு தெளிவாகவும் அதிகாரியோடு வோக்கி டோக்கியில் உரையாடும் குரல் சற்றுத் தெளிவின்றியும் எனக்குக் கேட்டது. பேசிக் கொண்டிருக்கும் அதிகாரியின் ஒரு கை இப்போதும் அந்தோனியின் தலைமயிரைப் பற்றி இழுத்தவாறே யிருந்தது.

13. அந்தோனி என்னைப் பார்த்து 'அண்ணே என்னுடைய பெயர் கொரில்லா என்று அதிகாரிக்குச் சொல்லிப் பாருங்கள்' என்று இரண்டு மூன்று தடவைகள் மெல்லிய குரலில் கெஞ்சினான். எனது கவனமெல்லாம் அதிகாரியின் வோக்கி டோக்கி உரையாடலிலேயே இருந்தது.

14. சில நிமிடங்களுக்கு முன்பாக பிரான்ஸில் இன்னொரு தமிழ்ச் சீவன் கொல்லப்பட்டதாம்.

அவன் சுயிங்கம் மென்றுகொண்டே வந்தான். நான் நேற்றிலிருந்து இவனைக் கவனித்து வருகிறேன். இவன் அதிகம் பேசுவதில்லை. நடையில் ஒரு துள்ளல் தெரிய தோள்களைக் குலுக்கி கால்களை அகல வைத்து நடக்கிறான். என்னை விட இவன் மிகச் சில வயதுகள் இளையவனாய் இருக்கக்கூடும். எப்படி யெனினும் இவன் இருபது வயதுகளுக்கு மேற்பட்டவனாய் இருக்கமுடியாது.

2. எங்களின் கால்களின் கீழே புல்வெளி விரித்துக் கிடந்தது. எவரும் சந்தேகமுற வேண்டாம், நான் நிச்சயமாகவே அந்தப் புல்வெளியையும் புற்கள் அழகாக கத்தரிக்கப்படுவதையும் ரசித்துக்கொண்டுதான் போனேன்.

3. நாங்கள் அந்தத் தொடர் மாடிக் குடியிருப்பின் பிரதான வாசலை வந்தடைந்த போது, அவன் நிதானமாக நடந்து சென்று தூரவுள்ள குப்பைத் தொட்டியில் சுயிங்கத்தை உமிழ்ந்து விட்டு வரும் வரையில் நான் காத்திருந்தேன். பின் சட்டைப் பையிலிருந்த பேனாவை எடுத்து அதன் பின் புற முனையால் இன்ரர் ஃபோனை அழுத்தினேன்.

4. சற்று தாமதத்திற்குப் பின்னாக ஒரு முதிய பெண் குரல் பேசிற்று. பதில் சொன்னேன், கதவு திறக்கப்பட்டது.

5. நாங்கள் அந்த வீட்டிற்குள் பிரவேசித்த போது ஒரு இளம் பெண்ணைக் கண்டோம். அவர்கள் சமையல் அறையில் உணவருந்திக் கொண்டிருப்பதால் கதவைத் திறந்துவிட தாமதித் ததற்காக அந்தப் பெண் எங்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டார். எங்களை அமரச் சொல்லிவிட்டு அவர் மீண்டும் இடது புறமிருந்த அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்.

6. அந்தச் சிறிய வரவேற்பறையில் நானும் அவனும் தனித்திருந்தோம். அவன் அப்பெண் சென்று மறைந்த இடப்புற அறையையே கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். என் எதிரே சுவரில் ஒரு மிகப் பெரிய ஓவியம் கண்ணாடிச் சட்டகத்துள்



தொங்கிக் கொண்டிருந்தது. அந்த ஓவியம் உண்மையில் அதன் அசலிலிருந்து கணனித் தொழில் நுட்பத்தின் மூலம் உருப்பெருக்கி பிரதி செய்யப்பட்டுள்ளது.

7. ஒரு பெண்ணின் முழுப் பிரதிமை. தீர்க்கமான கோடுகள், எனினும் உணர்வுகள் இறந்த நீள் செவ்வக முகம். அடர்ந்த திருத்தமான கரிய புருவங்கள். மேலுதட்டின் மீது உறுத்தலாய் கிடக்கும் பூனை ரோமங்கள், நெடிய கழுத்துப் பகுதி, அதனை நெருக்கி கிழிக்கும் முள் அணிகள், மார்பின் கீழாக இறக்கி விடப்பட்டிருக்கும் மெக்ஸிகன் பாணி அங்கி, பெண்குறியிலிருந்து தெறிக்கும் திவலைச் செந்நீர், பாதங்களை பழுத்த பெரும் இலைகள் தாங்க உச்சந்தலையிலிருந்து முளைத்தெழும் மலர்க் கதம்பமும், பின்னணியில் பசிய இலைகளும்.

8. ஒரு பார்வையிலேயே அவ் ஓவியம் பிறைடா காலோவால் வரையப்பட்ட அவரின் சுயப் பிரதிமை எனச் சொல்லிவிடலாம். மசூதி ஓவியங்கள், ஆலய ஓவியங்கள் வரைந்து அவற்றின் மேலே கடிகார முட்கள் பொருத்தப்பட்டிருப்பதை நீங்கள் பார்த்திருப் பீர்கள். அது போலவே பிறைடா காலோவின் இடது புற மார்பின் மேலாக கடிகார முட்கள் பொருத்தப்பட்டு அவை சுற்றிக் கொண்டிருந்தன.

9. மாற்கு மாஸ்டருக்கு மிகவும் பிடித்த ஓவியை பிறைடா காலோ தான். வகுப்பின் ஒரு கலந்துரையாடலின் போது எனது சகமாணவன் ஒருவன் ''சேர் நீங்கள் அடிக்கடி சொல்வது போல ஒரு புகைப்படக் கருவியின் பணியைத் தான் எதார்த்த ஓவியர்கள் செய்வதுண்டு. ஆனாலும் அவர்களின் உழைப்பு நுட்பமானதும் கடினமானதும் ஆகும். ஆனால் பிறைடா காலோவிடம் உழைப்புக் கூட கிடையாது. அவர் தனது சுயப் பிரதிமைகளை மட்டையடி அடித்தே பெரிய ஆளாகி விட்டார்'' என்றபோது முதலும் கடைசியுமாக மாற்கு மாஸ்டர் மிகுந்த கோபத்துடன் ஒன்றும் பேசாமல் தனது வகுப்பை சில நிமிடங்கள் நிறுத்தி வைத்தார்.

10. இப்போது இடது புற அறைக் கதவு திறக்கப்பட்டது. அந்த அறையினுள் இருந்து தனது கைகளை முகர்ந்தவாறே வந்த சபாலிங்கம் பிறைடா காலோவின் ஓவியத்திற்கு நேர் கீழாக இருந்த நாற்காலியில் அமர்ந்துகொண்டார்.

*11.* ''சொல்லுங்கோ தம்பியவை.''

*12.* ''அண்ணே இந்தப் பொடியனுக்கு ஒரு கேஸ் எழுத வேணும்'' என்றவாறே என்னோடு வந்தவனைப் பார்த்தேன். அவன் வேகமாக எழுந்து சென்று அந்தப் பெண் சென்றதும் சபாலிங்கம் உள்ளிருந்து வந்ததுமான இடப்புறத்து வாசலை மறித்தாற்போல நின்றுகொண்டான்.

*13.* சபாலிங்கம் கண்களை சுருக்கியவாறே நாற்காலியிலிருந்து எழுந்து நின்று இடப்புறத்து வாசலை மறித்துக்கொண்டு நின்றவனைப் பார்த்தார். அவன் இப்போது எங்களுக்கு தனது முதுகைக் காட்டியவாறே இரு பக்க நிலைகளிலும் தனது இரு கைகளையும் விரித்து ஊன்றி நின்றிருந்தான்.

*14.* சபாலிங்கம் என்னைப் பார்த்து மெதுவாகக் கேட்டார், ''என்னப்பன், என்ன செய்யப் போறிங்கள்?''

*15.* 'என்னப்பன்' - இந்த அப்பன் என்பது எமது தீவுப் பகுதிகளில் மட்டுமே வழங்கப்படக் கூடிய ஒரு அருமையான விளிப்புச் சொல்லாய் இருக்கலாம் என நினைத்துக் கொண்டே நான் எழுந்தேன். சபாலிங்கத்தின் இடதுபுற நெற்றியின் அருகாக பிறைடா காலோவின் மார்புக் கடிகார முட்கள் சுழன்றன.

*16.* நேரம் சரியாக 13.17...

---

...நான் ஓடி வந்து பார்க்கும் போது அவரின் கன்னத்திலிருந்து இரத்தம் வடிகிறது. அந்த இரத்தத்தை துடைத்துக்கொண்டே 'என்னப்பா நடந்தது?' என்று கேட்கிறேன். ஆனால் அவரிடமிருந்து ஒரு பதிலுமில்லை. அப்படியே மெதுவாக முழுங்காலிலிருந்து தலையை நிலத்தோடு சரித்து ஒரு சில நிமிடங்களில் அவரின் உயிர் போய் விட்டது. எமது தாய் நாட்டில் இருக்க முடியாத காரணத்தால் தான் நாம் அந்நிய நாட்டிற்கு வந்தோம். அந்நிய நாட்டில் கூட நம்மவர்கள் அவருடைய உயிரை அநியாயமாகப் பறித்து விட்டார்கள். நானும் பிள்ளையும் அவரை இழந்து தவிக்கின்றோம். இந்நிலை எந்தவொரு பெண்ணிற்கும் ஏற்படக்கூடாது.

- திருமதி கோமதி சபாலிங்கம்.

(ஒரு படுகொலையின் மொழியிலிருந்து)



அடையாளம்
ISBN 81 7720 007 0